படைப் போர் இலக்கியங்கள்

முனைவர். பீ. மு. அஜ்மல்கான்

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

படைப் போர் இலக்கியங்கள்

முனைவர் பீ. மு. அஜ்மல்கான்
இணைப்பேராசிரியர்
இசுலாமியத்தமிழ் இலக்கியத்துறை
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், மதுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
டி.டி.டி.ஐ. (அஞ்சல்), தரமணி, சென்னை-600 113

சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர்
அறக்கட்டளைச் சொற்பொழிவு—2
(27, 28-5-92)

Chadhavathani Seygut Thambip Pavalar Endowment
Lecture No. 2
Endowment Lecture—Publication No. 35

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Pataip Pōr Ilakkiyaṅkaḷ
Author	:	Dr. P. M. Ajmalkhan Reader in Islamic Tamil Literature Madurai Kamaraj University Madurai
Publisher & Copy right	:	International Institute of Tamil Studies, CIT Campus, Taramani, Madras-600 113.
Publication No	:	169
Language	:	Tamil
Date of Publication	:	Dec. 1992
Edition	:	First
Paper used	:	Tamilnadu Creamove Printing 16kg
Size	:	21×14 cms
Printing type	:	10 Point
No. of Copies	:	1200
No. of Pages	:	VIII+128
Price	:	Rs. 22
Printers	:	Kavinkalai Acchagam, Madras-41, Ph. No. 41 71 41
Artist	:	Sathya
Subject	:	Literary appraisal on Pataip Pōr Ilakkiyaṅkaḷ

---

* அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல.

பதிப்புரை

இசுலாமிய இலக்கியத்திற்கும், அதன் வழித் தமிழ் இலக்கியத் திற்கும் அருந்தொண்டாற்றிய பெரியார் சதாவதானி செய்குத் தம்பிப் பாவலரை நினைவுகூரும் நெறியில் நிறுவனத்தில் 'சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் அறக்கட்டளை', நிறுவப்பட் டுள்ளது. இதன் இரண்டாவது சொற்பொழிவாக இந்நூல் படைப் போர் இலக்கியங்கள்' அமைகிறது.

பலராலும் அறியப்படாத இசுலாமிய இலக்கியங்களைத் தமிழுலகிற்கு அறிமுகப்படுத்துதல் என்ற நிலையில் நூல் அமைந் துள்ளது. தமிழிற்குப் புதிய துறையாக ஆசிரியர் கருதும் படைப் போர் இலக்கியங்கள் பற்றிய விளக்கமான செய்திகள் இதனுள் நிறைந்துள்ளன. பொதுவான அறிமுகத்துடன் 'சக்கூன் படைப் போர்' பற்றிய தனிநிலை ஆய்வும் இணைந்துள்ளது. சிறப்புற இப்பணியை; நிறுவனத்தின் அழைப்பின் பேரில் நிறைவேற்றித் தந்துள்ள நூலாசிரியர் முனைவர் பீ. மு. அஜ்மல்கான் அவர்கட்கு நிறுவனம் நன்றி தெரிவிக்கின்றது.

இவ்வறக்கட்டளை நிறுவிய, 'சதாவதானி செய்குத் தம்பிப் பாவலர் நினைவுப் பணிக்குழு'வினர்; சொற்பொழிவிற்கும் நூலாக் கத்திற்கும் துணைநின்ற நிறுவன இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னிதாமசு அவர்கள்; மெய்ப்புத் திருத்தியுதவிய திரு. சு. சண்முக வேலாயுதம்; சொல்லகராதி தயாரித்துதவிய ஆய்வாளர் திரு. அ.லோ. பழனிசாமி, சிறப்புற அச்சிட்டளித்துள்ள கவின்கலை அச்சகத்தார் அனைவருக்கும் நன்றி.

அன்புடன்
ச. சிவகாமி
அறக்கட்டளைப் பொறுப்பாளர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

சென்னை-113
1-12-92



ஆசிரியர் அறிமுகம்

மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் அமைந்திருக்கும் இஸ்லாமியத் தமிழிலக்கியத்துறையின் பொறுப்பேற்று இணைப் பேராசிரியராகப் பணி புரிந்து வரும் டாக்டர் பீ. மு. அஜ்மல்கான் அவர்கள் 1952-ஆம் ஆண்டு பிறந்தவர். இவரது சொந்த ஊர் மதுரை மாவட்டத்தில் உள்ள கம்பம் ஆகும். முத்தண்ணா, பாமஞ்சரி, காந்திமாலிகை போன்ற எண்ணற்ற தமிழிலக்கியங் களைப் படைத்தளித்துள்ள பீர்முகம்மது பாவலர் அவர்களின் பேரனாவார்.

மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் தமிழ்த்துறையில் தமிழ் முதுகலை வகுப்பில் தேர்ச்சி பெற்றார். பின் தொடர்ந்து அதே துறையில் டாக்டர் பட்ட ஆய்வினை மொழியியல் துறையில் மேற்கொண்டு 1979-ஆம் ஆண்டில் மிகச் சிறப்புத் தகுதி பெற்று டாக்டர் பட்டம் பெற்றார். அதன் மூலம் இந்தியாவில் முஸ்லீம் சமூகத்தவருள் தமிழ் முதுகலை பயின்று டாக்டர் பட்டம் பெற்ற முதல்வர் என்ற பெருமையைப் பெற்றார். கல்வித் துறையில், மொழியியல், மலையாளம் காந்தியச் சிந்தனை ஆகிய பட்டய படிப்புக்களில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளார். அதே போல் பயன்பாட்டு மொழியியல், அறபு மொழி, மொழிபெயர்ப்பு, கல்வெட்டியல் ஆகிய சான்றிதழ் பாடங்களிலும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளார்.

கல்வித் துறையில் பதினைந்து ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் இவர் ஆரம்ப காலம் தொட்டே இஸ்லாமியத் தமிழிலக்கி

யத்தில் ஆர்வமும் ஈடுபாடும் கொண்டவராக இருக்கிறார். இவரது ஆய்வுக் கட்டுரைகள் பலவும் பல வார, மாத இதழ்களில் வெளி வந்துள்ளன. இதுவரையில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ளார். ஒன்பது நூல்களைப் பதிப்பித்துள்ளார். தமிழியல் ஆய்வு தொடர்பாக ஆறு நூல் களையும் எழுதி வெளியிட்டுள்ளார். இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாறு எழுதும் பணியில் டாக்டர் உவைஸ் அவர்களுடன் இணைந்து பணியாற்றி, அவ்வாய்வு, நூலாக வெளிவந்துள்ளது தொடர்ந்து இன்னும் சில தொகுதிகள் வெளி வருவதற்கான பணியில் தற்போது ஈடுபட்டுள்ளார்.

உலக இஸ்லாமிய தமிழிலக்கிய மாநாடுகளில் பங்கு பெற்ற இவர் பல்வேறான கருத்தரங்குகளிலும் பங்கு பெற்றுள்ளார். சிறந்த பேச்சாளர். இவரது நூல்களுள் குறிப்பிடத் தக்கன இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள்; தமிழகத்தில் முஸ்லீம்கள் —போர்ச்சுக்கீசியர் வருகைக்கு முன்பும் பின்பும்; இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாறு முதலானவைகளாகும்.

முன்னுரை

இஸ்லாமியத் தமிழிலக்கியங்கள் பலவும், இன்றளவும் அறிமுக மாகாத நிலையிலேயே உள்ளன. அண்மைக் காலங்களில் ஏற்பட்ட விழிப்புணர்வு காரணமாக இஸ்லாமியத் தமிழிலக்கியப் பிரிவு புத்துணர்வு பெற்று வருகிறது. இப்புத்துணர்வுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பங்கும் குறிப்பிடத் தக்கதாக அமைந் துள்ளது என்றே கூற வேண்டும். இஸ்லாமியத் தமிழிலக்கியத் திற்காக மூன்று அறக்கட்டளைகளை அமைத்து அதன் மூலமாக ஆக்கப்பூர்வமான பணியினை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தார் செய்து வருவது மகிழ்ச்சிக்குரியது.

இவ்வகையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடைபெறும் அறக்கட்டளைச் சொற்பொழிவினை நிகழ்த்துவதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்தமைக்கு உள்ளம் மகிழ்ந்து நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். எனக்குக் கிடைத்த இவ்வாய்ப்பினை, இதுவரையில் அதிகமாக அறிமுகமாகாத புதுவகை இலக்கியப் பிரிவினைச் சார்ந்த படைப் போர் இலக்கியங்கள் பற்றிய கருத்துக் களை எடுத்துரைக்கப் பயன்படுத்திக் கொண்டுள்ளேன். புதுவகை இஸ்லாமியத் தமிழிலக்கியப் பிரிவுகள் ஒவ்வொன்றும் தனித்தனியே டாக்டர் பட்ட ஆய்வினை மேற்கொள்ளத் தக்க வகையிலான கருத்துக்களைப் பெற்றுள்ளன.

முதல் இயலில் இஸ்லாமியத் தமிழிலக்கியம் பற்றிய பொதுக் கருத்துக்களையும் அடுத்த இயலில் புதுவகைத் தமிழிலக்கியப் பிரிவு களின் அறிமுகத்தையும் கூறிவிட்டு மூன்றாவது நான்காவது இயல் களில் படைப் போர் இலக்கியங்கள் பற்றிய விரிவுரையை இடம் பெறச் செய்துள்ளேன்.

இக்கருத்துக்களை நூலுருவாக்கிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தாருக்கும், குறிப்பாக இயக்குநர் (பொறுப்பு) அவர் களுக்கும் இஸ்லாமியத் தமிழிலக்கிய ஆய்விற்காக அறக்கட்டளை அமைத்துத் தந்தவர்களுக்கும் மனமுவந்த எனது நன்றியினையும் பாராட்டுதல்களையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

அன்புடன்,

பீ. மு. அஜ்மல்கான்.

உள்ளே

	பக்கங்கள்
இஸ்லாமும் தமிழிலக்கியமும்	1— 8
புதுவகை இஸ்லாமியத் தமிழிலக்கியங்கள்	9— 29
படைப் போர் இலக்கியங்கள்	30— 82
சக்கூன் படைப் போர் - தனி நிலை ஆய்வு	83—125
துணை நூற்பட்டியல்	126
சிறப்புச் சொல்லகராதி	127—128

இஸ்லாமும் தமிழிலக்கியமும்

இஸ்லாமியத் தமிழிலக்கியங்கள் என்பன இஸ்லாமிய மார்க்கக் கருத்துக்களை உள்ளடக்கமாகக் கொண்டெழுந்த தமிழ் மொழி இலக்கியங்களே. ஒரு மொழியில் ஒரு சமயத்தைச் சார்ந்த இலக்கியங்கள் தோன்றுவதற்கு அடித்தளமாக இருப்பது மொழிக்கும் சமயத்திற்குமுள்ள உறவு நிலையே. இவ்வுறவு நிலை பலப்படுத்தப்பட்ட பின்னரே எந்தவொரு மொழியிலும் ஒரு குறிப்பிட்ட சமய இலக்கியங்கள் தோன்றுவதற்கான சூழல் அதிகரிக்கும். இவ்வகையில் இன்றைக்குத் தமிழிலக்கிய உலகில் சுட்டிக்காட்டத்தக்க எல்கைப் பரப்பினைப் பெற்றுச் சிறக்கும் இஸ்லாமியத் தமிழிலக்கியங்களின் தோற்ற வளர்ச்சிக்கு, இஸ்லாம் தமிழகத்துடன் கொண்ட தொன்மை உறவே காரணமாக இருந்திருக்கும். இத்தொன்மை உறவினையும் அதன் பயனாய் மலர்ந்த முதல் இஸ்லாமியத் தமிழிலக்கியத்தையும் ஏனைய பிற இஸ்லாமிய இலக்கியங்களையும் சுட்டிக்காட்டுவதே இங்கு நோக்கமாகும்.

தமிழுக்கும் இஸ்லாத்திற்கும் இணைப்பு ஏற்படுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழகத்துடன் நெருங்கிய தொடர்பினை அறபு நாட்டவர்கள் பெற்றிருந்தனர். எனவே இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றிற்கான அடித்தளமாக இருந்தது அறபு நாட்டவர்களின் தமிழக வருகை எனலாம். இவ்வருகைநிலை இஸ்லாம் இவ்வுலகில் பரவுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இருந்திருக்கிறது. பெருமானார் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் தோன்றுவதற்கு வெகு காலத்துக்கு முன்பே அறபு நாட்டிற்கும் தமிழகத்திற்குமிடையே வியாபாரத் தொடர்புகள் இருந்திருக்கின்றன. இத்தொடர்பு பெருமானார்

(சல்) அவர்கள் காலத்திலும் தொடர்ந்து, நீடித்தது, பின் வலுப் பெற்றது. அறபு, தமிழக மக்களது தொடர்பிற்கான அகச் சான்றுகள் பலவும் வரலாற்றிலும், இலக்கியத்திலும் விரவிக் கிடக் கின்றன.

அறபு மக்கள் கிழக்கு, மேற்கு வணிகத் துறையில் பெரும் முனைப்பாக இருந்ததை வரலாற்றுச் சான்றுகள் நிரூபிக்கின்றன. தமிழகத்தைப் பொருத்தவரையில் பாண்டிய நாட்டின் துறை முகப் பட்டினங்களே தூர கிழக்கு நாடுகளுக்கும் மேலை ஆசிய நாடுகளுக்கும் இடையிலான கடல் வணிகத் தொடர்பிற்குக் களனாக விளங்கின. அவற்றுள் முக்கியமானது பவுத்திர மாணிக்கப் பட்டினம். மன்னார் வளைகுடாவில் அமைந்துள்ள பவுத்திர மாணிக்கம்பட்டினம் ராமேஸ்வரம் அல்லது தனுஷ்கோடி யுடன் முடியும். இதற்கு நேர் வடக்கில் அமைந்துள்ள வியாபாரத் தலமாக விளங்கியது தேவிபட்டினம். தென்காயல் என்று அழைக்கப்பட்ட பவுத்திர மாணிக்கப்பட்டினம் மேற்கு ஆசிய நாடுகளிலிருந்து வரும் வியாபாரத் தொடர்புகளுக்கும் வடகாயல் என்று அழைக்கப்படும் தேவிபட்டினம் தூர கிழக்கு நாடுகளின் வியாபாரத் தொடர்புகளுக்கும் மையமாக விளங்கின. பாண்டியர் ஆட்சிக் காலத்தில் பவுத்திர மாணிக்கப்பட்டினம், தேவிபட்டினம் ஆகிய இரு துறைமுகங்களும் வெளிநாட்டவரின் வியாபாரத் தொடர்பிற்கு இடனாக விளங்கியதை வரலாற்றுச் சான்றுகள் உணர்த்துகின்றன.

பாரசீக வளைகுடாவில் உள்ள கைஸ் என்னும் தீவு இந் நாளைய ஹாங்காங் துறைமுகம் போலப் பெரும் வணிகத் தலமாக விளங்கியது. அன்றைய வணிகத் தலமான கைஸ் துறைமுகம், பவுத்திர மாணிக்கப் பட்டினம், தேவிபட்டினம் முதலானவைகள் ஐரோப்பியர்களுக்கும் அறபு தேசத்தவர்களுக்கும் பண்டமாற்று வியாபாரத்திற்குரிய மையமாகத் திகழ்ந்தன. அன்றைய பாண்டிய நாட்டில் அறபு தேசத்து வணிகர்கள் செல்வாக்குப் பெற்றிருந் தனர். அதன் பயனாய் அவர்கள் பாண்டிய நாட்டுக் கடற்கரைப் பட்டினங்களிலே குடியேறத் தொடங்கினர். அறபு நாட்டு மக்கள் தமிழகத்துடன் வியாபாரத் தொடர்பு கொண்டிருந்ததற்கான அகச் சான்றுகள் சங்க கால இலக்கியங்களிலே நிரம்பக் காணலாம். சங்க இலக்கியங்களில் அறபு தேசத்து வணிகர்கள் 'யவனர்' என்னும் சொல்லாட்சியில் குறிக்கப்பட்டுள்ளனர். யவனரின் தமிழக வருகை வியாபார நோக்கமாகவே அமைந்தது. இதனை அகநானூற்றுப் பாடல் இவ்வாறு குறிக்கிறது.

சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினை மாண்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி... (149)

இங்குக் கறி என்னும் சொல் மிளகினையும் முசிறி என்பது முசிறிப்பட்டினத்தையும் குறிப்பதாகும். எனவே மிளகு போன்ற வாசனைப் பொருட்களால் ஈர்க்கப்பட்டே யவனர்கள் கிழக்கு நாடுகளுக்கும், குறிப்பாகத் தமிழகத்திற்கும் வருகை தந்தனர். அவர்களின் வியாபாரத் தொடர்பே நாளடைவில் தமிழகத்தில் அறபு நாட்டவரின் குடியேற்றமாகத் தொடங்கியது. இந்தக் குடியேற்றம், இஸ்லாம் இவ்வுலகில் பரவுவதற்கு முன்னரே நடைபெற்றிருத்தல் வேண்டும். ‘கிறித்தவ ஆண்டு தொடங்கியதற்கு முன்னரேயே அறபிகள் இலங்கையிலும் தென் இந்தியாவிலும் குடியேறினர்’ என்று பிளனி என்னும் வரலாற்றாசிரியர் கூற்றும் மேற்கூறிய கருத்திற்கு அரண் செய்வதாக உள்ளது.

தமிழகத்தில் இஸ்லாத்தைப் பரப்பியவர்களும் இன்றைய முஸ்லீம்களுக்கு முன்னோடியாக விளங்கியவர்களும் மேற்குறித்த வியாபார நிமித்தமாக இங்கு வந்து குடியேறிய அறபியர்களே. அத்தகையவர்களின் குடியேற்றம் பெருமானார் நபிகள் நாயகம் அவர்களது காலத்திலும் தொடர்ந்து வலுப்பெற்றது. வியாபார நிமித்தமான குடியேற்றம் நபிகள் நாயகம் காலத்தில் சமயச் சார்பாகவும் அமைந்து தொடரலாயிற்று. நபிகள் நாயகம் (சல்) அவர்களின் தோழர்களான தமீமுல் அன்சாரி அவர்களினதும் அபீலக்காங் அவர்களினதும் கல்லறைகள் தமிழகத்தில் இருப்பது இஸ்லாத்துக்கும் தமிழகத்திற்கும் உள்ள அப்போதைய நெருங்கிய உறவை எடுத்துக்காட்டுகிறது. இவ்வுறவு நிலையை எடுத்துக் காட்ட எத்தனையோ அகச் சான்றுகளைத் தமிழகத்தில் காணலாம்.

ஆனால் ஆரம்பக் காலத்தில் தமிழக முஸ்லிம்கள் வியாபாரக் கண்ணோட்டத்திலேயே அவர்களது கவனத்தைச் செலுத்தினர். பின்னர் நாளடைவில் குடியேற்றம் அதிகரிக்க அதிகரிக்க அது மார்க்கத்திலும் அமையலாயிற்று. இறைநேயச் செல்வர்களும், மார்க்கப் பெரியோர்களும் இஸ்லாமியக் கருத்துக்களைப் பரப்புவதை முதற்பணியாகக் கொண்டு செயலாற்றினார்கள். இத்தகு வரலாற்றுப் பின்புலத்தில் தமிழகத்தில் இஸ்லாம் இருந்த காலக் கட்டத்தில் தமிழுக்கும் ஏனைய பிற இந்தியச் சமயங்களுக்கும்

உள்ள தொடர்பினை இங்குள்ள முஸ்லிம் பெருமக்கள் உன்னிப் பாகக் கவனிக்கத் தொடங்கினார்கள். இதன் பயனாகவே தமிழை அடிப்படையாகக் கொண்டு தங்களது சமயக் கொள்கைகளை வளர்த்துக் கொள்ளும் உத்தியையும் இங்குள்ள முஸ்லிம் சமயப் பெரியோர்கள் பின்பற்றத் தொடங்கினார்கள். அதுவே இஸ்லாமும் தமிழும் இணையும் காலக்கட்டமாக உருவானது. இதன் பயனாய் இஸ்லாம் தமிழகமெங்கும் பரவலாயிற்று. இஸ்லாமிய கருத்துக்களைப் பரப்புவதற்கு மொழியின் தேவையை உணரத் தலைப்பட்ட பின்னரே இஸ்லாமியத் தமிழிலக்கியங்களின் தோற்றம் தமிழிலக்கிய வரலாற்றில் உதயமாயிற்று.

இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றிற்கு அச்சாரமிட்ட பெருமை பல்சந்தமாலை என்னும் இலக்கியத்தைச் சாரும். பல்சந்தமாலை என்பது இஸ்லாமியத் தமிழிலக்கியம் என்பதைப் பல்வேறு சான்றாதாரங்களின் அடிப்படையில் அறிய முடிகிறதே தவிர நூல் முழுமையும் நமக்குக் கிடைத்தில. இவ்விலக்கியத்துள் இடம்பெற்றுள்ள எட்டுப் பாடல்கள் மட்டுமே நமக்குக் கிடைத் துள்ளன. பழங்காலத்தில் தோன்றிய அகப்பொருள் பற்றிய ஒரு நூலுக்கு எழுதப்பட்ட உரையிலேயே மேற்குறித்த எட்டுப் பாடல் களும் சான்றுச் செய்யுட்களாக இடம்பெற்றுள்ளன. இவ்வகப் பொருள் நூல்கூட இன்னும் தமிழிலக்கிய ஆய்வாளர்களால் முழுமையாகக் கண்டுகொள்ள முடியவில்லை. இவ்வகப் பொருள் நூலினை வையாபுரிபிள்ளை ‘களவியற் காரிகை’ என்று பெயரிட்டு 1931இல் பதிப்பித்துள்ளார். இந்நூலின் ஒரே ஒரு கையெழுத்துப் படி சென்னையில் உள்ள அரசாங்கத்தின் தொன்னூல் காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டிருந்தது. இதில் இடம்பெற்றிருந்த ஆங்கிலக் குறிப்பினால் இஃது ஆழ்வார் திருநகரி மலையப்பிள்ளைக் கவிராயருக்குரிய ஏட்டுப் படிகளுள் ஒன்றாக இருந்தது என்பதும் அவ்வேட்டுப் படியினின்றும் நாதமுனிப்பிள்ளை என்பவர் 1920ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பன்னிரண்டாம் தேதியில் படி எடுத்தார் என்பதையும் அறியலாம். அதுவே வையாபுரிப்பிள்ளை களவியல் காரிகை என்ற தலைப்பில் அவ்வகப்பொருள் துறைகளைப் பதிப்பித்து வெளியிட மூலமாக அமைந்தது.

இந்நூல் குறித்துப் பதிப்பாசிரியர் வையாபுரிப்பிள்ளை கூறும்போது ‘கையெழுத்துப் பிரதியில் இறையனாரகப் பொருட் துறையைச் சங்கச் செய்யுளாக உதாரணம் எழுதியது’ எனக்

குறிக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார். 'இக்குறிப்பு இன்னதென உணர்தற்கு அதன் புறத்தே எழுதி வைக்கும் தலைக்குறிப்பாகவே கொள்ளவேண்டுமேயன்றி நூலின் பெயரல்ல என்பது திண்ணம்' என்பதையும் குறிப்பிடும் வையாபுரிப்பிள்ளை, இவ்வகப்பொருள் நூலுக்கு இப்போது இடப்பட்டுள்ள பெயரான களவியற் காரிகை என்பது தம்மாலே சூட்டப்பட்ட பெயர் என்பதையும் தெளிவு படுத்தியுள்ளார். எனவே தற்போது அவ்வகப்பொருள் நூலுக் குரிய பெயராக, வையாபுரிப்பிள்ளை சூட்டிய களவியற் காரிகை என்னும் பெயரே கொள்ளப்படுகிறது.

களவியற் காரிகையில் விளக்கப்படும் அகப்பொருட் துறை களுக்கு எடுத்துக்காட்டுகள் பல்வேறு பழைய இலக்கியங்களிலிருந்து தரப்பட்டுள்ளன. இத்தகு எடுத்துக்காட்டுகளில் அடங்கியுள்ள எட்டுச் செய்யுட்கள் மட்டும் பல்சந்தமாலை என்னும் இலக் கியத்தைச் சார்ந்ததாகக் காணப்படுகிறது. நமக்குப் பல்சந்தமாலை என்னும் தனித்ததொரு இலக்கியம் கிடைக்காவிடினும் இச் சான்றாதாரச் செய்யுட்களைக் கொண்டு இத்தகு இலக்கியம் இருந்து அழிந்திருக்க வேண்டும் என்பதை நன்கு அறியமுடிகிறது.

இனி, பல்சந்தமாலை, இஸ்லாமியத் தமிழிலக்கியம் என்பதற் குரிய காரணங்கள் சிலவற்றைக் காண்போம். வையாபுரிப் பிள்ளை தம்முடைய பதிப்பின் இறுதியில் மேற்கோள் நூல்கள் பற்றியக் குறிப்பு ஒன்றை இணைத்துள்ளார். அதில் பல்சந்த மாலை குறித்து அவர் கூறும்போது பல்சந்தமாலை என்னும் பெயருடைய நூல் ஒருசில செய்திகளைப் புலப்படுத்துகின்றது. பன்னிரு பாட்டியலில் பல்சந்தமாலை என்பது ஒரு பிரபந்த வகை எனக் கூறப்பட்டுள்ளது. எனவே இந்நூல் அப்பிரபந்த வகையைச் சார்ந்ததாக இருத்தல்கூடும். இந்நூல் வச்சிர நாட்டு வகுதாபுரியில் அரசு புரிந்த அஞ்சு வண்ணத்தார் மரபினனாகிய ஒரு முகமதிய முஸ்லிம் மன்னனைக் குறித்துப் பாடப்பெற்றதாகும். வகுதாபுரியை இக்காலத்தில் காயற் பட்டினம் என வழங்குவர். வகுதாபுரிக்கு அந்து பார் என ஒரு பெயரும் இருத்தல் வேண்டும் என்பது பல்சந்தமாலையின் ஒரு செய்யுளால் புலப்படுகிறது' எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் பல்சந்தமாலைச் செய்யுட்களாகக் கிடைத்துள்ளனவற்றின் உள்ளடக்கக் கருத்துக்களை மையமாகக் கொண்டு இச்செய்யுட்கள் அடங்கிய நூல் இஸ்லாமியச் சமயத்தைச் சார்ந்த நூல் என்பதைத்

தெளிவாக உணரலாம். இவற்றுள் ஒரு செய்யுளை மட்டும் இங்குக் குறிப்பிடுகிறோம்.

இல்லார் நுதலயு நீயுமின் றேசென்று மேவுதிர்கு
தெல்லா முணர்ந்தவ ரேழ் பெருந்த தரங்கத் தியவனர்கள்
அல்லா வெனவந்து சத்திய நந்தாவகை தொழுஞ் சீர்
நல்லார் பயிலும் பழனங்கள் சூழ்தரு நாட்டகமே

இச்செய்யுளின் மூன்றாவது அடியில் வரும் 'அல்லாவென வந்து சத்திய நந்தா வகை தொழுஞ்சீர்' என்பது பல்சந்தமாலை இலக்கியம் இஸ்லாமியச் சார்புள்ளது என்பதற்கோர் காரண மாகக் கொள்ளலாம். இதுபோன்று ஏனைய செய்யுட்களின் உள்ளடக்கக் கருத்துக்களும் பல்சந்தமாலை இஸ்லாமியத் தமிழிலக் கியமே என்பதைப் பறைசாற்றுகின்றன. அவற்றை இங்கு எடுத்துக் கூறின் விரியும் என்ற காரணம் கருதி விடுக்கின்றோம்.

இனி, பல்சந்தமாலையின் காலக் கணிப்பு தொடர்பாகச் சில கருத்துக்களைக் காண்போம். கால ஆராய்ச்சியைப் பல்சந்த மாலையின் மொழி இயல்பினைக் கொண்டு ஓரளவு கணிக்கலாம். பல்சந்தமாலையின் காலம் தொடர்பாக மு. அருணாசலம் கூறும் போது இது 14-ஆம் நூற்றாண்டினைச் சார்ந்தது என்பர். ஆனால் இது பொருந்துவதன்று. பல்சந்தமாலையில் இடம்பெற்றுள்ள செய்யுட்களில் அதன் ஆசிரியர் தொல்காப்பியரின் மொழி மரபினைப் பின்பற்றியுள்ளார். ஆனால் அதே நேரத்தில் நன்னூல் கருத்துக்களுக்கு ஏற்புடையதாகக் காணப்படவில்லை. இதில் ஆசிரியர் சோனகரைக் (முஸ்லிம்களை) குறிக்க இயவனர் என்ற சொல்லாட்சியை இரு இடங்களில் பயன்படுத்தியுள்ளார். அத்துடன் 'இயவனராசன்' என ஒரு செய்யுளை ஆரம்பிக்கின்றார்.

'இயவனராசன் கலுபா தாழுதலெண்ண வந்தோர்'...

என அமைகிறது இச்செய்யுள். இனி பிறிதொரு செய்யுளின் இரண்டாமடி

'தெல்லா முணர்ந்த ரேழ்பெருந்த தரங்கத் தியவனர்கள்'

என உள்ளது. இவ்விரண்டு செய்யுட்களிலும் இயவனர் எனவே வந்துள்ளது. முதலாம் செய்யுளில் இயவனர் என்பது பாடலை ஆரம்பிக்கும் சொல்லாக வர மற்ற செய்யுளில் யகரத்தின் முன் வந்த குற்றியலிகரம் முற்றியலிகரமாக மாறி 'இயவனர்' என வந்துள்ளது. யவனர் எனப் பாடலில் பயன்படுத்தி இருந்தால்

அம்மரபு தொல்காப்பிய மொழி வழக்காறு நிலைக்கு முரணாக இருந்திருக்கும். சான்றோர் அதனைத் தவறு எனக் கருதுவர். பல்சந்தமாலை ஆசிரியர் வாழ்ந்த காலத்தில் அகரத்தோடு யகரமெய் மொழிக்கு முதலில் வரும் என்ற நிலை இருந்திருக்காமல் இருக்கலாம். எனவேதான் பல்சந்தமாலை ஆசிரியர் இயவனர் என்னும் சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார். ஆனால் இம்மரபு நன்னூல் கூறும் மொழி இலக்கணத்துக்கு முரணானது. எனவே பல்சந்தமாலை ஆசிரியர் காலத்தை நன்னூல் எழுதிய பவணந்தி முனிவர் காலத்துக்கு முற்பட்டதாகக் கொள்ளல் வேண்டும். பவணந்தியாரின் காலம் 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்பது தெளிவு. அப்படியாயின் அதற்கு முற்பட்ட காலமான 12ஆம் நூற்றாண்டினையே பல்சந்தமாலை சார்ந்ததாக இருத்தல் வேண்டும். இக்காலத்தையே இஸ்லாமியத் தமிழிலக்கியங்களின் தொடக்க காலமாகக் கொள்ளலாம்.

பல்சந்தமாலை என்னும் தமிழிலக்கியத்தின் மூலமாக தமிழிலக்கிய உலகில் கால்கோள் கொள்ளத் தொடங்கிய இஸ்லாமியத் தமிழிலக்கியப் பிரிவு இன்றளவு ஒன்பது நூற்றாண்டு கால இலக்கியப் பாரம்பரியத்தைத் தமக்கெனவுடையதாகக் கொண்டுள்ளது. இவ்வொன்பது நூற்றாண்டு கால எல்லையில் ஏறத்தாழ இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பல்வேறான வகைப் பட்ட தமிழிலக்கியங்களைப் பெற்றுத் தமக்கெனச் சுட்டிக்காட்டத் தக்க இலக்கிய வரலாற்றுப் பின்னணியை இஸ்லாமியத் தமிழிலக் கியப் பிரிவு பெற்றுள்ளது.

பல்சந்தமாலைக்கு அடுத்த நிலையில் யாகோபுச் சித்தர் பாடல்கள் (15ஆம் நூற்றாண்டு), ஆயிர மசலா (கி. பி. 1572), மிகுராஜ் மாலை (கி. பி. 1590), திருநெறி நீதம் (கி. பி. 1613), கனகாபிஷேக மாலை (கி. பி. 1648), சக்கன் படைப்போர் (கி. பி. 1686), முதுமொழி மாலை (17ஆம் நூற்றாண்டின் இறுதி) சீறாப்புராணம் (கி. பி. 1703), திருமக்காப்பள்ளு (17ஆம் நூற்றாண்டு) முதலான ஒன்பது இலக்கியங்கள் இடம் பெறுவதாக அவற்றின் கால எல்லை அடிப்படையில் வரையறை செய்யலாம். பல்சந்த மாலையுடன் சேர்த்து இப்பத்து இலக்கியங்களையும் தொடக்க கால இஸ்லாமியத் தமிழிலக்கியங்களாகக் கொள்ளலாம்.

தொடக்க காலத்தில் இஸ்லாமும் தமிழும் இணைந்த நிலையி லேயே படைப்போர் இலக்கியம் ஒன்றும் தோன்றி இருப்பது

இங்குக் குறிப்பிடற்பாலது. தொடக்க காலத்தில் ஒருசில இலக்கியங்களே வரப்பெற்ற போதிலும் இஸ்லாமியத் தமிழிலக்கியங்களின் வருகை நிலை காலப்போக்கில் பெருகலாயிற்று. கி. பி. 18, 19, 20ஆம் நூற்றாண்டுகளில் இன்றுள்ள இஸ்லாமியத் தமிழிலக்கியங்கள் அனைத்தும் அடங்கும். இந்நூற்றாண்டுகளை இஸ்லாமியத் தமிழிலக்கிய ஆக்கத்தின் பொற்காலமாகக் கருதலாம்.

இஸ்லாம் தமிழுக்காற்றியுள்ள பணிகளுள் குறிப்பிடத்தக்கது, வேறு எந்தவொரு தனிப்பட்ட சமயமும் அளித்திராத எண்ணிக்கையில் காப்பியங்களைப் படைத்தளித்திருப்பதாகும். கனகவிராஜரின் கனகாபிஷேக மாலை, உமறுப்புலவரின் சீறாப்புராணம், கேசாதி நயினாரின் திருமணக்காட்சி, பனியகுமது மரைக்காயரின் சின்ன சீறா, வண்ணக் களஞ்சியப் புலவரின் இராஜ நாயகம், சேகனாப் புலவரின் குத்புநாயகம், வண்ணக்களஞ்சியப் புலவரின் குத்பு நாயகம், பதுறுத்தீன் புலவரின் முஹியித்தீன் புராணம், சேகனாப் புலவரின் திருமணி மாலை, புதுகுஷ்ஷாம், திருக்காரணப் புராணம், வண்ணக் களஞ்சியப் புலவரின் தீன்விளக்கம், ஐதுறூசு நயினார் புலவரின் நவமணிமாலை, குலாம் காதிறு நாவலரின் நாகூர் புராணம், ஆரிபு நாயகம் போன்ற பதினைந்து இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங்களை இயற்றித் தந்த பெருமை முஸ்லிம் தமிழ்ப் புலவர்களைச்சாரும்.

காப்பியங்களுடன் முஸ்லிம் தமிழ்ப்புலவர்கள் நின்றுவிடவில்லை. தமிழிலக்கிய வரலாற்றில் காலத்திற்கேற்ப தோன்றியுள்ள பல்வேறான இலக்கியவகைகளிலும் தங்களது பங்களிப்பினை நிலைநாட்டியுள்ளார்கள். அத்துடன் தமிழிலக்கிய வரலாற்றிற்குச் சில புதிய இலக்கிய வடிவங்களையும் அறிமுகம் செய்வித்த பெருமை முஸ்லிம் புலவர்களைச் சாரும். இத்தகு இலக்கிய வடிவங்களே புதுவகை இஸ்லாமியத் தமிழிலக்கியங்களாக இடம் பெற்றுள்ளன. இங்ஙனம் இஸ்லாமும் தமிழும் இணைந்ததின் பயனாக எண்ணிலடங்காத் தமிழிலக்கியங்கள் தோன்றியுள்ளன. இன்றும் தோன்றிய வண்ணம் உள்ளன. இதன் காரணமாக இஸ்லாமியத் தமிழிலக்கியப் பிரிவுத் தமக்கெனத் தனித்தொரு இலக்கிய வரலாற்றுப் பின்னணியைப் பெற்றுச் சிறக்கிறது. இத்தகு இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாறு தமிழிலக்கிய உலகிற்கு ஓர் உன்னதமான கொடையாகவே விளங்குகிறது.

புதுவகை இஸ்லாமியத் தமிழிலக்கிய வடிவங்கள்

தமிழ்க் காப்பிய உலகிற்கு மட்டுமன்றி முஸ்லிம் புலவர்கள் பெரும்பாலான எண்ணிக்கையில் சிற்றிலக்கியங்களையும் உருவாக்கித் தந்துத் தமிழ்ச் சிற்றிலக்கியப் பரப்பில் உரிய முக்கியத் துவத்தைப் பெற்றுள்ளனர். இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தலைப்புக்களைப் பெற்றுள்ள இஸ்லாமியத் தமிழிலக்கியங்களுள் சிற்றிலக்கியங்கள் ஒரு பெரும் பிரிவாகக் காட்சியளிக்கின்றன. எண்ணிக்கை அளவில் மூன்றில் இரு பகுதியான இஸ்லாமியத் தமிழிலக்கியங்கள் சிற்றிலக்கியப் பிரிவினைச் சார்ந்துள்ளன. இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றின் ஆரம்பக்காலம் முதல் இன்றைய காலம் வரையில் பல்வேறு தமிழ்ச் சிற்றிலக்கியப் பிரிவு களைச் சார்ந்தனவாக எண்ணற்ற இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக் கியங்கள் தோன்றியுள்ளன. இவைகள் பெரும்பாலும் தமிழ்ச் சிற்றிலக்கிய மரபுகளுக்குட்பட்ட வடிவங்களையே சார்ந்துள்ளன. குறிப்பாகச் சதகம், கலம்பகம், அந்தாதி, மாலை, பிள்ளைத் தமிழ், தூது, கோவை, பதிகம், குறவஞ்சி, இன்னிசை, தசரத்தினம், அலங்காரம், சரமகவி, பல்சந்த மாலை, வாயுறை வாழ்த்து, பஃறொடை, ஒருபா ஒருபஃது, திருமண வாழ்த்து, ஆற்றுப்படை பள்ளு, சதுர்பிரபந்தம், மஞ்சரி, கும்மி, கீர்த்தனை, சிந்து, ஏசல், பதம், முதலான இன்ன பிற மரபு வகைப் பிரபந்தங்களையே இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் சார்ந்துள்ளன. இப்பிரிவுகள் ஒவ்வொன்றிலும் ஒன்று முதல் இருநூறுக்கும் மேற்பட்ட எண்ணிக்கைகளைக் கொண்ட இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்களைக் காணலாம். இஸ்லாமியத் தமிழ்ச்

சிற்றிலக்கியங்களின் விரிந்துபட்ட எண்ணிக்கைப் பரப்பினை 'இஸ்லாமியத் தமிழிலக்கிய நூல் விவரக்கோவை' (ம. முகம்மது உவைஸ், பீ. மு. அஜ்மல்கான்) தெளிவாகப் பட்டியலிட்டுக் காட்டு கிறது.

உள்ளடக்கம் என்ற நிலையில் அனைத்து இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்களும் ஏதாவது ஒரு விதத்தில் இஸ்லாமியச் சமயக் கருத்துக்களுடன் தொடர்புடையனவாகவே அமைந்துள்ளன. எனவே இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்களை அவைகள் சார்ந் துள்ள உள்ளடக்கத்தின் அடிப்படையில் பின்வருமாறு பத்து வேறு பட்ட பிரிவுகளுக்குள் அடக்கலாம்.

1. இஸ்லாமியச் சமயத்தின் அடிப்படைக் கருத்துக்களையும் நெறிகளையும் கூறுவன.
2. இஸ்லாமிய மார்க்க வரலாற்று நிகழ்ச்சிகளை எடுத் துரைப்பன.
3. பெருமானார் நபிகள் நாயகம் (சல்) அவர்களைத் தலைவ ராகக் கொண்டு படைக்கப்பட்டன.
4. இறைநேயச் செல்வர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டன.
5. புலவர் ஆதரித்த புரவலர்களைப் பாட்டுடைத் தலைவ ராகக் கொண்டன.
6. இஸ்லாமியப் புண்ணியத் தலங்களைப் புகழ்ந்துரைக்கும் பாடல் செய்திகளை மட்டுமே கொண்டன.
7. அகப்பொருள் பற்றியன.
8. இஸ்லாமிய விழாக்களில் மட்டுமே படிப்பதற்கான செய்தி களை உள்ளடக்கமாகக் கொண்டு இயற்றப்பட்டன.
9. குறிப்பிட்ட சமய நிகழ்வுகளில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுகலாறுகளை மட்டுமே பாடுபொருளாய்க் கொண்டன.
10. இவையல்லா பிற

என்ற நிலைகளில் வகைப்படுத்தப்படலாம்.

இதேபோல் இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்களின் வகை என்ற நிலையில் இரு தனித்த பிரிவுகள் இருப்பதை உணர முடிகிறது. 1. மரபு வகை இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள், 2. புதிய வகை இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள். இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் பலவும் முன்னர்க் குறிப்

பிட்டது போல் தமிழ்ச் சிற்றிலக்கிய மரபிற்கேற்ப அந்தந்த காலத் தமிழ்ச் சிற்றிலக்கியங்களின் வடிவத்தையும் யாப்பமைதிகளையும் ஏனை பிற இலக்கண வரையறைகளையும் பின்பற்றி அமைந்துள்ளன. இவைகளை மரபு வகை இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் என்ற பிரிவின் கீழ் வகைப்படுத்தலாம். ஆனால் தமிழ்ச் சிற்றிலக்கிய மரபில் குறிப்பிடப்படாத சில புதிய வகைச் சிற்றிலக்கியங்களையும் இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியப் பிரிவு பெற்றுள்ளது. இத்தகு இலக்கியங்களைப் புதுவகை இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் என்ற தனித்த பிரிவிற்குள்ளாகவே வகைப்படுத்த வேண்டியுள்ளது. மரபு வகைச் சிற்றிலக்கியப் பிரிவில் அடங்காத புதுவகை இஸ்லாமியச் சிற்றிலக்கியங்கள் முஸ்லிம் புலவர்களால் படைக்கப்பட்ட சிறப்பு இலக்கிய வடிவங்கள் என்றும் கூறலாம். காரணம் இத்தகு இலக்கிய வகைகள் இஸ்லாமியக் கருத்துக்கள் அடங்காத பிற நிலைக் கருத்துக்களைக் கொண்டுத் தமிழிலக்கிய வரலாற்றில் எங்கும் காணப்படவில்லை. அவைகளாவன; கிஸ்ஸா, நாமா, முனாஜாத்து, மசாலா, படைப் போர் முதலான ஐந்து இலக்கியப் பிரிவுகளாகும். இவ்விலக்கிய வகைகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் தோன்றிய எந்தவொரு மரபுச் சிற்றிலக்கிய வகையையும் சாராதவைகளாகும். இவற்றுள் படைப்போர் என்னும் இலக்கிய வகை மட்டுமே தமிழ்ப் பெயரால் அழைக்கப்பட்டுள்ளது. ஏனையவற்றுள் நாமா என்பது பாரசீகப் பெயரினையும் கிஸ்ஸா, முனாஜாத்து, மசாலா என்பன அறபுப் பெயர்களையும் பெற்றமைந்துள்ளன.

இஸ்லாத்திற்கும் அறபு, பாரசீக மொழிகளுக்கும் உரிய பிணைப்பு பிரித்தற்கரியது. காரணம் இஸ்லாம் உலகில் வேரூன்றிப் பரவத் தொடங்கியது, முதல் கட்டங்களில் அறபு, பாரசீக மொழிப் பகுதியிலேயே. மேலும் இஸ்லாமியச் சமயத்தில் அறபு மொழியைப் புனித மொழியாகக் கருதுகின்றனர். இதற்குக் காரணம் இஸ்லாமியச் சமயத்தின் ஏகோபித்த இறைமறையாம் அல்குர் ஆன் அறபு மொழியிலேயே அமைந்திருத்தலாகும். எனவே இஸ்லாம் உலகில் எங்கெங்கு இருக்கிறதோ அங்கெல்லாம் அறபு மொழியும் செல்வாக்குப் பெற்றிருந்தது. அறபு மொழியின் செல்வாக்கிற்குத் தமிழகத்திலுள்ள இஸ்லாமியச் சமுகச் சூழலைச் சான்றாகக் காட்டலாம். இன்றைய நிலையிலும் முஸ்லிம் சமுகத்தில் தமிழ் மொழியை வாசிக்கத் தெரியாத பல ஆண்களும் பெண்களும் அறபு மொழியை வாசிக்கும் கல்வி அறிவினைப்

பெற்றுள்ளார்கள். இதன் காரணமாகத் தமிழ் இலக்கியங்கள்கூட அறபு எழுத்து வடிவத்தைப் பயன்படுத்தி அவர்கள் மத்தியில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இத்தகு முறையில் அமைந்த தமிழிலக்கியப் பிரிவை அறபுத் தமிழ் என்றே குறிப்பிடுகின்றோம். எனவே தமிழகத்தில் இஸ்லாத்தை மையமாகக் கொண்டு தோன்றிய தமிழிலக்கியங்களில் அறபு மொழியின் செல்வாக்குத் தவிர்க்க முடியாததாக அமைந்தது. சமயக் கருத்துக்களை இஸ்லாத்தின் வழி எடுத்துரைக்கும்போது முஸ்லிம் புலவர்கள் தமக்கெனத் தனியே உத்தி முறைகளையும் வகுக்கலாயினர். இவ் உத்தி முறைகள் அறபு, பாரசீக இலக்கியங்களை அடியொற்றி அமையலாயிற்று. முஸ்லிம் புலவர்கள் தத்தம் தமிழிலக்கியப் படைப்புக்களுக்குரிய மூலங்களைத் தேடுவதில் அறபு, பாரசீக இலக்கியங்களின் துணையை நாடலாயினர். அறபுக் கலாசாரம், வரலாறு, பின்னணி சார்ந்த சமயக் கருத்துக்களுக்கு மக்கள் மத்தியில் இருந்த வரவேற்புப் படைப்பாளர்களிடத்து அறபு, பாரசீக இலக்கியங்களின் தாக்கத்தை அதிகப்படுத்துவதற்கான ஒரு காரணமாகவும் அமைந்தது. இப்பின்னணியின் விளைவே அறபு, பாரசீக இலக்கியங்களின் தாக்கத்தால் அங்குள்ள இலக்கிய வடிவங்களான கிஸ்ஸா, நாமா, முனாஜாத்து, மசாலா, படைப்போர் முதலான புதிய இலக்கிய வடிவங்கள் தமிழிலக்கிய வரலாற்றில் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது. இவ்விலக்கிய வடிவங்கள் பற்றிய ஒரு சில கருத்துக்களை இனிக் காண்போம்.

கிஸ்ஸா இலக்கியங்கள்

'கிஸ்ஸா' என்னும் அறபுச் சொல்லின் (gissa) நேரடியான பொருள் கதை என்பதாகும். இஸ்லாமிய மதக் கருத்துகளையும், வரலாற்று நிகழ்ச்சிகளையும், போதனைகளையும் கதையாக எடுத்துரைத்தலாகும். 'காலியாருக்கும் கள்ளனுக்கும் நடந்த கிஸ்ஸா' என்ற நூலின் முகப்பில், பழங்காலத்தில் அறிவுடையோர் சிலர் கூடியிருந்து மானுடர்களுக்கு மனமகிழ்ச்சியையும் சிரிப்பையும் தரத்தக்கவைகளாக அநேகம் கிஸ்ஸாக்களை, அறபு பாஷையிற் கோவை செய்திருக்கின்றவைகளில் நின்றும் எடுத்துக் கூறுவதாகச் சுட்டப்பட்டுள்ளது. எனவே கிஸ்ஸா இலக்கியங்கள் தோன்றிப் பெருகுவதற்கு இலக்கிய இன்ப அடிப்படையில் அமைந்த பொழுது போக்கு எண்ணமே காரணம் எனலாம். படைப்பாளர்கள் இப்பொழுதுபோக்கு எண்ணத்துடன் மார்க்க நல்லுரைகளை வழங்குதலையும், மார்க்க வரலாற்றினை இணைப்பதையும்

கிஸ்ஸா இலக்கியங்களில் கையாண்டிருப்பது நன்குத் தெரிகிறது. இஸ்லாமியத் தமிழ் இலக்கிய படைப்பாளர்களிடம் ஏற்பட்ட மார்க்கக் கருத்துக்களைப் பரப்புதல் வேண்டும் என்ற ஆதங்கமே இக்கிஸ்ஸா இலக்கியங்கள் தமிழ் இலக்கிய உலகில் தோன்றுவதற்கான அடிப்படைக் கருத்தெனலாம். தங்களுடைய ஆதங்கம் நிறைவேறுவதற்கான இலக்கிய வழிமுறையை இஸ்லாமியத் தமிழிலக்கியப் படைப்பாளர்கள் அறபு, பாரசீக, உருது மொழிகளைப் பின்பற்றி அமைத்துக் கொள்கின்றார்கள்.

கிஸ்ஸா என்னும் இவ்விலக்கியப் பிரிவின்கீழ் எமக்குக் கிடைத்துள்ள தகவல் அடிப்படையில் இருபது இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இவற்றுள் சில ஒரே கதைக் கருவினையும் ஒரே பெயரினையும் பெற்றுச் சிற்சில கதைக்கூறு வேறுபாடுகளைப் பெற்று வெவ்வேறான ஆசிரியர்களால் வெவ்வேறு வருடங்களில் இயற்றப்பட்டிருக்கின்றன. இதற்குச் சான்றாக ஷம்ஊன்றலி யல்லாஹு உடைய கிஸ்ஸாவைக் குறிப்பிடலாம். இத்தலைப்பில் நன்கு கிஸ்ஸாக்கள் வெவ்வேறான காலங்களில் தோன்றியிருக்கின்றன. மேலும் ஒரே ஆசிரியரும் ஒன்றுக்கு மேற்பட்ட கிஸ்ஸாக்களையும் இயற்றியுள்ளதைக் காண முடிகின்றது. இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆம்பூர் அப்துல் காதர் சாஹிப், அய்யம்பேட்டை அப்துல் றஜாக் ஆகியோர். இவ்விருவரும் தலா நான்கு கிஸ்ஸாக்களை இயற்றியுள்ளனர்.

தமிழிலுள்ள கிஸ்ஸாக்களும் அவற்றின் ஆசிரியர் பெயர், வெளியிடப்பட்டுள்ள வருடம் பின்வருமாறு அமைகிறது. வருடங்கள் என்ற பிரிவில் வினாக்குறி இருக்குமானால் அக்கிஸ்ஸா தோன்றியுள்ள வருடம் குறித்துத் தெளிவாகத் தெரியவில்லை என்று பொருள்படும்.

	கிஸ்ஸாவின் பெயர்	ஆசிரியர் பெயர்	வருடம்
1.	சைத்தூன் கிஸ்ஸா	ஷேக் லெப்பை	கி. பி. 1874 (?)
2.	அய்யூப் நாயனுடைய கிஸ்ஸா	அப்துல் வஹாப்	1882
3.	முகம்மது அனிபு கிஸ்ஸா	முகம்மது இப்றாகீம்	1902
4.	சுல்தான் இபுறாகிமுடைய கிஸ்ஸா	ஷாகுல் ஹமீது	1912 (?)

	கிஸ்ஸாவின் பெயர்	ஆசிரியர் பெயர்	வருடம்
5.	ஷம்ஊன் (றலி) கிஸ்ஸா	முகம்மது இப்றாகீம்	1915
6.	ஷம்ஹூன் (றலி) கிஸ்ஸா	முகம்மது இஸ்மாயில்	1916
7.	காலியாருக்கும் கள்ளனுக்கும் நடந்த கிஸ்ஸா	முகம்மதப்துல்லா லெப்பை	1925
8.	யூசுப் நபி கிஸ்ஸா	மதாரு சாஹிபு	1925
9.	அலி (றலி) கிஸ்ஸா	காளி முகம்மது ஜான் லெப்பை	1925
10.	குலேபகாவலி கிஸ்ஸா	அப்துல் காதர் சாகிபு	1936
11.	விறகு வெட்டியார் கிஸ்ஸா	அப்துல் றஸாக்	1950
12.	காலி கோரி கிஸ்ஸா	அப்துல் றஸாக்	1952
13.	இசுவத்து நாச்சி யுடைய கிஸ்ஸா	மகுதூம் முஹம்மது புலவர்	1953
14.	ஷம்ஊன் (றலி) கிஸ்ஸா	ஷாஹூல் ஹமீது	1952
15.	தமீமுல் அன்ஸாரி அவர்களின் கிஸ்ஸா	அப்துல் காதிர் சாஹிபு	1952
16.	கபன் கள்ளன் கிஸ்ஸா	அப்துல் றஸாக்	?
17.	அபூஷஹ்மா கிஸ்ஸா	அப்துல் றஸாக்	?
18.	ஷம்ஊன் (றலி) கிஸ்ஸா	மெய்தீன் பிச்சை	?
19.	பீவிமரியமுடைய கிஸ்ஸா	அப்துல் காதர் சாஹிப்	?
20.	சைத்தூன் கிஸ்ஸா	அப்துல் காதர் சாஹிப்	?

இவற்றுள் கட்டுரையாளருக்குக் கிடைத்துள்ள தெளிவான சான்றாதாரங்களின் அடிப்படையில் இஸ்லாமியத் தமிழிலக்கிய உலகில் முதன் முதலில் தோன்றிய கிஸ்ஸா இலக்கியப் பிரிவாக அய்யூப் நாயனுடைய கிஸ்ஸாவினையே கொள்ள முடிகிறது. இக்கதைகளுக்குரிய மூலக்கதைகள் பெரும்பாலும் அறபு, பாரசீக மொழியிலும், உருது மொழியிலும் உள்ளன. இம் மூலக்கதை களைத் தமிழுலகில் கொண்டுவர விரும்பியதன் விளைவும் கிஸ்ஸாக்களின் பெருக்கத்திற்கு ஒரு காரணமெனலாம்.

கிஸ்ஸாத் தமிழிலக்கியங்களின் உருவம்

பொதுவாகத் தமிழிலக்கிய உருவங்களை வகைப்படுத்தும் போது முதல் நிலையில் செய்யுள் வடிவம், உரைநடை வடிவம் என்றே பிரிப்பர். இவ்வகையில் கிஸ்ஸா இலக்கியங்களைச் செய்யுள் அல்லது உரைநடை என்று வரையறுத்துக் கூற முடியாத நிலையில் கிஸ்ஸா இலக்கியங்களின் உருவம் அமைந்துள்ளன. சில கிஸ்ஸாக்கள் செய்யுள் வடிவத்திலும், சில உரைநடை வடிவத்திலும், சில செய்யுள், உரைநடை இரண்டும் விரவியும் காணப்படுகின்றன. யூசுப் நபி கிஸ்ஸா, முகம்மது அனிபு கிஸ்ஸா போன்றன செய்யுள் வடிவத்திலும், காலி கோரி கிஸ்ஸா, அலி றலி யல்லாஹு அன்ஹு கிஸ்ஸா போன்றவைகள் உரைநடை வடிவத்திலும், சைத்தூன் கிஸ்ஸா, ஷம்ஊன் றலியல்லாஹு அன்ஹுடைய கிஸ்ஸா போன்றவைகள் செய்யுள், உரைநடை ஆகிய இரண்டும் விரவியும் காணப்படுகின்றன. இருபது கிஸ்ஸாக்களுள் பெரும்பாலான உரைநடை வடிவத்திலேயே அமைந்துள்ளன. எனினும் கிஸ்ஸா இலக்கியங்களுக்குரிய வடிவம் இன்னதுதான் என்று வரையறுக்க முடியாதபடி செய்யுள், உரைநடை ஆகிய இரண்டும் அமையப்பெற்று இருத்தல் ஏனைய பிற இலக்கியப் பிரிவுகளிலிருந்து இவ்வகை இலக்கியங்களைப் பெரிதும் வேறுபடுத்துகின்றன. மேலும் ஒரே பெயரில் அமைந்துள்ள கிஸ்ஸாக்களில்கூட உருவத்திலும் ஒற்றுமையைக் காண முடியவில்லை. ஷேக் லெப்பை எழுதியுள்ள ‘சைத்தூன் கிஸ்ஸா’ முழுவதும் செய்யுள் வடிவத்திலும், அப்துல் காதர் சாஹிபு எழுதியுள்ள ‘சைத்தூன் கிஸ்ஸா’ செய்யுள், உரைநடை இரண்டும் விரவியும் அமைந்துள்ளன. எனவே ஒரே பெயரில் ஒரே கதையம்சத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கிஸ்ஸாக்கள் இருந்தாலும் அவை உருவத்தாலும், காலத்தாலும் வேறுபட்டிருப்பதால் தனித்தனி இலக்கிய வடிவங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. செய்யுள் வடிவில் அமைந்துள்ள கிஸ்ஸாக்கள் விருத்தங்களாக உள்ளன. இஸ்லாமியத் தமிழ்க் கிஸ்ஸாக்களை வகைப்படுத்த வேண்டுமாயின் அவற்றின் உருவ அடிப்படையில் பிரிக்கலாம். இருபது கிஸ்ஸாக்களுள் உருவத்தால் மிகவும் சிறியது கபன் கள்ளன் கிஸ்ஸாவும், பெரியது இசுவத்து நாச்சியுடைய கிஸ்ஸாவும் ஆகும்.

கிஸ்ஸாத் தமிழிலக்கியங்களின் உள்ளடக்கம்

உள்ளடக்கம் என்ற நிலையில் கிஸ்ஸாத் தமிழிலக்கியங்கள் முழுக்க முழுக்க இஸ்லாமிய மார்க்கத்தையே அடிப்படையாகக்

கொண்டுள்ளன. கிஸ்ஸாக்களின் நோக்கங்களுள் மார்க்கக் கருத்துரைகளையும், மார்க்க வழிநின்ற முன்னையோர் வரலாற்றினையும் பரப்புதல் என்பது ஒன்றாக இருப்பதால் இருபது கிஸ்ஸாக்களும் இஸ்லாமியக் கருத்துக்களை மையமாகக் கொண்டுள்ளன. பொதுவாக இவ்விருபது கிஸ்ஸாக்களையும் அவற்றின் உள்ளடக்கத்தை மையமாகக் கொண்டு இரண்டு பிரிவுகளுக்குள் அடக்கலாம்.

1. இஸ்லாமிய மார்க்க வரலாற்று நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்ட கிஸ்ஸாக்கள்.
2. வரலாற்றுத் தொடர்பில்லாது இஸ்லாமியக் கருத்துக்களை மட்டுமே மையமாகக் கொண்ட கிஸ்ஸாக்கள்.

இஸ்லாமிய மார்க்க வரலாற்று நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்ட கிஸ்ஸாக்கள்

இங்கு வரலாறு என்பது நபிமார்களின் வரலாற்றினையும் இறை நேயம் பெற்ற இறை நேயச் செல்வர்களின் வரலாற்றையும் அறபு நாட்டின் மன்னர்களது வரலாற்றினையும் குறிப்பதாகும். இதனடிப்படையில் பதினைந்து கிஸ்ஸாக்கள் அமைந்துள்ளன.

இப்பதினைந்து கிஸ்ஸாக்களுள் குர்ஆனில் இடம் பெற்றுள்ள நபிமார்களாக விளங்கும் அய்யூப் நபி, யூசுப் நபி ஆகிய இருவரது வரலாற்றினையும் அடிப்படையாகக் கொண்ட இரு கிஸ்ஸாக்கள் (கிஸ்ஸா எண்: 2, 8) காணப்படுகின்றன. அல் குர் ஆனின் 12வது அத்தியாயம் யூஸுஃப் என்ற தலைப்புடன் 111 வசனங்களைக் கொண்டுள்ளது. இக்கதையே குர்ஆனில் இடம் பெற்றுள்ள கிளைக் கதைகளிலேயே விரிவானதும் முழுமையானதுமாகும். இக்கதை முழுக்க மனிதர்களின் நிலைமாற்றத்தைக் குறிப்பதாகும். இதனைக் கருவாகக் கொண்டு விருத்தப்பாவில் யூசுப் நபி கிஸ்ஸா அமைந்துள்ளது. இக்கிஸ்ஸாவினை ஒரு உருவகக் கதையாகவே (allegory) ஆசிரியர் இயற்றியுள்ளார். அய்யூப் நபி நோய்வாய்ப் பட்டதும், அது அல்லாஹ்வின் கருணையால் குணமானதும் போன்ற இன்னபிற நிகழ்ச்சிகள் குர்ஆனில் இடம் பெற்றுள்ளன. (4:163, 6:84, 21:83, 38:41-44) இவற்றினை மையமாகக் கொண்டே அய்யூப் நபி கிஸ்ஸா அமைகிறது. நபிமார்கள் அன்றிக் குர்ஆனில் இடம் பெற்றுள்ள மரியம்முடைய வரலாற்றினை (3:35-37, 3:42-47, 4:156 பிற) அடிப்படையாகக் கொண்டே பீவி மரியம்முடைய கிஸ்ஸா காணப்படுகின்றது.

இனி, பெருமானார் அடியொற்றி ஆட்சி நடத்தி 'நேர்வழி நடந்த நால்வர்' எனச் சிறப்புப் பெற்றவர்களுள் ஹலரத் உமர், ஹலரத் அலி ஆகிய இருவரது வரலாற்றினையும் ஒட்டி இரண்டு கிஸ்ஸாக்கள் காணப்படுகின்றன. (கிஸ்ஸா எண்: 9, 17). ஹலரத் அலியார் பரம்பரையான முகம்மது அனிபாவைக் கதை நாயகராக மூன்று கிஸ்ஸாக்கள் (கிஸ்ஸா எண்: 1, 3, 20) கொண்டுள்ளன. இம்மூன்றினுள்ளும் முகம்மது அனிபா, சைத்தூன் கலந்து கொண்ட போர் நிகழ்ச்சிகள் விரிவாக இடம் பெறுவதுடன் ஏனைய ராஜாக்களான செண்டூல் ராஜன் போன்றோர் இஸ்லாமைத் தழுவிய நிகழ்ச்சிகளும் விவரிக்கப்படுகின்றன.

இறைவனுடைய கருணையைப் பெற்ற அவுலியா என்னும் இறைநேயர்களின் வரலாற்றையும் அடிப்படையாகக் கொண்டு சில கிஸ்ஸாக்கள் தோன்றியுள்ளன. இத்தகைய கிஸ்ஸாக்களின் கதைத் தலைவராக இருப்பவர்கள் அரசர்களாகவே இருந்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். சுல்தான் இப்றாகீமுடைய கிஸ்ஸா (கிஸ்ஸா எண் ; 4) இப்றாகீம் அவுலியாவின் கதையை எடுத்துரைக்கின்றது. அரசர் காலிதிப்னுல் வலீதுவின் மகனான ஷம்ஊனைத் தலைவராகக் கொண்டு நான்கு கிஸ்ஸாக்கள் (கிஸ்ஸா எண் : 5, 6, 14, 18) உள்ளன.

மதினமா நகரில் வாழ்ந்த இருவரது வாழ்க்கை நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டு இரு கிஸ்ஸாக்கள் (கிஸ்ஸா : 13, 15) காணப்படுகின்றன. இவற்றுள் ஒன்று லாபிர் என்னும் ஆலிம் மகளான இசுவத்து நாச்சியார் என்னும் கற்புநாயகி, தமது கற்பைக் காத்த சரித்திரத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்நூலினுள் உட்தலைப்புக்கள் 162உம் வெவ்வேறான தலைப்புக்களைப் பெற்று வரலாறு என்றே குறிப்பிடப்பட்டுள்ளது, இதில் உள்ள மற்றொரு சிறப்பு கதையில் வரும் அரபுச் சொற்களுக்கு ஆங்காங்கே அடிக்குறிப்பில் தமிழ் விளக்கம் அளித்திருப்பதாகும். மற்றொரு கிஸ்ஸா மதினமா நகரில் உள்ள அசுஹாபுமார்களுள் ஒருவரான தமீமுல் அன்ஸாரியைத் தலைவராகக் கொண்டதாகும். இக்கிஸ்ஸாவில் உள்ள 13 உட்தலைப்புகளும் 13 கிஸ்ஸாவாகத் தலைப்பிடப்பட்டிருத்தல் குறிப்பிடத்தக்கதாகும்.

பொதுவாக வரலாற்று நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டுள்ள இப்பதினைந்து கிஸ்ஸாக்களும் கதைத்தலைவர்களின் முழுமையான வரலாற்றினைத் தருகின்றன என்று கூறவியலாது.

யூசுப் நபி கிஸ்ஸா போன்றன ஓரளவுக்கு முழுமையான வரலாற்றினையும் சைத்தூன் கிஸ்ஸா போன்றவைகள் கதை நாயகரின் வாழ்வில் நடந்த சில நிகழ்ச்சிகளையும் எடுத்துரைப்பனவாக உள்ளன.

வரலாறு தொடர்பில்லாது இஸ்லாமியக் கருத்துக்களை மட்டுமே மையமாகக் கொண்ட கிஸ்ஸாக்கள்

இப்பிரிவின் கீழ் ஐந்து கிஸ்ஸாக்களை (கிஸ்ஸா எண் : 7, 10, 11, 12, 16) அடக்கலாம். இக்கிஸ்ஸாக்கள் இஸ்லாமியக் கருத்துக்களை எடுத்துரைப்பதற்காகவே உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆண்டவன் படைப்பில் குறை கண்டால் அது நம்முடைய அறிவீனம் என்பதை எடுத்துரைக்கவே 'காலி கோரி கிஸ்ஸா' உருவாகியுள்ளது. ஹிந்துஸ்தான் மொழியில் கோரி என்றால் சிவத்தவள் என்பதையும், காலி என்றால் கருத்தவள் என்பதையும் குறிப்பதால் அதனடிப்படையில் இக்கிஸ்ஸா பெயர் பெற்றுள்ளது. கருத்தவள், சிவத்தவள் ஆகிய இருவரின் தர்க்கவாதமாகும் இக்கதை. ரஜப் மாதத்தில் 22ந் தேதி கந்தூரி பாத்திஹா ஹலரத் இமாம் ஜாபர் அலி பெயரால் நடத்தப்படுவதின் தேவையையும், ஆரம்பத்தையும் ஒரு விறகு வெட்டியின் வாழ்வியல் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குவதுடன் இஸ்லாமிய மார்க்கத்தில் உள்ள பொதுவான நல்லுரைகளை எடுத்துரைப்பனவாக உள்ளன.

இஸ்லாமியத் தமிழிலக்கியத்தில் ஓர் அங்கம் வகிக்கும் கிஸ்ஸாக்கள் இஸ்லாமிய மார்க்கத்தின் வரலாற்று நிகழ்ச்சிகளையும், ஏனைய பிற கருத்துக்களையும் எடுத்துரைப்பதற்கு ஓர் சிறந்த கருவியாகப் பயன்பட்டிருக்கின்றது என்று கூறின் அது மிகையாகாது. மேலும் பெரும்பாலான கிஸ்ஸாக்களில் பலர் இஸ்லாம் மதத்தைத் தழுவிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருப்பதால் இஸ்லாம் பரவிய வழிமுறைகளையும் தமிழ்க் கிஸ்ஸாக்கள் எடுத்துரைக்கின்றன எனலாம்.

நாமா இலக்கியங்கள்

இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் புதுவகை இஸ்லாமியத் தமிழிலக்கியங்கள் எனச் சுட்டத்தக்க சிறப்பிடத்தைப் பெறும் இலக்கிய வடிவங்களுள் ஒன்றே நாமா என்னும் இலக்கிய வகையாகும். நாமா (nāmā) என்னும் இச்சொல் நாமே (nāmē)

என்னும் பாரசீக சொல்லின் தமிழ் வடிவமாகும். பாரசீக மொழியில் நாமே என்பது கதை அல்லது நூல் அல்லது தொடர் வரலாறு எனப் பொருள்படும். நாமே என்னும் இச்சொல் பாரசீக மொழியில் குறிப்பிடத்தக்க ஒருவகை இலக்கியப் பிரிவினைச் சுட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. சான்றாகக் காபூஸ் நாமே, ஸியாஸத் நாமே, ஷ நாமே போன்ற புகழ்பெற்ற பாரசீக இலக்கியங்களைக் குறிப்பிடலாம். இவ்விலக்கியங்கள் ஒவ் வொன்றும் வெவ்வேறான தொடர் நிகழ்வுகளை எடுத்துரைப்பன வாகும். எடுத்துக் காட்டாக ஸியாஸத்நாமேவை எடுத்துக் கொள்வோம். இந்நூல் செல்ஜுக்குகளில் அமைச்சரான நிஜா முல் முல்க் எழுதியதாகும். இதில் இவர் ஒருநாட்டு அரசனுக்குரிய அறிவுரைகளைத் தொடர் நிகழ்வுகளாக எடுத்துக் கூறுகிறார். தூதுவர்களை நடத்தும் முறை, பிற நாட்டு மன்னர்களை மதிக்கும் பண்பு முதலானவைகள் விரிவாக ஸியாஸத் நாமேயில் இடம் பெற்றுள்ளன. எனவே பல்வேறு செய்திகளை ஒரு தொடர் நிகழ்வுகளாகப் படைத்துக் காட்டும் ஒரு வகையைச் சுட்டுவதே 'நாமே' என்னும் பெயராகும். இவ்விலக்கிய வகையில் பல நூல்கள் பாரசீக மொழியில் தோன்றியுள்ளன. சுல்தான் வலத் என்பவரின் 'இப்திகா நாமா' 'இந்திஹா நாமா' என்னும் இரண்டு இலக்கியங்களும் ஆன்மீக நெறியை எடுத்துரைப்பதில் புகழ் பெற்றனவாகும். இதே போல் 'நாமேயெதானிஷ்வரான்' என்னும் இலக்கியம் ஈரானில் வாழ்ந்த மாமேதைகளைப் பற்றி ஏழு தொகுதிகளில் விரிவாக எடுத்துரைக்கிறது. நாமே இலக்கியங் கள் பாரசீக மொழியில் குறிப்பிடத்தக்க சிறப்பினைப் பெற் றுள்ளன. பாரசீகம் இஸ்லாத்துடன் நெருங்கிய தொடர்பினைப் பெற்றிருப்பதால் பார்சி மொழியின் தாக்கத்தையும் முஸ்லீம் களிடம் பரவலாக நாம் காணலாம். பார்சி மொழித் தாக்கத்தின் பயன்களுள் ஒன்றே இந்திய மொழி பேசும் முஸ்லீம்கள் இயற்றிய நாமா இலக்கியங்களாகும். இந்தியாவில் தோன்றிய பல்வேறு மொழி பேசும் முஸ்லீம் கவிஞர்களும் பார்சி மொழியைப் பின் பற்றி நாமா இலக்கியங்களைப் படைத்துள்ளனர், இந்தியாவில் மிகப் பெரும் கவிஞரான அல்லமா முஹம்மது இக்பாலின் மிகப் பெரும் நூலாகிய ஜாவீத் நாமே குறிப்பிடத்தக்கதாகும். முஸ்லீம் தமிழ்ப் புலவர்களும் இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையைக் கொண்ட நாமா இலக்கியங் களைப் பாரசீக மொழியைப் பின்பற்றித் தமிழுலகுக்கு அறிமுகம் செய்வித்துள்ளனர். இஸ்லாமிய புதுவகைத் தமிழிலக்கியங்களான

கிஸ்ஸா, மஸ்அலா, முனாஜாத்து, படைப்போர் முதலானவைகள் அரபு மொழிச் செல்வாக்கின் காரணமாகத் தமிழிலக்கிய உலகில் இடம் பெற்றவைகளாக இருக்க, நாமா இலக்கியப் பிரிவு ஒன்றே பாரசீக மொழியின் செல்வாக்கால் தமிழ் இலக்கிய உலகில் இடம் பெற்றுள்ளது இவ்விலக்கியப் பிரிவின் தனிப் பண்பாகும்.

முஸ்லீம் தமிழ்ப் புலவர்களின், இஸ்லாமியக் கருத்துக்களையும் வரலாறுகளையும் தமிழுலகில் பரப்புதல் வேண்டும் என்ற ஆதங்கமே நாமா என்னும் புதுவகை இலக்கியங்கள் தமிழிலக்கிய வரலாற்றில் இடம் பெறுவதற்குக் காரணமாயிற்று. இவ்விலக்கிய வகையின் அறிமுகம் இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாறு தொடக்கம் பெற்ற சில நூற்றாண்டுகளுக்குப் பின்பு நடைபெற்றுள்ளது. நாமா இலக்கிய வகையை அறிமுகம் செய்வித்த பெருமை ஐயன்பேட்டையைச் சார்ந்த மதார் சாஹிப் புலவரைச் சாரும். இவர் முதன் முதலில் 1751இல் மிஃறாஜ் நாமா என்னும் இலக்கியத்தை அரங்கேற்றம் செய்துள்ளார். பெருமானார் நபிகள் நாயகம் (சல்) அவர்களின் பெரும்பேறு பெற்ற விண்ணேற்றப் பயணத்தை நாமா இலக்கிய வகையில் இந்நூலில் எடுத்துரைத்துள்ளார். இதற்குப் பின் நாற்பத்தெட்டு ஆண்டு காலத்திற்கு நாமா இலக்கியங்கள் எதுவும் இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் தோன்றவில்லை. 1799இல் தொழுகை நாமாவை மாலிக்கு சாஹிப் அரங்கேற்றம் செய்துள்ளார். இதற்கு அடுத்த நிலையில் தோன்றியது சக்கறாத்து நாமாவாகும். இதன் காலம் 1868. இதனைத் தொடர்ந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரையில் பதினொரு நாமா இலக்கியங்களும், இருபதாம் நூற்றாண்டில் 1950 வரையிலும் பன்னிரண்டு நாமா இலக்கியங்களும் தோன்றியுள்ளன. இதுவரையில் எமக்குக் கிடைத்துள்ள ஆதாரங்களின்படி 1950 வரையிலும் மொத்தம் இருபத்தி ஐந்து நாமா இலக்கியங்களை முஸ்லீம் புலவர்கள் அளித்துள்ளார்கள். இவற்றைக் கால வரையறையின் அடிப்படையில் பின்வருமாறு முறைப்படுத்தலாம்.

நாமாஇலக்கியங்கள்	ஆசிரியர்	காலம்
1. மிஃறாஜ் நாமா	மதார் சாஹிப்	1751
2. தொழுகை நாமா	மாலிக்குசாஹிப் புலவர்	1799
3. சக்கறாத்து நாமா	அப்துல் காதர்	1868
4. அகாயத் நாமா	அப்துல் காதிர்	1874

5.	இபுலீசு நாமா	செய்யது ஆலிம் சாகிபு	1874
6.	இபுலீசு நாமா	செய்யிதபூபக்கர்ப் புலவர்	1874
7.	தஜ்ஜால் நாமா	முகம்மது இப்ராகீம் சாகீப்	1874
8.	நசீகத்து நாமா	அப்துல் காதர் சாகிபு	1874
9.	ஹக்காயத் நாமா	அப்துல் காதர் சாகிபு	1874
10.	தஜ்ஜால் நாமா	சைகு யூசுபு	1876
11.	பறலு நாமா	அப்துல் வஹ்ஹாப்	1889
12.	நூறு நாமா	குலாம் முகமது சாகிபு	1898
13.	முனாஜாத் நாமா	முகம்மது இஸ்மாயில் ஆலிம்	1899
14.	ஊஞ்சல் நாமா	முகம்மது பஸ்லுல்லா சாகிபு	1908
15.	ஒளிவு நாமா	முகம்மது கமாலுத்தீன் சாகிபு	1909
16.	நூறு நாமா	செய்யது அகமது மரைக்காயர்	1911
17.	லுக்மான் நாமா	வி. அப்துல் வஹ்ஹாப் சாகிப்	1911
18.	லுக்மான் நாமா	ஷேக் அஹமது ஆலிம் சாகிப்	1911
19.	இருஷாது நாமா	ஷாமுனா லெப்பை	1912
20.	கோஷா நாமா	அப்துல் வகாப் சாகிப்	1912
21.	மஜ்மூ நாமா	மகதூம் புலவர்	1913
22.	தொழுகை நாமா	அபூல் பார்க்	1918
23.	ஊஞ்சல் நாமா	இப்ராஹிம் காதர் சாகிப்	1920
24.	நூருள் ஹுதா வென்னும் ராட்டை ஷேக் நாமா	இப்ராஹிம் காதர் சாகிப்	1921
25.	வத்சு நாமா	முகமது கமாலுதின்	1922

மேற்குறித்த நாமா இலக்கியங்களை அணுகும் போது இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுக் காலப் பகுதிகளே நாமா இலக்கிய ஆக்கத்தில் முதன்மை நிலை பெறுகின்றன. காரணம் முஸ்லீம்கள் தமிழிலக்கிய ஆக்கத்தில் பெரிதும் பங்கு பெற்றது இவ்விரு நூற்றாண்டுகளிலேயே ஆகும். இந்நாமா இலக்கியங்களும், உள்ளடக்கம் என்ற நிலையில் பெரும்பாலானவைகள் இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படைக் கருத்துக்களான ஒன்றே இறை என்னும் வழிபாட்டு நெறிமுறையினையும் தொழுகை, ஈமான் (நம்பிக்கை), சக்காத்து (கர்மம்) புனித ஹஜ் பயணம் முதலானவற்றின்

சிறப்புக்களையும் எடுத்துரைப்பனவாகவும் உள்ளன. சில நாமாக்கள் நபிகள் நாயகம் (சல்) அவர்களின் வரலாற்று நிகழ்ச்சி களையும் இன்னும் சில 'இபுலிஸ்' (சாத்தன்) போன்றவர்களின் வரலாற்றினையும் எடுத்துரைப்பனவாக உள்ளன. ஒரே உள்ளடக்கக் கருத்துக்களை ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியரும் ஒரே பெயரில், புனைந்துள்ளார்கள். அதுபோல் ஓரே ஆசிரியரும் ஒன்றுக்கு மேற்பட்ட நாமாக்களையும் இயற்றியுள்ளனர். உருவம் என்ற நிலையில் நாமா இலக்கியங்களை வரையறை செய்து காட்ட முடியாது. பல நாமாக்கள் செய்யுள் நடையிலும் நஸீஹத்து நாமா போன்ற சில உரைநடையிலும் அமைந்துள்ளன. எனவே நாமா இலக்கியங்கள் செய்யுள் நடையில்தான் இருக்கவேண்டும் என்று கூறமுடியாது, இஸ்லாத்துடன் மிக நெருக்கமான கொள்கை களை எடுத்துரைப்பதால் அனைத்து நாமா இலக்கியங்களிலும் அறபு, பாரசீகச் சொல் கலப்பு மிகுதியாகும், பொதுவாக நாமா தமிழிலக்கியப் பிரிவு இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறத்தக்கதாகும். இந்நாமா இலக்கிய வகை பற்றிய செய்தியைத் தமிழிலக்கிய வரலாற்று நூல்கள் எதுவும் குறிப்பிடவில்லை என்பது இங்குக் குறிக்கத்தக்க தாகும்.

முனாஜாத்து இலக்கியங்கள்

இஸ்லாமியர் தொடர்பால் தமிழிலக்கியம் பெற்ற பயன்களுள் ஒன்றே முனாஜாத்து என்னும் இலக்கிய வகையாகும். தமிழிலக்கிய உலகில் பல்லோராலும் அறியப்படாத இவ்விலக்கிய வகை இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் தமக்கெனச் சுட்டிக் காட்டத்தக்க விரிந்துபட்ட எல்லையையும் சிறப்பையும் பெற்றுள்ளது. தமிழிலக்கிய வரலாற்றில் இதுவரை சுட்டிக் காட்டப்படாத முனாஜாத்து இலக்கிய வகை இஸ்லாமியக் கருத்துக்கள் அடங்காத பிற நிலை இலக்கியங்களில் காணப்பட வில்லை. எனவே இஸ்லாமியத் தமிழிலக்கியச் சிறப்பு வடிவங் களுள் ஒன்றாகவே இவ்விலக்கியப் பிரிவினைக் கருதலாம்.

முனாஜாத்து என்பது அறபு இலக்கியப் பிரிவுகளுள் ஒன்றாகும். அறபு மொழியில் தொழில் பெயரான முனாஜாத்து என்னும் சொல்லின் நேரடியான பொருள் 'இரகசியம் பேசுதல்' அல்லது 'முனு முனுத்தல்' என்பதாகும். இப்பொருள் குறித்த முனாஜாத்து என்னும் சொல் பிற்காலத்து அறபு மொழி இலக்கியங் களுள் அல்லாஹ்வினையும், அவனது அருள் பெற்ற அடியார்களது

புகழ்களையும் சிறப்பித்துப்பாடித் தத்தம் குறைகளைக் கூறி இரந்து பாடுவதை உள்ளடக்கமாகப் பெற்ற இலக்கியங்களுக்குப் பெயராக அமைந்தது. இக்கருத்தினை அறபு மொழியில் அமைந் துள்ள பல்வேறு முனாஜாத்து இலக்கியங்கள் நமக்கு உணர்த்து கின்றன.

இஸ்லாமியக் கருத்துக்களைத் தமிழ்ப் பாமர மக்களது மனத்தில் இடம் பெறச் செய்வதற்கு அறபு முனாஜாத்து இலக்கியங் களை அடியொற்றித் தமிழிலும், முஸ்லிம் புலவர்கள் தமிழ் இலக்கண மரபிற்குட்பட்டுப் பல்வேறு தலைப்புகளில் முனாஜாத்துப் பாக்களை இயற்றியுள்ளனர். இம்முனாஜாத்து இலக்கியங்களுக்கு உள்ளடக்கம் என்ற நிலையில் இஸ்லாமியக் கருத்துக்கள் இடம் பெற்றிருத்தல் வேண்டும் என்ற வரையறை உள்ளதே தவிர, உருவ அடிப்படையில் இத்தனை செய்யுட்கள் தான், இன்ன பா வகைதான் இடம் பெற்றிருத்தல் வேண்டும் என்ற தேவையில்லை. மிகக் குறைந்த அளவு பாடல்கள் மட்டுமே அடங்கிய ஆசிரிய அகவல் விருத்தச் செய்யுளாகப் புலவர் நாயகம் இயற்றிய முனாஜாத்துக் காணப்படுகிறது. அதே நேரத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலான செய்யுட்களை உள்ளடக்கிய ஷாகுல் ஹமீது புலவரால் இயற்றப்பட்ட 'நபி நாயகத்தின் பேரில் முனாஜாத்து' போன்ற பல இலக்கியங்களும் இப்பிரிவில் அமைந்துள்ளன. பாடல் எண்ணிக்கையில் முனா ஜாத்து இலக்கியங்களுள் ஒற்றுமை காணப்படாதது போல் யாப்பிலும் அறுசீர்க் கழி நெடிலாசிரிய விருத்தம், எழுசீர்க் கழி நெடிலாசிரிய விருத்தம், இரட்டை யாசிரிய விருத்தம், கட்டளைக் கலித்துறை, வெண்பா, அகவற்பா போன்ற பல்வேறு யாப்பு வகைகளும் பரந்துபட்ட நிலையில் இடம் பெற்றுள்ளன.

இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் தனி நிலையில் இலக்கியத் தகுதியுடன் தோன்றிய முதலாவது முனாஜாத்து 'ஐந்து முனாஜாத்து' ஆகும். இதனை இயற்றியவர் காயற்பட்டணத்தைச் சார்ந்த புலவர் நாயகம் செய்கப்துல் காதிர் நயினார் லெப்பை. இந்நூலின் முதல் பதிப்பு 1861 ஆம் வருடம் நயினார் முஹம்மதுப் புலவரவரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இம்முனாஜாத்திற்குப் பல்வேறு பதிப்புக்கள் வெளிவந்துள்ளன. 1895 இல் கண்ணகுமது மகுதூ முகம்மதுப் புலவர், செய்கப்துல் காதிர் நயினார் லெப்பை யின் இஸ்லாமியத் தமிழிலக்கியப் படைப்புக்களை 'சித்திரக் கவி

முதலிய பல பாடற்றிரட்டு' என்னும் தலைப்பில் பதிப்பித்துள்ளார். அத்தொகுப்பினும் இப்புலவரது ஐந்து முனாஜாத்துகள் இடம் பெற்றுள்ளன. அதில் ஒன்றான 'ஹக்கு பேரில் முனாஜாத்து' என்னும் பிரிவின் முகப்பில் ஆசிரியர், 'இம் முனாஜாத்து செய்த காரணம் யாதெனில் 1843ஆம் ஆண்டு சென்னையில் காணப்பட்ட பேதிக் குழப்பத்திலிருந்து மக்களைக் காப்பாற்றும் படி அல்லாஹ்விடத்து புகழ்ந்திரக்கும்படி வேண்டிக் கொண்டதற் கேற்பப் புலவரால் பாடப்பட்டது' என்ற குறிப்பு காணப்படுகிறது. இக்குறிப்பிலிருந்து ஐந்து முனாஜாத்தின் காலம் 1843ஆம் ஆண்டோ அதற்கும் முந்தியதாகவோ இருந்திருக்க வேண்டும். இம் முதல் முனாஜாத்தில் தலைப்புக்கேற்ப ஐந்து பிரிவுகள் முறையே 'ஹக்கு பேரில் முனாஜாத்து, றசூல்லா பேரில் முனாஜாத்து, முகியித்தினாண்டகை பேரில் முனாஜாத்து, ஷாகுல் ஹமீதாண்டகை பேரில் முனாஜாத்து எனக் குறிப்பிட்ட பெயர்களில் நான்கும், முனாஜாத்து என்ற நிலையில் ஒன்றும் உள்ளடங்கியுள்ளன. இம்முனாஜாத்துகளில் உள்ள ஐந்து பிரிவுகளுள் ஹக்கு பெயரில் அமைந்தது அல்லாஹ்வின் புகழ் பற்றி எடுத்துரைப்பன வாகும். ஹக்கு என்பது உண்மையானவன் என்ற பொருள்பட அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்றாகும். ஏனையவற்றுள் ஒன்று இறைத்தூதர் நபி (சல்) அவர்க்ளையும், பிறிதொன்று பகுதாது நகரில் அடக்கம் பெற்றுள்ள இறைநேயச் செல்வர் ஷாகுல்ஹமீது ஆண்டவரையும் புகழ்ந்துரைப்பனவாக உள்ளன.

ஹக்கு பேரில் முனாஜாத்து ஏழுசீர் ஆசிரிய விருத்தப்பாக்களாகப் பத்து செய்யுட்களைப் பெற்றுள்ளது. இப் பத்து செய்யுள்களிலும் ஆசிரியர், மக்கள் குறைகளைக் காத்தருளுமாறு வேண்டுகிறார். இறசூலுல்லா பெயரில் அமைந்துள்ள முனாஜாத்தில் 29 அறுசீர் ஆசிரிய விருத்தாப்பாக்கள் அமைந்துள்ளன. இச் செய்யுட்கள் அனைத்தும் 'முகம்மது நபியுல்லாவே' என முற்றுப் பெற்றுள்ளன. பெருமானார் நபி (சல்) அவர்களது பெருமை பல்வேறு வரலாற்று நிகழ்ச்சிகளுடன் இணைத்துக் காட்டிப்புகழப் பட்டுள்ளது. இதுபோலவே முகியித்தீனாண்டவர், ஷாகுல் ஹமீது நாயகம் ஆகிய இரு இறைநேயச் செல்வர்களது வரலாற்றுச் சிறப்பும் அறுசீர் கழி நெடிலாசிரிய விருத்தப்பாக்களால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இரு முனாஜாத்துக்களும் முறையே 29 பாக்களைப் பெற்றுள்ளன. பொது நிலையில் அமைந்துள்ள முனாஜாத்து அகவற் பாவாக உள்ளது.

இம்முனாஜாத்துக்கள் ஐந்தனுள் மூன்றில் 29 செய்யுட்கள் இடம் பெற்றுள்ளன. இவ்வெண்ணிக்கை ஒற்றுமைக்கு அடிப் படைக் காரணம் ஒன்றுள்ளது. அறபு இலக்கியத்தின் வழித் தமிழில் பா வடிவமைத்து முனாஜாத்து புனைந்த புலவர் நாயகம் அறபு எழுத்துக்களின் அடிப்படையிலேயே தமது மூன்று முனா ஜாத்துக்களிலும் செய்யுட்களை யாத்துள்ளார். அறபு எழுத்துக் களின் எண்ணிக்கை 29 ஆகும். ஒவ்வொரு அறபு எழுத்துக்களின் உச்சரிப்பையும் குறிக்கும் ஏதாவது ஒரு அறபுச் சொல்லை முதல் சொல்லாகக் கொண்டே செய்யுட்களை அமைத்துள்ளார் ஆசிரியர். அறபு லிபியில் பயிற்சியுடைய முஸ்லிம் மக்கள் தம் பாவடிவங்களை எளிதில் படித்தறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத் துடனேயே ஆசிரியர் அவ்வாறு அறபு லிபியின் அடிப்படையில் முனாஜாத்துப் பாக்களை தம் இலக்கியப்படைப்பில் அமைத் துள்ளார். அறபு எழுத்துக்களை முதலாக வைத்துப் பா புனைந் துள்ள போதிலும் தமிழ் எதுகை மோனை நயங்கள் யாப்பமைதி யுடன் பாடல்தோறும் சிறப்புறுவதைக் காணலாம். அறபு லிபியை அடிப்படையாகக் கொண்டு முனாஜாத்துப் பாடல்கள் அமையு மாறு பாடுவதையே பிற்காலத்து முஸ்லிம் புலவர்கள் பெரிதும் பின் பற்றியுள்ளனர்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் புலவர் நாயகம் அறிமுகம் செய்த முனாஜாத்து இலக்கியங்கள் பல்கிப் பெருகின. இன்றைக்கு இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் சிற்றிலக்கிய வரிசைகளில் பெரும்பான்மையான எண்ணிக்கையில் உள்ள இலக்கியப்பிரிவு முனாஜாத்து என்று கூறினும் மிகையாகாது. ஏறத்தாழ இரு நூறுக்கும் மேற்பட்ட நிலையில் பல்வேறு தலைப்புகளில் முனா ஜாத்து இலக்கியங்கள் பரந்துபட்டுக் காணப்படுகின்றன. இவற்றுள் பெரும்பான்மையானவை இறைநேயச் செல்வர்களின் பெயரால் இயற்றப்பட்டனவாகும்.

மார்க்கக் கருத்துக்களை எடுத்துரைப்பதையே நோக்கமாகக் கொண்ட முனாஜாத்து இலக்கியங்கள், ஏனைய பிற இஸ்லாமிய இலக்கியங்களைக் காட்டிலும் எளிய முறையில் சாதாரண மக்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் அமைந்துள்ளன. மார்க்கப் பெரியார்கள், இறைநேயச் செல்வர்கள், இஸ்லாமியர்களின் அடிப்படைக் கொள்கை விளக்கங்கள் முதலான பல்வேறு கருத்துக் கள் முனாஜாத்து இலக்கியங்களில் விரித்துரைக்கப்பட்டுள்ளன. எனவே முனாஜாத்து இலக்கியங்கள் இஸ்லாமியத் தமிழிலக்கிய

வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தையும் தமிழிலக்கிய வரலாற்றில் இல்லாத புதுவகை இலக்கியப் பிரிவு என்ற நிலையில் ஒரு சிறப் பிடத்தையும் பெற்றுள்ளன.

மஸ்அலா இலக்கியங்கள்

இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றின் புதுவகை முஸ்லிம் தமிழ்ச் சிற்றிலக்கியப் பிரிவுகளுள் ஒன்றாகக் காட்சி தருவது மஸ்அலா இலக்கியங்களாகும். அறபு மொழி இலக்கியத் தாக்கத் தால் இஸ்லாமியத் தமிழிலக்கியம் பெற்ற பயன்களுள் மஸ்அலா என்னும் இலக்கிய வகையும் அடங்கும். எனவே மஸ்அலா என்னும் இலக்கியப் பிரிவு முஸ்லிம் தமிழ்ப்புலவர்கள் தமிழிலக்கிய உலகுக்குக் களித்த கொடைகளுள் ஒன்றே.

'மஸ்அலா' என்னும் அறயுச் சொவ்லின் (masalat) பொருள் வினா என்பதாகும். இவ்வறபுச் சொல் ஸுஆல் (su'āl) (கேள்வி) என்னும் அறபு வேர்ச்சொல்லிலிருந்து தோன்றியதாகும். அறபு மொழியில் மஸ்அலா என்பதன் பிறிதொரு பொருள் 'சிக்கல்' என்பதாகும். எனவே இஸ்லாமியத் தமிழிலக்கிய வடிவங்களுள் ஒன்றாகக் கருதப்படும் மஸ்அலா என்பதன் நேரடியான பொருள் சிக்கல் அல்லது வினா என்பதாகும்.

இஸ்லாம், பெருமானார் அண்ணல் நபி (சல்) அவர்களின் காலத்திற்குப் பின் இவ்வுலகில் வேரூன்றிப் பரவத்தொடங்கியது. அன்றுமுதல் இன்று வரையில் இஸ்லாமிய போதனைகளிலும் இம் மார்க்கம் வகுத்துக் காட்டும் நெறிமுறைகளிலும் ஐயங்கள் ஏற்பட்டு, இவ்வையங்கள் வினாவாக எழுகின்றபோது அவற்றைத் தெளிவாக்கும் வழிமுறையை இஸ்லாம் வகுத்துக் காட்டுகிறது. அதாவது ஒருவருக்கு இஸ்லாத்தில் பரந்துபட்ட நற்போதனைகளில் எப்பகுதியில் ஐயங்கள் தோன்றினும் அவற்றை மார்க்க வழி காட்டிகளிடம் வெளிப்படுத்தித் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே மார்க்கத்தில் பின்பற்ற வேண்டிய வழியாகும். இத்தகைய முறையில் அடிப்படையில் எழும் ஐயப்பாடுகளையே மஸ்அலா என்னும் அறபுச் சொல் குறிக்கிறது. எனவே மஸ்அலா இலக்கிய வகை இஸ்லாமிய அடிப்படைக் கொள்கைகளை விளக்கும் வகையில் எழும் ஐயங்களையும் அவற்றிற்குரிய விடைகளையும் உள்ளடக்க மாகக் கொண்டமைந்துள்ளது எனலாம்.

சமூக வாழ்வில் வெவ்வேறான காலச்சூழல்களில் வேறுபட்ட சிக்கல்கள் ஐயப்பாடுகள், புதிர்கள் தோன்றுவதுண்டு. இவ்வாறு ஏற் படும் ஐயப்பாடுகளுக்கும் சிக்கல்களுக்கும் உரிய தீர்வினைத் தீர்க்கும் வகையில் இஸ்லாமிய மார்க்கம் அதற்குரிய வழிவகைகளை வகுத் துக்காட்டத் தவறவில்லை. இவ்வாறு ஏற்படும் சிக்கல்கள்,புதிர்கள், ஐயப்பாடுகளைப் பொதுவாக மஸ்அலா என்ற அறபுச் சொல்லால் குறிப்பிடலாம். இஸ்லாமிய மார்க்கத்தினடிப்படையில் எந்தச் சூழலிலும் எந்தக் காலத்திலும் ஏற்படும் மஸ்அலாக்களுக்குரிய முறையான தீர்வுகளுக்கு அணுக வேண்டியது இரண்டு வழிமுறை களாகும். ஒன்று அல் குர் ஆன், பிறிதொன்று அல்ஹதீது. அல் குர் ஆன் இஸ்லாமிய மார்க்கத்தின் சட்டதிட்டங்கள் அடங்கிய அடிப் படை முழு முதல் வேதமாகும். இஃது அல்லாஹ்வின் இறைத் தூதர் பெருமானார் நபிகள் நாயகம் (சல்) அவர்களுக்கு அருளப் பட்ட திருமறை. அல் ஹதீது, அல் குர் ஆனின் சட்டதிட்டங் களுக்குக் கிடைத்த செய்முறை எனலாம். பெருமானார் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் தம் வாழ்வினை மேற்கொண்டது அல் குர் ஆனின் ஒவ்வொரு கருத்துக்களுக்கும் ஒவ்வொரு சொல்லுக்கும் ஏற்பவே ஆகும். பெருமானார் நபி (சல்) அவர்களின் வாழ்க்கை அல்குர் ஆனிற்குரிய விரிவுரை என்றே கூறலாம். இத்தகு சிறப் பினைப் பெற்ற பெருமானாரின் வாழ்வில் அவர் சொன்னவைகள், செயல் படுத்தியவைகள் முதலான அன்னாரின் வாழ்வுடன் நேரிடையாகத் தொடர்புடைய செய்திகளே அல்ஹதீதாகும். எனவே முஸ்லிம்கள் ஒவ்வொருவருக்கும் அல் குர் ஆனும், அல்ஹதீதும் வழிகாட்டியாக உள்ளன.

இவ்விரண்டையும் பற்றிப் பெருமானார் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் கூறும்போது 'உங்களிடையே இரண்டினை நான்விட்டுச் செல்கிறேன். அவ்விரண்டினையும் நீங்கள் பற்றிப் பிடித்துக் கொள்வீர்களானால் வாழ்வில் நெறிகெட்டுப் போகமாட்டீர்கள். இவ்விரண்டும் அல் குர் ஆனும், அல்ஹதீதும் ஆகும் என்று உரைத் துள்ளார்கள். இஸ்லாமிய வரலாறு தொடங்கியதுமுதல் இன்று வரையில் எதிர் கொண்ட எதிர்ப்புகள், இன்னல்கள் எண்ணற்றவை களாகும். இவ்வெதிர்ப்புகள் கொள்கை, நடைமுறை இவற்றின் அடிப்படையில் அமைந்திருந்தன. பல்வேறு காலக்கட்டங்களில் வாழ்ந்த மக்களின் மனதில் இஸ்லாமிய அறிவுரைகள், நடைமுறை கள் தொடர்பாக ஏற்பட்ட ஐயப்பாடுகளுக்குரிய விடைகளை அல் குர் ஆனும், அல் ஹதீதும் தந்தன. இனி வரப்போகும் காலங்களுக்

குரிய ஐயப்பாடுகளையும் இவ்விரண்டும் தீர்த்துவைக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. எனவே அல் குர் ஆனும், அல் ஹதீதும் என்றென்றும் அழியாத கோட்பாடுகளையும், கொள்கை விளக்கங்களையும் உள்ளடக்கியுள்ளன. எனவே இஸ்லாமிய மார்க்கப் பெரியோர்கள் எந்தவொரு காலச்சூழலிலும் ஏற்பட்ட மஸ்அலாக்களுக்குரிய தீர்வினை நாடும்போது அல்குர்ஆனையும்அல் ஹதீதையும் அடிப்படையாகக் கொண்டே பதில் அளித்துவந்தனர். இந்நெறிமுறைகளின் அடிப்படையே மஸ்அலா இலக்கியங்களிலும் பின்பற்றப்பட்டுள்ளது. இது மஸ்அலா இலக்கியங்களுக்குரிய பொதுத்தன்மை எனலாம். இப்பொதுத் தன்மையினடிப்படையில் முஸ்லிம் தமிழ்ப் புலவர்களும் தமது மஸ்அலா இலக்கியப் படைப்புக்களை உருவாக்கியுள்ளனர்.

மஸ்அலா என்னும் சொல்லினை முஸ்லிம் தமிழ்ப்புலவர்கள் தமது இலக்கிய ஆக்கத்தில் எடுத்தாளும்போது மசலா என்றும் மஸ்லா அல்லது மஸாலா என்றும் வழங்கலாயினார். இதன் பயனாய் அறபு மூலத்தினடிப்படையில் அமைந்த பெயரை மட்டும் வைத்துக் கொள்ளாமல் அறபு மூலத்தில் உள்ள வடிவ அமைப்பையும் உள்ளடக்கக் கருத்துக்களையும் அப்படியே ஏற்றிப் போற்றி அவற்றிற்குத் தமிழில் பாவடிவம் கொடுத்தனர்.

இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியப் பிரிவில் மஸ்அலா எனும் இலக்கிய வகையின் கீழ் இதுவரையிலும் மூன்று இலக்கியங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் காலத்தால் முதலில் தோன்றிய மஸ்அலா இலக்கியம் ஆயிர மஸ்அலா ஆகும். இதன் காலம் கி.பி. 1572. இந்நூலின் முழுப்பெயர் 'ஆயிர மஸ்அலாவென்று வழங்கும் அதிஜய புராணம்' என நூலின் முகப்பில் குறிக்கப் பட்டுள்ளது. இம் மஸ்அலா இலக்கியத்தை இயற்றுவித்த பெருமை மதுரை மாநகரினைச் சார்ந்த வண்ணப் பரிமளப் புலவருக்குரியது.

ஆயிர மஸ்அலாவை இயற்றுவித்த கி. பி. 1572 ஆம் ஆண்டு இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் ஓர் உன்னதமான சிறப்பு வாய்ந்த ஆண்டாகக் கருதப்படுகிறது. இத்தகு சிறப்பிற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவதாக மஸ்அலா என்னும் புதுவகை இஸ்லாமியத் தமிழிலக்கிய வகையின் தொடக்கம் இவ்வாண்டில் நடைபெற்றுள்ளது. மேலும் புதுவகை இஸ்லாமியத் தமிழிலக் கியப் பிரிவில் அடங்கும் அனைத்து வகையிலான இலக்கியங்

களுக்கும் ஆயிரம் மஸ்அலாவே முதன்மையான இலக்கியமாக விளங்குகிறது. இரண்டாவதாக இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றின் மொத்த எல்லைப் பரப்பில் காலத்தால் மூன்றாவதாகத் தோன்றிய இலக்கியம் என்ற பெருமையையும் ஆயிரம் மஸ்அலா பெற்றுள்ளது. இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் முதலாவதாகவும் இரண்டாவதாகவும் தோன்றியுள்ள பல்சந்த மாலை, யாகோபு சித்தர் பாடல்கள் ஆகிய இரண்டிற்கும் முழுமையான உள்ளடக்கமும் கிடைக்கவில்லை. அதே நேரத்தில் காலத்தையும் சில கருதுகோள்களின் அடிப்படையிலேயே குறிக்க வேண்டிய நிலை உள்ளது. இவ்வகையில் இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் நூலின் முழுமையான உள்ளடக்கச் செய்திகளையும் அவ்விலக்கியம் தோன்றிய காலக்கட்டத்தையும்] தமிழுலகுக்குச் சரியாக வெளிப்படுத்தி நிற்கும் நிலையில் முதன்மை பெறும் தகுதி ஆயிர மஸ்அலாவிற்கே உள்ளது என்பது குறிப்பிடற்பாலது.

மஸ்அலா இலக்கிய வகையுள் இரண்டாவதாகத் தோன்றியது 'தவத்துது என்ற வெள்ளாட்டி மஸ்அலா' ஆகும். இதனைக் கி.பி. 1856 ஆம் ஆண்டு காயல் பட்டணம் ஷெய்கப்துல்காதிறு லெப்பை இயற்றுவித்துள்ளார். இந்நூலினுள் 669 மஸ்அலாக்களும் அதற்குத்' தவத்துது அளிக்கும் விடைகளும் இடம் பெற்றுள்ளன. இதன்பின் 'நூறு மஸ்அலா' என்னும் இலக்கியம் மூன்றாவதாகத் தோன்றியுள்ளது. இந்நூலின் காலம், ஆசிரியர் பெயர் பற்றிய செய்திகளை அறிவதற்கு அகச் சான்றுகள் கிடைக்கவில்லை. இந்நூலின் முதல் பதிப்பினை முகம்மது சாகிபு கி.பி. 1876 இல் வெளியிட்டுள்ளார். நூறு மஸ்அலாவில் உள்ள செய்திகள் பகுவீறு நாட்டு மன்னனின் மகள் மெஹர் பானுவிற்கும் அகமதசா என்ற மன்னனின் மகன் அப்பாஸ் என்பவருக்கும் இடையே நடைபெறும் வினாவிடைகளாக உள்ளன. இச்செய்திகள் கண்ணிகளாக விரித்துரைக்கப்பட்டுள்ளன.

படைப் போர் இலக்கியங்கள்

தமிழிலக்கிய வரலாற்றில் அறிமுகமாகாத இஸ்லாமியத் தமிழிலக்கிய பிரிவுகள் எண்ணற்றவைகள். அவற்றுள் ஒன்றே படைப் போர் என்னும் இலக்கியப் பிரிவாகும். இப் படைப்போர் இலக்கியங்களை அறிமுகம் செய்விப்பதே இங்கு முதன்மை நோக்க மாக அமைந்துள்ளது. இந் நோக்கத்தின் நிறைவு இங்கு மூன்று நிலைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதல்நிலையில் படைப் போர் இலக்கியங்கள் தமிழிலக்கிய உலகில் தோன்றுவதற்கான மூலாதாரம் இஸ்லாமிய மார்க்க வரலாற்று நிகழ்வுகள் என்பதை யும் இத்தகைய இலக்கியப் பிரிவுகளுக்கான முன்னோடி இலக்கியங் களாக அறபு இலக்கியங்கள் திகழ்வதையும் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. அடுத்து இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் எமக்குக் கிடைத்துள்ள படைப்போர் இலக்கியங்களைக் கால வரிசைப்படி, அதன் ஆசிரியர், காலம்,உள்ளடக்கம் என்ற வகையில் செய்திகள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. மூன்றாவது நிலையில் படைப்போர் இலக்கியத்தின் உள்ளடக்கச் செய்தியான போர் நிகழ்வுகள் ஏனைய பிற தமிழிலக்கியங்களில் இடம்பெற்றுள்ள போதிலும் அவற்றிலிருந்து மாறுபட்ட நிலையில் படைப்போர் இலக்கியங்கள் அமைந்திருப்பதை எடுத்துக்காட்டி விளக்கப் பட்டுள்ளது. கிடைத்துள்ள படைப்போர் இலக்கியங்களை அடிப் படையாகக் கொண்டு படைப்போர் என்னும் தனி நிலை முஸ்லிம் தமிழ்ப் பிரபந்த வகைக்குரிய இலக்கண வரையறையைச் செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இஸ்லாமிய மார்க்கமும்—போர்ச் செய்திகளும்

இசுலாமியத் தமிழ்ப் புலவர்கள் தமக்கென வகுத்துக்கொண்ட இலக்கியக் கோட்பாடுகளின் விளைவுகளுள் ஒன்றே படைப்போர் இலக்கியம் என்னும் தனித்துவ இலக்கிய வகை. இவ்விலக்கிய வகை இஸ்லாமிய மார்க்கக் கோட்பாடுகளும், தமிழிலக்கிய மரபு களும் கலந்த புதியதொரு இலக்கியப் பிரிவு எனலாம். இவ் விலக்கியப் பிரிவின் ஆக்கத்தில் முஸ்லிம் புலவர்கள் பலரும் ஈடுபாடு கொண்டிருந்தனர். தமிழ் இலக்கியம் பற்றிக் குறிப்பிடும் பலரும் மறந்துவிட்ட படைப்போர் இலக்கிய வகையின் தோற்றத்திற்கு இஸ்லாமியச் சமய நெறியின் தோற்றமும், வளர்ச்சி நிலையில் அமைந்த வரலாற்றுக் கூறுகளுமே முக்கியக்காரண கருவோட்ட மாக அமைந்தன. இஸ்லாமிய வரலாற்றுத் தொடக்கமும் ஹிஜ்ரி ஆண்டுத் துவக்கமுமான கி. பி. 622 இலிருந்து இஸ்லாம் தம் மார்க்கக் கொள்கைகளை இவ்வுலகில் நிலை நிறுத்துவதற்காக எதிர்கொண்ட இன்னல்கள் பறபல. பல்வேறு சூழல்களில் இவ் இன்னல்கள் போர்க்களமாகவும் உருப்பெற்று வரலாற்று முக்கியத் துவத்தையும் எட்டின. இப்போர்கள் யாவும் இஸ்லாமிய வரலாற்றில் தற்காப்பிற்காக மேற்கொள்ளப்பட்டனவேயன்றி வலிந்து மேற்கொள்ளப்படவில்லை. தற்காப்பிற்காக மேற் கொள்ளப்படும் யுத்தம் பற்றித் தம் திருமறையில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றார். ‘அல்லாஹ்வுடைய பாதையில் (நீங்கள் செல்வதைத் தடுத்து) உங்களை எதிர்த்தோருடன் நீங்களும் யுத்தம் புரியுங்கள். ஆனால் நீங்கள் வரம்பு கடந்துவிட வேண்டாம். ஏனென்றால், நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறியவர்களை நேசிப்பதில்லை’ (2 : 190). அன்றி இஸ்லாத்திற்கு விரோதமாகச் செயப்படும் கலகம் முற்றிலும் நீங்கி, மார்க்கம் அல்லாஹ்வுடையதாக உறுதிப்படும்வரையில் அவர்களை எதிர்த்து யுத்தம் புரியுங்கள். ஆனால், அவர்கள் கலகம் செய்யாது விலகிக் கொண்டால்,... அவர்களிலும் அக்கிரமம் செய்தவர்களைத் தவிர மற்றவர்களைத் துன்புறுத்தி வரம்பு மீறாதீர்கள்’ (2 : 193). இது போன்று பல்வேறாக இஸ்லாமிய மார்க்க அடிப்படையில் மேற் கொள்ளத்தகும் போர் பற்றிய செய்திகள் அல் குர்ஆனில் நிரம்பக் காணக் கிடக்கின்றன. இஸ்லாமிய மார்க்க வரலாற்றில் அல்லாஹ் வின் இக்கட்டளைகளுக்கேற்ப மேற்கொள்ளப்பட்டதே பத்ர் போர் (கி. பி. 624), உஃதுப்போர் (கி.பி. 625), காண்தாக் போர் (கி. பி. 627), ஒட்டகப் போர் (ஐங் இஜமால்) (கி.பி. 656) ஷிஃபான் போர்

(கி. பி. 657), பாக்தாத் போர் (கி. பி. 762), பலர்மோ அரேபியர்களால் கைப்பற்றப்பட்ட நிகழ்வு (கி.பி. 831). சமாரா வெற்றி கி.பி. 836), ஜெருசல வெற்றி (கி,பி. 1187), போன்ற இன்ன பிற வரலாற்றுச் சிறப்புமிக்க போர் சம்பவங்களாகும். எனவே இஸ்லாமிய வரலாற்றுத் தொடக்கம், நிலைபேறு ஆகிய போர்ச் செய்திகள் பலவற்றைப் பின்னணியாகக் கொண்டு அமைந்துள்ளன. எனவே அறபு நாட்டினை மையமாகக் கொண்டமைந்த இஸ்லாமிய மார்க்க வீரயுகச் செய்திகள் பிற்காலத்து அறபு மொழி இலக்கியங்களுக்குப் பாடுபொருளாக அமைந்தன.

அறபு மொழியில் போர் செய்திகள்

அறபு மொழி இலக்கியத்தின் வளர்ச்சி நிலையில் இஸ்லாம் மார்க்கத்தின் போர் பற்றிய செய்திகள் பலவும் உள்ளடக்கமாக இடம் பெற்றன. அல்லாஹ்வின் திருத்தூதராம் பெருமானார் நபி (சல்) அவர்களது வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் அறபு இலக்கியங்கள் பலவும் அன்னாரின் வாழ்வில் எதிர்ப்பட்ட போர் நிகழ்வுகளை மையமாகக் கொண்டுப் படைக்கப்பட்ட அறபு இலக்கியங்களுக்கு முன்னோடியாக அமைந்தது 'கிதாபுல் மஹாசி' என்னும் இலக்கியமாகும். 'போர்களின் நூல்' என்று பொருள் படும் இவ்விலக்கியத்தை மூகமது இப்துல் உமருல் வாக்கிதி என்பவர் கி.பி. 822 இல் இயற்றியுள்ளார். இவ்விலக்கியத்துள் பெருமானார் நபி (சல்) அவர்களது வாழ்வில் நடைபெற்ற போர் நிகழ்வுகளே மையக் கருவாக இடம்பெற்றுள்ளன. இதற்கு அடுத்த நிலையில் தோன்றியுள்ள பிறிதொரு அறபு இலக்கியம் கிதாபுல் பத்ஹுல் கபீர் '(பெரும் வெற்றிகளைக் கூறும் நூல்)' என்னும் படைப்பாகும். இதனை இயற்றியவர் இபுன் ஷரத் என்பவராகும். இவ்அறபு இலக்கியம் கி. பி. 844இல் இயற்றப்பட்டது. இவ்விலக்கியத்தில் பெருமானார் (சல்) அவர்களது தோழர்கள், பெருமானாரின் வழி நடந்த அசுகாபிமார்கள், அவர்களுக்குப் பின் தோன்றிய கலீபாக்கள் முதலானவர்களது போர்ப் பங்கேற்பு விவரிக்கப்பட்டுள்ளது. குறைஷியர் குலத்துடன் பெருமானார் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் மேற்கொண்ட முதல் மார்க்கப் போரான பத்றுப்போர் கி.பி. 624இல் மேற்கொள்ளப்பட்டது. பத்றுப் போர் இஸ்லாமிய வரலாற்றில் மட்டுமன்றி உலக வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைப் பெற்றது. இப்போரில் நபிகள் திலகம் (சல்) அவர்கள் தம் மார்க்கத்தை எதிர்த்தோரைத் தோல்வியடையச் செய்து வெற்றியை நிலை

நாட்டிய பின்பே அறபு நாட்டில் உள்ள அனைவரது கவனமும் நாயகத்தின் சிறப்பு, ஆற்றல், அவர் வகுத்துக்கூறும் இஸ்லாத்தின் மகிமை ஆகியவற்றின் மீது நாட்டம் கொள்ளச் செய்தது. இதற்கு அடுத்த நிலையில் கி.பி. 625இல் குறைசியர் குலத் தலைவனான அபுசுபியானுடன் நபி (சல்) அவர்கள் எதிர்த்துப் போரிட்ட உகுத்துப் போர் அனைவரது கவனத்தையும் ஈர்த்ததுடன் அறபு தேசத்திலுள்ள அனைவராலும் பெருமானார் நபி (சல்) அவர்கள் வகுத்துக் காட்டிய இஸ்லாமிய மார்க்கப் போதனை ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவ்விரு போர்களுக்குப் பின்பே மக்கா, மதீன முழுவதும் அல்லாஹ் ஒருவனே, அவனது திருத்தூதர் முகம்மது நபி (சல்) அவர்களே என்ற ஏகத்துவக் கொள்கை முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இஸ்லாத்தின் ஆரம்பக்காலக் கட்ட போர்ச் செய்திகளான இவ்விரண்டு போர்களும் பிற்கால அறபு இலக்கிய எழுத்தாளர்களது படைப்புக்கள் பலவற்றிற்கும் கருப் பொருளாக அமைந்தது. இத்தகு அறபு இலக்கியங்களே இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் தனித்ததொரு இலக்கியப் பிரிவாக வளர்ச்சியுற்றிருக்கும் படைப் போர் இலக்கிய வகைக்கு முன்னோடியாகவும் மாதிரியாகவும் அமைந்தன.

தமிழிலக்கியத்தில் படைப் போர் இலக்கிய வகையின் தோற்றம்

இஸ்லாமியக் கருத்துக்களைத் தமிழ் மக்களது உள்ளத்தில் பரப்பிட வேண்டும் என்ற ஆதங்கத்தில் முஸ்லிம் புலவர்கள் இஸ்லாத்தின் வரலாற்றை அதன் பின்னணியுடன் எடுத்துரைக்க முற்பட்டனர். அவ்வாறு முற்பட்ட முஸ்லீம் புலவர்களது மனத்தைப் பெரிதும் கவர்ந்தது இஸ்லாம் எதிர்கொண்ட போர் நிகழ்வுகள் எனலாம். இவர்களது எண்ணத்திற்கு முன்மாதிரி யாகத் தமிழ் மரபிற்கேற்ப செய்யுட்களை இயற்றினர். அவற்றிற்கு ஏனைய இஸ்லாமியத் தமிழிலக்கியங்களைப் போன்ற அறபு, பாரசீக மொழிகளின் பெயர்களையும் சூட்டாது இதுவரையில் இருந்துவந்த பிற தமிழிலக்கிய வகைகளின் பெயர்களையும் வைக்காது பொருள் விளக்கமுறும் வகையில் தனித் தமிழில் ''படைப் போர்' என்னும் இலக்கியப் பெயர் சூட்டித் தனித்ததொரு இலக்கிய வகையை உருவாக்கினர். இவ்வாறு தனித்ததொரு இலக்கிய வகையை முதன் முதலில் தமிழிலக்கிய உலகில் உருவாக்கிய பெருமை முஸ்லீம் தமிழ்ப் புலவர் வரிசை முகிய்யித்தீன்

புலவரைச் சாரும். இவர் ஈராக்கினை ஆண்டு வந்த சக்கூன் என்னும் அரசனுடன் பெருமானார் நபி (சல்) அவர்கள் எதிர்த்துப் போரிட்டு வெற்றி கொண்ட வரலாற்றைச் 'சக்கூன் படைப் போர்' என்னும் தலைப்பில் கி.பி. 1686இல் அரங்கேற்றினார். இப் படைப்போர் இலக்கியத்திற்குப் பின்பே ஏனைய இலக்கியங்கள் இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் இடம் பெறலாயின.

இஸ்லாமியப் பிரபந்தம் படைப் போர் இலக்கியங்களின் அறிமுகம்

படைப் போர் இலக்கியங்களின் அறிமுகத்தை அவற்றின் கால வரிசையின்படி இங்குக் காண்போம். அறிமுகம் என்ற நிலையில் இங்குப் படைப் போர் இலக்கியங்களின் திறனாய்வுப் பகுதி இடம்பெறவில்லை. படைப் போர் இலக்கியங்களுக்குரிய பாடு பொருள் தொடர்பான வரலாற்று நிகழ்ச்சி அவ்விலக்கியங்களின் ஆசிரியர், இலக்கியம் தோன்றிய காலம் ஆகியனவே இங்குச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

சக்கூன் படைப் போர்

படைப் போர் இலக்கியங்களுள் காலத்தால் முதன்மை நிலை பெறுவது சக்கூன் படைப் போர் ஆகும். சக்கூன் படைப் போர், படைப் போர் இலக்கியங்களுள் முதன்மை நிலை பெறுவதுடன் இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றின் தொடக்க கால இலக்கியங் களாக் கருதப்படும் முதல் பத்து இஸ்லாமியத் தமிழிலக்கியங்களுள் ஏழாவது நிலையும் பெறுகிறது. சக்கூன் படைப் போரின் உள்ளே அமைந்துள்ள அகச்சான்றுகளின் மூலமாக இதன் காலத்தையும் ஆசிரியர் பற்றிய குறிப்பினையும் அறியலாம்.

வல்ல நயினார் மாமனமூர் போகச்
செல்லு மாண்டாயிரமுஞ் செப்புந் தொண்ணூற்றெட்ட
அச்சய வருட மதி லான திங்களா வணியில்—திலே
இச்சை கொளுந் தெய்தி யிருப்பதைந் தானதிலே
மெத்த புகழ் பெருகும் வெள்ளிக்கிழமை யென்று
குத்துபாப் பின்னர் கூறினேன்நற் தமிழால்
நூறுத்தீனென்பவரி னோக்க முறுமைந்தனல்ல
மீறிசுமாயில் விளங்கப் படித்திருந்த
விருத்ததை வேண்டாவை மேதினியிலே தெளிவாய்த்
திருத்தமுடன் தனைச் சோதேன் தெரிந்தெடுத்து

பெரியோனுதவியினாற் பீரு கானின் புதல்வன்
வரிசை முகியித்தீன் மகிழ்வாகப் பாடினனே
(சக்கூன் படைப் போர் கடவுள் துதி : கண்ணி 25-30)

சக்கூன் படைப் போர் இயற்றப்பட்டது ஹிஜ்ரி 1098ஆம் வருடம் என்பதை அறியலாம். இதற்கு இணையான கிறித்தவ ஆண்டு 1686 ஆகும். நூல் இயற்றியுள்ள மாதம், தேதி, கிழமை களையும் ஆசிரியர் குறித்துள்ளார். 1686ஆம் வருடம் ஆவணி மாதம் இருபத்தியந்தாம் தேதி வெள்ளிக்கிழமை நண்பகல் நேர குத்துபா தொழுகைக்குப் பின்னரே வரிசை முகியித்தீன் புலவரால் சக்கூன் படைப் போர் அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ளது. சக்கூன் படைப் போர் முஸ்லீம் அல்லாத கூட்டத்தார்க்கும் முஸ்லீம் களுக்கும் இடையே நடைபெற்ற போரினையே விவரிக்கிறது. சக்கூன் என்பவனே முஸ்லீம் அல்லாத கூட்டத்திற்குத் தலைவனாகும். இப்போர் நபிகள் நாயகம் (சல்) அவர்களது காலத்தில் நடைபெற்ற போர்களுள் ஒன்றாகும். ஈராக்நாட்டின் தலைவனான சக்கூனிடத்துப் பெருமானார் நபிகள் நாயகம் (சல்) அவர்களது இஸ்லாத்தின் ஏகத்துவ இறைவழிபாட்டு நெறி முறைகளை வலியுறுத்த வேண்டி மேற்கொண்ட முயற்சியின் பயனாக இப்போர் நிகழ்கிறது. போரின் இறுதியில் சக்கூனும் அவனது கூட்டத்தாரும் ஒன்றிறைக் கொள்கையை விருப்பத்துடன் ஏற்றுக் கொள்ள அவனிழந்த நாடும் அவனிடமே மீண்டும் ஒப்படைக்கப்பட்டு இஸ்லாத்தின் வழியில் சக்கூன் ஆட்சி புரிவதாக இப்படைப் போர் இலக்கியம் நிறைவு பெறுகிறது. சக்கூன் படைப் போர் பற்றிய முழுமையான தனி நிலை ஆய்வு அவ்விலக்கியம் தோன்றிய காலத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (பார்க்க : சக்கூன் படைப் போர், நான்காம் இயல்).

ஐந்து படைப் போர்

படைப்போர் இலக்கிய வரிசையில் காலத்தால் இரண்டாவது நிலையில் தோன்றியது ஐந்து படைப் போர் ஆகும். இதனை இயற்றியவர் காயம்புளிக்கடுத்த பூவைமா நகரத்தைச் சார்ந்த யூசுபுநபி காவியத்தின் ஆசிரியரான கந்தப்பிள்ளை புலவரின் குமாரர் ஹஸனலிப் புலவராகும். படைப் போர் இலக்கியத்திற்கு இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் வழிகாட்டியாக இருந்த சக்கூன் படைப் போர் தோன்றியதற்கு ஐம்பத்தொரு ஆண்டு களுக்குப் பின்பே ஐந்து படைப்போரை ஹஸனலிப் புலவர் இயற்றி

யுள்ளார். இப் படை ஹிஜ்ரி 1150ஆம் ஆண்டு அரங்கேற்றம் செய்யப்பட்டது. சான்று படைப் போர் இலக்கியத்தின் ஆரம்பத்தில் காணப்படுகிறது.

செஞ்சொ லாற்பாடித் திகழரங்க மேற்றிடுநாள்
இஞ்சொல் நபிஹிஜுறத்தேற்ற வருடமது
ஆயிரத்தி நூற் றைம்பதாம் நல் வருடம்
பாயிரத்தி னம்மானை பாடியரங் கேற்றினனே

(ஐந்து படைப் போர் : இபுனியன் படைப் போர்
கண்ணி : 35-36)

ஹிஜ்ரி 1150க்கு இணையான கிறித்துவ ஆண்டு கி.பி. 1737 ஆகும். ஐந்து படைப் போர், படைப் போர் இலக்கியத்திற்குரிய இலக்கண வரையறையுடன் பாடப்பட்டுள்ளது. இதில் தலைப்பிற்கு ஏற்ப ஐந்து படைகளது போர்ச் செய்திகள் இடம் பெற்றுள்ளன. இவ் ஐந்து படைகளது போர்களும் முஸ்லீம் மக்கட்கும் முஸ்லீம் ஏகத்துவ இறைவழிபாட்டுக் கொள்கைக்கும் எதிரான இனத்தவர் களுக்குமிடையே நடைபெறுவதாகும். ஐந்து படைப் போரில் உட் பிரிவுகளாக இபுனியன் படைப் போர், உச்சி படைப் போர், வாடோச்சி படைப் போர், தாகி படைப் போர், இந்திராயன் படைப் போர் என்னும் ஐந்து வெவ்வேறு தலைப்புக்களில் போர்ச் செய்திகள் முறையாக விவரிக்கப் பட்டுள்ளன. இவ் உட்பிரிவுகளின் தலைப்புக்களில் இடம்பெற்றிருக்கும் இபுனியன், உச்சி, வாடோச்சி, தாகி, இந்திராயன் முதலான பெயர்கள் அந்தந்த உட்பிரிவுகளின் போரில் முஸ்லீம் அல்லாதாரின் கூட்டத்திற்குத் தலைமையேற்று வரும் மாந்தர்களின் பெயரே. படைப் போர் இலக்கியம், போருக்கு முக்கியத்துவம் தருவதால் போரில் தலைமை யேற்று வரும் எதிரிடை மாந்தர்களின் பெயரையே தலைப்புக் களாகப் பெற்றுள்ளன. இப்படைப்போர் இலக்கியங்களில் முஸ்லிம் அல்லாதோரான எதிரிகளின் படைத் தலைவர்களது பெயர்களை தலைப்பாகப் பெற்றுள்ளமைக்குப் பிறிதொரு முக்கியத்துவமும் உண்டு. இஸ்லாமிய வரலாற்று சகாப்தத்தின் ஆரம்பக் காலக் கட்டத்திலிருந்து இன்று வரை இடைப்பட்ட போர்க்களங்கள் எண்ணற்றவைகள். ஆனால் அப் போர்களுள் எவையேனும் வலிந்து மேற்கொள்ளப்படவில்லை. அல்லாஹ்வின் அல்குர் ஆன் கட்டளையின்படி 'எவர்கள் விசுவாசங்கொண்டு, தங்கள் ஊர்களி லிருந்து வெளிப்பட்டு அல்லாஹ்வுடைய பாதையில் தங்கள் பொருள்களையும் உயிர்களையும் தத்தம் செய்து யுத்தம் புரிகின்றனரோ அவர்கள் அல்லாஹ்வினிடத்தில் மகத்தான பெரும்

பதவி பெற்றவர்கள். இத்தகையோர்தாம் நிச்சயமாகச் சித்தியடைந்தோர்' (9:20) என்பதற்கேற்ப மேற்கொள்ளப்பட்டதற்காப்புப் போர்களே. எனவே கொள்கை முரண்பாடு காரணமாகப் பகைவர்கள் மேற்கொண்ட தாக்குதலை எதிர்த்துப் போராட வேண்டிய நிர்பந்தம் இஸ்லாத்திற்கு ஆரம்பக் காலத்திலிருந்தே எதிர்ப்பட்டது. இத்தகைய போர்களுக்குரிய அங்கீகாரத்தையும் அல்லாஹ் அல்குர் ஆன் ஆயத்து மூலமாக இஸ்லாமியர்களுக்கு வழங்கியுள்ளான். போர்கள் எதிரிகளால் துவக்கப்படுவதின் காரணத்தினாலேயே அதற்கு முக்கியத்துவம் தரும் வகையில் அந்தந்த எதிரிப் படைகளுக்குரிய தலைவர்களின் பெயர்களையே படைப் போர் இலக்கியங்கள் பெற்றுள்ளன.

ஐந்து படைப் போரில் இடம் பெற்றிருக்கும் ஐந்து படைப் போர்களும் வெவ்வேறான பெயர்களில் அமைந்திருப்பினும் இவை ஐந்தும் ஒன்றோடொன்று தொடர்புடைய தொடர் போர் நிகழ்வுகளாகவே உள்ளன. இவ்வைந்து படைப் போர்களும் வெவ்வேறானவைகள் என எண்ண முடியாத அளவிற்கு ஒன்றின் முடிவுடன் அடுத்தப் படைப் போரின் ஆரம்ப நிகழ்வுகள் தொடர்பு கொண்டுள்ளன.

ஐந்து படைப்போரில் முதலாவதாக இடம்பெற்றிருக்கும் இபுனியன் படைப் போர் செய்திகளின் முடிவில் அடுத்தப் படைப் போரினை தலைமையேற்று நடத்தவிருக்கும் உச்சியன் பற்றிய செய்தியும் உச்சி படைப் போரின் முடிவில் அடுத்த படைப் போரினைத் தலைமையேற்று நடத்தவிருக்கும் உச்சியன் பற்றிய செய்தியும் இடம் பெற்றுள்ளது. இரண்டாவது படைப் போரின் இறுதியில் மூன்றாவது படைப் போரின் எதிர்த் தலைவன் வடோச்சியன் பற்றிய செய்தியும் வாடோச்சிப் படைப் போரின் இறுதிக் கண்ணிகளில் நான்காவது படைப்போரின் எதிர்த் தலைவன் தாகி பற்றிய குறிப்பும் உள்ளன. தாகிப் படைப் போரின் முடிவில் இறுதிப் படைப் போரான ஐந்தாம் படைப் போரில் இஸ்லாம் அல்லாதாரின் கூட்டத்திற்குத் தலைமை ஏற்றிருக்கும் இந்திராயன் பற்றிய கருத்தும் குறிக்கப்பட்டுள்ளது. அடுத்தடுத்து வரும் போர்ச் செய்திகளை அதற்கு முந்திய பகுதிகளில் தெரிவித்து விடுவதால் ஐந்து படைப்போர் செய்திகளைப் படித்து வருவோர்க்கு இந்நிகழ்வுகள் ஒரே நிகழ்ச்சியின் தொடர்ச்சி என்ற எண்ணம் ஏற்படுகிறது.

ஒவ்வொரு படைப் போர் செய்திகளையும் விவரிக்கத் தொடங்கும் முன் ஆசிரியர் இது 'ஐந்து படைப்போரில் முதலாவது இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது எனக் குறிப் பிடுகிறார். எனவே இவற்றுள் ஒன்றேனும் இடையில் விடுபடு மானால் அது முழுமையான நிறைவு பெற முடியாது. ஏனெனில் ஐந்து படைப்போரின் ஆரம்பக் காலத்துப் பதிப்புக்களில் தொடர்ச்சி யாகவே ஐந்து படைப்போர்ச் செய்திகளும் வெளியிடப்பட்டன. இவ்வகையில் முழுமையான ஐந்து படைப் போர் இலக்கியங்களும் சேர்ந்த ஒரே தொகுதி கி. பி. 1878ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டுள்ளது. இதற்குப்பின் பல்வேறு பதிப்புகளும் வந்துள்ளன. ஆனாலும்கூட ஐந்து படைப் போர் தொகுதி வெளியிடப்பட்ட 1898ஆம் ஆண்டிற்கு முன்னரே 1871ஆம் ஆண்டில் ஐந்து படைப்போருள் முதலாவது படைப் போரான இபுனியன் டைப் போரும் ஐந்தாவது படைப் போரான இந்திராயன் படைப் போரும் தனித் தனியே வெளியிடப்பட்டுள்ளன. முழுமையான பதிப்பையும் வெளியிடுவதற்குரிய சிரமத்தின் காரணமாகவே இவ் வைந்து படைப் போர்களையும் முஸ்லீம் மக்கள் தனித்தனியே பதிப்பித்து வெளியிட்டிருக்க வேண்டும்.

பிற்காலத்தே ஐந்து படைப் போர்களும் தனித்தனியே பல்வேறு பதிப்புக்களைப் பெற்றுள்ளன. இவைகள் தனித்தனியே பதிப்பிக்கப்பட்டிருப்பினும் ஹஸனலிப் புலவரின் முழுமையான இலக்கியத் திறத்தை ஐந்து படைப்போர், ஒட்டு மொத்தமாக வெளிப்படுத்துவதுபோல் வெளிப்படுத்துவதில்லை. ஏனெனில் ஐந்து படைப் போர் செய்திகளை ஒன்றன்பின் ஒன்றாகப் படித்து வரும் போதே முழுமையான நிறைவு கிடைக்கிறது. மேலும் ஐந்து படைப் போரிலும் ஆரம்பத்தில் காப்பு-வெண்பா மட்டுமே தனித் தனியே இடம்பெற்றுள்ளது. அதே நேரத்தில் முதல் படைப் போராக அமைந்துள்ள இபுனியன் படைப் போரின் தொடக்கத்தில் மட்டுமே கடவுள் துதி, அவையடக்கம், நூல் அரங்கேற்றிய காலம் பற்றிய குறிப்பு, அரங்கேற்றம் நிகழ்ந்த சூழல், முதலான பல்வேறு தகவல்கள் குறிக்கப்பட்டுள்ளன. ஐந்து படைப் போரினைப் பற்றிய விவரத்தை அறிந்து கொள்வதற்குரிய இக்குறிப்புக்கள் இதில் அடங்கியுள்ள ஐந்து பகுதிகளுக்கும் பொதுவானவை களாகும். மேலும் இம்முதல் பகுதியான இபுனியன் படைப் போரிலேயே நபி நாயகத்தின் வரலாறு, இபுனியன் வரலாறு, இபுனியன் இஸ்லாமிய மார்க்கத்திலிருந்து புறம்பான

பாதையில் நிற்பது, அவனது படை பலம், அவனிடம் நபிநாயகம் கலீது அவர்களை தூதனுப்புதல், அதனை இபுனியன் மறுத்தல் பின் போர்ச் சூழல் அதில் அலியார் பங்கு பெறல் முதலான போருக்கு அடிப்படையான அனைத்துச் செய்திகளும் இடம் பெற் றுள்ளன. போரின் தொடக்கம் எப்போது? ஏன்? என்ற வினா விற்குரிய பதில்கள் இபுனியன் படைப் போரின் தொடக்கத்திலேயே அமைந்துள்ளன. ஏனையநான்கு போர்ப் பகுதிகளிலும் போரின் தொடக்கம் எவ்வாறு ஏற்பட்டது என்பது பற்றிய விவரங்களை அறிய முடியாது. எனவே ஐந்து படைப்போர் ஐந்து பகுதிகளாக இடம் பெற்றிருப்பினும் அது முழுமை பெற்ற ஒரு படைப் போர் இலக்கியம் என்றே கருதுதல் வேண்டும். அன்றி தனித்தனிப் பதிப்புகள் வெளியிடுவதின் மூலம் அவற்றின் இலக்கியத் தன்மை முழுமை பெறுவதில்லை என்பது ஈங்குக் குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் ஐந்து படைப் போர் என்பது ஐந்து, வேறு வேறு இலக்கியமாகக் கருதப்படும் கண் ணோட்டம் இருக்கின்ற காரணத்தினாலேயே இவ்வைந்து பகுதி களும் தனித் தனியே பதிப்பிக்கப்படும் நிலை பெருகி வந்துள்ளது. இவ்வாறு தனிப் பதிப்புக்கள் வெளிவருவது ஐந்து படைப் போர் இலக்கியத்தின் முழுமையை நிறைவு செய்வதாகாது என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

பெருமானார் நபிகள் (சல்) திலகமவர்களது காலத்தில் நடை பெற்ற போர்களுள் ஒன்றே ஐந்து படைப் போர் செய்தியாகும். ஒரு போரின் ஆரம்பம் ஐந்து வெவ்வேறு நிலைகளில் தொடர்வதால் ஐந்து பகுதியாக ஆசிரியர் இதனை அமைத்துள்ளார். பெருமானார் (சல்) அவர்கள் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருட் தூதர் ஜிப்றயீல் (அலை) அவர்களது கருத்துப்படியே இபுனியன் பற்றிய செய்தியை அறிந்து அவனிடத்து இஸ்லாத்தின் ஏகத்துவக் கொள்கையை ஏற்றுக் கொள்ளும்படி வலியுறுத்த கலீது என்ப வரைத் தூதனுப்ப, அதன் விளைவாகப் போர் உருவெடுக்கிறது. பின் அல்லாஹ்வின் அருட்படியே தற்காப்புப் போர் பெருமானார் அவர்களால் தொடங்கப்படுகிறது. இப்போரில் பெருமானாரின் அணியில் தலைமையேற்று நிற்கும் பாத்திரம் புலி அலி (றலி) அவர் களே ஆகும். ஐந்து படைப் போர் முழுமையும் அலி (றலி) அவர் களே தலைமைப் [பாத்திரம் என்று சுட்ட வேண்டும். இதனைப் படைப் போரின் ஆரம்பத்தில் ஆசிரியர் சுட்டியுள்ள கண்ணிகளின் மூலமாகவும் அறியலாம்,

மூமினா னோரையெல்லா முறையாகவே பணிவேன்
ஆமினார் பெற்றெடுத்த ஆலநபி நம்மிறஸூல்
பெற்றெடுத்த பாத்திமத்துப் பெண்ணாரி னற்புருடர்
கத்தன ருளோங்கும் அலி காரணமாம் வென்றபடை
இம்மா நிலமதனி லெல்லவருங் கேட்பதற்குப்
பெம்மா னினல்ல பெரிய வருளா லே

(ஐந்து படைப் போர் : இபுனியன் படைப் போர்
கண்ணி 20-23)

எனவே ஐந்து படைப் போரின் முழுமைக்கும் உள்ள தலைமைப் பாத்திரம் அலி (றலி) அவர்களே. எதிரிகளே போர் தொடக்கம் செய்வதால் எதிரிப் பிரிவுகளுக்கேற்ப ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப் பட்டு ஒரு முழுமையான போர் நிகழ்வு ஹஸனலிப் புலவரால் பாடப்பட்டுள்ளது.

ஐந்து படைப் போரின் தொடக்கத்தில் காப்பு - வெண்பா இவ்வாறு உள்ளது.

பூ முதல் யாவையுமே பொறப்பா யமைத்தளிக்கும்
மாமுதலே யெங்குநிறை வள்ளலே - கோமகனாம்
ஏதிபுனியன் படைப்போ ரியான் சொல்வே னெவ்வுயிருங்
காதல் கொளு மாண்டவனே காப்பு

இதன்பின் கடவுளர் துதி என்ற பிரிவின்கீழ் பத்தொன்பது கண்ணிகள் உள்ளன. இத்துதியில் 'அவனுக்கே எல்லாப் புகழும்' என்று பொருள்படும், அல்ஹம்து லில்லாஹி எனத் தொடங்கப்பட் டுள்ளது. இதன்பின் முறையாக ஜெகதலத்தில் வந்துதித்த சீர்முஹம்மது, 1,24,000 நபிமார்கள், அபூபக்கர் (றலி), உமர் (றலி), உதுமான் (றலி), அலி (றலி) முதலான கலீபாக்கள், முகியித்தீன் ஆண்டகை, சதக்கத்துல்லா அப்பா முதலான இறை நேயச் செல்வர்கள் புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளவர்கள். இறுதியாக ஹஸனலிப் புலவர் தம் தந்தையையும் புகழ்ந்துரைத்துள்ளார்.

அந்தமுள தென்பூவைக் கன்பாக வந்து தித்த
கந்தப்பிள்ளை பாதங் கருணையுடனே புகழ்வேன்

(ஐந்து படைப் போர் : இபுனியன் படைப் போர்
கண்ணி : 19)

இவ்வரிகளின் மூலம் ஹஸனலிப் புலவரது தந்தையின் பெயர் கந்தப்பிள்ளை என அறியப்படுகிறது. ஹஸனலிப் புலவரின் தந்தையார் யூசுபுநபி காவியம் இயற்றி உள்ளார் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

கடவுள் துதியைத் தொடர்ந்து நூல் அரங்கேற்றம் பற்றிய செய்தியை ஆறு கண்ணிகளில் ஆசிரியர் தந்துள்ளார். இதனைத் தொடர்ந்து ஐந்து படைப் போரின் முறையான உள்ளடக்கக் கருத்துக்கள் தொடர்கின்றன. இவைகள் பற்றிய கருத்துக்களை இங்குச் சுருக்கிக் காண்போம்.

இபுனியன் படைப் போர்

முதலாவது படைப்போரான இபுனியன் படைப் போர், ஐந்து படைப்போரின் 49வது கண்ணி முதல் 922 கண்ணி முடிய விவரிக் கப்பட்டுள்ளது. குரசான் என்னும் பதிக்கு அரசனான கொடுங்கோ லாட்சி செலுத்தும் இபுனியனுக்கு நல்வழி காட்டும் பொருட்டுப் பெருமானார் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் காலித் என்பாரைத் தூதனுப்புகிறார். இதனைக் கண்டுக் கோபமுற்ற இபுனியன் மதீனாவில் வீற்றிருக்கும் நாயகம்(சல்) அவர்களை நோக்கிப் பெரும் படையுடன் போர் தொடங்கும் பொருட்டுப் படையெடுத்து வருகின்றான். இதனால் தற்காப்புப் போருக்கான அவசியம் நாயகம் (சல்) அவர்களுக்கு ஏற்பட்டது. இத் தற்காப்புப் போருக்குத் தலைமைப் பொறுப்பு ஏற்கும் பணியை ஹஸ்ரத் அலி (றலி) அவர்கள் ஏற்று நடத்திடப் போர் மூண்டு இறுதியில் இபுனியன் கொல்லப்படுகிறான். போரின் இறுதியில் கணவன் இறந்த செய்தியறிந்து இபுனியனின் மனைவி ஒப்பாரி வைப்பதாக உள்ளது.

என்னைவிட்டுப் போனீரே யெப்போதுமைக் காண்பேன்
மன்னவரே யென்று மாரடித்தாள் மாமயிலாள்

இதன்பின் இபுனியன் மனைவி இச்செய்தியை இந்திராயன் என்னும் மன்னனுக்குத் தெரியப்படுத்துவதுடன் முதலாவது படைப் போர் முடிவுறுகிறது. இபுனியன் படைப் போரில் ஆசிரியர் இபுனியனைக் கொடிய அரக்கனாக வர்ணித்துள்ளார். இவனது உருவத்தைப் பல கண்ணிகளில் ஹஸனலிப் புலவர் வர்ணித்துள் ளார். அலி (றலி) அவர்களது போர்த்திறமும் சிறப்பாக விவரிக்கப் பட்டுள்ளது. இபுனியன் படைப்போர் மட்டும் பல பதிப்புக்களில் வெளியிடப்பட்டுள்ளது.

உச்சிப் படைப் போர்

இபுனியன் படைப்போரைத் தொடர்ந்து இடம் பெற்றிருப்பது உச்சிப் படைப்போராகும். இது முறுத்தானை ஆட்சி புரியும் இந்திராயன் பற்றிய செய்தியுடன் தொடங்குகிறது. இந்திரா

யனுக்கு இரு மகள்கள் அவர்களுள் மூத்தவளைத் தாகி என்பவனுக்கு மண முடித்துள்ளான். இரண்டாம் மகளான பனிமதியை மண முடிப்பதற்கான வரன்தேடும் நிலையிலேயே இபுனியன் இறந்த செய்தி அவனது மனைவி மூலமாக இந்திராயனுக்கு வந்தடைகிறது. இந்நிலையில் இந்திராயன் அலி (றலி) அவர்களின் தலையை யார் கொண்டு வருகின்றார்களோ அவர்களுக்கே பனி மதியை மண முடித்துக் கொடுக்கப்படும் என அறிவிப்புச் செய்கின்றான்.

... ...இந்திராயனவன்
எந்தன் மகள் நல்ல விசைந்த பனி மதியை
கொள்ள வென்றா லாலிதனை கொண்டு வந்தோர்க்
காகுமென்றான்

(உச்சிப் படைப் போர் : கண்ணி : 23 - 24)

அத்துடன் பெரும் கோபம் கொண்டு

பேயனலி யென்பவனைப் பேய்க்குவிருந் தாகிடவே
காயந்தனையறுத்துக் கண்டமிட்டுத் தான் தலையை
கொண்டு வந்தார் சீமையிலே கண்டதொரு பாதியும்நான்
இன்று தருவேன் மகளை யேற்றுகலி யாணஞ்செய்தே

(உச்சிப் படைப் போர் கண்ணி : 60 : 61)

என்று கூற இதனைக் கேள்வியுற்ற உச்சி என்பான் அலியைப் போரில் தோல்வியடையச் செய்து அவரது தலையைக் கொண்டு வருவதாகச் சபதம் செய்துப் போருக்குத் தலைமை ஏற்றுப் புறப் பட்டான்.

சேர்ந்திருக்கு முச்சியென்போன் செப்புவா னப்போது
நேர்தவறு மலிதனை நிமிடங்கொண்டு வாரனென்றான்

(உச்சிப் படைப் போர் : கண்ணி : 27)

இதன்பின் உச்சி தலைமையில் இந்திராயனின் படை, போருக்குப் புறப்பட்டது. இப்படைகள் இபுனியனின் படையைப் போன்று முந்நூறு மடங்கு பெரியன என்பதை ‘முன் வந்த சேனையைப் போல் முன்னூறு பங்கதிகம்’ எனக் குறிப்பிடும் ஹஸனலிப் புலவர் உச்சிப் படைகளுடன் ஹஜ்ரத் உமறு அலி (றலி) அவர்களது படைகள் நடத்திய போர் மிகவும் கடுமையானது என்பதை இவ்வாறு வர்ணித்துள்ளார்.

காலாட் படையுடனே காலாள்களும் மெதிர்த்தார்
வேலாட் படையுடனே வேலாள்களும் மெதிர்த்தனர்

பட்டையத்தார் தம்முடனே பட்டையத்தார் தாம் பொருதார்
ஒட்டகத்தார் தம்முடனே யொட்டகத்தார் தாம் பொருதார்

வேற்காரர் தம்முடனே வேற்காரர் தாம் பொருதார்
மாழக்கார உச்சிபடை பாரைவளைந் தனபோல்

கார்மழை செறிந் தனபோற் கருவாளி தான் சொரிந்தாள்
போர் தனிலே நின்று...

(உச்சிப் படைப் போர் : கண்ணி : 162 -166)

போரில் காணப்பெறும் எதிரிப்படையின் அழிவினையும் ஆசிரியர் பல கண்ணிகளில் வர்ணித்துள்ளார். அலி (றலி) அவர்களது படைகளிலிருந்து பன்மடங்கு அதிகமுள்ள உச்சிப்படை அவர்களை வளைத்துக் கொண்டது. இக்காட்சி 'சிங்கத்தை ஆட்டினங்கள் சேர வளைத்தது போல்' இருப்பதாக ஆசிரியர் குறித்துள்ளார். உச்சிப் படைப் போரினை ஹஸனலிப் புலவர்392 கண்ணிகளில் எடுத்துரைத்துள்ளார். இதில் பல கண்ணிகளில் அலி (றலி) அவர்களது குதிரையான 'துல் துல்' என்பதன் ஆற்றல் விளக்கப் பட்டுள்ளது. அலி (றலி) அவர்களது திறமையான போருக்கு முன் ஈடு கொடுக்க முடியாத உச்சி இறுதியில் பின்வாங்கி ஓடி மாண்டு விடுகிறான். இச் செய்தியைப் போரிலிருந்து உயிர் பிழைத்து ஓடியோர் மன்னர் இந்திராயனிடத்து எடுத்துக் கூறுவதுடன் உச்சிப் படைப் போர் முடிவுறுகிறது. உச்சிப் படைப் போரில் போர்க்களக் காட்சிகளை ஆசிரியர் வர்ணிக்கும் திறம் போற்றுதலுக்குரியது. பெருமானார் நபிகள் நாயகத்தின் திறம்பற்றிக் குறிப்பிடும் போது நாயகம் (சல்) அவர்கள் தசைக் கட்டிக்குப் பெண்உரு அளித்தது போன்ற சில வரலாற்று நிகழ்ச்சிகளையும் உச்சிப் படைப்போரில் ஆசிரியர் குறித்துள்ளார்.

வடோச்சிப் படைப் போர்

உச்சி தோற்கடிக்கப்பட்டதைக் கேட்ட இந்திராயன் கோபங் கொண்டான். தம் உள்ளக்கிடக்கையை வெளியிட்டுக் கொண்டிருக்கையில் அங்கே வட்ட மண்டல மன்னன் வடோச்சி என்பவன் வந்தான். இந்திராயன் வடோச்சிக்கு நடந்தவற்றைக் கூறினான். நிகழ்ந்த அனைத்தையும் கேட்ட வடோச்சி இந்திராயன் நிலைமையைக் கண்டு வருந்தினான். இந் நிகழ்ச்சியுடன் மூன்றாவது படைப்போரான வடோச்சிப் படைப் போரை ஆசிரியர் துவக்கம் செய்துள்ளார்.

படைத்த ஆதிதான் தடுத்தாலும் அலிதனை இங்குக் கொண்டு வருவேன் என்று இந்திராயனுக்கு உறுதி கூறினான். இந்திராயன் அளவிலா மகிழ்ச்சியடைந்தான். தனது மகளை வடோச்சிக்குத் திருமணஞ் செய்வதாகக் கூறினான். வடோச்சி அலியைக் கொன்று வருவதாக முறி எழுதுமாறு இந்திராயன் அமைச்சர்கட்குக் கட்டளையிட்டான். அப்படியே முறியும் எழுதப்பட்டது. இவ்வாறு எழுதிக் கொடுத்ததன் பிறகு வடோச்சி பின்வருமாறு சபதமிட்டான்.

கல்லை துளைத்தலிதான் கற்குள்ளிருந் திட்டாலும்
விண்ணே கிலுமவனை விடேனென் றெதிருரைத்து
(வடோச்சிப் படைப் போர் : கண்ணி : 410-411)

வடோச்சி போருக்குப் புறப்படுமுன் போரில் வெற்றி பெற்றால் தனக்குக் கிடைக்க இருக்கும் பெரும் பேற்றினைப் பற்றி எண்ணினான். இப்படி எண்ணிக்கொண்டிருக்கையில் அரச மாளிகையில் பனிமதி உலாவி வருவதைக் கண்டான். கண்டு உள்ளங் குளிர்ந்தான். அவளின் ஒப்பற்ற அழகு அவன் உள்ளத்தில் படிந்தது. அவ்வழகினை இந்நூலாசிரியர் பின்வருமாறு வர்ணித்துள்ளார்.

கிஞ்சகம் போல் மொழியும் கீற்றுப்பிறைபோல் நுதலும்
மஞ்சு தவழ்குழலு மாமதியைப் போல் முகமும்

முருக்கம்பூ போலிதழு மோகமுற்ற பல்லழகும்
கருக்கெழுதும் கண்ணழகும் கழறுகின்ற கைவீச்சும்

வாழைத்தண்டு போலே வடித்த தடிக்காதும்
கொள்ளைகொள்ளு மாடவரைக் கொந்தளக பாரமதும்

பச்சை முகமதுபோற் பாசக் கழுத்தழகும்
இச்சை பூந்தேன் வார்த்த தேய்ந்தவேய் பொற்றோளும்

காந்தளம் பூக் கையழகும் கையில் வைத்த பசுங்கிளியும்
மாந்தர் களைக் கொள்ளை கொள்ளு மகமேருவை பழிக்கும்

பந்தையொத்த கொங்கைப் பரிமளமாகுஞ் சிமிளும்
விந்தையொத்த ஆலிலைபோல் மேலுதரமும் நடுவில்

உந்திச் சுழியழகும் உரோமத் தொழுங்கழல்
சந்தித்த சிங்கவிடை தனைப்போ லிடையழகும்

அரம்பைபோ லேதுடையும் அகமெலாம் பூஷணமாய்
இன்னமவள் பேரழகங் கெவ்விடத்துமில்லையென
(வடோச்சிப் படைப் போர் ; கண்ணி : 418 - 425)

வடோச்சியும் மிக்க அழகுள்ளவன். பலம் வாய்ந்தவன். ஆற்றல் படைத்தவன். அழகில் சீவகனும் ஒப்பாகமாட்டானாம். தண்டாயுதமெடுத்தால் வீமனையும், வில்லெடுத்தால் அர்ச்சுனனையும் தோற்கடிக்கும் ஆற்றல் படைத்தவனாம். நளன் கூட இவன் வடிவுக்கு நிகரற்றவனாம். கொடையில் கர்ணனும் தோற்றுப் போவானாம். இவ்வாறு வடோச்சிப் பலவாறாக வர்ணிக்கப்பட்டுள்ளான். அவ்வர்ணனைகளைப் பின்வருமாறு பாடுகிறார் ஆசிரியர்.

இன்னமதுர சீவகனு மிங்கிவனுக் கொவ்வாது
கனமகுட ராஜர்களுங் கலங்குவா ரேயவர்க்கு

தண்டாயுத மெடுத்தாற் றான்வீமன் தோற்றிடுவான்
நன்றான வில்லெடுத்தால் நல்விஜயன் தோற்றிடுவான்

நளனு மிவன்வடிவி னான்கிலொன்று காணானே
பழகுமிவன் வடிவு பார்க்கிலரிச் சந்திரனாம்

கர்ணனிவன் கொடைக்குக் கால்வாசி காணாது
தர்மமிக னீதத் தனக்கு நிகர் காணாது

......

இன்னமவன் வெற்றி சொல்லிங் கென்னால் முடியாது
(வடோச்சிப் படைப்போர் : கண்ணி : 438 - 447)

இத்தகைய பண்புகள் படைத்த வடோச்சி மதிமயங்கினான். உள்ளங்குலைந்தான். செய்வது இன்னதென்றறியாது தடுமாறினான். வடோச்சியின் இந்நிலையை அவன் பாங்கன் கண்டான். கண்டு வடோச்சியின் இந்நிலைக்குக் காரணம் என்ன என்று வினவினான். பனிமதியைக் கண்டு தனதுள்ளம் பறி போனதை வடோச்சி கூறினான். ஹஸனலிப் புலவர் இவ்விடங் களில் பழைய இலக்கிய உவமைகளை அடுக்கடுக்காகச் சேர்த் திருப்பது ஐந்து படைப்போரின் இலக்கியச் சுவை சிறப்பதற்கு உதவுகிறது. தொடர்ந்து போர்ச் செய்திகளை மட்டுமே விவரிக்காமல் இடையில் இத்தகு வர்ணனைகளைச் சேர்த்துச் சுவை உண்டாக்குவதை ஹஸனலிப் புலவர் ஓர் உத்தியாகவும் பயன்படுத்தியுள்ளார் எனலாம். அத்துடன் பழைய இலக்கியங் களின் உவமைகளின் மூலம் ஆசிரியருக்குரிய தமிழிலக்கிய ஈடுபாட்டினையும் அறிந்து கொள்ளலாம்.

போருக்கு வடோச்சி புறப்படும்போது, ‘பூனை யெலிக் கஞ்சிடுமோ புலி மானுக் கஞ்சிடுமோ’ என்று வஞ்சினம் கூறினான்

உச்சியின் படையைக் காட்டிலும் பெரிய படையுடன் வடோச்சி போருக்குச் சென்றான். படைகள் ஏழு சமுத்திரம் ஒன்று திரண்டு போவது போல் காட்சியளித்தனவாம். அப்படைகள் போவதினால் மேலே எழும்பும் தூசி சூரியனையே மறைத்து விட்டதாம். இக்கருத்துக்களையே பின்வருமாறு கண்ணிகளில் அமைத்துள்ளார்.

வாசமுட னாயுதங்கள் வாய்ப்பா யெடுத்தணிந்து
ஆளுமந்தப் பொற்றேரி லான வடோச்சியர்கோன்

ஏழு சமுத்திரம்போ லேகினான் சேனையோடும்
ஆதித் தனுமறைந்தா னந்தரத்திற் றூசியதாய்
(வடோச்சிப் படைப் போர் : கண்ணி :482-484)

வடோச்சியும் படைகளும் அறபு நாட்டினூடாக மக்கமா நகருக்கு வெளியே சென்றனவாம். வடோச்சிக்கும் முஸ்லீம் மக்களின் தூதுவர்க்குமிடையே உரையாடல் நடைபெற்றது. வடோச்சி தான் வந்த காரணத்தைக் கூறினான். அலியாரைக் கொன்று அவர்தம் தலையைக் கொண்டுபோய் இந்திராயனுக்குக் காட்ட வேண்டும் என்று கூறினான். வெவ்வேறான உரையாடல் நிகழ்ந்தபின் அலியார் அவ்விடம் வந்தார். வடோச்சி வந்த காரணத்தை அலியார் கேட்ட முறையைப் பின்வருமாறு இந் நூலாசிரியர் கூறுகிறார்.

நாட்டுக் கதிபதியாய் நாடாள் வடோச்சியென்றான்
தேட்ட முடனலியச் சீர்கேடனைப் பார்த்து

நாடாள் வடோச்சியென்றாய் நாடியிந்த மக்கத்துக்கு
வாடாது வந்ததென்ன வாசகத்தைச் சொல்லுமென்றார்
(வடோச்சிப் படைப் போர் : கண்ணி : 578 - 579)

வடோச்சியும் தான் வந்த காரணத்தை உள்ளவாறே கூறினான். இவற்றையெல்லாம் கேட்ட பிறகு அலி (றலி) அவர்கள் வடோச்சியை இஸ்லாத்தைத் தழுவும்படி அழைத்தார்கள். வடோச்சியும் இஸ்லாத்தைத் தழுவ உடன்பட்டான். போர் புரிந்து வாகைமாலை சூடவந்த வடோச்சியும் படைவீரர்களும் இஸ்லாத்தைத் தழுவினர். இதனையே ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்.

சூரியனைக் கண்ட துய்ய நல்ல தாமரைபோற்
காரியமென்ற யலியைக் கண்டவர்களுள் மகிழ்ந்தே

வாரியென வந்த வடோச்சியர்கோ னும்படையும்
கோரியாய்த் தானே குணமான நல்மனதாய்

ஈமான் தனைமனதி லெண்ணியலி யைப்புகழ்ந்தார்
கோமா நபிக்கிமான் கொண்டான் வடோச்சியர்கோன்
(வடோச்சிப் படைப் போர் : கண்ணி : 614-616)

இனி, பனிமதியைத் திருமணம் செய்யும் சூழ்ச்சியைப் பற்றி ஆராயலானார். வடோச்சிக்கு ஒன்று தோன்றியது. இந்திராயனின் மூத்த புதல்வியை மணந்த தாகி அவன் நினைவுக்கு வந்தது. தாகி, அலி (றலி) அவர்களைப்போன்ற வடிவம் உள்ளவனாக இருந்தானாம். இவ்வகையான நிலையை வடோச்சி அனைவருக்கும் எடுத்துரைத்தார். தாகி என்பவன் துட்டனில் துட்டன் என்று கூறினார். தீயவன் என்று பழி சுமத்தினார். அலி (றலி) அவர்களைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்.

உங்கள்வடி வுங்கள்நிறமுங்கள்முகம் போலிருப்பான்
தங்கள் குரலதுபோற் றான்பேசு வானவனும்
அங்கலன்பாற் போவே ாமவன் தீனில் வாராவிட்டால்
துங்கவனின் முகமறுத்தே தோகையை நான்
கொள்வேனென் றான்
(வடோச்சிப் படைப் போர் : கண்ணி : 678 - 679)

வடோச்சி படைப் போரின் நிகழ்வுகள் இத்துடன் முடிவுற அடுத்த நான்காவது படைப் போர் தொடர்கிறது. வடோச்சிப் படைப்போரில் மொத்தம் 315 கண்ணிகள் இடம்பெற்றுள்ளன. ஐந்து படைப் போருள் நடு நாயகமாக அமைந்துள்ள வடோச்சிப் படைப் போர் ஏனைய நான்கு படைப் போர் பகுதியிலிருந்து சற்று மாறுபட்டுள்ளது. இப்படைப்போரில் ஆயித்தமாகி வரும் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளனவே தவிர, போர் நிகழ்ச்சிகளுக்கு முன்னரே வடோச்சியின் மனமாற்றம் நிகழ்வதால் போர் தவிர்க்கப் படுகிறது. இந்நிலை இஸ்லாம் எதிர்கொள்ளும் போர்கள் அனைத்தும் பகைவரிடம் பகைமை பாராட்டவல்ல என்பதை மெய்ப்பிக்கிறது. தற்காப்பிற்காகவே இஸ்லாம் போர்களை எதிர் கொண்டது. இஸ்லாம் விரும்பியதும் வலியுறுத்தியதும் பகைவர் களின் மனமாற்றமே. இதனை நன்கு உணர்த்துவது வடோச்சி படைப்போராகும்.

தாகிப் படைப் போர்

மூன்றாவது படைப்போருக்குப்பின் தாகிப் படைப்போர் நான்காவதாக 707-வது கண்ணியிலிருந்து தொடங்குகிறது. வடோச்சி இஸ்லாத்தைத் தழுவினார். தாகியின் கோட்டையை முற்றுகையிட எண்ணினார். அலி (றலி) அவர்களின் ஒத்துழைப்பை வேண்டினார். எப்படியாவது தம் எண்ணத்தை நிறைவேற்றக் கங்கணம் கட்டினார். தாகியைக் கொன்றால் தம் ஆசை நிறை வேறும் என்று மனப்பால் குடித்தார். தாகியின் கோட்டையைப் படைகளுடன் வளைத்தார்.

தாகி என்ற மன்னன் தனிநகரை யாண்டிருக்க
ஏகிடு வடோச்சியர்கோ னிசைந்தலியும் படைகளுமாய்

நடந்து சென்று தாகியவ னற் கோட்டை யைவளைந்தே
(தாகிப் படைப் போர் : கண்ணி : 708-709)

கோட்டையை முற்றுகையிட்ட பின்னர் தாகியிடத்தில் ஒரு தூதன் அனுப்பப்பட்டான். அத்தூதன் நல்வழியைப் பின்பற்றும் படித் தாகியிடம் இடித்துரைத்தான். அவ்வறிவுரைகள் அனைத்தும் அவனது காதில் ஏறவில்லை. தாகியின் நிலைமை தூதனுக்கு நன்கு விளங்கியது. அறிவுரைகள் கூறுவதில் பயனில்லை என்று கண்டான், அலி (றலி) அவர்களையும் தாகியையும் ஒப்புநோக்கிக் கூறினான். பல உவமைகளைக் கையாண்டான். அலி (றலி) அவர்களை முள்ளுள்ள கொம்பாகக் கொண்டால், தாகி முள்ளில்லாத கொம்பாவான். தாகி தேன் இல்லாத பூவாக ஒப்பிடப்பட்டால் அலி (றலி) அவர்கள் தேன் நிறைந்த பூவாவார். இக்கருத்துக்களை இந்நூலாசிரியர் ஹஸன்அலிப் புலவர் பின் வருமாறு கூறுகிறார்.

முள்ளுள்ள கொம்பலிகாண் முள்ளில்லாக் கொம்பே நீ
கள்ளில்லாப் பூ நீயே கள்ளுள்ள பூவலிகாண்
(தாகிப் படைப்போர் : கண்ணி : 750)

இத்தகைய அறிவுரைகள் பயன்படவில்லை. தாகி போருக்கு ஆயத்தமானான். போர்க்கோலம் பூண்டான். இரு சாரார்க்கும் இடையே போர் மூண்டது. கடுமையாகப் போர் நடந்தது. பற்பல ஆயுதங்களால் அளவிடற்கரிய இன்னல்கள் நிகழ்ந்தன. உண்டாய சேதங்கள் மிகப் பல. போரில் நடந்ததாகக் கூறப்படும் ஒரு நிகழ்ச்சி ஈண்டு குறிப்பிடத்தக்கது. இரு சாராரும் அம்புமாரி பொழிந்தனர். இவ்வாறு அம்பு மழை பொழிவதின் பயனாக

சூரியனைக் காண முடிய்வில்லையாம். ஒன்றோடொன்று நெருக்க மான மிகப்பல அம்புகள் எய்யப்பட்டதால் அவ்வம்புகள் ஆதித்த னையே மறைத்து விட்டனவாம்.

ஆயுதங்க ளெல்லா மழியப் பொருதனரே
வாய்மதங்கள் பேசி வலியகணை கொண்டெறிவார்

ஆதித் தனுமறைந்தா னம்புமழை யாலுடனே
(தாகிப் படைப் போர் : கண்ணி : 766-767)

தாகிக்கு அறிவுரை கூறப்பட்டது. தாகியோ அவ்வுரைகளைப் பொருட்படுத்தவில்லை. போர் புரிவதிலேயே மூழ்கியிருந்தான். அலி (றலி) அவர்களால் கொல்லப்படுமுன் நல்வழியைப் பின்பற்று மாறு புத்திமதி சொல்லப்பட்டது. ஒரு வழிப்போக்கன் ஒரு வழி யில் செல்கிறான். அவ்வழியில் சென்று தனது குறிக்கோளை அடைய அவ்வழிப்போக்கன் முயலுதல் வேண்டும். தனது குறிக் கோளை அடையப் பல நாட்கள் செல்லக்கூடும். அவ்வாறு செல்லும்போது உணவு தேவைப்படுகிறது. உணவு எளிதில் கிடைக்கமுடியாத வழியில் செல்பவர்கள் உணவைத் தம்முடன் எடுத்துச் செல்ல வேண்டும். அவ்வாறு எடுத்துச் செல்லும் உணவைப் பொதிசோறு என வழங்குவர். எனவே, ஒரு வழியில் செல்பவனுக்குப் பொதிசோறு இன்றியமையாதது. அதேபோன்று இஸ்லாம் எனும் நேர் வழியில் செல்பவனுக்கு ஈமான் என்னும் பொதிசோறு தேவைப்படுகின்றது. இத்தகைய மெய் அறிவினையே ஹஸனலிப் புலவர் பின்வருமாறு கூறுகின்றார்.

வழிக்குப் பொதிசோறு வன்மையுள்ள ஈமான்காண்
வழிக்கு வந்து நில்லாதே பாழ்படுமுன் தேசமெல்லாம்
(தாகிப் படைப் போர் : கண்ணி : 780)

போர் தொடர்ந்து நடைபெற்றது. பலர் மாண்டனர். படைகள் அழிக்கப்பட்டன. பிணங்கள் குன்றுபோல் குவித்துக் கிடந்தன வாம். யானை வீரர் யானையுடனே மாண்டனராம். குதிரை வீரர் குதிரையுடன் மாண்டனராம். இத்தகைய பல கொடூரக் காட்சிகள் அப்போர்க்களத்தில் காணக்கிடக்கின்றனவாம். அக்காட்சிகளுள் ஒரு சிலவற்றைப் பின்வருமாறு வர்ணிக்கிறார் ஹஸனலிப் புலவர்.

யானையுடன் வீழ்ந்தே தான் மாண்டு போனவரும்
தானை பரியுடனே தான்மாண்டு போனவரும்

வில்லோடு கையும் வீழ்ந்து மடிந்தவரும்
கல்லோடு கையும் கழிந்து மடிந்தவரும்

அம்பு பிடித்தவர்கை யடியற்று வீழ்வாரும்
கொம்பு பிடித்தவர்கள் குப்புறவே வீழ்வாரும்

நம்புகின்ற புத்தைவிட்டு நாடி மடிந்தவரும்
பம்பரம்போ லாடிப் பதைத்து மடிந்தவரும்

தேரோடு தான்புரண்டு செத்துக் கிடப்போரும்
ஊரோடே போகாம லொன்றிரண்டாய் வீழ்ந்தோரும்

கத்தியொடு கையுங் கரிந்து நீறானவரும்
பற்றியிருக்க நரி பாழாக் கிடப்பாரும்

வேல் பிடித்த கையோடு வீழ்ந்து மடிந்தவரும்
கோல் பிடித்த கையோடே குப்புறவே வீழ்ந்தாரும்

வலுப்பறைந்து கோட்டையின்மேல் வந்து நின்ற மானிடர்கள்
இலுப்பைக்காய்போல நிலத்திலெல்லோரும்வீழ்ந்தனரே

(தாகிப் படைப் போர் கண்ணி : 801-808)

போரின் இறுதியில் தாகி தோற்கடிக்கப்பட்டான். படையில் வெட்டுண்டான். தாகியின் தலை உடலிலிருந்து துண்டிக்கப் பட்டது. வடோச்சிக்கு அளவிலா மகிழ்ச்சி உண்டாகியது. வடோச்சி இஸ்லாத்தைத் தழுவியவர். புறுக்கான் என்னும் தீனை உவந்தவர். முகம்மது றசூல் (ஸல்) அவர்களுக்கு அனுப்பப் பட்டது புறுக்கான் வேதம். முகம்மது றசூல் (ஸல்) அவர்களோ மானுக்குப் பிணையாய் நின்ற உத்தமத் திருத்தூதர். இக்கருத் தினையே பின் வரும் கண்ணி குறிப்பிடுகின்றது.

மானைப் பிணைமுட்டு முகம்மது றசூல் புறுக்கான்
தீனை யுவந்த சிறந்த வடோச்சியப்போ

(தாகிப் படைப் போர் : கண்ணி : 845)

தன் எண்ணம் நிறைவேறப்போவதாக உள்ளம் குளிர்ந்தார் வடோச்சி. தாகியின் தலை அலி (றலி) அவர்களின் தலை போல் இருக்கக் கண்டார். தாகியின் துண்டிக்கப்பட்ட தலையைக் கொண்டு இந்திராயனிடம் சென்றார். அலி (றலி) அவர்களின் தலையெனக் காட்டிப் பனிமதியை மணக்கவே விரைந்து சென்றார்.

தாகி கொலையுண்டது தாகியின் மனைவியாகிய இந்திரா யனின் மூத்த புதல்வக்கு எட்டியது. பொறுக்க முடியாத துக்கம்

அவளுக்கு. துக்கத்தை வாய்விட்டுக் கூறினாள். தாகியின் ஆற்றலைக்கூறி உள்ளம் நொந்தாள், பதைபதைத்தாள். இச் செய்தியுடன் தாகிப் படைப்போர் 886-வது கண்ணியுடன் முடிவுற, அடுத்த இந்திராயன் படைப்போர் தொடக்கம் பெறுகிறது.

இந்திராயன் படைப் போர்

இந்திராயன் கொலுமண்டபத்திலே வீற்றிருந்தான். வடோச்சி அலி (றலி) அவர்களின் தலையைக் கொண்டு வந்திருப் பதாக வாயில் காப்போன் இந்திராயனிடம் கூறினான். இந்திராயன் அளவிலா மகிழ்ச்சியடைந்தான். உடனே வடோச்சியை உள்ளே கூட்டிவரும்படிக் கட்டளையிட்டான். வடோச்சியின் தீரச் செயலை அனைவரும் மெச்சினர். இந்திரா யனின் இளைய புதல்வி பனிமதிக்குத் தானேற்பாங்கான மன்னவன் என்று எல்லோரும் வடோச்சியைப் புகழ்ந்தனர். வடோச்சியின் வெற்றியை முன்னிட்டு நகரம் முழுவதும் மகிழ்ந்தது. நகரத்தவரும் கொண்டாடினர். 'வீராதி வீரன் வேந்தன் வடோச்சி நிகர் பாராளும் வீரரில்லை' என இஸ்லாத்தைத் தழுவிய வடோச்கி புகழப்பட்டார்.

வடோச்சியும் இந்திராயன் கொலுமண்டபத்தை அடைந்தார். நாற்பத்தொண்ணாயிரந் தூண்களைக் கொண்டதாக வர்ணிக்கப் படும் இந்திராயனின் கொலுமண்டபத்தில் வீற்றிருந்த மன்னனைச் சுற்றி அமைச்சர், படைத்தலைவர், வேதியர் முதலாயினோர் குழுமியிருந்தனராம். வடோச்சி "அலிதலை பாரும்" எனத் தான் கொண்டு வந்த தலையை இந்திராயன் முன் வைத்தார். வேல் விழியாள் வல்லி பனிமதிக்குப் பரிசு இது என்றுக் கூறினார். இதனைக் கண்ட இந்திராயன் அகமகிழ்ந்தான். தான் எதிர் பார்த்தவாறு எல்லாம் நடைபெற்றன என்று உள்ளம் குளிர்ந்தான். இந்திராயனால் கொண்டு வரப்பட்ட அத்தலையைப் பார்த்து வசைமாரி பொழிந்தான். அவன் பின்வருமாறு வசை பாடினான் என்று புலவர் கூறுகிறார்.

பல்லழகு மீசைப் பருமையிதுங் கண்ணழகும்
நல்லழகுங் கண்டே நகைத்திந்திராயன் சொல்வான்

வெல்லாத போரை யெல்லாம் வென்றனைநீ யாலிதலை
வல்லமைக் கார வடோச்சியால் மாண்டனையே

இபுனியனைக் கொன்றங் கேற்றபழி வாங்கினையே
அவனிதனி லுச்சிதனை அலி நீ கொன்றனையே

இன்னமனே கம் பழியை யேற்றாயே அலியே நீ
மன்னர் மன்னரெல்லா மாளவைத்தாய் மண்டபத்தில்

வல்லபங்க ளெங்கேயிப்போ மாண்டாய் வடோச்சிகையால்
சம்லியங்களை விளைக்குஞ் சாமார்த்தியம் எங்கே

என்மகள் பனிமதிக்கா யிவ்வுலகில் நீ இறந்தே
உன்தலை பரியாம விராள் வடோச்சிதந்தான்

இந்தவிதமாய் வசைகள் இந்திராயன் றானிசைத்து
(இந்திராயன் படைப் போர் : கண்ணி : 919-925)

இவ்வாறு கூறிவிட்டு மறுநாளே தன் புதல்வி பனிமதிக்கும், வடோச்சிக்கும் திருமணம் நிறைவேற வேண்டும் என்று எண்ணினான் இந்திராயன், எண்ணியவாறே கட்டளையிட்டான். யானையை அழைத்து முரசறையைச் செய்தான். முரசு அடிப் போரும் இந்திராயன் கட்டளையை நிறைவேற்றினர். இம் முரசொலி பனிமதிக்கு எட்டியது. பனிமதி காரணத்தை உசாவினாள். பனிமதிக்குத் தாலி கட்டவே இம் முரசொலி எனத் தாதியர் கூறினர். நிகழ்ந்தவை அனைத்தையும் ஒன்றும்விடாது தாதியர் பனிமதிக்குக் கூறினர். அலியின் தலை வடோச்சியால் கொண்டு வரப்பட்டது என்ற கூற்றை ஒப்புக் கொள்ளவில்லை பனிமதி. அவள் பின்வருமாறு கூறினாள்,

சும்மாவிருங்கள் தோன்றலலியார் தலையை
இம்மாநிலத்திலுள்ளோ ரெவரேனும் வெட்டுவரோ

அம்மாடி சும்மா அறைந்தார்கள் பொய்யதனைத்
தெம்மாடிப் புத்தி சிறந்த இந்த இராஜாக்கள்

நிறையா யறிந்திலரோ நீதியுள்ள இராஜாக்கள்
கரை சேருந் தாகிதலை காணுமிதிங் கென்றுசொல்லி

மனமீதுதானே மதித்து மங்கையப்போது
கனமான கன்னியர்க்குங் கன்னி பனிமதிதான்

இன்னமொரு நாளிலிச் செய்கை காண்பீரென
நன்மையாய்த் தானிருந்தாள் நாரி பனிமதிதான்
(இந்திராயன் படைப் போர் : கண்ணி : 937 - 940)

தெருக்கள் அலங்கரிக்கப்பட்டன. வாழை, கமுகு முதலியன நடப்பட்டன. வண்ணமுடன் கோலங்கள் வடித்தெழுதப்பட்டன. பந்தல்கள் இடப்பட்டன. பன்னீராலும் சந்தனத்தாலும் தரை மெழுகப்பட்டது. நிறை கும்பங்கள் பதிக்கப்பட்டன. இவ்வாறு

பற்பல முறைகளில் அலங்காரஞ் செய்து மக்கள் களிப்பெய்தினர். அவர்கள் அடைந்த மகிழ்ச்சியை ஆசிரியர் பின்வருமாறு பாடுகிறார்.

கலியாணமென்றங்கண் களித்தாடிப் பாடிநிற்பார்
அலியானவர் போனார் ஆர்க்கும் பயமில்லை யென்பார்

பாடுவர்கள் பாடிடுவார் பாவையர்க ளாடிடுவார்
நாடு நகரமெல்லாம் நல்லோசை கொண்டிடுவார்
(இந்திராயன் படைப் போர் : கண்ணி : 948 - 949)

இவ்வாறு ஆடிப்பாடி மக்கள் மகிழ்ந்திருக்கையில் வேதக் குறிகாரரைப் பார்த்துப் ''பலன் கூறுமாறு'' இந்திராயன் கட்டளையிட்டான். குறிகாரரோ ''பொல்லாங்கு தீவினை வரும்'' என்று கூறினார்கள். அத்தோடு நில்லாது ''நாளை திருமணம் நிறைவேறாது. சில நாட்கள் செல்லும். வடோச்சியே பனிமதியை மணப்பார்'' என்று கூறி முடித்தனர் குறிகாரர். இஃது இவ்வாறிருக்க, வடோச்சியின் ஒரே ஒரு பிரார்த்தனை; தாகியின் நகரிலிருந்து இப்பொழுது செய்தி வரக்கூடாது என்பதே. தம் எண்ணம் நிறைவேறுமளவும் உண்மையில் நடந்தவை வெளிப்படக்கூடாது என்றே வடோச்சி பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். இவ்வாறு எண்ணிக் கொண்டே மணக்கோலத்துடன் ஊர் சுற்றி வந்தார் வடோச்சி.

இதற்கிடையில் இந்திராயனின் மூத்த புதல்வி, தாகியின் மனைவி எழுதியனுப்பிய ஓலை இந்திராயனுக்கு எட்டியது. தாகி படையில் கொல்லப்பட்டதுவும் தாகியின் தலையையே அலி (றலி) அவர்களின் தலை என்று வடோச்சி கொண்டு வந்ததும் வெளியாயின. இந்திராயனுக்குக் கோபம் பொங்கியெழுந்தது. இவையெல்லாம் வடோச்சியின் சூழ்ச்சி என்று அறிந்தான். வடோச்சியைக் கொல்லும்படிக் கட்டளையிட்டான். படைகளைத் திரட்டினான் போர் புரிய. வடோச்சியின் படைகட்கும் இந்திராயன் படைக்கும் போர்முண்டது. போர் கடுமையாக நடைபெற்றது. வடோச்சியின் நிலைமை மோசமாகிவிட்டது. துணைக்கு அழைக்க அங்கு ஒருவருமிருக்கவில்லை. அலி (றலி) அவர்களை அழைக்கலாமோ என்று எண்ணினான்.

இவ்வாறு எண்ணிக் கொண்டிருக்கையில் மக்கமா நகரில் அலி (றலி) அவர்கள் ஈச்சமரத்தில் ஏறி ஈச்சங்கனி பறித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அலி (றலி) அவர்களுக்கு ஓர் ஒலி கேட்டது.

அவ்வொலி வடோச்சிக்குத் துணைபுரிய வேண்டுமென்று உணர்த்தியது. உடனே விரைந்து சென்றார். வடோச்சியின் பக்கத்தில் போய் நின்றார். வடோச்சிக்கு உண்டான மகிழ்ச்சிக்கோர் அளவில்லை. ஏற்ற சமயத்தில் துணை கிடைத்தது என்று அல்லாஹ்வைப் புகழ்ந்தார் வடோச்சி. 'உடுக்கை யிழந்தவன் கைபோலிடுக்கண் களைய' வந்த முறையைப் பின் வருமாறு கூறுகிறார் இந்நூலாசிரியர்.

வாடும் பயிரதற்கு மழைவந்த வாறதுபோற்
றேடும் பொருள்வலியச் சிக்கினது போற்றினமும்

கண்குருடானவர்கள் கண்பெற்ற வாறதுபோற்
புண்புகுதா ஈங்குரலிற் புண்புகுத்தி வாறதுபோல்

உண்டுடுக்க லொன்றுமில்லா துற்ற வெளியோர்கள்
கண்டெடுத்த நற்புதையல் கைசேர்ந்த வாறதுபோல்

பிள்ளையில்லா மானிடர்க்குப் பிள்ளைவந்த வாறதுபோல்
கொள்ளைவரும் போது கோவலிநீர் இங்கு வந்தீர்

உயிர்போ யிருந்தா ருயிர்பெற்ற வாறதுபோல்
கைர்பெற்றுக் கொள்ளக் கத்தனலி யிங்கு வந்தீர்

(இந்திராயன் படைப் போர் : கண்ணி : 1077 - 1081)

அலி (றலி) அவர்களின் வருகையின் பின்னர் கடுமையாகப் போர் நடைபெற்றது. இந்திராயன் இஸ்லாத்தைத் தழுவினான். அதனால் சுல்தான் முகம்மது தீன் எனப் பெயர் பெற்றாராம். வடோச்சி, பனிமதியைத் திருமணம் புரிந்தார். எல்லாம் இன்பமாய் நிறைவேறின. இப்படைப்போர் 844 கண்ணிகளைக் கொண்டுள்ளது. இதுவே ஐந்து படைப்போருள்ளும் மிகுதியான கண்ணிகளை உடையது.

இவ்வாறு ஐந்து படைப்போரில் ஐந்தாவதாகிய இந்திராயன் படைப்போரில் கூறப்பட்டுள்ளது. இப்படைப்போரில் முஸ்லிம் அல்லாத ஒருவன் இஸ்லாத்தைப் பற்றிக் கேட்கக்கூடிய கேள்வி களை இந்திராயன் மூலமாகவும் அவற்றிற்கு ஒரு முஸ்லிம் அளிக்கக் கூடிய பதில்களை அலி (றலி) அவர்கள் வாயிலாகவும் ஆசிரியர் விவரித்துள்ளார்.

சையதத்துப் படைப்போர்

இஸ்லாமியப் படைப்போர் இலக்கியங்களுள் காலத்தால் மூன்றாவது தோன்றியது சையிதத்துப் படைப்போர் ஆகும். இதனை இயற்றியவர் தேங்காய்ப் பட்டினத்தைச் சார்ந்த குஞ்சு மூசுப் புலவர். படைப் போர் இலக்கிய ஆக்கத்தில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க பெருமையையும் சிறப்பையும் உடையவர் குஞ்சு மூசுப் புலவர். காரணம் இவர் இயற்றியுள்ள சையிதத்துப் படைப் போர், இரவுசுல்கூல் படைப் போர் ஆகிய இரண்டும் பிற படைப் போர் இலக்கியங்களிலிருந்து வேறுபட்ட பல்வேறு தனித்தன்மை களைப் பெற்றுள்ளன. படைப் போர் இலக்கியங்களுள் பெண் களைத் தலைமை மாந்தராகப் பெற்றுச் சிறக்கும் படைப்போர் நூலை இயற்றியுள்ள பெருமை குஞ்சு மூசுப் புலவரைச் சாரும். குஞ்சு மூசுப் புலவரின் முதல் படைப் போர் இலக்கியத்துள் தாம் சார்ந்த ஊரின் இயற்கை எழிலினை இவ்வாறு கூறுகிறார்.

தென்னூறுங் குழந்தை யென்னுந்
திருநகர்ச் சிறியே னிந்நூன்
முன்னமோ ரஜபுமாலை
முதிய தூதுரையின் மாலை
பன்னுதற் குதவும் அல்லா
வருட்பாடி பாடி னேனே
வடதிசை வயலுந் தென்பால்
வாருதி குணபாலோங்கல்
குடதிசை நதியுஞ் சூழ்ந்த
குழந்தையூர்க் கதிபன் காதி
றுடலினின் றுதித்த மூசா
புதவிய மீரான் றோன்றல்
திடனுறு முகம்ம தீன்ற
சிறுவனிக்கவி சொன்னானால்
(சையிதத்துப் படைப் போர் : 32 - 33)

இக்கவியின் மூலம் குஞ்சு மூசுப் புலவரின் ஊர் வளத்தையும் அவ்வூருக்கு குழந்தை நகர் என்ற பிறிதொரு பெயர் இருப்பதையும், புலவரது பரம்பரை பற்றிய விவரத்தையும் அறிய முடிகிறது. குஞ்சு மூசுப் புலவரது இயற்பெயர் மூசிபுனு செய்யிது முகம்மது என்பதே. இச்செய்தியைச் சையிதத்துப் படைப்போரின் அகச் சான்றுகள் மூலம் அறிய முடிகிறது.

ஆசுமது ரங்களனி சித்திர வித்தார
மாசில் பஞ்சலக்ண நல்வாரியை நுகர்ந்த
காசி மருள் காதிறுரை கற்றது கொண்டிந் நூன்
மூசிபுனு செய்யிது முகம்மத னுரைத்தான்
(சையிதத்துப் படைப் போர் : 34)

குஞ்சு மூசுப் புலவர் தம் புலமை சிறக்கத் திருப்புகழ் காசீம் புலவர், அவர் மகனார் அப்துல் காதிர் புலவர் ஆகியோரிடத்து தமிழ் இலக்கணம் கற்ற செய்தியையும் இதன் வாயிலாக அறியலாம். பதினெட்டாம் நூற்றாண்டு முஸ்லீம் புலவர்களுள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க ஆழ்ந்த தமிழ்ப் புலமையையும், தெளிந்த அறபு மொழி அறிவினையும் பெற்றவர் குஞ்சு மூசுப் புலவர். இவரது இரு படைப் போர் இலக்கியங்களும் இவரது புலமைத் திறத்திற்குத் தகுந்த சான்றுகளாக அமைந்துள்ளன.

குஞ்சு மூசுப் புலவரின் முதல் படைப்போர் இலக்கியம் ஹிஜ்ரி 1216ஆம் ஆண்டு ஷவ்வால் மாதம் அரங்கேற்றம் செய்யப்பட்டது. சையிதத்துப் படைப்போரின் அரங்கேற்றம் பற்றிய செய்தியை நூலின் இரு அகச் சான்றுகளின் மூலம் புலவர் தெரியப்படுத்து கிறார். அரங்கேற்றம் செய்யப்பட்ட கொல்லம் ஆண்டு, தமிழ் மாதம், நாள் ஆகிய செய்திகளை ஒரு விருத்தத்திலும், பிறிதொரு விருத்தின் வாயிலாக ஹிஜ்ரி ஆண்டு பற்றிய குறிப்புக்களையும் ஆசிரியர் தருகின்றார்.

இங்குரை கொல்லத் தொள்ளாயிரத் தெழுபதின் மூன்றாண்டிற்
றிங்கள் பைங்குனியின் றேதி சிறந்திருபத்து மூன்றின்
மங்கைசையி தத்தின்போரை வண்டமிழ்ப் புலவ ரென்னுங்
கங்கைமுன் குசக் குண்டென்னக் கழறினன் கவிதை தானே
ஈயுமே தணுகாமுகம்மதெழுந்து செலஹிஜ்ரு சுறத்ததா
மாயிரத்திரு நூறுடன்பதி னாறிலங்கியை யாண்டினிற்
றூயதிங்கள் சவ்வால் பிறந்து துளங்கிடுஞ்சது நாளிலே
பாயிரந்தரு தமிழுரைப்படி பரிவுடன்கவி பாடினான்
(சையிதத்துப் படைப் போர் : 29 - 30)

இவ்வகச் சான்றுகள் அடிப்படையில் சையிதத்துப் படைப் போர் கி.பி. 1801ஆம் ஆண்டுத் தமிழ்ப் பங்குனி மாதம் இருபத்தி மூன்றாம் தேதி அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ள செய்தியை அறிய முடிகிறது. இவ்வரங்கேற்ற ஆண்டு மேலே குறிப்பிட்டுள்ள அகச் சான்று வருடங்களுள் ஹிஜ்ரி ஆண்டிற்கு இணையானதாகும். ஆனால் கொல்லமாண்டாகக் குறிப்பிட்டுள்ள 973ஆம் வருடத்தைக்

கணக்கில் கொள்வோமாகில் சையிதத்துப் படைப்போரின் அரங்கேற்றம் (973+824) கி. பி. 1797ஆம் வருடமாக இருக்க வேண்டும். எனினும் குஞ்சு மூசுப் புலவரின் பிறிதொரு படைப் போர் இலக்கியமான இரவுசுல்கூல் படைப்போரின் அரங்கேற்ற வருடத்தைக் கணக்கில் கொண்டு ஹிஜ்ரி ஆண்டுக் குறிப்பையே சரியானதாகக் கொள்ளலாம்.

பெருமானார் நபிகள் நாயகம் சல் அவர்களது வாழ்வுடன் தொடர்புடைய ஒரு போர்ச் செய்தியை அடிப்படையாகக் கொண்டதே சையிதத்துப் படைப்போர். இஸ்லாத்தில் அண்ணல் நபி (சல்) அவர்களுக்குப் பின் இஸ்லாமிய ஆட்சியை மேற்கொண்டு' ஆட்சி நடத்திய முதல் கலீபாவான ஹஸரத் ஆபுபக்கர் சித்தீக் (றலி) அவர்களது மகன் அப்துல்ரஹ்மானால் துன்பமுற்ற யமன் நாட்டு மன்னருக்கும் அவரது மகனிற்கும் அண்ணலெம் பெருமானார் நபி (சல்) அவர்களது கட்டளையின்படி உதவி அவரை முஸ்லீம்கள் மீட்ட செய்தியையும், மனம் மாறிய அப்துல் ரஹ்மானும் அவர் மனைவி சையிதத்தும் இஸ்லாத்தைத் தழுவிப் பின் அவர்களை எதிர்த்த அபாசுபியான் படைகளுடன் போராடி வெற்றி கொண்ட வரலாற்றையும் உரைப்பதே சையிதத்துப் படைப் போர். இத்தமிழ்ப் படைப் போர் இலக்கியத்திற்குரிய வரலாற்றுச் சிறப்பு மிக்க இப்போர் நிகழ்வினை விரிவாக அறபு இலக்கியத்தில் ஹஜனுல் பசாரி என்போர் எடுத்துரைத்துள்ளார். எனவே சையிதத்துப் படைப் போரின் மூலநூல் அறபு மொழியில் இடம்பெற்றுள்ள ஹஜனுல் பசாரியின் இலக்கியமே. இம்மூல நூல் பற்றிய செய்தியையும் குஞ்சு மூசுப் புலவர் தம் சையிதத்துப் படைப் போரில் தெரிவித்துள்ளார்.

இருகாதிரு விழிநாசியு மிருகாலிரு கரமு
மொருநாபொரு தவலவாய்முக மொருதேகமொ ருளமும்
பெருவாதவை யவமானிதம் வினைபாவ மகற்றி
யருள்வாய்மறை முதனூலினு மடங்காவகத் திறையே

அனமேதர வொருமாமுகில வசனுல் பசரிய்யி
னெனவோதிய திருநாமம தியல்பாகிய முதியோர்
சொலகாவிய முறைபாடுதல் சுரரோர் புகழிறசூல்
தனதான நம் மரபோர்வெகு தயவாகவே கேண்மோ

(சையிதத்துப் படைப் போர் : 37 - 38)

ஹசனுல்பசாரியின் அறபு போர் இலக்கியத்திற்குத் திருப்புகழ் காசீம் புலவரின் மகனார் அப்துல் காதிறு தமிழில் உரை நல்க

அதனையே இனியதோர் படைப் போர் இலக்கியமாக நமக்குப் படைத்தளித்துள்ளார் குஞ்சு மூசுப் புலவர்.

மாதிர முத்திச் சோலை வசைமார் மடுவு மேவிக்
கோதற வளங்குன் றாத குழந்தையம் பதியில் வாழ்வோன்
வேத நன் முறைகடேர்ந்த விறலுறுங் காகி றப்துல்
காதிறிந் நூலை யாய்ந்தே கவினுற வுரைதந் தாரால்

அருந்தமிழ் அஜபுமர்லை யரியதூ துரையின் மாலை
திருந்திய அறபை யோர்ந்தே தெரிவுறுந் தமிழதாகப்
பொருந்தவே பகருங் காலி புகழப்துல் காதி றென்போர்
தருந்திருவுரையின் வண்ணஞ் சாற்றினேன் கவிதை தானே

(சையிதத்துப் படைப் போர் : 24 - 25)

இப்பாடற் செய்திகளின் வழி குஞ்சு மூசுப் புலவர் இயற்றிய பிற இஸ்லாமியத் தமிழிலக்கியங்கள் பற்றிய குறிப்பினையும் பெறலாம்.

எனவே சையிதத்துப் படைப் போர் இலக்கியம் தமிழிலக்கிய உலகில் உதயமாவதற்கு முன்னோடியாகவும்; காரணமாகவும் இருந்தவைகள் அறபு இலக்கியமும் இஸ்லாமிய மார்க்க வரலாற்றுப் போர் நிகழ்வுமே எனலாம். அறபு இலக்கியத்தின் போர்ச் செய்திகளைக் குஞ்சுமூசுப் புலவர் தம் இலக்கியப் படைப் பிற்குரிய மூலாதாரமாகக் கொண்டு அதனை இனியதொரு தமிழிலக்கியப்பா வடிவமாக உருவாக்கினார். இப்படைப்போர் இலக்கியத்தில் பெருமானார் நபிகள் நாயகம், அலி (றலி) அவர்கள் முதல் கலிபா அபூபக்கர் சித்தீக் (றலி) அவர்கள் இன்னும் பலர் பாத்திரங்களாக இடம்பெற்றிருப்பினும் இதன் தலைமை கதா பாத்திரமாகத் திகழ்வது சையிதத்து என்னும் வீர மங்கை நல்லாளே. இந்நூலுள் சையிதத்து தம் பகைவனான அபாசுபியா னுடன் எதிர்த்துப் போரிடும் போரே முக்கிய அங்கமாகத் திகழ்கிறது.

காண்டம், படலம், உட்தலைப்புக்கள் போன்ற பாகுபாடுகள் இல்லாத சையிதத்துப் படைப் போர் காப்பு வெண்பாவுடன் 520 பல்சந்த தொங்கல் விருத்தங்களைப் பெற்றுள்ளது. ஏகத்துவ இறையை வணங்கும் காப்பு வெண்பாவுடன் தொடங்கிப் பெருமானார் நபி (சல்) அவர்கள், அவர் வழி நல்லாட்சி ஏற்ற அடுத்தடுத்த கலிபாக்கள், அசுகாபிமார்கள், இறைநேயச் செல்வர் கள் முதலானவர்கள் நூலின் தொடக்கத்தில் வாழ்த்தப்படுகிறார்

கள். பெருமானார் நபி (சல்) அவர்கள் பற்றிக் குறிப்பிடும்போது இஸ்லாத்தின் அடிப்படைக் கருத்துக்கள், கடமைகள் அனைத்தையும் ஒரே செய்யுளில் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

அசுக தென்ற கலிமா மொழிந்து பிகு
லகும தாகிய சலாத்தையும்
வசைய கன்றுள சக்காத்து நோன்பினிய
வரிசை கச்சிமரு வாருட
னிசைய நின்றுபொறு பீச பீல்லிவைக
ளின்மை யின்புரியும் நன்மையோர்
நிசியெ னுங்குழ லரம் பை மின்களுறு
நிதிந கர்க்கு மணவாளரே
(சையிதத்துப் படைப் போர் : 9)

இஸ்லாத்தின் அடிப்படை ஐந்து கடமைகளான ஏகத்துவ இறைக் கொள்கை, ஐந்து நேர வழிபாடு (சலாத்), சக்காத்து, ரம்லான் மாத நோன்பு, ஹஜ் கடமை ஆகியவற்றுடன் ஆசிரியர் 'மருவாருடன் இசைய நின்று பொறு பீசபீல்' என்று குறிப்பிடுவது இஸ்லாமிய மார்க்கத்திலிருந்து மாறுபட்டவர்களுடன் மேற்கொள்ளும் அல்லாவின் பாதையிலான மார்க்கப் போரினையே குறிக்கும். தமது இலக்கியத்தின் பாடுபொருளுக்கேற்ப ஆசிரியர் இங்குப் பெருமானார் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது ஐம்பெரும் கடமைகளுடன் அவர்கள் மேற்கொண்ட மார்க்கப் போர் பற்றிய செய்தியையும் குறித்துள்ளார். இவ்வாறு மார்க்கத்தில் சிறப்புப் பெற்ற பெரியோர்களின் வாழ்த்துப்பா முடிவடைந்தபின் இருபத்தி நான்காம் செய்யுள் முதல் முப்பத்தி எட்டாம் செய்யுள் வரையில் சையிதத்துப் படைப் போர் இலக்கியத்தின் தோற்றம், காலம் முதலான விபரங்களை ஆசிரியர் தந்துள்ளார். முப்பத்தி ஒன்பதாம் செய்யுள் முதற்கொண்டே படைப் போர் இலக்கியம் தொடக்கம் பெறுகிறது. நபி (சல்) அவர்கள் மதீனா நகரில் தீனெறி வளர்வித்திருக்கும் நாளில் எனக் கதைத் தொடக்கம் பெற்று நபி பெருமானார் (சல்) அவர்களையே படைத் தளபதியாகக் கொண்டு சையிதத்துப் போரிடும் படைச் செய்திகளை விவரித்து, இறுதியில் போரில் வெற்றி கிட்டியவுடன் நபி (சல்) அவர்கள் மதீனா நகரம் திரும்புதலுடன் சையிதத்துப் படைப் போர் நிறைவு பெறுகிறது.

சையிதத்துப் படைப் போரின் கதைத் தொடக்கத்தில் அமைந்துள்ள செய்யுளில் பெருமானார் நபி (சல்) அவர்கள் மதீனமா

நகரில் தீனெறியை வளர்த்திருக்கும் காட்சியைப் புலவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதுனான் கினையெனும் வாருதி மணியா மபுதுல்லா
சுதனா கியநபி நாயகஞ் சுருதிப் படிஇல்மு
பதினா லினுமே லாய்ந்தவர் பயகாம்பர் நம்மிறசூல்
மதினா நகர்மிசை தீனெறி வளர்வித் திடுநாளில்

(சையிதத்துப் படைப் போர் :39)

இவ்வாறு தம் அசுகாபிகள் அனைவரும் உடனிருக்க ஓர் அறபி அண்ணலாரைக் காண வருகின்றார். அவரது கண்களிலிருந்து நீர் வடிகிறது. உடல் பதறுகிறது. வேர்த்து உடலெங்கும் வடிகிறது. அவர் வந்தடைந்த தோற்றமோ கானகத்தில் மேய்ந்து கொண்டிருந்த அழகிய மானைக் கவ்விச் சென்ற கொடிய புலியின் வாயிலிருந்து தப்பி ஓடிவந்த மானை ஒத்திருந்தது. இத்தகு நிலையில் அறபி அங்கு வந்தடைந்தது அண்ணலாரின் அடைக்கலம் நாடியே!

இருகோ விடை வடிநீர்முகம் வெழிறாமரை நனையப்
பெரிதாயுட லயர்வும்பொடி வெயர்வும்பிறழ் மனமும்
அரிவேங்கையின் வாய்ப்பட்டகல் மானென்னை வொரறபி
யரியோனரு ளிறசூல்நபி யவைநாடி யடைந்தான்

(சையிதத்துப் படைப்போர் : 41)

நபிகள் (சல்) திலகத்திடம் அடைக்கலம் நாடி வந்தவரே யமன் நாட்டு மன்னரான அசுமத் இப்னு கிதாப். இவர் இஸ்லாத்தில் ஈமான் கொண்டு பெருமானார் அவர்களின் தரிசனத்திற்காகத் தமது சுற்றத்தாருடன் வரும் வழியில் இஸ்லாத்தின் வழிச் செல்லாத அப்துல் ரஹ்மான் என்பவரின் ஆட்கள் வழிமறித்து இப்னு கிதாப் அவர்களின் பொருட்களையும், உடைமைகளையும் கவர்ந்ததுடன் அவரையும் அவரது மகனையும் சிறைப் பிடித்தனர். இந்நிலையில் தம்மையும் தம் மகனையும் விடுவிக்கக் கோரினார் அசுமத் இப்னு கிதாப். இவ் வேண்டுகோளுக்குச் செவி சாய்க்காத அப்துர் ரஹ்மான், அசுமத்தை மட்டும் விடுத்து அவர் மகனை மேலும் பொருள்கள் தந்தால் விடுவிப்பதாகக் கூறினான். இந்நிலையிலேயே புலியின் வாய்ப்பட்டுத் தப்பித்த மானாகப் பெருமானாரிடம் அடைக்கலமாக அசுமத் வந்தடைந்தார். அசுமத் துன்பத்தைச் செவிமடுத்துக் கேட்ட பெருமானார் (சல்) பெருந் துன்பமுற்றார்.

இன்னன மசுமத் தோத வெழினபி பிறகுலுல்லா
தன்னுளம் பெருக வாடிச் சலித்தன ரவையிலுற்ற
மின்னென வனியேந்தி விறல் மன நிறைந்த தீனின்
மன்னவ ரெவரு மேங்கி வாய்விடுத் தழுவதானார்

(சையிதத்துப் படைப் போர் : 69)

அத்துடன் அப்துர் ரஹ்மானின் இஸ்லாத்திற்கு முரண்பட்ட செயல் அறிந்து பெரு சினமும், விழி சிவந்தும் காணப்பட்டார் நபி (சல்) அவர்கள். நபிகள் திலகத்தின் கடுங்கோபத்தை உணர்ந்த அபூபக்கர் சித்தீக் (றலி) தம் மகன் அப்துர் ரஹ்மானின் கொடுஞ் செயல் அறிந்து சொல்லொண்ணாத் துயரத்திற்குள்ளானார்.

வள்ளனம் மிறகுலுல்லா மனம்வெகுண் டுரைத்த மாற்றந்
தெள்ளிய கருத்துள் மேவத் திறலபூ பக்கர் கேட்டுக்
கள்ளவிழ் விசனக் கண்ணீர் கவின் மழை சொரிதலாகி
விள்ளருந் துயர வாரி மீதடைந் தழுவ தானார்

(சையிதத்துப் படைப் போர் : 80)

அபூபக்கர் சித்தீக் (றலி) அவர்கள் பெரும் துன்பம் அடைந்ததுடன் இஸ்லாமிய மார்க்கத்திற்கு எதிராகச் செயல்பட்டு வரும் அவர்தம் மகன் அப்துர் ரஹ்மானை நேர் வழிப்படுத்தி, தீனின் உத்தம குணங்களை எடுத்துரைத்து இஸ்லாம் வழி நெறிப்படுத்தவும் எண்ணினார். அவர்தம் எண்ணத்தை நிறைவு செய்து கொள் வதற்காகப் பெருமானார் நபி (சல்) அவர்களிடத்து அனுமதியும் வேண்டினார். இக் காட்சியைக் குஞ்சு மூசுப் புலவர் அபூபக்கர் சித்தீக் (றலி) அவர்களின் வாய்மொழி வாயிலாகவே உணர்த்து கிறார்.

முத்திரை நபியே யானு முகிறவழ் சயில மேனிப்
புத்தினை வணங்கி யேத்து புதல்வனை நமது தீனி
லுத்தம குணத்தி னாலே யுவப்பொடு மழைப்ப தற்கே
கத்தனைக் குறித்தென் பாலிற் கவின்விடை தருக வேண்டும்

(சையிதத்துப் படைப் போர் :85)

அப்துர் ரஹ்மான் அருமறை நெறியை உணர்ந்து தீனின் வழி நடக்க இணங்கினால் அவரைப் பெருமானார் நபி (சல்) அவர் களிடத்து அழைத்து வருவதாகக் கூறினார் அபூபக்கர் சித்தீக் (றலி). அவ்வாறு நடக்க இணங்காமல், இஸ்லாத்தின் மார்க்கத்தை மறுத்திடுவானாகில் அவனுடன் போரிட்டு வெற்றியைப் பீசபீல் மார்க்க அடிப்படையில் நிலைநிறுத்துவதாகவும் குறிப்பிடுகிறார்.

சையிதத்துப் படைப் போரில் இஸ்லாம் வழி வகுத்துக் காட்டும் மார்க்கப் போரின் ஆரம்ப கட்டத்தை விவரிக்கும்போது புலவர்,

அங்கவ னிடத்தி லேகி யருமறை நெறியுந் தீனின்
பொங்கறி வெவையுங் கூறிப் பொருந்தயா னழைத்த போதிற்
சங்கையா யெனது கூடச் சார்ந்தன னாகி லன்பா
யெங்கணன் னபியே நும்பா லியல்புட னெய்து வாமே

அல்லது நமது மார்க்கமவன் மறுத்திருப்பனாகி
லெல்லையி லுயிர் போய் நெய்த தொகுத்தி போ லெழுந்து பாயக்
கல்லினை வணங்கி யோத்துங் கரத் தொடுஞ் சிரத்தை யென்கை
வில்லுமிழ் வடிவாளோங்கி வீசியங் கடைவ னையா
(சையிதத்துப் படைப் போர் : 86, 87)

எனச் சூழுரைத்துப் போருக்கு அபூபக்கர் சித்தீக் (றலி) புறப்படுவதாகக் காட்டுகிறார். அப்போது வழியில் முர் ரத்து என்பவரைச் சந்தித்து அவரைத் தீனின் வழி நெறிப்படுத்திப் பெருமானாரிடம் அழைத்து வந்தார்கள். அதன்பின் அபூபக்கர் சித்தீக் (றலி) தம் மகன் அப்துர் ரஹ்மானின் நிலையைக் கூறி அவனை இஸ்லாத்தின் பக்கம் கொண்டுவர விரும்புவதையும் முர் ரத்திடம் தெரிவிக்க அதற்கு முர் ரத்து போர்க் கோலம் முதலில் வேண்டாம் எனவும் கடிதத்தின் மூலம் அவரது விருப்பத்தை எழுதிக் கொடுத்தால் தாமே தூதாகச் சென்று வருவதாகவும் கூறினார். இதற்கேற்ப அபூபக்கர் சித்தீக் (றலி) அவர்கள்,

பாதக முறுங்குபி ரெனும் பகையகற்றி
வேதரிறசூல் நபிதன் மெல்லடி யிறைஞ்சப்
போதமுடனே வருதல் புத்தியென வெண்ணிக்
காதலொடு வம்மென வரைந்தனர் கரத்தால்
(சையிதத்துப் படைப் போர் : 136)

என அக்கடிதத்தின் செய்திகளை ஐந்து செய்யுட்களில் ஆசிரியர் விவரித்துள்ளார். மைந்தனின் மனமாற்றத்தை விரும்பும் தாய் உம்மு ருமான் அவர்களும் விரிவான கடிதம் ஒன்றினை எழுதி முர் ரத்துவைத் தூதாக அனுப்பி வைத்தார். உம்மு ருமானின் கடிதச் செய்தியானது, இதுவரையில் சையிதத்துப் படைப் போர் இலக்கியத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சிகளான அசுமத் கூறியது— அதனைக் கேட்டுப் பெருமானார் (சல்) அவர்கள் அப்துர் ரஹ்மான் மீது வெகுண்டது முதலான அனைத்தையும் சுருக்கிப் பதிமூன்று பாக்களில் உரைப்பதாக உள்ளது.

பெற்றோரின் மடல் எடுத்து—தூதாகச் செல்லும் முர் ரத்து பல்வேறு நிலங்களைக் கடந்து அப்துர் ரஹ்மானின் இருப்பிடத்தை அடைந்தார். அபாசுபியானின் மகளாகிய சையிதத்தை மணம் புரிந்து மருமகனாகிய அப்துர் ரஹ்மானுக்கு அந்நிலையில் அபாசுபியான் அசுமத்தின் மகனைக் கொன்று விடும்படிக் கட்டளையிட்டிருந்தான். இத் தருணத்தில் அவ்விடம் சென்றடைந்தார் தூதுவர் முர் ரத்து. அபாசுபியானின் கட்டளையை நிறைவேற்றக் கருதி அப்துர் ரஹ்மான், 'அசுமத்தின் மைந்தனது தலையறிந்திடுமின்' என ஏவலர்க்கு கட்டளையிட்டான். இந்நிலையில் அது பெரும் பாவம் என்பதை எடுத்துக் கூறும் முர் ரத்து, அப்துர் ரஹ்மானின் தந்தை அபூபக்கர் சித்தீக் (றலி) அவர்களது விருப்பத்திற்கேற்ப அவனை விடுவிக்க வேண்டும் எனக் கூறினார்.

மழை முகிலனைய செங்கை வடிவப்துர் றகுமா னந்த
தளைபடு சிறுவன் றன்னைத் தலையறிந் திடுமி னென்ன
மொழிதலுஞ் சிலர்கொண் டேக முறைமுறை புகழ்ந்து வாழ்த்தி
யழுதிரு விழிநீர் மார்பி லருவிபோற் பாய்ந்த தன்றே

அப்படி யழுதுவாடி யரசனே யும்மை யீன்ற
மெய்ப்புக ழுடைய வேத விறல பூபக்கரானை
யிப்பொழு தெளிய னாவிக் கிரங்கியே யுரிமை யாகச்
செப்பியங் கழைத்துக் காவல் செய்திட வேண்டு மென்றார்
(சையிதத்துப் படைப் போர் : 205, 206)

முர் ரத்தின் வேண்டுகோளுக்கிணங்க தந்தையின் பொருட்டு அசுமத்தின் மைந்தனை அப்துர் ரஹ்மான் விடுவித்த செய்தியை அறிந்த அபாசுபியான் கடுங்கோபமுற்று அவனை விடுவித்தற்கான காரணத்தை வினவி அறிந்தபின் இவ்வாறு உரைக்கலுற்றான்.

இவையுரை வழங்க வேந்தனிருவிழி யனலைக் காட்டி
நவையுறு மாவு தன்னை நயந்தவுன் றாதை சென்னி
புவிபடத் தறிப்ப னன்னோன் புன்னெறி விடுநீ யென்னச்
சுவையறு மொழிகள் யாவுந் துணிவுட னுரைத்தா னன்றே
(சையிதத்துப் படைப் போர் 212)

அபூபக்கர் சித்தீக் (றலி) அவர்கள் போரிட்டு வெல்வேன் என அபாசுபியான் கூறியதைக் கேட்ட அப்துர் ரஹ்மான் தம் தந்தையின் வீரம், புகழ் ஆற்றல் அனைத்தையும் எடுத்துக்கூறி உங்களில் முப்பது பேர் சென்று அவரைக் கொல்ல நினைத்தாலும் அன்னாரின் சிறு முடியைக் கூடி முறிப்பதரிது எனக் கூறினார்.

அப்பொழு தவனை நோக்கி யடலரி கடுப்பச் சீறி
மெய்ப்புக ழுடைய தாதை விறல்வலிப் பெருமை வீரஞ்
செப்பியங் கவர்தே கத்தின் சிறுமுடியொன்று நின்போன்
முப்பது பெயர் சென்றாலு முறிப்பதற் கரிதென் றாரால்
(சையிதத்துப்படைப் போர் : 213)

இம் மொழி கேட்டவுடன் செய்வதறியாது அவ்விடம் விட்டு நீங்கினான் அபாசுபியான். இந்நிலையிலேயே இஸ்லாத்திலிருந்து இதுவரை முரண்பட்ட வாழ்வு மேற்கொண்டிருந்த அப்துர் ரஹ்மானின் மனத்துள் மன மாற்றம் ஒன்றன்பின் ஒன்றாக இடம் பெறத் தொடங்கியது. சையிதத்துப் படைப்போர் இலக்கியத்தின் திருப்பு மையமாகவும் இதனைக் கூறலாம். அப்துர் ரஹ்மானின் மனமாற்றத்தை நாடி வந்திருக்கும் தூதுவர் முர் ரத்து இத் தருணத்திலேயே அப்துர் ரஹ்மானின் பெற்றோர் நிலையை அவலச் சுவையுடன் எடுத்துரைக்கிறார்.

தந்தை தாய் உமைத்தானாடிச் சஞ்சலக் கடலின் மூழ்கி
யெந்த நாட் காண்போ மென்ன வெழில் வெறும் பெறும் விழிநீர் சிந்தி
மைந்தனே யெனவுங் கூவி வாய்விடுத் தழவே வேலை
விந்தைசே ரினத்தோர் கூடி விலக்கவே வேலை யையா
(சையிதத்துப் படைப் போர் : 216)

தமக்காகத் தம் பெற்றோர் அடையும் இன்னலைக் கேட்ட அப்துர் ரஹிமான் அவர்கள் அடைந்த துன்பமோ அளவில்லாதது எனப் புலவர் எடுத்துக் காட்டுகிறார்.

சிரசினை நிலத்திற் றாக்கிச் செழுமணி மகுடந் தூளயேக்
கரைவது நிலையில் லாமற் கண்சிவந்துடலம் வேர்த்து
மரைமலர் வதனம் வாடி வழங்குமைம் பொறியொ டுங்கித்
தரைமிசைச் சுழன்று வீழ்ந்து தன்னையே மறப்ப தானார்
(சையிதத்துப் படைப் போர் : 218)

இந்நிலையில் முர ரத்து தாம் அங்கு வந்த காரணத்தையும், அவர் கொண்டு வந்த முடங்கலையும் அப்துர் ரஹ்மானிடம் சேர்ப் பித்தார். அதனைக் கண்ட அப்துர் ரஹ்மானோ,

சுந்தர முடங்கல் மீது துலங்குமுத் திரையை நோக்கி
முந்திய வமலை தன்னின் மும்மடங் கழுது வீழ்ந்தார்
(சையிதத்துப் படைப் போர் : 221)

இவ்வாறு பல தடவை அழுது வீழ்ந்த நிலை கண்ட அவரது துணைவியார் சையிதத்து என்ன காரணம் என வினவலுற்றார்.

அடிக்கடி யெழுந்து வீழ்ந்தே யழுகுர லமளி கேட்டுத்
தடக்கடத் தந்தி வீரந் தவிரப்துர் றகுமான் பாரி
திடக்கடு வனைய கண்ணாள் செய்யிதத் தெனுநா மத்தின்
மடக்கொடி விரைவி னோடு வந்தெவை விளைந்த தென்றாள்
(சையிதத்துப் படைப் போர் : 222)

சையிதத்துப் படைப் போரின் தலைமை மாந்தராகத் திகழும் சையிதத்தை இவ்விலக்கியத்தில் இப்பாடல் மூலமே அறிமுகம் செய்வித்துள்ளார், குஞ்சு மூசுப் புலவர். மனைவியின் வினாவிற்குப் பதிலளித்த அப்துர் ரஹ்மான் தம் மனம் முற்றிலும் மாறி, அபாசுபியானின் பொருட்டால் தம் மனம் மாறான பாதையில் சென்றதை நினைத்து உள்ளம் வருந்த தம் பாரியாள் சையிதத்துடன் சேர்ந்து முர் ரத்து முன்னிலையில் இஸ்லாத்தைத் தழுவினார்.

ஆகையால் வரிசை மேவு மரியப் துர் ரகுமா னந்த
வாகுசே ரிசுலான் மைந்தன் மலர்க்கரம் பிடித்து வாழ்த்த
யேகனே யுண்மை யென்று மெழினபி யிரசூ லென்று
மோகமாங் கலிமா முற்று மொழிந்தனர் முக்கா லன்றே
(சையிதத்துப் படைப் போர். 226)

இச்செய்தி அபாசுபியானின் செவிக்கு எட்டியது. அபாசுபியான் மீண்டும் வந்து அசுமத்தின் மகளைத் தளையில் பூட்டிக் கொல்லு மாறு கட்டளை இட அதனை வெகு சினம் கொண்டு களைந்தெறி கிறார் அப்துர் ரஹ்மான். இந்நிலையில் மேலும் அங்கிருக்க மனம் பொறாமல் தமது மனைவி சையிதத்துடன் மதீன மாநகரம் நோக்கிச் சென்று, பெருமானார் நபி (சல்) அவர்களைத் தரிசிக்க விரும்புகின்றார். இவ்விருப்பத்தை மனையாளிடம் இவ்வாறு கூறுகின்றார்.

எங்கள் நன்னயினார் முகம்மது நபியை
இருதயத்து இருத்தி என் தகப்பன்
தங்கிய மதினவள நகர் அதனில்
சார்வதற்கு இன்றுயான் பயணம்
உங்கள்தன் இனத்தோடு உனையருள் தாதை
உறுமனை சேர்ந்திரும் எனவே
திங்கள் என்று இலங்கு முகமலர் தனக்கோர்
தீயெனச் சுடும் சொல் சொற்றனரால்
(சையிதத்துப் படைப் போர் : 242)

ப—5

கணவர் அப்துர் ரஹ்மானின் இவ்வுரையைக் கேட்ட மனைவி சையிதத்தோ பெருமானாரின் பெருமைதனை மனத்தில் கொண்டு கலிமா மொழிந்து பயணத்திற்குத் தயாரானார்.

அன்னவை உரைப்ப அரிவை சொய்யிதத்தும்
ஐயனை இழந்தனன் தலைவன்
உள்ளியபடி அப்பெரும்புதி புகுத
உமக்கு முன் பயணம் என்றுரைத்தே
மின்னிய வடிவாள் வளபெறும் கணவன்
விளங்குமென் கரத்திலனைத் தீண்டி
நன்னயம் பொருந்து நபிதிருக் கலிமா
நாவினால் நயம்பட நவின்றாள்

(சையிதத்துப் படைப் போர் : 243)

இவ்வாறு அப்துர் ரஹ்மான், தமது மனைவி, அசுமத்தின் மைந்தன் மூர் ரத்துடன் மதீன மாநகரம் புறப்படும் செய்தியை அறிந்த அபாசுபியான் அவர்களைப் போகவிடாமல் தடுத்தான். இதன் நிமித்தமாக அபாசுபியான் படைகளுக்கும் அப்துர் ரஹ்மான் கூட்டத்தாருக்கும் ஒரு போரே மூண்டு விடுகிறது. இப்போரினைத் தலைமையேற்று நடத்தியது அப்துர் ரஹ்மானின் துணைவியார் சையிதத்தே. இப்போரில் குறிப்பிடத்தக்க அம்சம் இறைக் கொள்கை முரண்பாடு காரணமாகச் சையிதத்து அவரது தந்தை யுடனேயே போரிடுவதாகும். அப்துர் ரஹ்மானும், சையிதத்தும் பகைவர்களிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்வதற்காக மேற் கொள்ளப்பட்ட தற்காப்புப் போரே இது. இப்போர் நிகழ்வு களைக் குஞ்சு மூசுப் புலவர் மிக விரிவாக எஞ்சியுள்ள இலக்கியப் பகுதியில் காட்டுகிறார்.

இஸ்லாமியப் படைப்போர் இலக்கியங்களுள் போர் நிகழ்ச்சி களைத் தலைமையேற்று நடத்தும் பாத்திரங்களாக வருபவர்கள் அநேகம் ஆண்பாற் பாத்திரங்களே. குஞ்சு மூசுப் புலவரது படைப் போர் இலக்கியங்களான சையிதத்துப் படைப்போர், இறவுசுல்கூல் படைப்போர் ஆகிய இரண்டு இலக்கியங்களில் மட்டுமே பெண்கள் போரினைத் தலைமையேற்று நடத்தும் பாத்திரங்களாக இடம் பெற்றுள்ளனர். இவ்வியல்பு குஞ்சு மூசுப் புலவரது படைப்போர் இலக்கியத்தின் தனித்தன்மை எனலாம். இஸ்லாமியப் படைப் போர் இலக்கியங்கள் மட்டுமல்லாது, தமிழிலக்கியத்தின் போர்ப் பாடல் இலக்கியங்களில் பெண்ணைத் தலைமை மாந்தராகக் கொண்ட இலக்கியங்கள் இடம்பெறவில்லை என்பது இங்குச்

சுட்டிக்காட்டத்தக்கது. எனவே பெண்ணிற்கு முக்கியத்துவம் அளித்துப் போர் இலக்கியத்தில் தலைமை மாந்தராக உலவ விட்டிருக்கும் பெருமை குஞ்சு மூசுப் புலவரைச் சாரும்.

அபாசுபியானின் பெரும் படைகள் சையிதத்தினைச் சூழ்ந்து கொள்கின்றன. இக்காட்சியைக் குஞ்சு மூசுப் புலவர் உவமை நயத்துடன் எடுத்துரைக்கிறார்.

அரியை வெல்லுதற் கோரிக ளடர்ந்தது போலும்
வரியி னைத்தகர் வெருட்டிட வளைந்தது போலும்
பெரிய பாந்தளைத் தேரைகள் பிடிப்பது போலும்
பருதிபோன்ற சையிதத்தினைப் பற்றலர் வளைந்தார்

எரியை மாய்த்திடப் பஞ்செதிர்ந் தீண்டிய போலும்
கருட னார் தமைச் சுகத்திரள் கடிந்தன போலும்
பருதியோடு தன் முடவனே பழிப்பது போலும்
வரிவி ழித்திரு மயிலுடன் மன்னர்கள் பொருதார்

(சையிதத்துப் படைப் போர் : 379, 380)

இங்குப் புலவர் போர்க்களத்தில் தலைமை மாந்தரை எதிரிப் படைகள் சூழ்ந்த காட்சியை விவரிக்கும் திறத்தில் தலைமை மாந்தரின் போர்த் திறன் திறம்பட வெளிப்படுகிறது. இத்தகு முறையில் சூழ்ந்த பகைவர்களை முறியடிக்கச் சையிதத்தின் கைகளிலிருந்து அம்புகள் எங்களைத் தடுக்க எவரால் முடியும் எனக் கூறி புறப்பட்டுச் சென்று சூழ்ந்த பகைவர்களை எமனிடம் ஒப்படைத்துச் சென்றனவாம். அத்துடன் மட்டுமல்லாமல் விடுத்த கணைகள் பகைவர்களின் உடலெங்கும் தேடி அனைத்திடத்திலும் முக விழியிலும் கூட உட்புகுந்து சென்றனவாம்.

மின்னினுண்ணிடை சையிதத்து
அணி விறல் விடுத்த
கொன்னுனைக் கணைக் கூற்றினைத்
துணை யெனக் கூட்டி
யொன்னலார் வயிற்றிலும்
முரத்தினும் புயத்துஞ்
சென்னி நன்முக விழியையுந்
தேடியுட் புகுந்தே

எடுத்த வில்லுடன் இடக்கையும்
இலங்கு செம்பு ருக்கின்
தொடுத்த சட்டையும் உரத்தையும்
துளைத்தது அகத்துயிரை

அடுத்து வெளவியப் புறம் புகுந்து
எமன் கரத்தளித்தே
தடுத்தது ஆரெனத் தாவின
தையல் கைச் சரங்கள்

(சையிதத்துப் படைப் போர் : 373, 375)

இத்தகு கொடும்போரினை, சையிதத்து பெரும் படையுடன் எதிர்த்துப் போரிடும் செய்தியைப் பெருமானார் நபி (சல்) அவர்கள் அறிந்து தற்காப்புப் போருக்குத் துணைநிற்க அடலேறு போன்ற அலி (றலி) அவர்கள், ஆமிர், சுபைர், மிக்தாது (றலி) ஆகிய நால்வரையும் பரிவாரங்களுடன் சையிதத்திற்கு உதவியாக அனுப்பி வைத்தார்கள். இந்நால்வரும் படைகளுடன் வரும் காட்சி 'கடலும் சுகனமும் வானக்கோள்களும் வயப்படை வீரர்களும் மாநிலமும் இன்ன பிறவும் நடுங்கும்படியாக' இருந்தனவாம். சையிதத்தின் போர்த் திறத்துடன் உதவிப் படைகளும் வந்துறவே அதன் பின் எதிரிப் படைகளின் நிலையைப் புலவர் மிகவும் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார்.

காலறுந்து விழ ஆயுதத்தினொடு
கையறுந்து விழ மன்னர்கள்
மேலறுந்து விழ மோலி சூட்டுமுடி
மிகஅறுந்து விழ வாயுறுந்
தால் அறுந்துவிழ வாக்ரமித்து நடை
தாவும் வெம்பரி கடாளிணை
நாலறுந்து விழ வள்ளலா ரலியும்
நால்வரும் படை முருக்கினார்

(சையிதத்துப் படைப் போர் : 395)

இவ்வாறு அபாசுபியானின் எதிரிப் படைகள் கையறுந்தும், புயம் அறுந்தும், காலறுந்தும், வாயறுந்தும் விழச் செய்த வீரங்களை சையிதத்தின் போர்த் திறத்தால் அங்கு ஓர் இரத்த ஆறு தோன்றியதோ என்னும் அளவிற்கு இரத்தப் பெருக்கு காணப்படுகிறது.

கையறுந்து புயவரை அறுந்து பய
கால் அறுந்து விழ வாயற
மெய் அறுந்து விரி யரமறுந்து கடை
நடை வெப் பரிக்களமம களமறுந்திடச்

செய்யிதத் தெனு மிசைந்த நாமம் உறு
திருவினாள் பொருத செங்களம்
வையகத்தில் ஒரு புதிய சோரி நதி
வந்து தோன்றுவது போன்றதே
(சையிதத்துப் படைப் போர் : 402)

இத்தகு முறையில் பெருக்கெடுத்து ஓடும் இரத்த வெள்ளம் மலையிலிருந்து ஆற்று நீர் பெருக்கெடுத்தோடுவது போன்றிருந்ததாம். போர்க்களத்தில் சையிதத்து போர் படைகளை நடத்திய விதத்தைப் படிப்போர் உள்ளத்திலும் அச்ச உணர்வைத் தூண்டும் வண்ணம் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

பலி கொள் சையிதத்துபோர் பஞ்ச வாசியைப்
புலியென நடத்தினள் புவி நடுங்கவே
(சையிதத்துப் படைப் போர் : 435)

குஞ்சு மூசுப் புலவர் போர்க்களக் காட்சியை விவரிக்கும் திறன் அவரே நேரிடையாக இருந்து கண்டுற்ற காட்சிகளைக் கூறுவது போல் அமைந்துள்ளது. போர்க்களத்தில் ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் மிகவும் நுண்ணியமாக விவரித்துள்ளார். போர் வீரர்கள் உடம்பில் எத்தனை காயங்கள் பெற்றனர், ஒவ்வொரு காயமும் எந்தெந்தப் போர்க் கருவியின் காரணமாக ஏற்பட்டன, போருக்கு என்னென்ன கருவிகளைக் கொண்டு சென்றனர், போரில் பங்கு பெற்றோரின் எண்ணிக்கை, போரில் இறந்தவர்கள் எத்தனை பேர் என்பது போன்ற ஒவ்வொரு விபரங்களும் விரிவாகவும் உணர்வுப் பூர்வமாகவும் சையிதத்துப் படைப் போரில் தரப்பட்டுள்ளன. இவற்றிற்குரிய சில சான்றுகளைக் காண்போம்.

போரிடுவதற்காக வரும் போர் வீரர்கள் என்னென்ன வாத்தியங்களைக் கொண்டு வந்தனர் என்பதை ஒரு பாடலில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இதில் சங்க காலத்தில் பயன்படுத்திய பல்வேறு வாத்தியக் கருவிகளின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

முரசு துந்துமி திமிலை பம்பைகள்
முருடு திண்டிம மத்தளம்
குறை செய் பூரிகை நவுரி காகளம்
கொம்பு மோகர வீணைகள்
பெருவ ணப்பறை சின்ன முந்துடி
பேரி கின்னரமும் தவில்
அரவம் மிஞ்சிய கடல மைந்திட
ஆர்த்த டர்ந்தன சேனையே
(சையிதத்துப் படைப் போர் : 265)

கடும் போரில் ஈடுபட்டு மயக்கமடைந்ததால் அப்துர் ரஹ்மானின் உடலிலிருந்து ஆடைகள் அகற்றப்படும்போது அவர் உடம்பில் உள்ள காயங்கள் நூறு எனவும் அவைகள் எந்தெந்த கருவிகளால் உண்டாயின என்பதையும் ஆசிரியர் கூறுகிறார்.

அன்ன காலை அகும தண்ணல்
அரிய மாமன் மைந்தனார்
மின்னு சட்டை முற்றத் தென்னும்
வீரியர் கழற்றருங்
கொன்னு னைக்க வண்கல் லம்பு
கொண்டு புண்கள் அறுபதும்
பின்னுமிக்க வாளினுற்ற பெரிய
பெரிய காயம் நாற்பதே
(சையிதத்துப் படைப் போர் : 298)

இவ்வாறு போர் நிகழ்வுகள் ஒவ்வொன்றையும் புலவர் விவரித்துச் சொல்லுவதால் படிப்போரும் இலக்கியத்துடன் மனம் ஒன்ற முடிகிறது. குஞ்சு மூசுப் புலவரின் போர் வர்ணனையில் குறிப்பிடத் தக்க பிறிதொரு சிறப்பு அவர் பயன்படுத்தும் உவமை சார்ந்த வர்ணனைத் திறமாகும். போர் நிகழ்ச்சிகளைப் பல்வேறு சுவை மிகுந்த வர்ணனைகளால் விளக்குகிறார். சையிதத்துப் போரிடும் திறத்தால் எண்ணற்ற போர் வீரர்கள் வயிறு அறுபட்டு கடலை யொத்த செந்நீரில் மிதந்தனராம். அவ்வாறு மிதந்த பிணங்களின் வயிற்றிலிருக்கும் குடல்களைப் பருந்துகள் வந்து பற்றிக் கொண்டு மேலே பறந்தனவாம். இக்காட்சி, புவியில் இளைஞர்கள் நின்று பட்டம் விடுவது போன்றிருந்ததாம்.

வாரி நிகர்த்த செந்நீரில் உறும்பிண
வல்லுத ரக் குடலை
நேரொடு பற்றியெடுத்து பருந்து
நெடுந் தொலைவின் செலவே
தாரணி மீது தரித்திளை ஞோர்கள்
சமைத்துள பட்டமதைச்
சீரொடு கட்டிய நூலொடும் விட்டுச்
சிறந்துப றந்தன போல்
(சையிதத்துப் படைப் போர் : 484)

இத்தகு போர்க்கள காட்சியைக் கண்ட, எஞ்சியிருந்த ஒருசில பகைவர் கூட்டமும் தப்பித்தோம் என்ற நினைப்பில் வெருண்டு ஓடி ஒளிந்தனர்.

எறிந்த கல் வரவு கண்டங்கு
கெழுந்தகல் காகம் போலும்
பறந்த செம் பருந்தைக் கண்ட
பஞ்சுகம் வெருண்ட போலும்
மறந்திகழ் புலியைக் கண்ட
மானினம் வெருண்ட போலும்
தறிந்துயிர் போய் வெருண்ட
தரியலர் ஓடி னாரால்

(சையிதத்துப் படைப் போர் : 487)

புலியெனப் பாய்ந்து போர் செய்திட்ட சையிதத்தின் அடலேறு போன்ற வீரத்திற்கு இணை கொடாத பகைவர் கூட்டம் இறுதியில் வீழ்ந்துவிடவே இஸ்லாம் வெற்றி பெறுகிறது. போருக்குப் பின் அனைவரும் மகிழ்ச்சி ஆராவாரத்தால் தற்காப்புப் போரின் வெற்றிக்குக் காரணமான சையிதத்தைப் போற்றிப் புகழ்ந்தனர். இதனை ஆசிரியர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

கண்கள் செம் முகந்தாள் வாய்ந்த
கமலமென்றிலங்கித் தோன்றும்
பெண்கனி சையிதத்தைப்
பெலன்தரு சோகின் மீதே
வெண்கதிர் மணியின் கற்றை
வீசிய படங்கி லேற்றி
மண் கடல் வரையும் மெய்க்க
வாக்கிய முழக்கல் செய்தார்

(சையிதத்துப் படைப் போர் : 500)

இதன்பின் அனைவரும் மதீன மாநகரம் புகுந்து பெருமானார் நபி (சல்) அவர்களைத் தரிசனம் செய்து,

வள்ளலிற சூலென மன்றாடிநதி நீர்தந்
தெள்ளியவிண் ணூர்வதுவை யின்னுணவு நல்கித்
தெள்ளு முசு லீம்க ளோடு செம்பொன்நகர் சேர்ப்பாய
விள்ளும் மறை நாலையும் விதித்த முதலோனே

(சையிதத்துப் படைப் போர் : 513)

என வேண்டி நின்றனர். இத்துடன் சையிதத்துப் படைப் போர் இலக்கியத்தை நிறைவு செய்திருக்கின்றார் குஞ்சு மூசுப் புலவர்.

சையிதத்துப் படைப்போர், தலைமை மாந்தராகப் பெண்பாற் பாத்திரம் இடம் பெற்றிருத்தல் என்ற நிலையில் ஏனையபிற படைப்பேரர் இலக்கியங்களிலிருந்து மாறுபட்டுள்ளது. அத்துடன்

ஒரு போர் இலக்கியத்தைச் சுவைபட எடுத்துரைப்பதிலும் குஞ்சு மூசுப் புலவரின் சையிதத்துப் படைப்போர் சிறந்திருக்கிறது. பல்வேறு தமிழிலக்கிய மரபுகளை முறையாகக் குஞ்சு மூசுப் புலவர் தம் இலக்கியத்தில் பின்பற்றியுள்ளார். இது ஒரு இஸ்லாமியத் தமிழிலக்கியம் என்றுப் படிப்போர் உணர முடியாத அளவிற்கு அறபு சொல்லாட்சிகள் மிக மிகக் குறைவாகவே இடம் பெற்றுள்ளன. பெயர்ச் சொற்கள் மற்றும் கலிமா போன்ற ஒரு சில அறபுச் சொற்களே சையிதத்துப் படைப்போரில் இடம் பெற்றுள்ளன. வரலாற்றுப் பின்புலத்தைப் படிப்போர் முன் நிலைநாட்டவும், இலக்கியத் தலைமை மாந்தரின் பெருமையை வலியுறுத்தவும் புலவர் தம் மொழி ஆற்றலை நன்குப் பயன் படுத்தியுள்ளார்.

இறவுசுல் கூல் படைப்போர்

படைப்போர் இலக்கிய வரிசையில் நான்காவது நிலையில் தோன்றியுள்ள இறவுசுல் கூல் படைப்போரினை இயற்றியதும் சையிதத்துப் படைப்போர் ஆசிரியரான குஞ்சு மூசுப் புலவரே. ஏனைய படைப்போர் இலக்கியங்களிலிருந்து அளவிலும் உள்ளடக்க அமைப்பு முறையிலும் மாறுபட்ட இறவுசுல்கூல் படைப்போரைச் சையிதத்து படைப்போருக்குப் பதினேழு ஆண்டுகளுக்குப் பின் கி.பி. 1818ஆம் ஆண்டு குஞ்சு மூசுப் புலவர் இயற்றியுள்ளார். சல்கா என்னும் பெண்மணியே இப் படைப்போர் இலக்கியத்தின் தலைமைப் பாத்திரமாகும். ஏகத்துவ இறை எதிர்ப்பாளரான தந்தை இறவுசுல் கூலை எதிர்த்துப் பெருமானாரின் பின்புலத் துடனும் நற்றுணையுடனும் போரிட்டு வெற்றிபெறும் வீராங்கனை சல்காவின் வரலாறே இப்படைப் போர் இலக்கியத்தின் உள்ளடக்க மாக இடம் பெற்றுள்ளது. எனவே இப்படைப் போர் இலக்கியம் சல்காப் படைப் போர் எனவும் வழங்கப்படுகிறது. சல்கா, பெருமானாரின் (சல்) இயற்கை ஆற்றலை அறிந்து ஈமான் கொண்டு இஸ்லாத்தைத் தழுவிய நிகழ்ச்சிகளை இப்படைப்போர் எடுத்துரைக்கிறது.

இப்படைப் போரின் முகப்புப் பக்கத்தில் இஃது எல்லா உலகங் களையும் உயிர்களையும் படைத்தாளுகின்ற வல்ல நாயகனான அல்லாகுத்த ஆலாவின் உண்மைத் தூதராகிய முகம்மது நபி சல்லல் லாகு அலைகி வசல்லமவர்களுடைய இயற்கையுஞ் செயற்கையு மாகிய காரண வதிஜய திட்டாந்தர புதுமையை அறிந்தீமான்

கொண் டிசுலாத்திலான கற்பு நாயகி சல்கா வென்னும் பெயரைக் கொண்ட லோக தாய் அமர் செய்து வெற்றியடைந்த சல்காப் படை போர் என்று வழங்கா நின்ற இறவுசுல்கூல் படைப்போர் என இப் படைப் போருக்கான இரண்டு பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. அரும்பெருஞ் செயல்கள் புரிந்த சல்கா அம்மையின் சிறப்பைக் கருதி அவர் பெயரால் இப்படைப் போர் சல்காப் படைப்போர் என அழைக்கப்பட்டிருக்கலாம். சல்கா அம்மையார் கூட முதலில் இஸ்லாத்தை எதிர்த்துப் பின்னர் இஸ்லாத்தைத் தழுவி இறவுசுல் கூலை எதிர்த்தமையால் சல்காவினால் படைக்கப்பட்ட போர் எனக் கொண்டு முதலில் சல்காப் படைப் போர் எனப் பெயர் பெற்றிருக்கலாம். ஆனால் சல்கா அம்மையார் இஸ்லாத்தைத் தழுவிய பின்னர் அப்பெயர் பொருத்தமில்லாதிருப்பதை உணர்ந் திருக்கலாம். ஆகையினால் அப்பெயரைக் குறிப்பாகவும் இஸ்லாத்தின் பரம விரோதியாகப் போரிட்டு மறைந்த இறவுசுல் கூலின் பெயரால் வெளிப்படையாகவும் அழைத்திருக்கலாம். சல்காப் படைப் போர் என்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டால் அடிப்படைக் கொள்கையான இஸ்லாத்தின் பரம விரோதியின் பெயரால் படைப் போர் நூலுக்குப் பெயரிடும் கொள்கைக்கு முரணாக அமைந்திருக்கலாம். எனவேதான் இப் படைப் போருக்கு இறவுசுல்கூல் படைப் போர் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. பெரும்பாலும் படைப்போரில் எவன் பெயரால் அழைக்கப்படுகின்றதோ அவன் போரில் மடிந்துவிடுவ தாகப் படைப்போர் விவரிக்கிறது. சல்கா அம்மையார் போரில் மடிந்திருந்தால் சல்காப் படைப் போர் பொருத்தமானதாயிருக்கும் என ஆசிரியர் கருதியிருந்தார் போலும். ஆதலினால் இஸ்லாத்தை எதிர்த்துப் போரிட்டு மறைந்த இறவுசுல்கூலின் பெயரால் இக் காப்பியத்துக்கு இறவுசுல் கூல் படைப்போர் பொருத்தமானது என்று ஆசிரியர் கருதியிருக்கலாம். இதன் மூலம் சிறப்பான ஓர் இஸ்லாமியத் தமிழ்க் கவி மரபும் பேணப்பட்டிருப்பதையும் நாம் காண்கிறோம்.

இறவுசுல் கூல் படைப் போரில் இரண்டு காப்புச் செய்யுட்கள் இடம் பெற்றுள்ளன. இரண்டாவது செய்யுளில் முஸ்லிம் அல்லாத வராய் இருந்து முஸ்லிம் அல்லாதவருடன் போர் புரிந்து பின்னர் முகம்மது நபி (சல்) அவர்களைப் பணிந்து இஸ்லாத்தைத் தழுவினார் என்னும் சரிதையையே தாம் இப்படைப் போரில் கூறப் போவதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்தக் குறிப்பைப் பார்க்கும் பொழுதும் இறவுசுல்கூல் படைப்போர் எவ்வாறு பொருத்தமாக

இருக்கிறதோ அவ்வாறே சல்காப் படைப்போர் என்பதுவும் இந் நூலுக்குப் பொருத்தமான பெயராக அமைந்துள்ளது எனலாம்.

இவருக்கு இருந்த மலையாளத் தொடர்பினாலே இவருடைய பேரில் உள்ள குஞ்நு என்பது பெறப்பட்டிருத்தல் வேண்டும். சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட தமிழ்-ஆங்கில (Tamil Lexicon) அகராதியில் குஞ்நு என்னும் மலையாளச் சொல்லி லிருந்தே குஞ்சு என்னும் தமிழ்ச் சொல் பெறப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கடவுள் வாழ்த்தில் உள்ள 34, 35, 39 என்னும் செய்யுட்களில் ஆசிரியர் பற்றிய சிறுசிறு குறிப்புக்கள் வந்துள்ளன. இப்படைப் போரின் முகப்பில் இரண்டு காப்புச் செய்யுட்கள் இடம்பெற்றுள்ளன. கடவுள் வாழ்த்தில் இடம் பெறத் தவறிய இரண்டு செய்யுட்கள் நூலின் இறுதியில் அமைந் துள்ளன. இந்நூல் இயற்றப்பட்ட காலத்தை இவ்விரண்டு செய்யுட்களும் தெரிவிக்கின்றன. ஏனைய படைப் போர் இலக்கி யங்களில் இல்லாத படல அமைப்புமுறை இறவுசுல்கூல் படைப் போரில் இடம்பெற்றுள்ளது. இந்நூலினுள் 45 படலங்களும் 2383 திருவிருத்தங்களும் உள்ளன.

இறவுசுல் கூல் படைப்போரில் முக்கியத்துவம் பெறுவது போர் வருணனையாகும். பெரும்பாலான பாடல்களில் ஆசிரியர் விளக்கு கிறார். அறமிபுனுதையான் போர் புரிய வருவதை ஆசிரியர் இயற்கையாக வருணித்துள்ளார். அவனுடைய படையினர் நடக்கும்பொழுது பூமி நடுங்கியது. மலைகள் அஞ்சின. வார் கட்டப்பட்ட முரசொலி ஒலித்து எதிரொலித்தது. மிகுதியாக ஒலித்தது. வரிசை வரிசையாகச் சக்தி மிக்க போர் வீரர் மிகுதியாக வந்தனர். அணி அணியாய் வந்தனர். வேகமாகப் பாய்ந்து வந்த பெரிய குதிரையின் மீது அவன் ஏறி வந்தான். இக்காட்சி இவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது.

தாரணி நடுங்கிடச் சயிலம் அஞ்சிட
வாரணி முரசொலி மலிய வாசியின்
போரணி வயவர் கள்புடை செறிந்திடச்
சீரணி யுறுகதித் தேகி மேற்கொண்டான்
(அறமிபுனுதையான் வரு படலம் : 38)

போர் வீரர்கள் எவ்வாறு வந்தனர் என்பது வேறொரு விதமாக வருணிக்கப்பட்டுள்ளது. வில்லையுடையவர்கள் மிகுதி யாக வந்தனர். வேலை ஏந்தியவர்களாகப் பலர் வந்தனர். பெருங் கற்களைத் தாங்கியவர்களாக வேறு பலர் நடந்தனர்.

கசையைக் கையில் கொண்டவர்களாய் நிறைய வந்திருந்தனர். மல்யுத்தத்தில் ஈடுபடுபவர்கள் கூட்டம் கூட்டமாய் வந்தனர். வாளை உருவியவர்களாய் அனேகர் வந்தனர். அவர்கள் அனைவரையும் ஒழுங்காக நடக்க வேண்டிக் கட்டளை பிறப்பிப்பவர்களாகப் பலர் வந்தனர். இங்ஙனம் போர் புரிய வந்தவர்களின் கூட்டத்தை ஒரு செய்யுளில் புலவர் இவ்வாறு வருணித்துள்ளார்.

வில்லினர் மிடைந்திட வேன்மி டைந்திட
கல்லினர் மிடைந்திடக் கசைமி டைந்திட
மல்லினர் மிடைந்திட வாண்மி டைந்திடச்
சொல்லினர் மிடைந்திடத் துகண்மி டைந்திட
(அறமிபுனுதையான் வரு படலம் : 40)

இங்கே ஓசை நயம் ததும்புவதைக் காணலாம்.

அவன் எவ்வாறு புடைசூழ வந்தான் என்பதை மற்றொரு செய்யுளில் ஆசிரியர் விவரித்துள்ளார். குதிரைகள் நெருக்கமாக வந்தன. கொடிகள் பிடித்தவர்களாய்ப் பலர் வந்தனர். சிவிகைகள் நெருக்கமாக வந்தன. தேர்கள் நெருக்கமாக வந்தன. குடைகள் நெருக்கமாக வந்தன. அவர்கள் அனைவரும் குதிரைகளிலே வந்தனர். வீரம் மிக்க சூரனாகப் பெரும்பாதையிலே வந்து நெருங்கினான். இக்கருத்துக்கள் ஒரு செய்யுளில் இவ்வாறு அமைந்துள்ளன.

குவிபரி நெருங்கிடக் கொடிநெ ருங்கிடச்
சிவிகைக ணெருங்கிடத் தேர்நெ ருங்கிடக்
கவிகைக ணெருங்கிடக் கற்கியோட் டியே
கவுரியத் துடனெரி தன்னில் ஈண்டினான்
(அறமிபுனுதையான் வரு படலம் : 40)

இச்செய்யுளிலும் ஓசை நயம் அமைந்திருப்பதைக் காணலாம்.

ஒருகால் நடந்த போரில் வரிசையாக நடப்பட்டிருந்த கொடிகள் முறிந்தன. குடைகள் நொறுங்கின. போர் முரசு உடைந்தது. வலிமையான வீரர் பலரின் தலைகள் பிளந்துபட்டன. மூளைகள் சிதறின. அவற்றை ஏனையோர் மிதித்து நடக்கலாயினர். இக்காட்சி இவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது.

கொடிநிரை முறிந்திடக் குடை நொறுங்கிட
வடிமுர சுடைந்திட வலியின் மன்னர்கண்
முடிபல பிளந்திட மூளை சிந்திடக்
கடிதினின் மிதித்தன கருத யாருமே
(குசுஆவரு படலம் : 44)

இறவுசுல்கூல் படைப்போர் பொதுவாக இருவருக்கிடையே நடைபெற்றது. முஸ்லிம் அல்லாதார் சார்பில் ஒருவர் முஸ்லிம் மக்கள் சார்பில் ஒருவருடன் போர் புரிவது தான் வழக்கம். ஒருவர் வெட்டப்பட அவரிடத்தை மற்றவர் எடுப்பது முறைமை. அப்துத்தாறு என்பவன் சுகைறு என்னும் முஸ்லீமுடன் மோதி சுகைறு என்பவரை வெட்டி வீழ்த்தினான். பின்னர் அவனுடன் அலி (றலி) அவர்கள் போருக்குச் சென்றார். அப்பொழுது அப்துத்தாறின் நிலைமையை இங்ஙனம் விளக்கி உள்ளார் ஆசிரியர்.

அன்ன காலை யவனு மடர்ந்தனன்
உன்னி தன்னை உரக்க விடுத்தொளிர்
மின்னும் வாள்கொடு வேத ரலியவன்
சென்னி மீது சினங்கொடு வெட்டினார்

(சுகைறுல் ஆமிரை வெட்டும் அப்துத்தாறு வதைப்படலம் : 9)

இவ்வாறு வெட்டப்பட்டதன் விளைவை மற்றொரு பாடலில் ஆசிரியர் இவ்வாறு வருணித்துள்ளார் :

சிரசறுந்தன தேகமறுந்தன
பரியறுந்தன பங்கிரண் டாயின
தரைபிளந்தன தாவியத்தாரைவாள்
விரைவுகண்டு விடையுண்ணடுங்கின

(சுகைறுல் ஆமிரை வெட்டும் அப்துத்தாறு வதைப்படலம் : 9)

சல்கா அம்மையார் போருக்குப் புறப்பட்டுச் சென்றபோது அவருடைய அவயவங்கள் மக்களுக்கு எப்படித் தோற்றின என்பதை ஒரு செய்யுளில் ஆசிரியர் இவ்வாறு பாடியுள்ளார்.

இலங்குசெம் முகத்தைக் கண்டார்
இளம்பிறை நுதலைக் கண்டார்
துலங்குவிற் புருவைக் கண்டார்
துணைவிழி வேலைக் கண்டார்
ஜலங்கெழு குமிழைக் கண்டார்
தரளவெண் ணகையைக் கண்டார்
அலங்கலுற் றிருக்குந் தோளில்

(சல்கா போர் புரிப்படலம் : 38)

சல்கா அம்மையார் போர் புரிவதற்குக் குதிரை மேல் ஏறிச் சென்றார். அந்த அம்மையார் குதிரை மீது ஏறி குதிரையைச் செலுத்தும்பொழுது எல்லோரும் நடுங்கினர். எல்லாமே நடுங்கின. இதனை ஆசிரியர் இப்படைப் போரில் கூறும்போது,

தரியலர் நடுங்க வன்னோர் தமதுள நடுங்க வேறு
பரிகளு நடுங்க வோங்கற் படங்குக ணடுங்க நீள்கைக்
கரிகளு நடுங்கச் சேனைக் கடங்களு நடுங்க வந்த
வரிகளைத் தமலை காட்ட வணங்கதின் மிசைகொண் டாளால்
(சல்கா போர்புரிப் படலம் : 64)

சல்கா அம்மையாரின் வாள் வீச்சினால் ஏற்பட்ட வெட்டுகளினாலும் குதிரையைச் செலுத்தினமையாலும் அடியினாலும் முட்டினாலும் எல்லாம் குருதி பறந்திருந்தது. இந்தக் காட்சியை ஆசிரியர் இவ்வாறு விவரித்துள்ளார் :

வெட்டினாலும் விடும்பரி யாலுமற்
றட்டினாலும் தரியவர் தத்தமின்
முட்டினாலும் முறிவுகண் மிஞ்சலான்
மட்டிலாது மலிந்தன சோரியே
(சல்கா போர்புரிப் படலம் : 101)

இரவு புலர்ந்தது. இருள் சூழ்ந்தது. அனைவரும் இல்லம் திரும்பினர். சூரியனும் மறைந்தான். உலகம் வெறிச்சோடியது. பின்னர் வரிகளை உடைய வண்டுகள் மலர்களை நாடின. வாவிகளில் அன்னங்கள் கூடின. குதிரை வீரரும் கூடிவிட்டனர். இக் கருத்துக்கள் ஒரு செய்யுளில் இவ்வாறு இடம்பெற்றுள்ளன.

இரவெனும் நிசியங் கீண்ட யாவரும் விடுதி யீண்ட
அருணனும் குடபா லீண்ட அவனியின் வெளிதா னீண்ட
வரியளி மலரி னீண்ட மடுக்களில் அனங்க ளீண்ட
புரவியின் வீர ரீண்ட பொழுதும் விண்ணீண் டிற்றம்மா
(கடந்தைப் படலம் 1)

இவ்வாறு போர் வருணனைகள் இறவுசுல்கூல் படைப்போரில் சிறப்பிடம் பெறுகிறது எனலாம்.

இஸ்லாத்துக்கு அடிப்படையாக அமைவது அல்குர்ஆன். எனவே அல்குர்ஆன் கருத்துக்கள் இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய படைப்போர் இலக்கியங்களில் அமைந்து விடுவது இயல்பே. நபிகள் நாயகம் முகம்மது (சல்) அவர்களின் வாழ்க்கையோடு தொடர்புடைய காப்பியங்களெனின் அத்தகைய கருத்துக்கள் மிகுதியாக இடம்பெறும். இறவுசுல்கூல் படைப்போரிலும் அத்தகைய அல்குர்ஆன் கருத்துக்கள் வந்துள்ளன.

முஸ்லிம் அல்லாதார் பலம் குன்றி அஞ்சினவர்களாய் ஓடினர். அப்பொழுது முஸ்லிம் போர் வீரர் அல்குர் ஆன் திருவசனம்

ஒன்றை ஓதியவர்களாய் அவர்களைத் துரத்தினர். அந்த அல் குர் ஆன் ஆயத்து (திருவசனம்) இதுதான்.

> ''(ஈசாவை நிராகரித்த) அவர்கள் (அவரைக் கொலை செய்யச்) சதி செய்தார்கள். (எனினும், அல்லாஹ் அவரை இரட்சித்துக் கொண்டு தங்களில் ஒருவனையே அவர்கள் கொலை செய்து விடும்படி) அல்லாஹ் (அவர்களுக்குச்) சதி செய்து விட்டான். அல்லாஹ் சதி செய்பவர்களில் மிகைத்தவன்.'' (3-54)

கைறான அதாவது நல்லனவற்றுக்குச் சதி செய்வதில் அல்லாஹ்வை விட மிஞ்சியவர்கள் இல்லை என்பதே ஒட்டு மொத்தமான கருத்தாகும். முஸ்லிம்கள் இந்த ஆயத்தை ஓதியவர் களாப் பகைவர்கள் விரட்டினர் என்பது ஒரு செய்யுளில் அமைந் துள்ளது.

> வதித்தவவ் வாயத்தி னுடைய உட்பொருள்
> சதித்துறும் அவரையே சதிப்பன் ஆதியு
> சுதித்தவச் சதியரின் கைறுள்ளா னென்றே
> யிதைத்தனி யோதியங் கீண்டி வெட்டினார்
>
> (முகல்கிக் போருக்கெழுந்த படலம் : 122)

இறவுசுல்கூல் படைப்போரின் உள்ளடக்கக் கருத்துக்கள் ஏனைய பிற படைப்போர் இலக்கியங்களிலிருந்து, சில அமைப்புக் களில் காப்பியத் தன்மையைப் பெற்றுச் சிறப்பதில் குறிப்பிடுமாறு அமைந்துள்ள தெனலாம்.

பிற படைப் போர் இலக்கியங்கள்

இதற்குப் பின் அப்துல் காதிர் புலவரவர்களால் 1874ஆம் ஆண்டில் காசீம் படைப் போர் வெளியிடப்பட்டுள்ளது. இமாம் ஹசனாரின் இளஞ்செல்வர் காசீம் எசீதை எதிர்த்து நின்று வெற்றி பெற்ற வீர வரலாற்றினையும் பின் வஞ்சகத்தாரின் சதியில் அகப்பட்டு வீழ்ந்து வீரமரணம் எய்திய அவல நிலையையும் இப் படைப் போர் இலக்கியம் எடுத்தியம்புகிறது. இது 218 ஈரடிப் பாக்களால் அமைந்துள்ளன.

காசீம் படைப்போருக்கு அடுத்துத் தோன்றியுள்ளது மலுக்கு முலுக்கின் படைப்போர் ஆகும். வாலை அப்துல் காதிர் சாகிபுப் புலவர் இதனை கி. பி. 1876ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார். பெருமானார் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் தம் தோழர்களுடன்

இணைந்து நடத்திய ஒரு போரினை அடிப்படையாகக் கொண் டமைந்ததே இவ்விலக்கியம் (இது மலுக்கு முழுக்கு ராஜன் கதை என்றும் அழைக்கப்படுகிறது).

அ.லெ.அ.அமீது 1883ஆம் ஆண்டில் இபுலீசு படைப் போர் என்னும் நூலும், பூவார் செய்யது முஹம்மது புலவரால் 1909ஆம் ஆண்டில் நபுஸு படைப்போரும் இயற்றப்பட்டுள்ளன. இபுலீசை எதிர்த்து ஈமான் போர் புரிந்து வெற்றி கொள்வதாகவே மேற் சொன்ன இரு படைப் போர் நூல்களும் அமைந்துள்ளன.

வரலாற்றுப் புகழ் பெற்ற கர்பலா களப்போரினை விவரிப்பதே ஹுசைன் படைப் போர் பெருமானாரின் நற்பேரர் இமாம் ஹுசைன் போர்த் திறனையும் வெற்றி மரணத்தையும் படைப் போர் இலக்கியமாகக் காளை ஹஸனலிப் புலவர் உருவாக்கி யுள்ளார்.

படைப் போர் இலக்கியங்களின் இலக்கண வரையறை

மேற்சொன்ன படைப் போர் இலக்கியங்களை அடிப்படை யாகக் கொண்டு தமிழிலக்கிய வரலாற்றினை அணுகும்போது படைப் போர் இலக்கியங்களின் உருவ உள்ளடக்க அமைப்பு முறை இதற்கு முந்திய நிலையில் தோன்றியுள்ள பிற தமிழிலக்கியங்களி லிருந்து மாறுபட்டிருப்பதை அறியலாம்.

திறனாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ள படைப் போர் இலக்கியங் களை அடிப்படையாகக் கொண்டு படைப் போர் என்னும் புதுவகை இலக்கிய வகை இவ்வாறு இருத்தல் வேண்டும் என்று வரையறை செய்யலாம்,

இஸ்லாமிய நெறியும் தமிழ் இலக்கிய மரபும் இணைந்ததின் பயனாய் முஸ்லீம் தமிழ்ப் புலவர்களால் இயற்றுவிக்கப்பட்ட ஒரு புதுவகை இலக்கியப் பிரிவே படைப்போர் இலக்கியங்களாகும்.

இத்தகு புதுவகை இலக்கியப் பிரிவிற்குரிய பாடுபொருள் இஸ்லாமிய மார்க்கத்துடன் தொடர்புடைய ஏதாவது ஒரு போர்ச் செய்தியாக அமைதல் வேண்டும்.

போருக்கான அடிப்படைக் காரணம் மண், பொன் முதலான ஆதிக்க ஆசைகளாக இருத்தல் கூடாது. அதற்குப் பதிலாக இஸ்லாமிய மார்க்கக் கொள்கை முரண்பாடுகளே காரணமாக இருத்தல் வேண்டும்.

இதனடிப்படையில் மேற்கொள்ளப்படும் போரின் நோக்கம் அநீதியை அகற்றுவதும், ஒன்றிறைக் கொள்கையை நிலைநாட்டுவதும் தற்காப்புமாக இருக்கலாம்.

போரின் நோக்கம் நிறைவுறும் வகையில் எதிர்த் தலைவர்கள் பலரும் ஏகத்துவத்தை இறுதியில் மனமுவந்து ஏற்கின்ற பொது நிலையும் வேண்டும்.

படைப் போர் இலக்கியங்கள் அனைத்திலும் அடிநாதமாக எவ்வாறு ஒன்றிறைக் கொள்கை விளங்குகிறதோ அதேபோல் படைப் போர் இலக்கியங்களின் தலைமை மாந்தர் யாராக இருந்தாலும் தலைமைச் சிறப்புக்கு அப்பாற்பட்டுப் பெருமானார் நபிகள் நாயகம் அவர்களுக்குத் தனிச்சிறப்பு வழங்கப்படுதல் வேண்டும்.

படைப் போர் இலக்கியங்கள் அனைத்திலும் அவற்றின் தலைப்பிற்கேற்ப போர் நிகழ்வுகளே மேலோங்கி இருத்தல் வேண்டும். இப்போர் நிகழ்வுகளில் தலைமை மாந்தரின் போர்த் திறன் முக்கியத்துவம் பெற்று அதனைச் சிறப்பித்துப் பாடப் பெறுதல் வேண்டும்.

படைப் போர் இலக்கியங்கள் அறபு, பாரசீக மொழிகளில் அமைந்த அம்மொழி இலக்கியங்களின் தழுவலாகவும் இருக்கலாம்.

பரணி போன்ற பிற தமிழ் இலக்கியப் போர் பாடல்களின் அதீதக் கற்பனைகளும், நம்பத் தகாத நிகழ்வுகளுக்கும் படைப் போர் இலக்கியங்களுள் இடம் இருத்தல் கூடாது.

வீரயுகப் பாடல்களின் தன்மையும் காப்பியக் கூறுகளும் நாட்டுப் புறவியல் இயல்புகளும் படைப் போர் இலக்கியத்தில் கலந்திருக்கலாம்.

மேற்கூறிய தன்மைகள் அனைத்தும் படைப் போர் இலக்கியங்களுக்கிருக்க வேண்டிய சிறப்புப் பண்புகளாகும்.

இனி படைப்போர் இலக்கியங்களின் பாடுபொருள் அமைப்பு முறையில் சில பொதுமைக் கூறுகளும் உண்டு. படைப் போர் இலக்கியத்தின் உள்ளடக்க அமைப்பு முறை இவ்வாறு இருத்தல் வேண்டும்.

"கடவுள் வாழ்த்து—இஸ்லாமிய மார்க்க வரலாற்றுச் சுருக்கம்—அல்லாஹ்வின் கட்டளையும் இறைத்தூதர் ஜிப்றயீல் (அலை) அவர்களின் வரவும்—பகைவர்களின் அறிமுகம்—அல்லாஹ்வின் கட்டளைகேற்ப தூது அனுப்புதல்—தூது மறுப்பு—பகைவர் போர்க் கோலம்—தற்காப்பு எழுச்சி—போர்க்களக் காட்சி—தலைமை மாந்தரின் போர்த் திறன்—எதிரிப் படைகளின் வீழ்ச்சி—இறுதியில் பகைவரின் அகமாற்றம்—ஒன்றிறைக் கொள்கையை ஏற்றுப் போற்றுதல்."

கடவுள் வாழ்த்துப் பகுதியில் ஏகத்துவ இறைவனைப் போற்றுவதுடன் அவனது திருத்தூதர் பெருமானார் (சல்) அவர்களையும், அவருக்குப் பின் இஸ்லாமிய ஆட்சியை மேற்கொண்ட கலீபாக்களான அபூபக்கர் சித்தீக் (றலி), உமர் (றலி), உதுமான் (றலி) அலி (றலி) ஆகியோரையும் வாழ்த்துதல் வேண்டும். இவர்களது வாழ்த்திற்குப் பின் படைப் போர் ஆசிரியர்களின் எண்ணத்திற்கேற்ப இறைநேயச் செல்வர்களது வாழ்த்தும் இடம் பெறலாம்.

இஸ்லாமிய மார்க்க வரலாற்றுச் சுருக்கத்தில் பெருமானார் நபிகள் நாயகத்தின் பிறப்பு; அவர்கள் மக்கா மதீன நகரில் மார்க்கத்தை நிலை நாட்டிய செய்திகள் இடம்பெற்றிருத்தல் வேண்டும். படைப் போர் இலக்கியத்திற்கு அடிப்படையான போர்ச் செய்தி இஸ்லாமிய மார்க்க வரலாற்றில் எந்தச் சூழலில் இடம்பெற்றது என்பதைச் சுட்டிக் காட்டவே இப்பகுதி இடம் பெற்றுள்ளது.

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கட்டளையின்படியே இஸ்லாமிய மார்க்க வரலாறு அமைந்துள்ளது. அவனது வழியின் படியே இஸ்லாத்திற்கு எதிர்பட்ட இன்னல்கள் நீங்கி அது இவ்வுலகில் வேரூன்றியது: இதற்கேற்பவே படைப் போர் இலக்கியத்தில் இடம்பெற்றிருக்கும் போருக்குக் காரணமாக விளங்கும் எதிரிகள் பற்றிய செய்தியும் அல்லாஹ்வின் கட்டளையாக ஜிப்றயீல் மூலமாகப் படைப் போர் இலக்கியத்தின் தலைமை மாந்தருக்கு வந்தடையும் செய்தியை அமைத்துப் படைப் போர் இலக்கியங்களிலும் சுட்டப்படுதல் வேண்டும்.

இத்தகு முறையில் தலைமை மாந்தருக்கு வந்தடையும் கட்டளையைத் தூதுவர் மூலமாகப் பகைவருக்கு அறிவித்தலும் அவர்கள் மறுத்ததின் பயனாய்ப் போர்க்களம் உருவாவதும் படைப் போர் இலக்கியங்களுள் இடம்பெறுதல் வேண்டும்.

படைப் போர் இலக்கியங்களின் உருவம் தொடர்பாக எந்த வொருவரையறையையும் கூறுதல் இயலாது. படைப் போர் இலக்கியங்கள் குறிப்பிட்ட உறுப்புகளைத் தலைப்பாகக் கொண்டு அமைதல் வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை. அதேபோல் இத்தனை செய்யுட்களைப் பெற்று வரவேண்டும் என்றோ இன்ன யாப்பில்தான் பாடப் பெறுதல் வேண்டும் என்றோ கூறுதற்கியலாது.

சக்கூன் படைப் போர்

தனிநிலை ஆய்வு

இவ்வியல் படைப் போர் இலக்கியங்களைப் பரணி இலக்கியங்களுடன் ஒப்பீடு செய்து காட்டுவதன் மூலம் படைப் போர் இலக்கியங்களின் தனித் தன்மைகளை உணர்த்துவதுடன் முதலாவது படைப் போர் இலக்கியமான சக்கூன் படைப் போர் பற்றிய தனி நிலை ஆய்வினையும் விவரிக்கிறது.

உலக இலக்கியங்கள் பலவற்றிலும் ஏதாவது ஒரு போர் நிகழ்வுகள் மையமாக அமைந்து சிறப்பதை நாம் காணலாம். தமிழில் புறப்பாடல்களிலும் கம்பராமாயணம் போன்ற இன்ன பிற இதிகாசங்களிலும் போர்ச் செய்திகள் முக்கியத்துவம் பெற்றமைந்துள்ளன. இதே போல் சேக்ஸ்பியர் நாடகங்களிலும் ஹோமரின் இலியட்டிலும் போர் நிகழ்வுகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. சங்ககாலப் புறப்பாடல்களுள் போர்ச் செய்திகள் இடம் பெற்றிருப்பினும் அவைகள் முழுக்க முழுக்க போர்களையே மையமாகக் கொள்ளவில்லை என்று கூறலாம். இக்கூற்று பொய்கையாரின் களவழி நாற்பதுக்கும்கூடப் பொருந்தும். காரணம் இதில் இடம் பெற்றிருப்பது முழுக்க போர்க்களத்தின் வருணனையே தவிர போர்ச் செய்திகள் அல்ல.

போர்ச் செய்திகளையே முழுமையாகக் கொண்ட இலக்கியம் என்ற நிறைவு தமிழுலகில் கி. பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டிலேயே நிறைவு பெற்றதெனலாம். காரணம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் கி. பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டு வரை சோழப் பேரரசர்கள் தமிழகத்தில் மிகச் செழிப்

பாகவும் வீரத்துடனும் ஆட்சி செலுத்தினர். கடல் கடந்து சென்றும் தம் வீரத்தினை நிலை நாட்டினர். இவர்களது ஆட்சிக் காலம் தமிழக வரலாற்றில் வீரம் மிகுந்த காலமாக விளங்கிற்று. எனவே அக்காலத்திய புலவர்கள் அவர்களின் வீர உணர்விற்கு இலக்கிய உருவமளிக்கும் மன எழுச்சியைப் பெற்றார்கள். இதன் விளைவே பரணி இலக்கியங்களின் தோற்றம் கலிங்கத்துப் பரணியின் மூலமாகத் தொடக்கம் பெறலாயிற்று. இதனைத் தொடர்ந்து தக்கயாகப் பரணி, அஞ்ஞவதைப்பரணி, மோகவதைப் பரணி, பாசவதைப் பரணி, இரணியன் வதைப் பரணி, திருச்செந் தூர்ப் பரணி முதலான இலக்கியங்கள் தோன்றின.

தமிழிலக்கியத்துள் போர்ச் செய்திகளைக் கொண்டு எழுந் துள்ள பரணி இலக்கியத்தின் புறப்பொருள் பற்றிப் பன்னிரு பாட்டியல்,

......வஞ்சி மலைந்த உழிஞை முற்றித்
தும்பையிற் சென்ற தொடுகழல் மன்னனை
வெம்புசின மாற்றான் தானை வெங் களத்தில்
குருதிப் பேராறு பெருகும் செங்களத்து
ஒரு தனி ஏத்தும் பரணியது பண்பே

(பன்னிரு பாட்டியல் : 142)

எனக் கூறுகிறது. அதாவது பரணி என்னும் நூலின் இயல்பாவது வஞ்சிமாலையைச் சூடிப் பகைவர் நாட்டினைக் கொள்ளுதற் பொருட்டு அவர் மேற் சென்ற மன்னர் பின் உழிஞை மாலை சூடிப் பகைவனுடைய மதிலை முற்றுகையிட்டுத் தும்பைமாலை அணிந்து அப்பகைவனுடன் போர் செய்வர். அப்போர்க்களத்தில் அவனை எதிர்த்தவனது ஊர்கள் மடியக் குருதிப் பேராறு பெருக்கெடுத்து ஓடும். அச்செங்களத்தில் படையெடுத்துச் சென்று வாகைமாலை சூடிய அவ்வேந்தனின் வீரத்தை விளம்புதலே பரணியின் பண்பாகும். எனவே தமிழிலக்கியத்துள் பெருமளவில் போர்ச் செய்திகளை பெற்றுச் சிறக்கும் இலக்கிய வடிவமாகப் பரணி இலக்கியங்களை நாம் கொள்ளலாம்.

படைப் போரும் பரணியும்

போர் இலக்கியமாகப் பரணி இலக்கியங்களுக்குப் பின் வேறு தமிழிலக்கியங்கள் தோன்றவில்லை என்ற கருத்தே தமிழிலக்கிய உலகில் பெரிதும் நிலவுகின்றது. (க. ப. அறவாணன் : பரணி ஒரு மதிப்பீடு : பக் 55) ஆனால் இது பெரும் தவறுதலாகும். இத்தவற்

றிற்குக் காரணம் இஸ்லாமியத் தமிழிலக்கியங்களுக்குரிய முக்கியத்துவம் தமிழிலக்கிய வரலாற்றில் அறியப்படாததே ஆகும். பரணி இலக்கியங்களுக்குப் பின் இஸ்லாமிய வரலாற்றில் நடை பெற்ற பல்வேறு போர்ச் செய்திகளையும் உள்ளடக்கமாகக் கொண்டு எழுந்துள்ள இலக்கியங்களே நாம் புதுவகை இஸ்லாமியத் தமிழிலக்கியங்களாகக் குறித்துள்ள படைப் போர் இலக்கியங் களாகும். படைப் போர் இஸ்லாமியத் தமிழிலக்கியங்கள் போர்ச் செய்திகளையே மையமாகக் கொண்டுள்ளன. இவற்றை ஆங்கிலத்தில் கூறும் "War Ballad" என்பதற்கு இணையாகக் கூறலாம்.

இஸ்லாமிய வரலாற்றின் ஆரம்பக் காலக்கட்டத்தில் இஸ்லாம் இவ்வுலகில் வேரூன்றுவதற்கும் பரவுவதற்கும் முட்டுக்கட்டையாக இருந்து வந்தவர் பலர். அவர்கள் பல்வேறு வழிமுறைகளில் இஸ்லாத்தை எதிர்க்கலாயினர். பெருமானார் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் ஆரம்ப காலத்தில் சந்தித்த எதிர்ப்புகளும், இன்னல் களும் எண்ணற்றவைகளாகும். தாம் பிறந்து வளர்ந்த மக்கமா நகரினை விட்டே வெளியேற வேண்டிய கடும் துன்பத்திற்கும் ஆளாகி இருந்தார்கள். இத்தகு சூழலில் நபி (சல்) அவர்களை அரவணைத்து இஸ்லாத்தின் ஏகோபித்த இறைவணக்கத்தையும் கொள்கைகளையும் ஏற்றுத் தலைவணங்கியவர்கள் மதீன நகர் மக்கள் ஆகும். இத்தகு சூழலில் இஸ்லாத்திற்கும் அதனை எதிர்ப் பவர்களுக்குமிடையே எண்ணற்ற போர்கள் நடைபெற்றுள்ளன. அப்போர்களில் எல்லாம் அண்ணல் நபி (சல்) அவர்கள் வெற்றி பெற்ற பின்பே இஸ்லாம் இவ்வுலகில் தலை நிமிர்ந்து நிற்கத் தொடங்கிற்று. எனவே இஸ்லாமிய வரலாறு எண்ணற்ற போர் களைப் பின்னணியாகப் பெற்றமைந்துள்ளது. அத்தகுப்போர்ச் செய்திகள் பலவும் படைப் போர் என்னும் தமிழ் இலக்கிய வடிவங் களில் முஸ்லீம் புலவர்களால் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

போர்ச் செய்திகள் இலக்கியத்துள் மையக் கருத்தாக இடம் பெறும் நிலையில் பரணி, படைப் போர் இலக்கியங்களிடையே ஒற்றுமை காணப்படினும் படைப் போர் இஸ்லாமியத் தமிழிலக்கி யங்கள் பரணி இலக்கியங்களிலிருந்து பெரிதும் வேறுபட்டுள்ளன. இவ்வேறுபாடுகள் உருவம் உள்ளடக்கம் என்ற இரு நிலைகளிலும் காணப்படுவதால் படைப் போர் இலக்கியங்களைப் பரணி இலக்கி யங்கள் என்று கூறுதற்கியலாது. ஏனெனில் படைப் போர் இலக்கி யங்களைத் திறனாய்வு செய்யப்புகுவோர் இதுவும் பரணி

வகையைச் சார்ந்ததுதான் என்று கருதுகின்றனர் (அதிரை அஹ்மத் : இஸ்லாமிய இலக்கியச் சிந்தனை பக். 165). ஆனால் இம்முடிவு பரணி, படைப் போர் இலக்கியங்களை மேலோட்டமாகப் பார்த்ததன் விளைவே ஆகும். இவ்விரு இலக்கிய வடிவங்களின் உருவ உள்ளடக்க ஆய்வு, இவையிரண்டினையும் தனித்தனி இலக்கிய வடிவங்கள் என்பதைத் தெளிவுபடுத்தும். பரணி இலக்கியத்திற்குரிய இலக்கணம் கூறும்போது முதலிரண்டு அடிகளில் பரணியின் உருவம் பற்றிய விளக்கத்தைத் தருகிறது பன்னிரு பாட்டியல்,

> மயக்கறு கொச்சகத் தீரடி இயன்று
> நயப்புறு தாழிசை உறுப்பிற் பொதிந்து
> ....
>
> (பன்னிரு பாட்டியல் : 142)

பரணி இலக்கியம் அமைய வேண்டும் எனக் கூறுவதால் கலிப்பாவின் இனமாகிய கலித்தாழிசைகளால் பாடப்பெறும் கவினுனுடையது பரணி இலக்கியங்களாகும். இத்தாழிசைகள் கொச்சக ஒரு போகின் வகையின் என்பர். இதனைத் 'தாழிசைக் கொச்சமாகிய பரணிச் செய்யுளும்' எனப் பேராசிரியர் கூறுவதால் (தொல்காப்பியம் பொருள் ; செய்யுளியல் : சூத்திரம் 156) அறியலாம். எனவே பரணித் தாழிசை இரு சீரடி, முச்சீரடி நீங்கலாக ஏனைய சீர்களால் இரண்டு அடியால் பாடப்பெறும் பாங்குடையதாகும்.

இவ் யாப்பமைதிக்கேற்ப எந்தவொரு படைப் போர் இஸ்லாமியத் தமிழிலக்கியமும் அமையவில்லை என்பது குறிக்கத் தக்கதாகும். மேலும் படைப் போர் இலக்கியங்கள் ஒரு குறிப்பிட்ட யாப்பமைப்பில் காணப்படவில்லை. சக்கூன் படைப் போர் கண்ணிகளாகவும், செய்யிதத்துப் படைப் போர் விருத்தப் பாக்களாகவும், சில படைப் போர் இலக்கியங்கள் நாட்டுப்புறப் பாடல்கள் போலவும் காணப்படுகின்றன. இவற்றைக் காட்டிலும் பிறிதொரு குறிப்பிடத்தக்க இயல்பு படைப் போர் இலக்கியம் வசன நடையிலும் இடம் பெற்றிருக்கும் நிலையாகும். சான்றாகச் சையதத்துப் படைப் போர் வசன காவியத்தைக் கூறலாம். பெருமானார் நபி (சல்) அவர்களுடைய முதல் மாணவரின் மகனான அப்துல் ரகுமான் அவர்களுடைய வீர வாழ்க்கையைக் கருப்பொருளாகக் கொண்டதே இவ்வசன நூலாகும். இதனை இயற்றியவர் நெயினான் முகமது பாவலராகும். இதே கருப்

பொருளைக் கொண்ட படைப் போர் இலக்கியம் ஒன்றும் குஞ்சு மூசுப் புலவரால் செய்யுள் நடையில் இயற்றப்பட்டுள்ளது. எனவே படைப் போர் இலக்கியங்கள் இன்ன குறிப்பிட்ட யாப்பமைதியைப் பெற்றிருக்க வேண்டுமென்றோ செய்யுள் நடையில்தான் அமைந்து வரவேண்டும் என்றோ கூறுதற்கியலாது. இவ்வியல்பு பரணி இலக்கியங்களிலிருந்து படைப் போர் இலக்கியங்களைப் பெரிதும் வேறுபடுத்துகிறது.

பரணி இலக்கியம் தொடர்பாகப் பன்னிரு பாட்டியல் குறிப்பிடும் நான்கு நூற்பாக்களுள் முன் சொன்ன நூற்பா தவிர்த்த ஏனைய மூன்றில் ஒன்று, பரணியுள் கூறப்படுவன இவை எனல் (பன்னிரு பாட்டியல் : 143) என்னும் தலைப்பிலும் இறுதி இரண்டும் ‘பரணி பெறுந்திறம்’ என்னும் தலைப்பிலும் (பன்னிரு பாட்டியல் : 144-145) காணப்படுகின்றன. இந்நூற்பாக்கள் பரணி இலக்கியத்திற்குரிய உள்ளடக்கம் பற்றிப் பேசுவனவாகும். பரணி இலக்கியத்துள் கடவுள் வாழ்த்து, கடைத் திறப்பு, காடுபாடியது, கோயில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, பேய் முறைப்பாடு, காளிக்குக் கூளி கூறியது, களம் பாடியது, கூழடுதல் முதலான பத்து உறுப்புக்களும் இடம் பெறுதல் வேண்டும். இவ்வுறுப்புக்களும் அவை சார்ந்தொழுகும் பொருள் களும் படைப் போர் இலக்கியங்களுள் காணப்படவில்லை.

புறப்பொருள் இலக்கியமான பரணி இலக்கியங்களுள் கடைத் திறப்பு என்னும் பகுதி காதற் சுவை ததும்பும் சிறப்புடையதாக இருப்பதால் அகப்பொருட் சுவையையும் பரணி இலக்கியங்கள் பெற்றுவிடுகின்றன. ஆனால் படைப் போர் இலக்கியங்கள் முழுமையும் புறப்பொருள் சுவையுடனேயே விளங்குகின்றன. பெரும்பாலான படைப்போர் இலக்கியங்கள் நபி (சல்) அவர்களின் வாழ்வியலில் நடைபெற்ற போர் நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டுள்ளன. மேலும் பரணி இலக்கியங்களுக்கும் படைப் போர் இலக்கியங்களுக்குமிடையே உள்ளடக்கக் கருத்துக்களுக்குரிய காரணங்களிலும் வெளிப்பாடுகளிலும் மிகுந்த வேற்றுமைகள் காணப்படுகின்றன.

பொதுவாகப் பரணி இலக்கியங்களில் இடம் பெறும் போர் களுக்கு ஆதிக்க ஆசையும் பிற நாட்டின் மீது கொண்டபகைமையும் காரணமாக உள்ளன. ஆனால் படைப் போர் இலக்கியங்களில் இடம் பெற்றிருக்கும் போர் நிகழ்வுகளுக்கு இறைவழி பாட்டுக்

கொள்கை வேறுபாடு காரணமாகின்றது. 'ஒன்றே இறை' என்னும் இஸ்லாத்தில் வழிபாட்டு நெறி முறையைப் பகைவர்கள் ஏற்றுக் கொண்டவுடன் அவர்கள் இழந்த நாடு அவர்களிடமே மீண்டும் ஒப்படைக்கப்படுகிறது. படைப் போர் இலக்கியங்களில் இடம் பெற்றிருக்கும் இச்செய்தி பரணி இலக்கியங்களிலிருந்து பெரிதும் வேறுபட்டுள்ளது.

இன்னும் இலக்கியங்களுக்குப் பெயரிடுவதிலும் கூட பரணி இலக்கியங்களிலிருந்து படைப் போர் இலக்கியங்கள் வேறு பட்டுள்ளன. போரில் வெற்றி பெற்றவனைப் புகழ்ந்து பாடுவதே பரணி இலக்கியங்களாயினும் போரில் தோற்றவனின் பெயரைச் சார்ந்திருப்பதே பெரும்பாலான பரணி நூல்களாகும். இதற்குச் சான்றாகச் சூரன்வதைப் பரணி, இரணியன் வதைப் பரணி, போன்றவற்றைக் கூறலாம். இன்னும் சில பரணி நூல்கள் கலிங்கத்துப் பரணி என்பது போன்று போர் நடைபெற்று வெற்றி பெற்ற இடத்தின் பெயர்களைப் பெற்றுள்ளன. ஆனால் படைப் போர் இலக்கியங்களுள் பெரும்பாலான போரில் வெற்றி பெற்றவர் களின் பெயரையே தலைப்பாகக்கொண்டுள்ளன. இன்னும் சில படைப் போர் இலக்கியத்திற்குரிய மையக் கருத்தை வெளிக் காட்டும் வகையில் நபுஸூ படைப் போர், சூறாவளிப் படைப் போர் எனப் பெயரிடப்பட்டுள்ளன. சில படைப் போர் இலக் கியங்களே போரில் தோல்வி பெற்ற மன்னர்களின் பெயரைத் தலைப்பாகப் பெற்றுள்ளன. போரின் மையக் கருத்தைத் தலைப் பாகக் கொண்ட எந்தவொரு பரணி நூலும் இல்லை. அதேபோல் போர் நிகழும் இடங்களின் பெயரைத் தலைப்பாகக் கொண்ட எந்தவொரு படைப் போர் இலக்கியமும் இல்லை.

கடவுள் வாழ்த்துப் பகுதியில்கூட பரணி, படைப் போர் இலக்கி யங்களுக்கிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. பரணி நூல் களில் உள்ள கடவுள் வாழ்த்துக்கள் நூல் இனிது முடிதல் வேண்டும் என்ற முறையில் அமையவில்லை. இந்நூலினை இயற்றக் காரணமாயிருக்கும் பாட்டுடைத் தலைவன் பெருவாழ்வு வாழ வேண்டும் என்ற அமைப்பில் காணப்படுகின்றன. ஆனால் படைப் போர் இலக்கியங்களில் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பெருமை களும், அவன் வழிவந்த இறைநேயச் செல்வர்களும் புகழ்ந்து பாடப் பட்டுள்ளனர்.

மேலும் பரணி இலக்கியங்களில் உள்ள அதீதக் கற்பனைகளும் இன்பச் சுவைகளும் இஸ்லாத்திற்கு ஏற்றதாக அமையாததால்

படைப் போர் இலக்கியங்களில் அவற்றிற்கு முஸ்லீம் புலவர்கள் இடமளிக்கவில்லை. எனவே போர் நிகழ்ச்சிகளைப் பாடுதல் என்ற ஒரு நிலையில் மட்டுமே பரணி இலக்கியங்களைப் படைப் போர் இலக்கியங்கள் ஒத்துள்ளனவேயன்றிப் பிற உருவ உள்ளடக்கங் களில் பெரிதும் வேறுபட்டிருப்பதால் படைப் போர் இலக்கியங் களைப் பரணி இலக்கியங்களிலிருந்து வேறுபட்ட புதிய இலக்கிய வடிவமாகக் கொள்ளலாம். இப் படைப்போர் இலக்கியங்கள் இஸ்லாமியக் கருத்துக்கள் அல்லாத வேறு நிலைகளில் காணப் படாததால் இவற்றைப் 'புதுவகை இஸ்லாமியத் தமிழிலக்கிய வடிவம்' என்று குறிப்பிடலாம்.

அறபு மொழியில் 'கிதாபுல் மகாசி' என்னும் நூல் முகமது இவ்னுல் உமருல் வாக்கிதி என்பவரால் இயற்றப்பட்டுள்ளது' கிதாபுல் மகாசி என்பதன் பொருள் போர்களின் நூல் என்பதாகும். இது பெருமானார் நபி (சல்) அவர்கள் நிகழ்த்திய போர்களை விரித்துரைக்கிறது. இந்நூலே முஸ்லீம் புலவர்களுக்குப் படைப் போர் என்னும் புதுவகை தமிழிலக்கியங்களை உருவாக்குதற்குத் தூண்டுதலாக இருந்தது எனலாம். இதன் அடிப்படையில் இஸ்லாமிய வரலாற்றில் எதிர்கொண்டப் பல போர் நிகழ்ச்சிகளை யும் படைப் போர் என்னும் இலக்கிய வடிவத்தின் அடிப்படையில் முஸ்லீம் புலவர்கள் விவரித்துள்ளனர். இதுவரையில் படைப் போர் இலக்கிய வடிவத்தின் அடிப்படையில் பதின்மூன்று இலக்கியங்களை இஸ்லாமியத் தமிழிலக்கியம் பெற்றுள்ளது. இவற்றுள் முதற்கண் தோன்றிய பெருமையைப் பெறுவது சக்கூன் படைப் போர் ஆகும். எனவே இப்படைப் போர் பற்றிய செய்தி களை விரிவாகக் காண்போம்.

சக்கூன் படைப் போர் கதை

சக்கூன் என்பவன் முஸ்லீம் அல்லாதவர்களின் கூட்டத்திற்குத் தலைவனாவான். இது பெருமானார் நபி (சல்) அவர்கள் காலத்தில் நடைபெற்ற போர்களுள் ஒன்றாகும். முஸ்லீம் அல்லாத அரசனான சக்கூன், இராக் நாட்டின் அரசனாக இருந்தவன். அவனிடத்துப் பெருமானார் நபி (சல்) அவர்கள் இஸ்லாத்தின் ஏகத்துவ இறைவழிபாட்டு நெறி முறைகளை வலியுறுத்த வேண்டி மேற்கொண்ட முயற்சியின் பயனாகப் போர் நிகழ்கிறது. போரில் சக்கூன் தோற்கடிக்கப்பட இறுதியில் சக்கூனும் அவனது கூட்டத் தாரும் நபி (சல்) அவர்களுக்குக் கீழ்ப்படிந்து இஸ்லாத்தின்மீது ஈமான் கொண்டு முஸ்லீமாக மாறுகின்றனர். இறுதியில் இஸ்லாத்

தின் ஏற்றத்தைச் சக்கூனும் அவனைச் சார்ந்தவர்களும் ஏற்றுக் கொண்டதால் அவன் இழந்த நாட்டினை அவன் வசமே மீண்டும் ஒப்படைத்து அவனையே அரசனாக இருந்து இஸ்லாத்தின் வழியில் ஆட்சி புரியும்படிச் செய்வித்தார்கள் நபி பெருமானார் (சல்) அவர்கள்.

ஆசிரியர்

சக்கூன் படைப் போர், மதுரை நாளெட்டில் வென்றா னென்றும் பீர்கானென்றும் வழங்காநின்ற முகம்மதுப் புலவர் குமாரர், வரிசை முகியித்தீன் புலவரால் இயற்றப்பட்டதாகும். இவ்விலக்கியம் முதன் முதலில் காயற்பட்டினம் கண்ணகுமதுமகுதூ முகம்மது புலவரால் பார்வையிடப்பட்டு ஏ. குப்புசாமி நாயுடால் 1908 ஆம் ஆண்டு அவரது சென்னை கருணாநிதி அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

சக்கூன் படைப் போரின் காப்புவெண்பா செய்யுளில் ஆசிரியர் நபி பெருமானார் (சல்) அவர்கள். சக்கூனை வென்ற கதை இஃது என்பதைக் கூறுகிறார்.

பொன்னுலகுகண்ட நபி போர் பொருது சக்கூனை
இந்(நிலவு)லுகில் வென்றகதை யான் பாட—முன்னூல்கள்
பூணவரிதான பொற்புள தெல்லாம் படைத்துங்
காணவரி தாகி நின்றோன் காப்பு

கடவுள் துதி

காப்புச் செய்யுளைத் தொடர்ந்து கடவுள் துதி என்ற தலைப்பில் முதல் பத்துக் கண்ணிகள் அமைந்துள்ளன. இக் கண்ணிகள் அல்லாஹ்வின் பெருமையினையும் அவனது ஆற்றல் களையும் தெள்ளத் தெளிவாக எடுத்துரைப்பனவாக உள்ளன.

வானும்புவியு மலைகடலுஞ் சந்திரனும்
பானுமுடுவும் பனிமுகிலுங் காற்றதுவும்
அறுசுகுறுசுலவ்கு அம்கலம் சுவர்க்கம் நரகம்
திசை மலக்குகளு மண்ணிலுள்ள மாந்தர்களும்
மேவு பறவைகளும் விலங்கினமு மூர்வனமும்
எல்லாம் படைத்தே யிரணமிக ஈபவனே
அல்லாவேயுன்றன் அருளுதவி செய்வாயே
மக்காபுரத்தார் முகம்மதுற்றசூல் நயினார்
சக்கூனை வென்ற சரித்திரத்தை யான் பாட
எக்காலுமுள்ள வேகனே காத்தருள்வாய்

(கடவுள் துதி : வரி 1-11)

ஆசிரியரின் இவ்வரிகள் அல்லாஹ்வின் படைப்பாற்றல் திறத்தையும் என்றும் அழிவில்லாத தன்மையையும் எடுத்துக் காட்டுகின்றன. இதில் மூன்றாம் வரியில் ஆசிரியர் குறித்துள்ள 'அறுசு குறுசு' என்பன இஸ்லாத்தில் அதி உன்னதச் சிறப்பு பெறுவதாகும். அறுசு என்னும் அறபுச் சொல்லின் பொருள் சிம்மாசனம் என்பதாகும். எல்லாம் வல்ல அல்லாஹ் இங்கிருந்தே அகில அண்டகோலங் களுக்குமான ஆணைகளைப் பிறப்பிக்கின்றான். படைப்புக்கள் அனைத்தும் இதில் அடங்கியிருக்கின்றன.

அர்ஸ் பற்றி அல்லாஹ் அல்குர் ஆனில் பல இடங்களில் குறிப் பிட்டுள்ளான். ஒரு ஆயத்தில் '(மனிதர்களே)' உங்கள் இறைவ னாகிய அந்த அல்லாஹ் தான் வானங்களையும் பூமியையும் ஆறு நாட்களில் படைத்து, 'அர்ஷின்' மீது தன் ஆட்சியை நிலை நாட்டினான். (இவை சம்பந்தப்பட்ட) சகல காரியங்களையும் அவனே திட்டமிட்டு நிர்வகித்தும் வருகின்றான். (10:3) என்று குறிப்பிட்டுள்ளான். இதே கருத்தை அடுத்த பதினோராவது அத்தியாயத்தில் ஏழாவது திரு வசனம் 'அவன் தான் வானங்களை யும் பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான் (அச்சமயம்) அவனுடைய அர்ஷு நீரின் மீதிருந்தது' எனக் குறித்துள்ளது. மேற் குறித்த அல்குர் ஆனின் பத்தாவது அத்தியாயம் மூன்றாவது திருவசனத்தையே மீண்டும் அல்லாஹ் 20-வது அத்தியாயம் நான்கு ஐந்தாவது திரு வசனங்களிலும் உறுதிப் படுத்தியுள்ளான். எனவே அர்ஷு என்பது அல்லாஹ்வின் சிம்மாசனம் என்ற பெருமையையும் சிறப்பையும் பெறுவதாகும்.

இத்தகு சிறப்புப் பெற்ற அர்ஷை வானவர்கள் சுமந்து கொண் டுள்ளனர். இவர்கள் அல்லாஹ்வின் திருப்புகழை ஸுப்ஹானல் லாஹி வபி ஹம்மதிஹி' என்று பாடிக் கொண்டும் அர்ஷை நோக்கித் தொழுதுகொண்டும் இருப்பர். இதனையும் அல்குர் ஆன் இவ்வாறு குறிப்பிடுகிறது. அர்ஷைச் சுமந்து இருப்பவர்களும் அதனைச் சூழ இருப்பவர்களும் அவனை விசுவாசிக்கிறார்கள். விசுவாசங் கொண்டோரின் குற்றங்களை மன்னிக்கும்படியும் கோருகிறார்கள். 'எங்கள் இறைவனே; நீ (உன்னுடைய) ஞானத் தாலும் கருணையாலும் யாவையும் சூழ்ந்து நிற்கிறாய். ஆகவே (பாபங்களைவிட்டு) விலகி உன்னுடைய வழியைப் பின்பற்று வோருக்கு நீ மன்னிப்பளித்து அவர்களை நரக வேதனையிலிருந்து நீ காத்துக் கொள்வாயாக!' (40:7) இக் கருத்துக்கள் இஸ்லாத்தில் அர்ஷ் பெறும் சிறப்பிடத்தைத் தெள்ளத் தெளிவாக நமக்குக்

காட்டுகின்றன. இமாம் ஹுஸைனி அர்ஷ் பற்றிக் கூறும்போது இது 8000 தூண்களை உடையது என்றும் ஒரு தூணுக்கும் பிறிதொரு தூணுக்கும் இடைப்பட்ட இடைவெளி 300000 மைல்கள் ஆகும் என்பார்.

குர்ஸ் என்பது இறைவன் படைத்துள்ள எட்டாவது வானத்தின் பெயராகும். அல்லாஹ் ஒன்பது வானங்களைப் படைத்துள்ளான். அவற்றுள் முதல் இரண்டு வானங்களும் முறையே இறை நம்பிக்கையாளர்களின் ஆன்மாக்களுக்காகவும், தம்மை வணக்கம் செய்பவர்களின் ஆன்மாக்களுக்காகவும் அமைக்கப்பட்டுள்ளன. மூன்றாவது வானம் துறவிகளின் ஆன்மாக்கள் தங்குமிடமாகும். நான்காவது வானம் ஞானிகளின் ஆன்மாக்களுக்குரியது. ஐந்தாவது, ஆறாவது வானங்கள் நபிமார்களின் ஆன்மாக்களுக்காக ஏற்படுத்தப்பட்டன. ஏழாவது வானம் இறசூல்மார்களின் ஆன்மாக்களுக்குரியதாகும். இதற்குமேல் உள்ள எட்டாவது வானமே 'குர்ஸு' என்று அழைக்கப்படுகிறது. இது உலுல் அஸ்மியான நபிமார்களின் ஆன்மாக்கள் தங்குமிடமாகும். உலுல் அஸ்ம் என்பதன் பொருள் துணிந்தவர்கள் என்பதாகும்.

உலகில் தோன்றிய 1,24,000 நபிமார்களுள் மூஸா (அலை) இப்றாகீம் (அலை), நூஹு (அலை), ஈஸா (அலை), முகம்மது நபி (சல்) ஆகிய ஐவரையும் உலுல் அஸ்ம்' என்று குறிக்கப்படுகிறது. நபிமார்களுள் முதன்மைத் தகுதி பெறுபவர்களும் இவர்களே ஆவர். இவர்களது ஆன்மாக்களுக்காகப் படைக்கப்பட்ட வானமே குர்ஸ் எனப்படுகிறது. இதற்கு மேல்தான் அல்லாஹ்வின் சிம்மாசனமான 'அர்ஷ்' எனப்படும் ஒன்பதாவது வானம் உள்ளது. இவ்விரண்டினையுமே இங்கு வரிசை முகையத்தீன் புலவர் குறிப்பிட்டுள்ளார்.

இறைத் துதியைத் தொடர்ந்து நந் நபியினடிமலரையும், வள்ளல் அபூபக்கர் சித்தீக் (றலி), உமறு கத்தாபு (றலி) ஆகியோரின் திருவடிகளையும் போற்றுகின்றார் ஆசிரியர். அத்துடன் இறை நேசச் செல்வர்களான பகுதாது வாழ் செய்யிது முகியித்தீன் முதலானவர்களையும் நினைவுகூர்ந்து

அறிவையறியாத வடியேனென் பாடலிலே
நிறையும் பிழையகற்றும் நிலையார் பெரியவரே

என முதல் இருபது கண்ணிகளில் வரிசை முகியத்தீன் புலவர் தமக்குச் சக்கூன் படைப்போர் பாடுதற்கு நல்லருள் புரியுமாறு

பல்லோரையும் வேண்டுகின்றார். இவ்வாறு வேண்டுதல் நிகழ்த்திய பின் ஆசிரியர் தான் சார்ந்த ஊரினைப்பற்றியும் தம் முன்னோர் களைப் பற்றியும் கூறுகின்றார்.

வைகைநதி பூரணமாய் வளமோடு சூழ்ந்த நல்ல
செய்கையுள்ள கூடற் றிருநகர்க் கதிபதியாய்
வாழுமிகலானுடைய மைந்தன யினானுதவும்
ஆளும் நயினார் தமக்கும் அன்பான புத்திரனாம்
மிக்கபுகழுடைய மீறான் மனமகிழ்ந்து
அக்கனுதவியினா லநேகங் கொடை கொடுத்து
சந்தோஷமாகத் தான்பாடி கேட்டதனாற்
சிந்தாகுலந்தவிரச் செப்பினேனிக் கதையை
(கடவுள் துதி கண்ணி : 21-24)

நூலின் இவ்வகச் சான்றுகளிலிருந்து புலவர் மதுரையைச் சேர்ந் தவர் என்பது பெறப்படுகிறது. மேலும் நயினார் என்பவரின் புத்திரரான மிக்க புகழுடைய மீறான் என்னும் பெரியார் மன மகிழ்ந்து அல்லாஹ்வின் உதவியினால் பல கொடை கொடுத்தே வரிசை முகியித்தீன் புலவரைச் சக்கூன் படைப்போர் பாடச் செய் துள்ளார் என்ற செய்தியையும் அறிய முடிகிறது. தாம் சக்கூன் படைப் போர் இயற்றப் பொருளுதவி செய்த புரவலரைப் பெருமைப்படுத்தும் வகையில் ஆசிரியர் நூலின் முகப்பிலேயே அவரைப் பற்றிக் குறித்துள்ளார்.

காலம் : நூலின்கண் அகச் சான்றுகளுள் புரவலர் பற்றிக் குறிப்பிடும் கண்ணிகளுக்கு அடுத்த நிலையில் உள்ள கண்ணிகள் சக்கூன் படைப் போரின் காலத்தைத் தெளிவாக வரையறை செய்கின்றன.

வல்லநயினார் மாமதினமூர் போகச்
செல்லுமாண்டாயிரமுஞ் செப்புந் தொண்ணூற் றெட்டதிலே
அச்சய வருடமதிலான திங்க ளாவணியில்—
இச்சை கொளுந் தெய்தி யிருப்பத்தைந்தானதிலே
மெத்த புகழ் பெருகும் வெள்ளிக்கிழமை யன்று
குத்து பாப்பின்னர் கூறினேனற் றமிழால்
நூறுத்தினென்பவரி னோக்க முறுமைந்தனல்ல
மீறிசுமாயில் விளங்கப் படித்திருந்த
விருத்தத்தை வேண்டாவை மேதினியிலே தெளிவாயத்
திருத்தமுடன்தனைச் சேர்த்தேன் தெரிந்தெடுத்து

பெரியோரனுதவியினாற் பீருகானின் புதல்வன்
வரிசை முகியித்தீன் மகிழ்வாகப் பாடினனே,
(கடவுள் துதி:கண்ணி 25-30)

இவ்வரிகள் சக்கூன் படைப் போர் இயற்றப்பட்டது ஹிஜ்ரி 1098 ஆம் வருடம் என்பதை தெளிவாக உணர்த்துகின்றன. ஹிஜ்ரி ஆண்டான இதற்கு இணையான கிறித்துவ வருடம் 1686 ஆகும். வருடத்தைக் குறித்ததற்குப் பின் ஆசிரியர் மாதம், தேதி, கிழமை களையும் நமக்கு உணர்த்துகின்றார். நூலின் அகச் சான்றுகளின் படி 1686 ஆம் வருடம் ஆவணி மாதம் இருபத்தியைந்தாம் தேதி வெள்ளிக்கிழமை நண்பகல் நேர குத்துபா தொழுகைக்குப் பின்னரே வரிசை முகியித்தீன் புலவர் சக்கூன் படைப் போரை அரங்கேற்றம் செய்துள்ளார். எனவே சக்கூன் படைப் போர் இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் கால அடிப்படையில் கனகாபிஷேக மாலைக்கு அடுத்துள்ள எட்டாவது இடத்தைப் பெறுகிற தெனலாம். கனகாபிஷேக மாலை தோன்றிய காலத்திற்குப்பின் முப்பத்தெட்டு ஆண்டுகள் கழிந்த பின்னரே சக்கூன் படைப் போர் தோன்றியுள்ளது. இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் காலத் தால் எட்டாவது இடத்தைப் பெறினும் படைப் போர் இலக்கிய வடிவங்களுக்கு முன்னோடியான முதன்மை இடத்தைச் சக்கூன் படைப் போர் பெறுகிறது. எனவே ஒரு புதுவகை இலக்கிய வடிவத்தைத் தமிழிலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்வித்த பெருமை வரிசை முகியித்தீன் புலவரைச் சாரும்.

கதையோட்டம்

சக்கூன் படைப் போரின் முதல் முப்பது கண்ணிகள் நிறைவு பெற்ற பின்பு முப்பத்தோராவது கண்ணியிலிருந்தே சக்கூன் படைப் போரின் கதையோட்டம் தொடர்கிறது. சக்கூன் படைப் போரில் மொத்தம் எண்ணூற்று எண்பது கண்ணிகள் அமைந்திருப் பினும் முதல் முப்பது கண்ணிகள் நூலின் கதைப் பகுதியுடன் நேரடியானத் தொடர்புடையதன்று. இனிச் சக்கூன் படைப் போரின் உள்ளடக்கத்தை விரிவாகக் காண்போம்.

சக்கூன் படைப் போரின் தொடக்கம் இவ்வாறு உள்ளது.
பாருலகில் வல்ல பயகாம்பர் தாமிருந்து
சீருடனே யெங்குந் தீனிசுலாந்தான் வளர
நன்மையது வளர நற்புகழேயோங்கி வரத்
திண்மையகல வெகு திட்டாந்தரங்கள் செய்தார்

நாயனருளாலே நபிப்பட்டந் தானிரங்கி
தூய ஜிபுரிலுந் தூதுநிதம் வந்து சொல்ல
இயல்பாகக் காபீர்களை யெங்குங் கருவறுத்துப்
பயகாம்பர் தீனைப் பயிரேற்றும் நாளையிலே (1-4)

எனக் குறித்திருப்பதின் மூலம் சக்கூன் படைப் போர் நடைபெற்ற காலக்கட்டத்திற்குரிய பின்புலத்தை ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். பெருமானார் நபி (சல்) அவர்களுக்கு நபிப்பட்டம் வந்து தீனுல் இஸ்லாத்தை வளர்த்து வரும் காலக் கட்டத்திலேயே சக்கூன் படைப் போர் நடைபெற்றிருக்க வேண்டும். சக்கூன் படைப் போர் நபி (சல்) அவர்கள் தம் வாழ்வில் இஸ்லாத்தைப் பரப்புவதற்காக மேற்கொண்ட போர் எனக்குறிப்பிடும் ஆசிரியர், எப்பொழுது நடைபெற்றது என்பதைக் கால வரையறை செய்து காட்டவில்லை. ஆனால் நபிப்பட்டம் பெருமானார் நபி (சல்) அவர்களுக்கு வந்ததற்குப் பின் என்று குறித்திருப்பதிலிருந்து பெருமானார் நபி (சல்) அவர்களின் நாற்பதாவது வயதிற்குப் பின்பே சக்கூன் படைப் போர் நிகழ்வுற்றிருக்க வேண்டும் ஏனெனில் அண்ணலெம் பெருமானார் (சல்) அவர்களுக்கு நபிப் பட்டம் அல்லாஹ்வால் அருளப்பட்டது அவர்களின் நாற்பதாவது வயதில் ஆகும். எனவே இஸ்லாமிய வரலாற்றுத் துவக்கமான ஹிஜ்ரி ஆண்டுத் துவக்கத்திற்கு முன்னரே சக்கூன் படைப் போர் பெருமானார் நபி (சல்) அவர்களின் வாழ்வில் நடைபெற்றிருக்க வேண்டும்.

முன் மாதிரியான நபி (சல்)

பெருமானார் நபி (சல்) அவர்களது வாழ்வியல் நிகழ்வுகள் ஒவ்வொன்றும் அல்லாஹ்வின் மேலான கட்டளைகளுக்கிணங்கவே நடைபெற்றிருக்கின்றன. இறையொலி பெற்று நபி (சல்) அவர்கள் அல்லாஹ்வின் வழித் தம் செயல்கள் அனைத்தையும் மேற்கொண்டதால் அவர்கள் ஈடுபட்ட காரியங்கள் அனைத்தும் பெரும் வெற்றியாக முடிந்தன. உலகுக்கு ஓர் முன் மாதிரியாக நபிகள் நாயகம் (சல்) அவர்களின் வாழ்வியலை உலகுக்கு அல்லாஹ் அமைத்துக் காட்டியதால் அன்னாரின் வாழ்வில் எந்தவொரு செயலும் அல்லாஹ்வின் முன்னறிவிப்புடனேயே நடைபெற்றது. இதற்கேற்பவே சக்கூன் படைப்போருக்குரிய முன்னறிவிப்புங்கூட அல்லாஹ்விடமிருந்து வருவதாக வரிசை முகியித்தீன் புலவர் குறிப்பிட்டுள்ளார். நபி (சல்) அவர்களுக்கு அல்லாஹ்வின் கட்டளைகள் அனைத்தையும் அருள்பவர் இறைத்தூதர் ஜீப்றயீல்

(அலை) ஆவார். அதற்கேற்ப சக்கூன் படைப் போர்பற்றிய அறிவிப்பையும் ஜிப்றயில் (அலை) பெருமானார் நபி (சல்) அவர்களுக்குக் கூறுகின்றார்.

வல்லவன்றன் றூதர் முகம்மதுற்றசூல் நயினார்
நல்ல அசுகாபியவர் நாற்பத்திரா யிரரும்
வானமதிதன்னை வான்மீன்கள் சூழ்ந்ததுபோல்
ஈனந்தனையகற்றி யெழில் நெறிகள் சொக்கையிலே
வானோர் ஜீபுரீல்தான் வல்லான்றிருநபி முன்
நானமுடன் வந்திறங்கி நம்மாதிதானுரைத்தே
துய்யகலாமெனவே துரிதவகையையுரைத்தங்
கையமில்லாதவன் சொல் வதைக்கேளும் நந்நபியே
இந்தப் புவியி லிறாக்கென்னு மண்டபத்தில்
அந்தமாரும் மலையொன்றதின் மேலொரு கோட்டை
முப்பதின் காதவழி முதுபுரிசையின்னீட்டஞ்
செப்பறுடன் காதஞ் சிறப்பா யெழுபதுண்டும்
இக்காத மொன்றாழ மிலங்குமதிலுயரம்
மிக்கான கொத்தளங்கள் மிகுதிபதினாயிரமாம்
அந்தப் பூமிதன்னி லதிபதி சக்கூனரசன்
சிந்தைக் குறியனல்ல ஜின்பதினான் காயிரங்கள்
பாயும் புரவிகளும் பதினாறிலக்க முண்டுன்
சேயுமரசனுக்குத் திறலுடையோர் நால்வருண்டும்
வல்ல படைத்தலைவன் மகாபுலஅ சுனருபிலுண்டுஞ்
சொல்லரிய சக்தியுள்ள சூரரொரு நால்வருண்டும்
இவ்வுலகின் மன்ன ரிவற்கெதிரி யாருமில்லை
அவ்வரசன் பாரி லாண்மையுடனே நடந்து
சென்று குபிர் களைந்து தீன் பயிரங்கேற்று மென்றார் (34-46)

இங்குச் சக்கூன் அரசனிடம் இஸ்லாத்தின் ஏற்றம் கூறித் தீன் பயிரங்கேற்றும் என்று கூறும் ஜிப்றயீல் (அலை) சக்கூன் அரசன் பற்றிய விவரங்களையும் அவனது படைத்திறமைகளையும் வலிமைகளையும் கூறுவதாக உள்ளது. ஜிப்றயீல் (அலை) கூற்றின் மூலமாகச் சக்கூனரசன் இறாக் நாட்டினைச் சார்ந்தவன் என்பது பெறப்படுகிறது. மேலும் சக்கூன் படைப் போரில் முக்கியமாகச் சக்கூனரசன் பொருட்டுத் தலைமையேற்றுப் போர் செய்யும் படைத்தளபதி சுனாபீல் மற்றும் சக்கூனரசனுடைய புதல்வர்கள் நால்வரையும் ஆசிரியர் சக்கூன் படைப் போரின் ஆரம்பத்திலேயே ஜிப்றயீல் (அலை) கூற்றின் மூலமாக அறிமுகம் செய்வித்து விடுகின்றார்.

சக்கூன் அரசனுடைய படை வலிமையைப் படிப்போர் உணரத்தக்க விதத்தில் அவற்றின் வர்ணனைகள் அமைந்திருப்பதால் பெருமானார் நபி (சல்) அவர்கள் எதிர்கொள்ளப்போகும் பகைவருடைய படை வலிமையையும் முன்னறிவிப்புச் செய்து விடுகின்றார் வரிசை முகியித்தீன் புலவர். அத்துடன் ஜிப்றயீல் (அலை) கூறும் 'இவ்வுலகின் மன்னர் இவருக்கெதிரி யாருமில்லை' என்னும் கூற்றும், அத்தகையோனை எதிர்த்துத் தீன் பயிர் அங்கு ஏற்றுக என்னும் கட்டளையும் நிகழப்போகும் போர்ச் சிறப்பையும், நபி (சல்) அவர்களின் போர் வலிமையையும் உணர்த்துவதாக உள்ளது. போர்ப் படைகள் பல பெற்றும், நாட்டிலுள்ள மன்னர்கள் அனைவரும் வணங்கத்தக்க பெருமை பெற்றவனாயினும் சக்கூனரசன் இஸ்லாத்திற்கு முரணான இறைவழிபாட்டு நெறி முறைகளைப் பின்பற்றி வந்ததால் ஜிப்றயீல் (அலை) அவனைப் பற்றிக் கூறும்போது 'சிந்தைக் குரியனல்ல' என்று கூறுவதாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்சொன்ன கூற்றின் இறுதியில் 'குபிர் களைந்து தீன் பயிரங்கேற்று' என்னும் அடியில் உள்ள குபிர் என்பதன் நேர் பொருள் 'உண்மையை மறைத்தல்' என்பதாகும். எனினும் குபிர் என்பது அல்குர் ஆனில் அல்லாஹ்வை மறைத்தல், நிராகரித்தல் என்னும் பொருளில் பயன்பட்டுள்ளது. அல்லாஹ் ஒருவனேயன்றி வேறில்லை என்பதைக் கேட்டவர்கள் சிலர் அதனை வார்த்தையால்கூட ஏற்றுக் கொள்ளாது எதிர்ப்புக் குரல் எழுப்பி விடுவார்கள். அவர்கள் இறை ஒன்றே என்பதற்கு எதிராக வன்முறையிலும் கூட இறங்கத் தயங்கமாட்டார்கள். அத்தகையோர் 'குப்ர் ஜஹித்' என அழைக்கப்படுவர். இறை ஒன்றே என்பதற்கு எதிர்ப்புக் காட்டும் இத்தகைய குப்ரை எதிர்த்து நிற்குமாறு அல்லாஹ் கூறுகின்றான். எனவே இதற்கேற்பவே அல்லாஹ்வின் கட்டளைகளை இவ்வுலகில் நடைமுறைப்படுத்த அனுப்பி வைக்கப் பட்ட நம் நபி பெருமானாருக்கும் சக்கூன் அரசனுடைய குப்ர் அகற்றும்படியான கட்டளையை ஜிப்றயீல் (அலை) தெரிவித்தார்.

ஜிப்றயீல் (அலை) கட்டளையைக் கேட்டவுடன் அல்லாஹ்வின் ஆணைதனைச் சிரம் தாழ்த்தி ஏற்று மனம் மகிழ்ந்து காபிர்களைக் களைந்தெறிய வேண்டி வீரர்கள் திரண்டு வரும்படிப் பறைசாற்ற நந்நபி நயினார் கட்டளை பிறப்பித்தார். அவர்களின் கட்டளை

யைப் பறைசாற்றக்கேட்ட அசுகாபிமார்கள் நபி பெருமானார் (சல்) முன் வந்து குவிந்தார்கள். அவ்வாறு வந்தடைந்த வீரர் களுள் முக்கியமான சிலரும் அடங்குவர்.

அவ்விசளங்கேட்டு யார்களசுகாபிகளும்
ஆலநபிமாமர் அபூபக்கரு முமறும்
சீலநபிமருகர் திருவுதுமா னும்மலியும்
வீராதிவீரர்களும் திறலசுகாபிமாரும்
தீராதிநந் நபிமுன் சென்றார்களப்போது (51-53)

இங்குக் குறிப்பிடப்பட்டிருக்கும் அபூபக்கர் (றலி) உமறு (றலி) ஆகியோர் இஸ்லாத்தின் ஆட்சியை இவ்வுலகில் நபி (சல்) அவர்கள் நிலைபெறச் செய்து மறைந்தபின் இஸ்லாமிய நெறியில் ஆட்சி செலுத்திய முதல், இரண்டாவது கலிபாக்களாவர். இதுபோல் உதுமான் (றலி) மூன்றாவது கலிபாவாகவும் அலி (றலி) நான்காவது கலிபாகவும் இருந்து ஆட்சி புரிந்தவர்களாவர். இவ்வாறு கலிபா வாகத் திகழ்ந்த நால்வரும் ஏனைய அசுகாபிமார்களும் பெருமா னாரின் அறிவிப்பைக் கேட்டு அவர்களை வந்தடைந்து சூழ்ந்தனர். அவர்களிடத்து நபி (சல்) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையை, ஜிப்றயீல் (அலை) அறிவித்த செய்தியனைத்தையும் உரைத் தார்கள்.

ஒன்றான ஜிபுரியிலிங் குரைத்தவிசளமெல்லாம்
வகைவகையாய்ச் சொல்ல மகிழ்ந்தார்கள் யார்களெல்லாம்
பகையான காபிர்கள் மேற்படை நடத்த வேண்டுமென்ற
நான்கியார்கள் தாமும் நயினார் முகம்மதுடன்
தீன்புகுதும் நல்ல திறலசுகாபிகளும்
மொழியு முப்பத்து மூவாயிரம் பரியும்
வழியிற் பிசகாத வரிசை வணக்கத்தோடும்
அருந்தவங்கள் செய்யு மலியார் குமாரர்களும்
பொருந்தனமாய்ச் சேரப் புறப்பட்டார்கள். கண்ணி (55-57)

நான்கியார்கள் என்பது மேற்சொன்ன நான்கு கலிபாக்களை குறிப்பதாகும். அசுகாபிமார்கள் என்பது அண்ணல் நபி (சல்) அவர்கள் தோழர்களைக் குறிப்பதாகும். பெருமானார் (சல்) அவர்களுடன் பழகியவர்களில் ஒருவரைக் குறிப்பதற்குச் சகாபி என்பதும் பலரைக் குறிப்பதற்கு அசுகாபி என்ற சொல்லும் பயன் படுத்தப்படுகின்றன. ஆனால் ஈத் இபுனுல் மௌஷியா (Id-Ibunul Mousaiya) குறிப்பிடும்பொழுது அசுகாபி என்பது பெருமானார்

(சல்) அவர்களுடன் பழகியவர்களுள் ஒருவருடமும் அதற்கும் மேற்பட்ட நிலையில் பழகியவர்களையும், நபி (சல்) அவர்களுடன் இஸ்லாத்தைப் பரப்புவதற்காகப் போர்க்களத்தில் பங்கு பெற்றவர்களையும் குறிக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இதற்கேற்ப சக்கூன் படைப்போரில் பெருமானாருடன் பங்குபெறப் போவோரையும் வரிசை முகியித்தீன் புலவர் அசுகாபிகள் என்ற சொல்லின் மூலம் குறிப்பிட்டுள்ளார்.

போர்ச் சிறப்பு

இவ்வாறு அனைவரும் சக்கூன் அரசனை எதிர்பதற்காகப் புறப்பட்டபின் அவர்கள் சென்ற வழியையும் பெருமானார் (நபி) அவர்களுடன் சென்ற போர்ப்படைகள் பற்றிய வர்ணனையையும் ஆசிரியர் பல கண்ணிகளில் விரிவாக எடுத்துக் காட்டியுள்ளார்.

வில்லோடு வில்லிடற வேலேடு வேலிடற
வல்லாதயுதங்களெல்லாம் வான்மீன் போற்றுலங்க
வாசிவிதம் விதமாம் வாகுநடை செய்துவரத்
தோழர் மிக மகிழச் சுபமங்கலங் கூறிவர
வாழும் வானோர் சுற்றிவர மன்சலாத் தோதிவர
சேனைமிக மகிழச் சிங்கக்கொடி பிடிக்கத்
தானைமிக மகிழத் தகுலீற்றசுபீ குரைக்க (62-65)

போருக்குச் செல்லும் சேனைகளைக் கூறும்போது 'தகுலீற்றசுபீகுரைக்க'ச் சென்றனர் எனக் கூறப்பட்டுள்ளது. தகுலீல், தசுபீகு ஆகிய இரு சொற்களும் ஆழ்ந்த பொருள் உடைய அறபுச் சொற்களாகும். அறபில் தஹ்லீல் என்பது 'அல்லாஹ் இன்றி வேறு தெய்வமில்லை' என்று பொருள்படும் 'லாயிலாக இல்லல்லாஹ்' என்னும் அறபுச் சொற்றொடரை உச்சரித்தலை உணர்த்துவதாகும். இவ்வறபுச் சொற்றொடரே இஸ்லாத்தின் மூல மந்திரம். இதுவே இஸ்லாத்தில் முதல் கலிமா என அழைக்கப் படுகிறது. தசுபீகு என்பது அல்லாஹ்வைப் புகழுதல் என்று பொருள்படும். முஸ்லீம்கள் எந்தவொரு சிறு காரியத்திலும் ஈடுபட்டால் தகுலீல், தசுபீகு ஆகிய இரண்டினையும் சொல்லல் வேண்டும். அதற்கேற்பவே சக்கூன் அரசனை எதிர்க்கச் செல்லும் பெருமானார் (சல்) அவர்களின் படை வீரர்கள் இஸ்லாத்தின் மூல மந்திரத்தை முழங்கிக் கொண்டும் அல்லாஹ்வைத் துதி செய்து கொண்டும் சென்றார்கள் என ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகு முறையில் படை வீரர்களைப் பெருமானார் நபி (சல்) அவர்கள் நடாத்தி வரும்போது கடல் ஒன்று எதிர் திசையில் வழி மறிக்க எப்படிச் செல்வது என்று திகைப்படைந்தார்கள்.

சேனையோடு நந்நபிதாந் திரண்டுவரும் வழியில்
தானைமுக முடையச் சமுத்திரமொன்றங்கு கண்டார்
பார்த்தார் வழிகள் பலதிக்குங் காணாமல்
வேர்த்துத் தவித்தார் வேதாம்பர் தம்முடையோர்
திக்குதிசை காணாமற் றிருமுகங்கள் தான் வாடி
அக்கனருளென்றங் காலநபிதாமிருந்தார் (75-77)

அண்ணல் நபி (சல்) அவர்களின் ஏக்கமும், தயக்கமும் இறையருளால் நீக்கப் பெற்றபின் சக்கூனரசனிருக்குமிடத்தை அடைந்தார்கள். பின் நபி (சல்) அவர்கள் முறையாகச் சக்கூனிடத்து தூதுவரை அனுப்பி மிக்கான இஸ்லாத்தின்மேல் ஈமான் கொள்ளும்படி வேண்டுகோள் விடுத்தார்கள்.

அந்தச் செய்தி சொல்ல வங்கொருத் தரையழைத்துச்
சந்தமணிப் புயத்தான் சக்கூன் முகத்தினிற்போய்
சென்று நமதுடைய தீனிலேதானழையும்
நன்று கலிமாவை நான் மொழியே னென்றானேல்
நாளைப் போரென்றே நடத்திங்கண் வாருமென்றார்.
(கண்ணி : 131-133)

இவ்வாறு நபி (சல்) அவர்கள் தூதனுப்பும் செய்தியைத் தெரிவிப்பதற்கு முன்னர் ஆசிரியர் சக்கூனரசனது படை வலிமையையும், திறமையையும் பல கண்ணிகளில் எடுத்துரைத்துள்ளார். நபி (சல்) அவர்கள் தூதாக அனுப்பும் தூதுவனும் சக்கூன் நாட்டின் பல வீதிகளைக் கடந்து செல்கின்றான். அங்குப் பல்வேறு வகைப்பட்ட கடைகளையும் பல சாதிப் பிரிவினர்களையும் பார்த்துச் செல்லும் தூதுவன் சக்கூனரசனின் கொலுமண்டபத்தை இறுதியாகச் சென்றடைகின்றான். இச் செய்திகள் விரிவாக 29 கண்ணிகளில் விளக்கம் பெற்றுள்ளன. சக்கூன் அரசனின் முன் சென்ற தூதுவரை யாரென்று கேட்க அதற்கு அத்தூதுவர் பெருமானார் நபி (சல்) அவர்களின் வாழ்வியல் வரலாற்றுச் சிறப்புக்கள் பலவற்றை எடுத்துக் கூறி அத்தகு புகழ்மிக்க நபி (சல்) அவர்களின் தூதுவன் என்றும் தான் தூதுவந்த காரணத்தையும் பின்வருமாறு உரைக்கலானார்.

அல்லாவின் தூத ரகுமதுற்றசூல் நயினார்
என்னைத் தூதாக ஏவினாருன்னருகே
யுன்னைக் கலிமாவை யோதென்றுரைத்தனரே
ஓதினால்நாயக னுதவிமிச்சம் நீ பெறுவாய்
நீதியுள்ள சொர்க்கமது நீ பெறுவாயென்றுரைத்தனரே
அல்லாதுபோனா லருநரகில் நீ விழுந்து
பொல்லா அதாபுடனே புரளுவாயென்று பின்னும்
இந்தவகை சொன்னே னீமான் கொள்ளாயாகில்
வந்துபடைபொரு தவரச் சொன்னாரெங்கள் நபி
வாரால் படைபொருத மாட்டையேலாமாகில்
வீராதிவீரருன்னை விட்டுவிட மாட்டார்கள். (165-170)

தூதுவரின் வார்த்தைகளைக் கேட்டுப் பெரும் சினமுற்ற சக்கூனரசன் பெருமானாரின் படைத் திறமையை ஏளனமாகப் பேசி இஸ்லாத்தின் மீது ஈமான் கொள்ள மறுத்திட வந்ததூதுவரும் (சல்) அவர்களிடம் திரும்பிச் சென்று எந்த வகையாலும் சக்கூன் ஈமான் கொள்ள மாட்டான் என்பதை விளக்கிக் கூறினார். அது கேட்டுப் போருக்குத் தயாராகும்படித் தம் படை வீரர்களுக்குக் கட்டளையிட்டார்கள். நபி (சல்) அவர்களின் கட்டளையைத் தம் பணியெனக் கருதி அனைவரும் போருக்குத் தயார் ஆகும் நிலையை ஆசிரியர் விரிவாக எடுத்துக் கூறுகிறார்.

வந்துபதம் பணிந்து மாநபியே கேளுமென்றார்
எந்தவகையாலும் ஈமான் கொள்ளானவனே
படைநடத்த வேணுமென்றார் பயகாம்பர் தான்கேட்டு
விடை கொடுத்திராணுவங்கள் வேறே பிரிக்கலுற்றார்
மாமாவிருவருடன் வாசிபதினாயிரமும்
தாமமா நந்நயினார் தம்வலங்கையாக வைத்தார்
குருவாம் நபியிறசூல் கூறுமருக்கர் தம்மை
யொரு பதினாயிரம் பரியோ டுற்றயிடபாலில் வைத்தனர்
மின் போற் பறக்கும்பரி வீரர்பதினாயிரரைப்
பின்னேயிற சூல்தாம் பேணியாய் வைத்தனரே
மூவாயிரம் பரியை முன்னணியிலே நிறுத்தித்
தாவேது மில்லாத தாசீம் நபிதானிருந்தார்
சக்கூனரசி வார்த்தை தான்கேட்டங்கேது செய்தான்
மக்காபுரம் வாழ் முகம்மதுக்குத் தூதுவிட்டான்
சண்டைக்குத்தான் வாறோம் தயாரா இருமெனவே.
(181-188)

இவ்வர்ணனை போருக்கு ஆயுத்தமாகும் நிலையை எடுத்துக் காட்டுவதுடன் பெருமானார் நபி (சல்) அவர்களுடைய அசுகாபி மார்களது பேரணியையும் விளக்குகிறது. மேற்குறிப்பிட்ட பகுதியில் காணப்படும் 'பயகாம்பர்' என்ற சொல் பார்ஸி மொழியைச் சார்ந்ததாகும். இதனுடைய பொருள் நபி என்பதாகும். ஆனால் இது சிறப்பாக முகம்மது நபி (சல்) அவர்களையே குறிக்கப் பயன் படுத்தப்படுகிறது.

சக்கூன் படைப்போரின் 191வது கண்ணியிலிருந்து போர் நிகழ்ச்சிகள் விவரிக்கப்படுகின்றன. சக்கூன் அரசன் சுனாபீல். சுகாபீல் என்னும் படைத் தலைவர்களும் தம் மக்கள் நால்வரும் தலைமையேற்க நபி (சல்) அவர்களைச் சென்று பொருந்து கின்றான். சக்கூன் அரசனின் படைகளோ எண்ணற்ற எண்ணிக் கையில் காணப்படுகின்றன. படைத்தலைவர் பதினாறிலக்கமும், பரிகள் ஆறிலக்கமும், காலாட்கள் எண்பதாயிரமும் தம்பட்டங்கள் ஐயாயிரத்து முன்னூற்று அறுபதும் ஆக அனைத்தும் ஒன்றுபட்டு நாயகம் பெருமானார் (சல்) அவர்களின் படைகளை எதிர்த்தனர்.

இந்நிலையில் சக்கூனரசனுடைய படைத்தளபதிகளுள் ஒருவனான மாலிக் என்பான் நபி (சல்) அவர்களின் படைகளைக் கண்ணுற்று இப்படை எனக்கு ஒப்பாகுமோ என்று விவேகம் பேசிட அது கண்ட தாசீம் நபி அலி (றலி) அவர்களைக் கண்டார் கள். இக் காட்சியை வரிசை முகியித்தீன் புலவர் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றார். இஸ்லாமிய வரலாற்றில் போர் என்ற வுடன் நம் நினைவிற்கு வருபவர்கள் பெருமானார் நபி (சல்) அவர் களுடைய மகளான அன்னை பாத்திமாவின் கணவரான அலி (றலி) ஆவார். இஸ்லாம் எதிர்கொண்ட பத்ருப்போர், உஹுத் போர், கைபர் போன்ற பிற முக்கியமான போர்களில் தம் வீரத் திறமையினால் இஸ்லாத்திற்கு எண்ணற்ற வெற்றிகளை ஈட்டித் தந்த பெருமையை உடைய அலி (றலி) போர்த் திறமையைப் பெரும்பாலான கண்ணிகளில் ஆசிரியர் எடுத்துக் காட்டி விளக்கு கிறார்.

மாலிக் என்னும் படைத் தளபதியின் அகங்கார வார்த்தை களைக் கேட்டுத் தாசீம் நபி புலி,அலி (றலி) அவர்களைக் காண அவனை எதிர்ப்பதற்கு முன் பெருமானார் நபி (சல்) அவர்களின் முன் அனுமதியை வேண்டினார். அவ்வாறு அனுமதி வேண்டும் போது பல்வேறாகப் பெருமானார் நபி (சல்) அவர்களைப் புகழ்ந் துரைக்கின்றார்.

மடித்தமன மாலிக்கென்போன் மண் மீதிழிந்து வந்தான்
அப்போசுனாபிலவ கைமகிழ்ந்தங்கேது சொல்வான்
இப்பேறிங்குங்கள் படை என்றனைக்கும் போதாதென்றான்
தப்புள்ளோன் சொன்னமொழி தாசீம் நபி கேட்டுடனே
யொப்பில்லான் தன்வலியை யுவந்தங்கு பார்த்தனரே
வந்தாரலிபுலிதான் முகம்மதரின் தாள் பணிந்து
இந்துமுகத்தோரே எங்களிறசூல் நபியே
எல்லாவும் மத்தோர்களையு மீடேற்றும் நாயகமே
பொல்லாதென்னாளும் பொருதாத புண்ணியரே
கானகத்திலாக்கைக் கடுகவழைப்பித்தவரே
வானகத்திற்கப்பால் வல்லோன் முன் சென்றவரே
வேத நயினாரே விடையருளு மென்றுரைத்தார்
ஆதி நபியிறசூலது போலவிடை கொடுத்தார்
பிடித்துவரவோவவனைப் பிளந்துவரவோவவனை
யடித்துவரவோவவனை யறுத்துவரவோவவனை
என்றே மனத்துணிவா யிறையவனைத்தான் புகழ்ந்து
நன்றார் சலவாத்தை நாவிலெடுத்தோதி
வீரபட்டங்கட்டி மேற்ஜோடு தானணிந்து
தூரமுகிற் பறக்குந் துல்துல் மிசையேறினரே (231-140)

புலி அலி (றலி) கூற்றில் நாயகத்தைப் புகழும்போது, 'எல்லா உம்மத் தேர்களையு மீடேற்றும் நாயகமே' என்பதில் உள்ள உம்மத் என்பது உம்மூன் என்னும் சொல்லிலிருந்து தோன்றிய தாகும். அதன் பொருள் நாடுதல் என்பதாகும். ஒன்றே இறை என்று ஒரே மார்க்கத்தை நாடி நிற்போரை இச்சொல் குறிக்கிறது. காலந்தோறும் தோன்றிய நபிமார்களையும் அவர்களது போதனை களையும் பின்பற்றி வந்த மக்களையும் குறிக்கத்தக்க வகையில் இச்சொல் உம்மத் இப்றாகீம், உம்மத் ஈசா, உம்மத் முகம்மது என்று நபி மார்களுடைய பெயர்களுடனும் இணைந்து வழங்கப் படுகிறது. இச்சொற்கள் அந்தந்த காலத்து நபிமார்களின் பின் நடந்த மக்களைக் குறிப்பதாகும். இத்தகைய முறையில் உம்மத் என்னும் வார்த்தை அறுபதுக்கும் மேற்பட்ட இடங்களில் அல்லாஹ்வின் திருமறையான அல் குர் ஆனில் பயன்படுத்தப் பட்டுள்ளது.

எல்லாம் வல்ல அல்லாஹ் தம்முடைய உம்மத்துக்களுள் சிறந்த வராகவும், மேன்மையானவராகவும் பெருமானார் நபி (சல்) அவர் களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். அதனை அல் குர் ஆன்,

'(விசுவாசிகளே!) நன்மையான காரியங்களைச் செய்யும்படி மனிதர்களை ஏவி, பாபமான காரியங்களிலிருந்து (அவர்களை) விலக்கி, மெய்யாகவே அல்லாஹ்வை விசுவாசிக்கின்ற நீங்கள்தாம் மனிதர்களில் தோன்றிய சமுதாயத்தார்களிலெல்லாம் மிக்க மேன்மையானவர்கள்' (3:110) எனக் கூறுகிறது. இத்தகு மேன்மையையும் மனிதர்களுள் அல்லாஹ்வின் அருளைப் பெறுவதில் முதன்மையையும் பெற்ற பெருமானார் நபி (சல்) அவர்கள் தம்மைப் பின்பற்றி நடப்போருக்காக எப்போதும் அல்லாஹ்விடம் துவா (வேண்டுதல்) இறைஞ்சுகின்றார்கள். அத்துடன் ஷஃபாஅத் (பரிந்துரைத்தல்) என்னும் மன்றாட்டத்தையும் இறுதிநாளில் தம் உம்மத்தோர்களுக்காக அல்லாஹ்வின் முன் மேற்கொள்வோரும் இறசூல் நாயகம் (சல்) ஆவார். தம் உம்மதோர்கள் ஒவ்வொருவருடைய பாபங்கள் குறித்து அவர்கள் இறந்தபின் அல்லாஹ்வின் முன் அவர்களது பாபங்களை மன்னித்தருளும்படிப் பரிந்துரைப்பவர்கள் பெருமானார் நபி (சல்) அவர்களாதலால் சக்கூன் படைப்போரில் புலி அலி (றலி) கூற்றாக 'எல்லா உம்மாத்தோர்களையும் ஈடேற்றும் நாயகமே' என புகழ்ந்துரைக்கும்படி ஆசிரியர் குறித்துள்ளார்.

மேலும் நபி (சல்) அவர்களைப் புலி அலி(றலி)புகழ்ந்துரைக்கும் போது 'வானகத்திற்கப்பால் வல்லோன் முன் சென்றவரே' என்பது அண்ணல் நபி (சல்) அவர்களின் மிஃறாஜ் பயணத்தை (விண்ணேற்றப்பயணம்) குறிப்பதாகும். இவ்வாறு பல்வேறாக புகழ்ந்துரைத்து பெருமானார் நபி (சல்) அவர்களின் அனுமதியைப் பெற்றபின், புலி அலி (றலி) வீரப்பட்டங்கட்டி மேற்ஜோடும் அணிந்து தூர முகிற் பறக்குந் துல்துல் மிசையேறிச் சென்றதாகக் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர். துல் துல் என்பது கோவேறு கழுதையின் பெயராகும். இது எகிப்து நாட்டு முகௌகிஸ் என்னும் மன்னர் பெருமானார் நபி (சல்) அவர்களுக்கு அளித்தார். பெருமானார் பங்கேற்ற போர்களில் இதன்மீதமர்ந்தே சென்றார்கள். பெருமானார் அவர்கள் அலி (றலி) அவர்களுடைய போர் திறமையைக் கண்டு அவர்களுக்குப் போரிட இதனை அளித்தார்கள். அது முதற்கொண்டு அலி (றலி) பங்கேற்று வெற்றி எய்திய பல்வேறு போர்களிலும் துல்துல் கோவேறு கழுதையையே பயன்படுத்தினார். அதற்கேற்ப சக்கூன் படைப்போரிலும் துல்துல் கோவேறு கழுதையின் மீதமர்ந்து அலி (றலி) போரிடச் செல்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு துல்துல் என்னும் குதிரையில் ஏறிக் கடும்போர் புரியத் தொடங்கிய அலி (றலி) அவர்களின் போர்த் திறமையைக் கண்டுற்று ஏளனம் பேசிய சுனாபில் என்னும் படைத் தளபதி.

வானிடியைக் கண்ட மஞ்ஞைகள் போலே மயங்கித்
தானைகளதெல்லாந் தான் மங்கி வீழ்ந்ததுவே
நின்றன் சுனாபீல் நினைத்தான வனிங்கேதான்
என்றே பயந்தங் கிழக்குரல் விட்டீது சொல்வான்
ஜின்னோ பரியோ தேவோ பெருங்கணமோ
மின்னோ இடியோ விளம்புகன்ற அலியோ நீ (244-246)

என ஐயமும் பீதியும் அடைந்து திகைப்புற்று அஞ்சி நின்றான். அவனது நிலைகண்ட புலி அலி (றலி) ஏளனம் பேசிய அவனது இழி செயலைப் போர்க்களத்தில் சுட்டிக் காட்டி, தம்முடைய புகழ் பெற்ற துல்ஃபிகார் என்னும் வாளால் சுனாபீனுடைய பரியினை வெட்டி வீழ்த்திக் கீழே விழுந்தவனைத் தம் வலிமை மிக்க கைகளால் சுழற்றி வீசியடித்து நபி பெருமானார் (சல்) அவர் பாதங்களைப் பணியும்படி நாயகத்தின் முன் கிடத்தினார்கள்.

....அலியுல்லாதாம்
நன்றாய்க் குறுஞ்சிரிப்பு நகைத்தவனைத் தானோக்க
போதனை கேட்டாய் நீ பேர்பெரிய போர்க்களத்திற்
போரதனிற் போர் கேட்கப் புத்தியில்லையோ உனக்கு
செவ்வாயுத்த மென்றலியாய் செப்பினாரப்போது
கையிலிருக்கிற கதையை மிகச் சுழற்ற
வீசியபுத்தானவனை வீரப்புலியலியார்
வாசமுறு துல்புக்கறா வாளாலே வெட்டினரே
வெட்டிபரிமுறித்து விழுந்தான் பரியோடே
அட்ட திசையும் புகழும் அலியாம் பெரும்புலியும்
தரையில் விழுந்தவனைத் தன் கையை நீட்டி
விரலிலே தூக்கி மேலாகத்தான் சுழற்றி
கொண்டு நபியிறசூல் குரு முன்னிலையில் விட்டார் (247 : 253)

இங்கு ஆசிரியர் புலி அலி (றலி) சுனாபீவின் பரியை வெட்டியதாகக் குறிப்பிடும் 'வாசமுறு துல்புக்றா' என்னும் வாள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாகும். புகழ் பெற்ற இவ்வாள் என்றும் துல்ஃபிகார் என்றும் துல்ஃபகார் என்றும் உச்சரிக்கப்படுகிறது. இது அல் ஆலி இப்னு நாபிஹ் அல்ஹஜ்ஜாஜ் என்பவருடையதாகும். கைப்பிடி வெள்ளியாலும் தங்கத்தாலும் ஆன இவ்வாள் இரு

முனைகள் கொண்டது. ஃபிக்ரா என்றால் முதுகெலும்பு என்பதாகும். இதன் பன்மை ஃபகார் அல்லது ஃபிகார் என்று வழங்கப்டுகிறது. துல்ஃபிகார் என்றால் இரு முதுகெலும்புகளை உடையது என்பதாகும். புகழ் பெற்ற இவ்வாளின் நுனிப்பாகம் இரண்டுபிரிவுகளைக் கொண்டுள்ளதால் இவ்வாள் துல்ஃபிகார் என வழங்கப்படலாயிற்று. இஸ்லாமிய சகாப்தம் எதிர்கொண்டதும் வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்ததுமான பதுறுப் போரில் அல் ஆலி கொல்லப்பட்டபோது அப்போரில் கைப்பற்றப்பட்ட பொருள்களுள் இவ்வாளும் ஒன்றாகும். அகழ்ப்போரின்போது 1000 வீரர்களுக்கு நிகரான வலிமையுடையவரான வீரர் அம்ர் இப்னு அப்தூதின் சவாலை எவரும் ஏற்காதபோது அதனை மும்முறையும் ஏற்ற அலி (றலி) கையில், பெருமானார் நபி (சல்) அவர்கள் துல்ஃபிகார் வாளினை அளித்து அனுப்பி வைத்தார்கள்.

துல்ஃபிகார் வாளினைக் கொண்டு அலி (றலி) வெற்றி பெற்ற செய்தியைக் கேட்டவுடன் அண்ணல் நபி அவர்கள் (சல்) அலி (றலி)யைத் தவிர வீரருமில்லை துல்ஃபிகாரை தவிர வாளுமில்லை என்று பொருள்படும் 'லா ஃபத்தா இல்லா அலீ; வாஸைஃப இல்லா துல்ஃபிகார்' என்னும் வாசகத்தை மொழிந்து அலி (றலி) அவர்களையும் துல்ஃபிகார் வாளினையும் பெருமைப் படுத்தினார்கள். அன்றுமுதல் இஸ்லாம் எதிர்கொண்ட போர்களில் அலி (றலி) பங்கேற்றபோது அவருக்கு வெற்றியைச் சூட்டித் தந்தது இவ்வாளே ஆகும். இத்தகு சிறப்புப் பெற்ற துல்ஃபிக்கார் வாளினைக் கொண்டே சக்கூன் படைப்போரிலும் சக்கூன் அரசனுடைய படைத்தளபதியான சுனாபீல் என்போனுடைய பரியினை வெட்டி வீழ்த்தினார் அலி (றலி) என இங்கு வரிசை முகியித்தீன் குறித்துள்ளார். அலி (றலி) அவர்களின் வீரத்தையும் விவேகத்தையும் கண்டுற்ற சுனாபீல் அச்சமும் மனமாற்றமும் பெற்று பெருமானார் (சல்) முகம்மது அவர்களின் பாதம் பணிந்து இஸ்லாத்தின் மீது ஈமான் கொண்டான். சக்கூன் படைப்போரில் எதிரிகள் இஸ்லாத்தின் மீது ஈமான் கொள்ளும் வரிசையில் முதன் முதலில் இஸ்லாத்தைத் தழுவியது சுனாபீல் ஆவான். இதனை ஆசிரியர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

....சுனாபீல் மனமகிழ்ந்து
நல்ல கலிமாவை நாவுகொண்டு சொல்லலுற்றான்
வாமமுடன் போனான் மன்னன் சூனாபீல்த் தாம்
செம்புவருதனை விட்டுத் தீன்வழியிலான பின்பு

ஆகாக்குபிரெனவே யகற்றிப் புகழுடனே
வாகாகச் சிந்தையிலே வல்லோன்தனைப் புகழ்ந்து
வரிசை நபிமுன்னில் வந்து வள்ளலே நாயகமே (238-242)

என எடுத்துரைத்து, பல்வேறாகப் பெருமானாரின் புகழினை வரலாற்று நிகழ்ச்சிகளுடன் கூறிப் பெருமைப்படுத்தி, எதிரிகளை வெட்டிவரத் தனக்கு அனுமதி அளிக்குமாறு பெருமானார் நபி (சல்) அவர்களிடம் வேண்டி நின்றான்.

புத்தியறியாத வென்னைப் புகழ்பெருகும் ஈமானில்
ஈற்றவமாய்ச் சேர்த்தோரே நாயகமே காபிர்களை
வெட்டிவரவெனக்கு விடை தாருமென்றுரைத்தார் (244-245)

சுனாபிலுடைய வேண்டுதலை ஏற்ற பெருமானார் நபி (சல்) அவர்கள் புத்தியில்லாக் காபிர்களைப் பொருத விடை கொடுத்தார்கள். எதிரிகளின் மனமாற்றத்திற்கு வழி வகுத்த சுனாபீல் காபிர்களை எதிர்த்துப் போராடச் சென்றான். போரிடச் சென்றவன் போர்க்களத்தில் சக்கூனரசன் எதிரில்பட அவனிடம் இஸ்லாத்தீன் ஏற்றத்தையும் காபிர்களின் செயல்தனையும் வன்மையாகக் கண்டித்து, சக்கூனரசனையும் இஸ்லாத்தின்மீது ஈமான் கொள்ளும்படி எடுத்துரைக்கலானான். இஸ்லாமியத் படைப் போர்களின் நோக்கம் முஸ்லிம் அல்லாதோரை இஸ்லாத்தின் மீது ஈமான் கொள்ளும்படிச் செய்வித்தலாகும். எனவே இப் படைப் போர்களை எடுத்துரைக்கும் இலக்கிய ஆசிரியர்களும் இஸ்லாம் அல்லாதோரின் மனமாற்றத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் கருத்துக்களைத் தம் நூல்களுள் அமைத்துக் கொண்டனர். மேலும் மனமாற்றத்திற்குரிய தேவையை விரிவாகப் படைப் போர் ஆசிரியர்கள் எடுத்துரைக்கின்றனர். இவ்வகையில் சக்கூன் படைப் போரில் இதனைச் சுனாபீல் கூற்றின் மூலமாக வரிசை முகியத்தீன் புலவர் நிறைவு செய்வது போல் உள்ளது.

கூடி முகம்மதுடன் குறித்தென்னைப் போர் பொருத
நாடி வந்தாய் நீயெனவே நரனங்கு தானுரைத்தான்
அப்போசுனாபீல் அவ்வரசைத் தானோக்கி
இப்போதியானிங் கியம்பக்கேள் மன்னவனே
பூசை செய்ய வேண்டுமென்று புதுக்கோபுரங்கள் கட்டி
வாசமலர் தூக்கி வன்னமிகவே விளக்கி
பசும்பொன்றனையுருக்கிப் பருக்கவுருச் சமைத்து

அசிம்பின் புனற் கொணர்ந் தங்குதனை முழுக்காட்டி
தூமமிகக் கொடுத்துச் சுடர் விளக்குத் தானேற்றி
நாமமிகச் சாத்தி நறுமலருந்தான் சூட்டி
வாசனைப் புனுகத் தரும் வழுமுதங்குங்குமச் சாத்தும்
நேசநல்வி சந்தனமும் நிறநிதமுந்தான் சாத்தி
பலகனியும் நெய்யும் பால்பழ முஞ்சக் கரையும்
மிலகுமறச்சாறும் இனி நல்ல பூந்தேனும்
இத்தனையுங் கூட்டி யின்பமுடன் தான்படைத்து
நித்தமுந்தான் நீர் முழுகி நேசத் துணிதுவைத்து
கும்பிட்டெழுந்திருந்து குலுக்கி மணி தானாட்டி
வம்பிட்ட நற்குறிகள் மந்திர முந்தானோதி
என்னேரந்தானே இதுவே தொழிலாக
நன்னே ரொன்றில்லாமல் நாடியிருந்தனையே
உத்தரங்கள் சொன்ன துண்டோ வுரைக்கு
புத்தியற்ற மார்க்கமதைப் போடேயொரு நினைவாய்
வல்லவன்றன் தூதர் முகம்மதுற்ற சூலிடம் போய்
நல்லகலிமாவோதி நானிசுலாமாயினனே
சொல்லுமிது போலுந் துற்குண மெல்லய மொழிந்து
வெல்லும் பெருக்க வெண்ணி வேம் நரகிற் போகாமல்
சூரத்தனத்தைவிட்டுச் சுருக்கில் ஈமான் கொள்ளுமென்று
சாரத்தனமில்லாத சக்கூனுக்கோதிப் பின்னர்
ஓதுங்கலிமாவை யுறுதி கொள்வையா மாகில்
சோதிப் பெரியவனற் சுவர்க்க பதிதந்தருள்வான்
அல்லாதே போனா னெலே கொழுந்ததெரியும்
பொல்லாத நரகமதிற் புகுவை யென்று தானுரைத்தார்.

(256-277)

சுனாபீலின் இக்கூற்றில் முஸ்லீம் அல்லாதோரின் இறைத் தெய்வ வழிபாட்டு முறைகள் விளக்கப்பட்டுள்ளன. ஒன்றே இறை என்றும் ஏக தெய்வ இறைவழிபாட்டு நெறி முறையே விட்டுவிட்டு விக்ரகம், மற்றும் பாம்பு புத்துக்கள் இவைபோன்றே பலவற்றை வணங்கும் நிலையை விடுத்து இறசூல் நபி (சல்) அவர்களிடம் சென்று நல்ல கலிமாதனைக் கூறி எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பாதையிலே இஸ்லாமை ஏற்றுப் போற்றும்படியான விரிவான செய்திகள் மேற்குறித்த பகுதியில் இடம் பெற்றுள்ளன. அவ்வாறு இஸ்லாத்தை ஏற்றுப் போற்றாமல் இருப்போருக்குரிய தண்டனை யையும் சுனாபீல் சுட்டிக் காட்டியுள்ளான். ஒன்றே இறை என்னும் கோட்பாட்டில் பற்றுக் கொண்டு நம்பிக்கை கொள்வோமாகில்

சுவர்க்கபதியை அடைவது திண்ணம் என்றும் இங்கு சுட்டிக் காட்டியுள்ளான். தன் படைத் தளபதியான சுனாபீலே மனமாற்றம் கொண்டு இஸ்லாத்தின் ஏற்றத்தை எடுத்துரைப்பதைக் கண்ட சக்கூனரசன் வெகு சினம் கொண்டு அவனை வெட்டி வீழ்த்தக் கட்டளையிட அவர்கள் அனைவரையும் எதிர்த்துப் போரிட்டு வெற்றியும் ஈட்டுகின்றான் சுனாபீல். இதன்பின் சக்கூனரசனின் மகன் பெரும்படையுடன் சென்று அலி (றலி) அவர்களுடன் எதிர்த்து நிற்கும் நிலையையும் அப்போரின் விளைவுகளையும் பல கண்ணிகளில் ஆசிரியர் விளக்கியுள்ளார். அலி (றலி) அவர்களின் போர்த் திறமையும், அவர்கள் போரிட்ட முறைமையும் இவ்வாறு இடம் பெற்றுள்ளன.

நாசனலியார் நவிலுகின்ற கெச்சிதமாய்
ஆயன்பசுக்கிடையி லரும்புலிபோலே பாய்ந்து
ஆனைப்படைகளங்ங னலறிக் கொண்டோடிடவே
சேனைத்திரல்லர்களுந் திகைத்தங்ஙனோடிடவே
அலைபுலியாரங்ஙனடர்ந்து வெட்டியார்ப் பிரித்தார்
மெலிவாகக் காபிரெல்லாம் வெகுண்டே மிகப் பயந்தார்
கூட்டமதகரியின் கொம்பையலிபிடிங்கிப்
போட்டாரங்கங்கே புகலுமலைபோலே
ஆலையிலே விட்டங் காட்டுங் கரும்பதுபோல்
மேலான யானைகளை வெட்டிக் குவித்தாரே
ஆறாயிரங் குஞ்சத்தை யரை நொடியிற் சீரலியார்
மாறாதுவெட்டி மலைபோற்குவித்தாரே
கொம்பு பிடுங்கப்பட்ட குஞ்சரங்கள் நான்காயிரம்
அம்பொற்குடற் சரிந்த ஆனைகளி ரண்டாயிரம்
மீண்டும் புலியலி மேற் வெம்புரிகள் நூறாயிரம்
தூண்டியங்ஙன் வந்தே சுற்றி வளைந்ததுவே
அப்போதலியா ரகுமதரைத் தானினைந்தார்
இப்போது போரிலவ ரெங்ஙனிற் கின்றாரெனவே
ஒருவர்க் கொருவ ருதவியின்றிப் போர் பொருவதில்
வரிசை நயினாரு மாக்கருந் தோர்களும்
என்ன செய்கிறாரோ வென்றெண்ணி மனமழற்று
வன்னியிடுமெழுகாய் வாடினாரப்போது
அசுவங்கள் வந்தங் கலியாரைத் தான்சூழ
கொசுகளிஃ தென்றே கொக்கு மாப்பி வராஜாளி
பாய்ந்தடித்த லொப்பாகக் கண்பாரலியாரங்

காய்ந்த படை தொழிலா லகட்டி வெட்டினார் பரியை
வெம்பரிகள் சேர அலி வெட்டிக் கருவறுத்தார்
தும்பியிறந்ததுவுங் குதிரைகள் மடிந்ததுவும்
மண்டலிகர் மாண்டதுவு மாந்தர் மடிந்ததுவும்
கண்டங்கரச ரெல்லாம் கடுக மறையலுற்றார்
அந்திபட்ட வேளையிலே யரண்படைகளைத்தான்
வந்திடுங்களென்றே வரவழைத்தான் (316-330)

ஆசிரியரின் இப்போர் வர்ணனைத்திறம் அலி (றலி) அவர்களின் உன்னதமான வலிமையையும் போரிடும் திறமையையும் நன்கு விளக்குகிறது. போர்கள் வெளிப்பாட்டினை மிக எளிய உவமை களின் மூலம் எடுத்துரைத்து அதன் சிறப்பை உணர்த்தியுள்ளார் ஆசிரியர். ஆலையில் கரும்பினைக் கசக்கிப் பிளிவதுபோல் போர்க் களத்தில் உள்ள யானைகளைப் புலி அலி(றலி) வெட்டிக் குவித்தார் கள் எனக் கூறப்பட்டுள்ள நயம் சிறப்புடைத்தாகும். அலி (றலி) அவர்களின் இத்திறம் கண்ட சக்கூனரசன் தம் ஏனைய மக்கள் மூன்று பேரையும் அழைத்து, ‘கொஞ்சம் மனிதர்கள் என்று குறை வாக நாம் நினைத்தோம். ஆனால் நம் நெஞ்சம் கலங்கும்படிச் செய்கின்றார் அலியார். இவர்போல் தாரணியிற் கண்டதில்லை’ என எடுத்துக் கூறுகின்றான். இதுவரையில் 10,000 பேர் பெரு மானாரின் படைகளை எதிர்த்து மாண்டுள்ளனர் என்பதைச் சக்கூனரசன் உணர்ந்த போதிலும் தன் அகம்பாவம் தீராத காரணத்தினால் தானே தலைமையேற்றுப் பெருமானார் நபி (சல்) அவர்களுடைய படைகளுடன் போரிட முற்படுகின்றான். சக்கூனரசன் தன் பெரும் படையுடன் செல்லும் நிலையை ஆசிரியர் இருபது கண்ணிகளில் வர்ணித்துள்ளார். சக்கூனரசனுடைய படைவீரர்கள் வருவதால் எழுப்பும் தூசியானது விண்ண கத்திலுள்ள வெய்யோனையும் சென்று மறைக்கும் வகையில் இருந்ததாம்.

அத்தனை எண்ணிக்கையில் வந்த சக்கூனரசன் அண்ணல் நபி (சல்) அவர்களது சேனையோடு எதிர்த்துப் போரிட இப்போரில் பிறிதொரு சேனைத் தளபதி மனம்மாறி இஸ்லாத்தின்மீது ஈமான் கொள்கின்றார். இந்நிலையில் புலி அலி (றலி) சக்கூன் அரசனுடைய இளைய மகனுடன் போராடினார். அலி (றலி) அவர்களுடைய போர்த்திறம் கண்டு பின் வாங்கிய அவன் தன் தந்தையுடன் சென்று

எதிரொருவர் நில்லார் காணிந்த அள சத்தங் கேட்கில்
ஏகனலியுடனே யெவரும் பொருத மாட்டார்
வாகரலியவரை மானிலத்தோர் வெல்ல மாட்டார்
ஆள்த் திறமை போரினிலே யவரைப் போற் கண்டதில்லை

(கண்ணி : 462-464)

எனக் கூறினான். பின் மாலை ஆகிவிட்டபடியால் அன்றைய போரினை அத்துடன் முடித்துக் கொண்ட புலி அலி (றலி) பெருமானார் நபி (சல்) அவர்களிடம் சென்று அன்றைய போர் நிகழ்வுகளை விளக்கிக் கூறினார். பின் அனைவரும் இரவு நேரத் தொழுகையான இசாத் தொழுகையினை நிறைவேற்றிவிட்டு உறங்கலானார்கள்.

மறுநாள் போரில் சக்கூன் அரசனுடைய இளைய மகனும் அலி (றலி) அவர்களும் போரிட்ட செய்தியை ஆசிரியர் விவரித்துள்ளார்.

விண்ணுமண்ணுந்தானதிர வேந்தும்மகனும்
திண்ணமுடனே யெதிர்த்துச் செயப்போர் புரியலுற்றார்
வெட்டுவதும் ஒட்டுவதும் வெம்பரையைத் தூண்டுவதும்
தட்டுவதும் குத்துவதுந் தப்பாமலே பொருதார்
கையுந் தவறாமல் காலந்தவறாமல்
மெய்யுமிளைக்காமல் விழியிமைகள் மூடாமல்
இப்படியே மூன்றுநாளிவர்கள் பொருதனர்கள்

இவ்வாறு இடைவிடாது நடைபெற்ற போரின் இறுதியில் சக்கூனரசனுடைய மகனைப் புலி அலி (றலி) சிறைப் பிடித்து விலங்கிட்டு நபி (சல்) அவர்கள் முன் அழைத்து வந்தார்கள். செய்தியைக் கேள்வியுற்று சக்கூனரசன் பெரும் சினமடைந்து மீண்டும் தம் மூத்த மகன் மாலீக்கைக் பெரும்படையுடன் போரிட அனுப்பினான். மாலீக்கும் அலி (றலி) அவர்களுடன் எதிர்த்து தோற்றுவிட இறுதியாகத் தன் எஞ்சியுள்ள ஒரு மகனையும் அனுப்புகின்றான் சக்கூனரசன்.

நடைபெற்ற அத்தனை போர்களிலும் அலி (றலி) அவர்களுக்கே வெற்றி கிட்டியதால் நேர்மையான முறையில் அவர்களுடன் போரிட்டு அடைய முடியாது என்பதைத் தெரிந்து கொண்ட சக்கூனரசனுடைய படைவீரர்கள் வஞ்சனை செய்துப் போரில் அலி (றலி) அவர்களைத் தோற்கடிக்கலாம் என்ற கருத்தினை வெளிப்படுத்தினார்கள்.

சென்று பொருத செருக்களத்திலோர் கிடங்கு
நன்று நூறாளுமுழம் நாற்சவுக்கமாக வெட்டி
பலகை பரப்பிமேலே பதனமாய் மண்போட்டுக்
கலக மொருவருக்குங் காட்டாமல் வையுமந்த
அச்சுத் தெரியாம லதின் மேலேயாலி வந்து
மெய்ச்சப் படை பொருவார் வெல்லலா மென்றுரைத்தான்

(கண்ணி : 639-641)

இவ்வெண்ணப்படித் தம் திட்டத்தை நிறைவேற்ற இரவோடிர வாகப் பெரும் குழி ஒன்றினை வெட்டச் செய்து அதனை மறைத்து விட்டு மறுநாள் தானே போர்க்களத்திற்குச் சென்றான் சக்கூனரசன்.

அன்று போரிட வந்த அலி (றலி) அவர்களும் சக்கூனரச னுடைய வஞ்சனை வலையில் சிக்கிப் பெருங்குழியில் வீழ்ந்து விடவே அது கண்ட சக்கூன் படை வீரர்கள் ஆர்பரித்து அகம் மகிழ்ந்தார்கள். இந் நிலையில் சக்கூன் படைப்போர் நிகழ்வுகளில் பெருமானார் நபி (சல்) அவர்கள் பங்கேற்பதாக ஆசிரியர் சுட்டு கின்றார். அலி (றலி) அவர்கள் எதிர்பாராத நிலையில் பகைவர் களின் வஞ்சக வலையில் மாட்டிக் கொண்டதை அறிந்த பெருமானார் நபி (சல்) அவர்கள் வேகமாகச் செல்லும் பரியில் விரைந்து வந்து பரியின் கால்களினாலேயே பகைவர்களை மிதிக்கச் செய்ததுடன் சக்கூனரசனுடைய ஒரு மகனையும் ஆகாயத்தில் விட்டெறிந்து இறுதியாக இப்போதாவது ஈமான் கொள்வாயா என்று கேட்க அதற்கு இசைகின்றான் அவன்.

புலி அலி (றலி) அவர்களைப் போர்க்களத்தில் காணாத அசுகாபிமார்கள் தம் உள்ளம் கலங்கிப் பரிதவிக்கும் நிலையை ஆசிரியர் வெகு உருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

புந்தியலிபுலியைப் போர்க்களத்திற் காணாமல்
மைந்தரென வந்த நல்ல முகம்மதனிபாதான்
கல்பு தடுமாறிக் கண்ணீர் சொரிந்தனரே
நல்ல அசுகாபிகள் நான்காயிரத்தி நானூற்றவரும்
எல்லவருந்தேடி யிரங்கித்தவித்துப் பின்னர்
வல்லபெல மிகுந்த வாலலியைத் தேடினரே
துல்து லுக்காரரென்று சொல்லித் திரிந்தனரே
வல்ல அலி பெற்ற மக்களொரு பத்தெண்மரும்
வீரப்புரியலியார் விட்டகன்றான் மேதினியில்
ஆரைப்பிதா வென்பே மென்றலறிய ழுதனரே (706-711)

இங்கு 'முகம்மதனிபாதான் கல்பு தடுமாறிக் கண்ணீர் சொரிந் தனரே' என்னும் பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் முகம்மது அனிபா, அலி (றலி) அவர்களின் புதல்வர்களுள் ஒருவராகும். இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள கல்பு என்பது 'இதயம்' என்று பொருள்படும் அறபுச் சொல்லாகும். அசுகாபிமார்கள் துல் துலுக்காரனென்று சொல்லித் திரிந்ததாகக் குறிப்பிடப்படுவது துல்துல் என்னும் பெயரையுடைய அலி (றலி) அவர்களுடைய கோவேறு கழுதையை ஆகும். இவ்வாறு அசுகாபிமார்களும், அலி (றலி) அவர்களது புதல்வர்களும் கலக்கமுற்று இருக்கும்போது அலி (றலி) புதல்வர் முகம்மது அனிபா தம் தந்தையரின் பெருங்குரல் பாதாளக் குழியிலிருந்து கேட்பதை அறிந்து,

ஆவலாய்த்தானே யருங்கயிறொன்றே கொணர்ந்து
விட்டார் கிணறதிலே வீரப்புலியலியார்
தொட்டுப் பிடித்தேறித் தோன்றி வெளியானார்
முகம்மதனிபாதான் பாவாவைப் பார்த்தங்ஙனே
மிகவும் விழுந்தழுது மெய்யணைத்துக் கூட்டி வந்தார்
முகம்மதனிபாவை வள்ளலலிதாங் கேட்டார்
அகுமதுற்றசூலை யெங்கே அபூபக்கரு மறையெங்கே
உதுமானார் தம்மையெங்கே யுற்றகுமரரெங்கே
அதிபாரசேனை யெங்கே அரசர் மற்றோர் தம்மையெங்கே.

(726-731)

எனப் பெருங்குழியிலிருந்து வெளிப்பட்ட அலி (றலி) ஒவ்வொருவ ராக விசாரிக்க, அவரது கேள்விகளுக்கெல்லாம் புதல்வர் முகம்மது அனிபா விடையளித்தார். இவ்வாறு பெரும் ஆபத்திலிருந்து தப்பிய அலி (றலி), பின் அண்ணல் நபி (சல்) அவர்களைக் கண்டுற்றார்கள். அவர்களைக் கண்ட நபி (சல்) அவர்கள் அரவணைத்து உச்சிமோந்து உணர்ச்சி வயப்படத் தம் அன்பினை வெளிக்காட்டினார்கள். இக் காட்சியை வரிசை முகியித்தீன் புலவர் வெகு உருக்கமாக எடுத்துக் கூறுகிறார்.

வள்ளல் நபி வந்தலியை மார்போடுமார்தழுவி
யுள்ள வெதுப்பகன்றங் குச்சிதனை மோந்தவர்
கண்ணீர்த்ததும்புங் கவலை மனந்தான் ஆறிப்
புண்தான் அலியுடம்பிற் போர்க் களத்திற்பட்டதுதான்
ஆயிரத்து முப்பத்து மூன்றாகு மத்தழும்பில்
மாயிரத்தாலோடு மெய்யார் வள்ளல்நபி வாய் நீரால்

சலவாத்துச் சொல்லித் தடவினார் புண்மேலே
பல வார்த்த முப்பதெல்லாம் பழந்தழும்பதானதுவே
அத்தழும் பங்காறியபின் அலியார் மனமகிழ்ந்து
சித்தமகிழ்ந்தது தெளிந்த யாரேது சொல்வார் (736:740)

சலவாத்து என்பது 'புகழ்தல்' என்பதாகும். இது குறித்து நபி (சல்) அவர்கள் தம் ஹத்தினில் கூறும்போது நிச்சயமாக அல்லாஹ் தம்மீது ஒரு சலவாத்துக் கூறியவர்கள் மீது பத்து சலவாத்தைக் கூறுகின்றான் என்பார்கள். அதுபோல் குர்ஆன் ஓதுவதும் சலவாத்துக் கூறுவதும் ஒரே நன்மை உடையனவென்றும் அண்ணல் நபி (சல்) அவர்கள் அருளியுள்ளார்கள். நிச்சயமாக இறைவனைப் புகழ்வதே எனக்கு மகிழ்ச்சி தரக்கூடியது எனக்கூறும் அண்ணல்நபி (சல்) அவர்கள் இதற்கேற்ப அல்லாஹ்வின் புகழ்பாடி அலி (றலி) அவர்களின் உடலில் போர்க்களத்தில் ஏற்பட்ட 1033 காயங்களையும் போக்கியதாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இவ்வேளையில் அலி (றலி) தமக்கு இறைவன் அருள்பாவித்திடக் கிடைத்த வெற்றிகளையெல்லாம் நினைந்துருகி அல்லாஹ்விடத்து இறுதிப் போரிலும் வெற்றியைத் தந்தருள துவா (வேண்டுதல்) இறைஞ்சுகின்றார்.

அத்தலத்திலேயிருந்திங் கனேகந்தடை கடந்து
இத்தலத்திற்றான் வரவே யென்னை நீ காத்திருந்தாய்
மன்னன் மகனுடனே மார்பொருத வெற்றிதந்தாய்
பின்னுந்துரவில் விழப் பெரிய வெளியாக்கி வைத்தாய்
மெய்த்தழும்பதெல்லாம் வேதநபிவாய் நீராடி
சற்றுமில்லாதாக்கினை சக்கூனை வென்றுலகில்
ஆகாக்குபிர் வழியை யழிய வெட்டித் தீன் வழியை
வாகாய்த் திருத்திடவே வல்லவனே நீயுதவி
எனக்குத் தருவாயென இரக்கமொடு கையேந்தி
மனத்திலொரு நினைவாய் வாளலியார் கேட்டனரே
(கண்ணி : 741-745)

இவ்வாறு தீன் வழியைப் பரப்புவதற்குத் தமக்கு உதவிபுரியும்படி அல்லாஹ்விடத்தும் நபியிடத்தும் வேண்டி அமைதி பெற்ற அலி (றலி) அவர்கள் துல்புக்கறா என்னும் தம்முடைய சிறப்புப் பொருந்திய வாளினைக் கையிலேந்திப் படையோடு இறுதிப் போரில் பொருந்துவதற்காகச் சென்றார்கள். எப்போதும் போல் வெற்றிகளைச் சூட்டிக் கொண்ட புலி அலி (றலி) தம் படைவீரர் கள் பல்லாயிரக்கணத்தானோரை இழந்து இறுதியில் தோல்வியுற்ற

நிலையிலிருக்கும் சக்கூனரசனிடத்து இறுதியாக அண்ணல் நபி (சல்) அவர்களுடைய விருப்பத்தைத் தெரிவித்தார்கள்.

உன்னுடைய நாவாலே யுரைத்துக் கலிமாவை
முன்னோன் நபி தீனின் முற்றுமனம் வைத்தாயேல்
தேசமுன்னோடுஞ் சேரவே நாந்தருவோம்
வீசும்புகழலியில் விண்ணப்பஞ் சொன்ன பின்னர்
சக்கூனெனுமரசன் சமத்திது நல்லதென்று
மிக்காமனையேகி வெருமன்னர்க் கூட்டி
உற்றவுற முறையா ருள்ள பலபேருடனு
மற்றோருங்கூடி வந்தலிக்குத் தாழ்ச்சி செய்தார்
அப்போதலியாரங் கவர்களைத்தான் கூட்டிக்கொண்டு
செப்புநபியிறசூல் திருமுன்னே வந்தனரே (795-799)

அலி (றலி) அவர்களின் கூற்றிற்கு இசைந்த சக்கூனரசன் இஸ்லாத்தின் மீது ஈமான் கொள்வதற்கு விருப்பங்கொண்டு நபி (சல்) அவர்களிடத்து வந்தவுடன் பெருமானார் நபி (சல்) அவர்கள் பெரிதும் மனம் மகிழ்ந்து தாம் சிறைப்படுத்தி வைத்திருந்த சக்கூனரசனுடைய மக்கள் மூவரையும் அழைத்து வந்து சக்கூனிடத்துச் சேர்ப்பித்தார்கள். நபி (சல்) அவர்களுடைய அருங்குணத்தையும் மேன்மையையும் அறிந்த அவர்கள் அனைவரும் மனம் மகிழ்ந்து தீனுல் இஸ்லாம் மதத்தை ஏற்கக் கலிமாவைக் கூறலானார்கள்.

வந்தரசன் தன்னை முகம்மதுற்றசூல் நோக்கி
அந்தரசன் மக்கள் ஆளநல்ல மூவரையும்
தாதையவர்கிட்டத் தாமழைத்துவிட்டாரே
சேதமில்லாத்தாதையவர் திருப்பாதத்திற் பணிந்தார்
ஆகாக்குபிரை விட்டங் கருமதுற்றசூல் திருமுன்
வாகார் கலிமாவை வழுத்தினாரெல்லோரும்
ஈமானுங்கொண்டங் கிறசூல்பதம் பணிந்தார்
நாமானமாகி நகரிலே தானேகி
அன்றரசன் கோயி லாருஞ் சிலைகளெல்லாந்
துன்றும் பொடியாய் நறுக்கித் தூரவிடுத்தெறிந்தார்
துப்பரவாகத் தூத்தி நிலமெழுகி
இப்படியே லோக மெல்லோருந் தானுரைக்க
தொழுது வணங்கித் துய்யதவுபாச் செய்து (799-805)

சக்கூன் படைப் போரின், உச்சநிலையும், நோக்கமும் நிறைவேறுதலையை வரிசை முகியித்தீன் புலவர் மேற்சொன்ன

செய்யுள் வரிகளில் குறிப்பிட்டுள்ளார். முஸ்லீம் அல்லாத ஒருவர் முஸ்லீமாக மாற வேண்டுமாகில் முதலில் ஒன்றே இறை என்னும் ஏக தெய்வ வழிபாட்டில் பற்றுக்கோடும் நம்பிக்கையும் கொள்ள வேண்டும். இதனையே ஈமான் கொள்ளுதல் எனச் சுட்டுவர். அவ்வாறு ஈமான் கொண்டபின் இஸ்லாத்தின் மூலமந்திரமான 'லாயிலா இல்லல்லாஹ் முகம்மது றசூலுல்லலாகு... என்னும் கலிமாவை மொழிதல் வேண்டும். அதாவது வணக்கத்திற் குரியவன் அல்லாஹ் ஒருவனே! அவனையன்றி வேறு தெய்வ மில்லை. முகம்மது நபி (சல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் என்னும் பொருள் கொண்ட கலிமாவை மொழிதல்வேண்டும். இதற்கேற்ப சக்கூன் படைப் போரிலும் சக்கூனரசனும் அவனைச் சார்ந்தவர்களும் இஸ்லாத்தின்மீது ஈமான் கொண்டு கலிமாவை மொழிந்து இஸ்லாமியர்களாக மாறினர் என ஆசிரியர் குறிப்பிட் டுள்ளார். சக்கூனும் அவனைச் சார்ந்தவர்களும் பாவமன்னிப்புக் கோரினர் என்பதையே ஆசிரியர் 'தவ்பா செய்தனர்' எனக் குறித் துள்ளார்.

• இவ்வாறு அல்லாஹ்வின் கட்டளையின்படிப் பெருமானார் (சல்) அவர்கள் மேற்கொண்ட போரின் நோக்கம் வெற்றியடைய சக்கூனும் அவனைச் சார்ந்தவர்களும் முஸ்லீம்களாக மாறி அதன்வழி கடமையாற்றியபின் சக்கூனரசன் போரில் இழந்த நாட்டினை அவன் வசம் ஒப்படைத்து அவனையே ஆளும்படிப் பெருமானார் நபி (சல்) அவர்கள் செய்வித்தார்கள். இழந்த நாட்டினைப் பெற்ற சக்கூனரசர் தீன் வழியில் ஆட்சிமேற்கொண்ட தாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

மெய்ப்பார் நபியின் மேலாம்பதம் பணிந்து
ஆகுங்கருமமுமங் கனைத்தையுங் கேட்டுக் கொண்டு
ஏகனபிதம்மை ஏழில் நகர்க்கனுப்பிவிட்டு
வீசுங் கொடையரசும் மேலாம் படைஞர்களும்
வாசமிகுந்தாடும் மானகிரியை நோக்கி
வந்து தனக்குள்ள வடிவாருந் தேசமெல்லாம்
சிந்தாமணிநபியின் தீன் விளக்கியே யாண்டான்
முந்து முகம்மது மொழிப்படியே நடந்தார். (829-833)

இவ்வாறு தீன் வழியில் தம் அரசினை மேற்கொண்டு சக்கூனரசன் ஆட்சி புரிந்ததாகக் குறிப்பிடுவதுடன் சக்கூன் படைப் போரின் கதை முற்றுப்பெறுகிறது. எனினும் தம் இலக்கியப் படைப்பை

இனிய நிகழ்ச்சி ஒன்றுடன் முடிக்க வேண்டும் என்பதால் வரிசை முகியித்தீன் புலவர் சக்கூனரசனுடைய மகளுக்கும் படைத்தளபதி சுனாபிலுக்கும் இஸ்லாம் வழியில் திருமணம் நடைபெறுவதாகச் சுட்டிக் கதையை நிறைவு செய்துள்ளார்.

மன்னன் சக்கூனுமவன் மக்களும் வந்திருக்க
அன்ன நடைமின்னா ரனைவோருந் தானிருக்க
கலிமாவுமோதிக் காவின் முறையோதி
யொலியார் நிக்காவை யுவப்பவே முடித்து
மங்கிலியங்கட்டி வாழ்த்திய னைவோரும்
தங்க சுனாபீலையுந் தையலையும் வாழ்த்தினர்கள்
சக்கூன் மகளும் தகுமார் சுனாபீலும்
மிக்க சிறப்பாக மேன்மையொடும் வாழ்ந்திருந்தார்.

(கண்ணி : 848-851)

சக்கூனுடைய மகளும் சுனாபீலும் இஸ்லாம் வழியில் இல்லற வாழ்வு மேற்கொண்டு இனிதாக வாழ்ந்திருக்க அனைத்துச் சிறப்புக்களும் ஒருங்கே பெற்று அல்லாஹ்வின் அருளாலும் அனைத்து நபிமார்களின் ஆசியுடனும் சக்கூன் அரசன் இனிது ஆட்சியை நடத்தியதாக நூலின் இறுதியில் குறிக்கப்பட்டுள்ளது.

இதன்பின் இறுதியில் உள்ள சில கண்ணிகளில் ஆசிரியர் வரிசை முகியித்தீன் புலவர்,

ஆதியருள் வாழி அகுமதுற்றசூல் வாழி
வேதநெறி வாழி விண்ணோர்கள் தாம் வாழி
அபூபக்கரு மறுதுமான் அண்ணல் அலி வாழி
நுபுவ்வத்து நபிபேரர் நுவல் அசனுசைன் வாழி
அசுகாபுமார் வாழி ஆலநபியாலவுலாது
இசைவார் பகுதாதின் ஏந்தல் முகியித்தீன் வாழி
மாலையணிமார் பன் வாகுனயினானீன்ற
காலமுகில் மீறான் கருணைக் குடும்பமெல்லாம்
ஆல்போற்றழைத்தங் கருகுபோல் வேரூன்றி
மேல் சீறினோடும் வெற்றியொடுந்தான் வாழி. (772-776)

என ஒரு நீண்ட வாழ்த்தும் அனைத்து நபிமார் (தீர்க்கதரிசிகள்) மீதும் அவுலியாக்கள் (இறை நேயர்) மீதும் பாடியுள்ளார். அத்துடன் நூல் படிப்போரும் வாழி என்று கூறி நூலை முற்றுப் பெறச் செய்துள்ளார் ஆசிரியர்.

சக்கூன் படைப் போரின் சிறப்புகள்

இனி, சக்கூன் படைப் போரில் இடம் பெற்றிருக்கும் சில சிறப்புகளைத் தொகுத்துக் காண்போம். சிறப்பு என்ற நிலையில் இஸ்லாமிய சகாப்தத்திலும், அண்ணல் நபி (சல்) அவர்களின் வாழ்விலும் நடைபெற்ற வரலாற்று நிகழ்வுகள் சக்கூன் படைப் போரில் இடம் பெற்றிருக்கும் நிலையைச் சுட்டுதல் தேவையாகும். சக்கூன் படைப் போர் வரலாற்று நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டதெனினும் இந்நூலில் இடம்பெறும் பல பாத்திர உரை யாடல் மூலமாகப் பல்வேறு வரலாற்று நிகழ்ச்சிகளை ஆசிரியர் எடுத்துக் கூறியுள்ளார். இவ் வரலாற்று நிகழ்வுகள் அனைத்தும் அண்ணல் நபி (சல்) அவர்களின் பெருமையையும், சிறப்பையும் எடுத்துக் கூறுவதற்கு ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார் எனலாம். வரலாற்று நிகழ்வுகளைச் சுருக்கிக் கூறுவதன் மூலம் இலக்கிய நாயகனுடைய பெருமையையும், வாழ்வியல் பின்புலத்தையும் படிப்போருக்கு எளிதில் ஆசிரியர் உணர்த்தி விடுகின்றார். அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

சக்கூன் படைப் போரின் ஆரம்பத்தில் போருக்கு முன் இஸ்லாத்தை ஏற்கும்படி ஒரு தூதுவனை நபி (சல்) அவர்கள் சக்கூனரசனிடத்து அனுப்பி வைத்தார்கள். அவன் சென்றபோது சக்கூனரசன் அவனை யாரென்று வினவ அதற்கு அத்தூதுவர் நபி (சல்) அவர்களுடைய தூதுவர் என்று கூறிவிடுவாராகில் பெருமானார் (சல்) அவர்களுக்குரிய முக்கியத்துவம் அங்குப் பகைவர்களுக்குத் தெரியாதுபோகும். எனவே தம்மை தூதுவர் என அறிமுகம் செய்யும்போது நபி (சல்) அவர்களுடைய பெருமையை யும் புகழையும் சக்கூனரசனுக்கு உணர்த்தும் விதத்தில் பல்வேறு வரலாற்று நிகழ்வுகளையும் இணைத்துக் கூறுவதாக ஆசிரியர் அமைத்துள்ளார்.

ஆருடைய தூதரென்றங் கரசரவரைக் கேட்டான்
பேரும் வலுமைகளும் பேசுவேன் கேளுமன்னே
காணும் புவியுங் கடல்மலையுந்தான் கடந்து
தீனறியாப் பேர்களையே தீனிசுலாமிற் பயிற்ற
தூதாகி வந்த துரை முகம்மதாமவர்கள்
வட்டமதி தன்னை மண்ணில் வரவழைத்தோர்
கட்டித் தசையைத் கன்னிவடி வாக்கிவைத்தோர்
பதுறுப் படையொருகை மண்ணாலே குறையிட்டோர்
அதபினிறையறுசி லன்றேறி மீண்டு வந்தோர்

மல்லாலபுஜகிலை மண்மேல்விழ வடித்தோர்
அல்லாவின் ஹுத றகுமதுற்றசூல் நயினார்
என்னைத் தூதாக ஏவினாருன்னருகே (160-166)

எனத் தூதுவர் உரைப்பதாக இடம் பெற்றுள்ள இச் செய்தியில் பெருமானாரின் வாழ்வில் நடைபெற்ற பல்வேறு வரலாற்று நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன. பெருமானார் நபி (சல்) அவர்களிடம் ஒருமுறை ஹபீபு ராஜா, பெருமானார் (சல்) அவர்களது தீர்க்கதரிசித் தன்மையைப் பரிசோதிக்கக் கருதி அம்மாவாசை இருளில் முழுமதியை வானில் வரவழைக்கும்படி வேண்டினார். அதனை ஏற்றுக் கொண்ட நபி (சல்) அவர்கள் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கருணையினால் அவ்வாறே நடப்பித்துக் காட்டினார்கள். இதனையே இங்கு 'வட்டமதி தன்னை மண்ணில் வரவழைத்தோர் 'என ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார். இந் நிகழ்ச்சி 'மதியையழைப்பித்த படலமாக'ச் சீறாப்புராணத்தில் இடம் பெற்றுள்ளது.

தன் விருப்பப்படி மதியை வரவழைத்துக் காட்டியபின் ஹபீபு ராஜா பெருமானார் நபி (சல்) அவர்களின் மேன்மையையும் இஸ்லாத்தின் ஏற்றத்தையும் உணர்ந்து, இஸ்லாமாகியபின், பூர்விக விளைவின் பயனாகத் தசைகட்டியாக உள்ள ஹபீபு ராஜாவின் மகளை உயிர்பெற்று எழும்படி செய்வித்தார்கள் நபி (சல்) அவர்கள். இதனைக் 'கட்டித் தசையைக் கன்னி வடிவாக்கி வைத்தோர்' என ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இதன் பின் குறிப்பிட்டுள்ள வரலாற்று நிகழ்வுகள் முறையே பதுறு படைப் போரினையும், விண்ணேற்றப் பயணமான மிஃறாஜ் நிகழ்வினையும் குறிப்பதாகும். அதுபோல் தம்மைப் பெரும் துன்பித்திற்கு ஆட்படுத்திய அபுஜகிலை வீழ்த்திய நிகழ்வும் மேலே சுட்டப் பட்டுள்ளது.

சக்கூன் படைப் போரில் வரலாற்று நிகழ்ச்சிகள் என்ற நிலையில் மிஃறாஜ் நிகழ்ச்சி அதிகமாகச் சுட்டப்பட்டுள்ளது. மேலும் வரலாற்று நிகழ்ச்சிகளை ஆசிரியர் போக்கிலேயே பாத்திரங்களின் கூற்றின் மூலமாகக் கூறியிருப்பதால் அவை கதைப் பகுதியில் இருந்து தனித்து நிற்காமல் ஒன்றியே காணப்படுகின்றன. இவ் வரலாற்று நிகழ்வுகள் முழுவதும் சக்கூன் படைப் போரின் பாட்டுடைத் தலைவரான பெருமானார் நபி (சல்) அவர்களைப் பெருமைப்படுத்தும் வகையிலேயே அமைந்துள்ளன.

சக்கூன் படைப் போர், போர் நிகழ்ச்சியை மையமாகக் கொண்ட இலக்கியமாயினும் இப்போர் நிகழ்வின் நோக்கம் இஸ்லாத்தைப் பரப்புதல் என்னும் அண்ணல் நபி (சல்) அவர் களுடைய அரிய முயற்சியே ஆகும். எனவே படைப் போர் இலக்கியத்துள் ஆங்காங்கே இலக்கியப் போக்கினைக் கட்டமைப்புச் சிதைவுறாத வகையில் இஸ்லாமியக் கோட்பாடுகள் எடுத்துரைக்கப் படுகின்றன. இக் கோட்பாடுகள் இஸ்லாமிய நெறியையும் பழக்க வழக்கங்களையும் விளக்கும் வண்ணம் ஆசிரியர் அமைத்துள்ளார். சக்கூனரசன் இறுதிப் போரில் தோல்வியடைந்தபின் இஸ்லாத்தின் மீது ஈமான் கொண்டுக் கலிமாக்கூறி முஸ்லீமாக மாறியபின் சக்கூனும் அவனைச் சார்ந்த கூட்டத்தாரும் இஸ்லாத்தின் நெறிகளை அறிந்து கொண்டதாக ஆசிரியர் கூறும்போது பல்வேறு இஸ்லாமிய பழக்க வழக்கங்களும் கொள்கைகளும் எடுத்துக் காட்டப்படுகின்றன.

தலையிலே முடிதரித்துச் சருவந்துந்தான் முடித்து
விலையுயர்ந்தபட்டகற்றி வெண்டுகிலாற் சட்டையிட்டு
வெள்ளைதுகிலாளே வெகுபூஷணம் புனைந்து
பள்ளியிலே வந்து பண்பாதியைத் தொழுது
த்சுபீகு கையிலேந்தி சலவாத்துத் தானுரைத்து
அசுத்தக்கு பிரகற்றி யனைவோருந்தான் தொழுது
மற்ற பறுலு சுன்னத்து வாய்த்த முறையும் படித்து
நற்றவங்கள் தானாகும் நானுமுறையறிந்து
வணக்கமிணக்கமுடன் வணங்கு முறையறிந்து
இணக்கமுடனே நல்ல இசுலா நெறியறிந்து
சக்காத்தின் துறையுந் தனதாகவே யறிந்து
மிக்கான நோன்பின் வெற்றியெல்லாந் தானறிந்து
கஜ்ஜி அதின் முறையுங் கனமாகத்தானறிந்து
மெச்சும்பல வியல்பு மேலாகத்தானறிந்து
நேசத் திருவளம் நெறிகளுங் சூழுகிற
ஆசையாகவுள்ளதெல்லா மறிந்த பின்னங் கேது சொல்வார்
(கண்ணி : 800 : 814)

மேற்சொன்ன பகுதிகளுள் இஸ்லாமியர்களின் அடிப்படைக் கோட்பாடுகள் விளக்கம் பெற்றுள்ளன. முதல் இரண்டு கண்ணி களும் இஸ்லாமியர்களின் உடை மற்றும் உடல் கூறுகளுடன் தொடர்புடைய பழக்க வழக்கங்களை விளக்குகின்றன. 'விலை யுயர்ந்த பட்டகற்றி வெண்டுகிலாற் சட்டையிட்டு வெள்ளைத்

துகிலாலே வெகு பூஷணம் புனைந்து' என்னும் வரிகள் இஸ்லாம் ஆடம்பர வாழ்க்கையில் நாட்டமற்றது என்பதையும் எளிய வாழ்க்கையையே இஸ்லாம் போதிக்கிறது என்பதையும் உணர்த்துகின்றன. இது தொடர்பாக அண்ணல் நபி (சல்) அவர்கள் தம் ஹதீஸில் 'பேருக்காகவும் புகழுக்காகவும் வேண்டி எவர் ஆடம்பர உடைகளை அணிகின்றாரோ அவருக்கு இறைவன் (மறுமை நாளில்) இழிந்த உடைகளை அணிவிப்பான்' என்று கூறுகிறார்கள். எனவே விலையுயர்ந்த ஆடைகள் அணிவதை இஸ்லாம் விரும்பவில்லை. பிறிதொரு ஹதீஸில் 'நீங்கள் வெண்ணாடை அணியுங்கள். ஏனெனில் நிச்சயமாக இது உங்களுக்கு நல்ல ஆடையாகும்' அன்றி உங்களின் மையித் (பிரேதம்) களுக்கும் அதைக் கொண்டே கஃபனிடுங்கள்' என்று அண்ணல் நபி (சல்) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே இதற்கேற்பவே இங்கு ஆடம்பர உடை அகற்றி வெண்ணிற உடையைச் சக்கூனும் அவனைச் சார்ந்தோரும் அணிந்ததாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

பழக்க வழக்கங்களுக்குப்பின் ஆசிரியர் குறிப்பிடுவது தொழுகை நெறியாகும். இதில் தகுபீகு கையிலேந்தியும், சலவாத்து உரைத்தும் இருக்கவேண்டும் எனக் குறிப்பிடுகிறார். இவையிரண்டையும் முன்னரே விளக்கியுள்ளோம். இதன்பின் சக்கூனும் அவன் வழி இஸ்லாமாகியோரும் 'பறுலு சுன்னத்து வாய்த்த முறையும் படித்து' அறிந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பறுலு' சுன்னத் என்பது முஸ்லீம்கள் தவறாது பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளைக் குறிப்பதாகும். ஒரு முஸ்லீம் கட்டாயமாகக் கடைபிடித்துப் பின்பற்றவேண்டிய கடமைகளுக்கு 'பர்ளு' என்பர். இவ்வாறு கட்டாயக் கடமைகளாவன ஐம்பெரும் கடமைகளாகும். அவைகளாவன, அல்லாஹ் ஒருவனே அவனுக்கு நிகர் வேறு யாருமில்லை என்ற இறை நம்பிக்கை, தொழுகை, ரம்லான் மாதத்தில் நோன்பு நோற்பது, சக்காத் (தர்மம்), ஹஜ்கடமையை நிறைவேற்றுதல் என்னும் ஐந்துமாகும். பொதுவாகப் பர்ளு இருவகைப்படும். 1. பர்ளுஐன் இது ஒவ்வொரு முஸ்லீமும் செய்யக் கடமைப்பட்டதாகும். 2, பர்ளு கிஃபாயா இதனை ஒரு ஊரில் சிலராவது அல்லது ஒருவராவது நிறைவேற்றுதல் வேண்டும். அவ்வாறு நிறைவேற்றாவிடில் அனைவருக்கும் குற்றமாகும். இதில் மார்க்கப் போர் புரிதல், ஜனாஸா தொழுகை (ஒருவர் இறந்தபோது அவருக்காக நிகழ்த்தப்படும் தொழுகை) முதலானவைகள் அடங்கும். சுன்னத் என்பது

பழக்க வழக்கங்கள் என்பதைக் குறிக்கும். பெருமானார் நபி (சல்) அவர்கள் அல்லாஹ்வினால் உலகை உய்விக்க அனுப்பப்பட்ட திருத்தூதர்; அவர்கள் வாழ்ந்துகாட்டிய வாழ்க்கை நெறி முறைகளை இது குறிக்கும்.

'ரம்லான் மாதம் எத்தகைய மகத்துவமுடையதென்றால் அதில்தான் மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும், நேரான வழியைத் தெளிவாக்க கூடியதாகவும், நன்மை தீமையைப் பிரித்தறிவிக்கக் கூடியதாகவும் உள்ள திருக் குர் ஆன் என்னும் வேதம் அருளப் பெற்றது. ஆகவே உங்களில் எவன் அம்மாதத்தை அடை கின்றானோ, அவன், அதில் நோன்பு நோற்கவும்' (அல் குர் ஆன் : 2 : 185). இத்தகு சிறப்புப் பெற்ற நோன்பிலிருந்து நோயாளி களுக்கும் யாத்திரையில் ஈடுபட்டிருப்போர்களுக்கும் வீதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே ஐம்பெரும் கடமைகளுள் ஒன்றான இதனை ஆசிரியர் குறித்துள்ளார்.

நோன்பு போன்று ஹஜ் என்னும் மக்காப் புனிதப் பயணமும் ஒன்றாகும். இத்தகைய ஹஜ் என்னும் புனிதப் பயணம் வசதியும் வாய்ப்பும் பெற்றவர் கடமையாகின்றது. இதனை அல்லாஹ்வுக் காக (ஆரம்பம் செய்த) ஹஜ்ஜையும் உம்ராவையும் நீங்கள் பூரண மாக்குங்கள்.' என அல் குர் ஆன் (2 : 196) கூறுகிறது. ஹஜ் கடமையின்போது அங்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகள் பல வுள்ளன. எனவேதான் வரிசை முகியித்தீன் புலவர் இதனைக் குறிப்பிடும்போது சக்கூனும் அவனைச் சார்ந்தவர்களும் 'சுஜ்ஜி அதின் முறையுங் கனமாகத் தானறிந்தனர்' எனக் கூறியுள்ளார்.

மேற்குறித்த பகுதிகள் போன்று பல்வேறான இஸ்லாமியக் கோட்பாடுகள் சக்கூன் படைப் போரில் விளக்கப்பட்டுள்ளன.

சக்கூன் படைப் போரில் ஆசிரியர் ஆங்காங்கே கருத்துக்களைத் தெளிவுற விளக்குவதற்குப் பல்வேறு உவமைகளைக் கையாண் டுள்ளார். இவ்வுவமைகள் அந்தந்த கருத்துக்களுக்கேற்ப அமைந்தி ருப்பதுடன் எளிமையாகவும் உள்ளன. சக்கூன் படைப் போரின் தொடக்கத்தில் அசுகாபிமார்கள் நாற்பதினாயிரம் பேர் பெருமானார் நபி (சல்) அவர்களைச் சூழ்ந்திருந்தது வான் மதியை விண் மீன்கள் சூழ்ந்தது போலிருந்ததாகக் குறிப்பிடுகிறார். இதே போன்ற உவமையைப் போருக்குச் செல்லும்போது நபி (சல்) அவர்களைச் சுற்றி அசுகாபிமார்கள் சூழ்ந்து செல்லும் காட்சியை,

வட்டமதி தன்னை வான்மீன்கள் சூழ்ந்தபோல்
இட்டமுள்ள நந் நபியை எல்ல வருந் சூழ்ந்துவர

சென்றதாக உவமிக்கின்றார். நபி (சல்) அவர்கள் பல இடங்களில் வான் மதிக்கும் அசுகாபி மார்கள் விண்மீன்களுக்கும் உவமிக்கப் பட்டுள்ளார்கள்.

சக்கூனரசனுடைய பெரும் பதியைக் கண்ட எண்ணிக்கையில் குறைந்த அசுகாபிமார்கள் அச்சமுற்று வியப்படைகின்றனர். இந் நிலையை,

நாடிய சக்கூன் பதி நற்புரிசை கண்டனரே
புரிசைதனைக் கண்டு புலிகாணும் மானதைப்போல்
வரிசைநபி தோழரெல்லா மனதிற் பயந்திருந்தார்

என ஆசிரியர் சுட்டுகின்றார். இங்குப் புலி காணும் மானதைப் போல் என்பதில் புலி என்பது சக்கூன் அரசனுக்கும் மான் அசுகாபி மார்களுக்கும் உவமிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சக்கூன் படைப்போரின் தொடக்கத்திலேயே சக்கூனரசன் புலி போன்ற கொடிய தன்மைகளுடையவன் என்பதையும் அசுகாபிமார்கள் மான் போன்ற மென்மைத் தன்மையுடையவர்கள் என்பதையும் ஆசிரியர் வெகு எளிதாக உணர்த்தி விடுகின்றார். இதே புலி உவமையை வீரத்திற்காகப் பயன்படுத்தும் போது அலி (றலி) அவர்களுக்கு ஆசிரியர் பயன்படுத்தி உள்ளார். அலி (றலி) அவர்கள் சக்கூன் படைகளுக்கிடையே பாய்ந்து அங்குள்ள யானைகளையும் வெட்டி வீழ்த்தும் காட்சியைக் கூறும்போது ஆயன் பசுக்களுக்கிடை வரும் புலிபோல் பாய்ந்து வந்ததாக வரிசை முகியித்தீன் புலவர் குறித்துள்ளார்.

நாசனலியார் நவிலுகின்ற கெச்சிதமாய்
ஆயன் பசுக்கிடையி வரும்புலி போலப் பாய்ந்து
ஆனைப்படைகளங் ஙனலறிக் கொண்டோடிடவே

எனவே ஒரு உவமானத்தை தாம் எடுத்துக் கூறும் கருத்துக்களின் தன்மைகளுக்கேற்ப ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார்.

சக்கூன் படைப் போரில் முதன் முதலில் இஸ்லாத்தைத் தழுவும் படைத் தளபதியான சுனாபீல் அதன்பின் பகைவர்களை வெட்டி வீழ்த்தும் காட்சியை எடுத்துக் கூறும்போது அவர்களின் சிரசு சிதறி விழுவது உடைந்த தயிர்க் குடம்போல் இருந்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது.

அடுத்து வெட்டினாரதனை வலன் சிரசுதான்

யுடைத்த துயிர்க்குட்டம் போலு லுறச்சிந்தின் மூளை யெல்லாம்
செறிந்த பரியுடனே சென்றார் சுனாபில்தான்

என உவமிக்கப் பட்டுள்ளது.

பிறிதொரு இடத்தில் மாலை நேரத்தில் சந்திரன் எழும் காட்சியைக் கூறும்போது ஆசிரியர், சந்திரன் முகம்மது நபி (சல்) அவர்களின் முகம்போல் காட்சியளித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

வடிவங்குணமு முள்ள முகம்மதுற்றசூல் முகம்போல்
கெடியுடனே சேமெது கிழக்கே யெழுந்ததுவே

சக்கூன் படைப் போரின் இறுதியில் சக்கூன் மகளுக்கும் படைத் தளபதி சுனாபீலுக்கும் திருமணம் நடைபெற்றதாகக் குறிப்பிடும் ஆசிரியர் அவர்கள் மனம் ஒன்றி இல்வாழ்வு மேற்கொண்டதை அடுக்குவமைகளால் பின்வருமாறு விவரித்துள்ளார் ஆசிரியர்.

சக்கூன்மகளும் தருமாரசனாபீலும்
மிக்கசிறப்பாக மேன்மையொடும் வாழ்ந்திருந்தார்
நகமுஞ்சதையும் போல் நாடொறும் வாழ்ந்திருந்தார்
வகையன்றில் பேருடனே வாழ்ந்ததுபோல் வாழ்ந்திருந்தார்
பாலும் பழமும்போற் பகையாது வாழ்ந்திருந்தார்
மாலிமையும் விழிபோல் வாகாக வாழ்ந்திருந்தார் (850-853)

இவ்வுவமைகள் சக்கூனரசனுடைய மகள், சுனாபீல் ஆகிய இருவரது இல்லற வாழ்வின் பிணைப்பை நமக்கு எளிதில் உணர்த்துகின்றன. வரிசை முகியித்தீன் புலவர் தாம் உணர்த்தக் கருதும் கருத்துக் களுக்கு உருவமளிக்கும்போது பயன்படுத்தும் உவமைகள் மிக எளியதாகவும் நடைமுறை உவமைகளாகவும் இருப்பதால் கவிதைப் போக்குத் தடையின்றியும் எளிதில் புரியும்படியும் அமைகின்றன எனலாம்.

உவமைகளை வரிசை முகியித்தீன் பயன்படுத்தியிருப்பதுபோல் ஆங்காங்கே சக்கூன் படைப் போரில் சூழல் வெளிப்பாட்டிற்குப் பழமொழிகளையும் கையாண்டுள்ளார். போரில் சக்கூனின் இளைய மகன் அலி (றலி) அவர்களையும், அசுகாபிமார்களையும் கண்டு இழிவான வார்த்தைகளைக் கூற அதனைக் கேட்ட அலி (றலி) அவர்களின் நிலைமை விளக்கும்போது,

மந்தவெளியில் வருகையிலே நாய் குலைத்தால்
கையிற்றடியிருக்கக் கரிபரியுந் தேடுவானோ

என்னும் பழமொழியைப் பயன்படுத்துவதன் மூலம் சக்கூனரச னுடைய மகனுடைய நிலையையும் அலி (றலி) அவர்களது போர்

வலிமையையும் ஆசிரியர் விளக்கியுள்ளார். இதேபோல் சக்கூனரச னுடைய மூத்த மகன் மாலீக், அலி (றலி) அவர்களை வெட்டி வீழ்த்தக் கருதிப் போர்களத்திற்கு வரும்போது,

புலியொடுடெதிர்த்துப் பொருதுமோ ஆட்டுக்கிடாய் (522)

என்னும் பழமொழியின் மூலம் அலி (றலி) அவர்களின் வலிமையை ஆசிரியர் உணர்த்துகிறார். இதே சூழலில் அலி (றலி) அவர்களைக் கண்டுற்ற சக்கூனுடைய மகன் மாலீக் அவரது தோற்றத்தைக் கண்டு அச்சம் அடைந்தபோது அலி (றலி) அவர்கள் கூற்றில் ஒரு பழமொழி இடம் பெற்றுள்ளது.

பஞ்சவர்ண நற்கிளிகள் பலபேச்சுத்தான் பேசும்
மிஞ்சவது தன்னை விரல்பிடித்தழைக்கில்
கிளிகளந்த பேச்சுவிட்டுக் கீக்கீயெனுங் கண்டாயே (508-509)

எனக் கூறுவதாக உள்ளது. ஏற்கனவே தம்மை இகழ்ந்து கூறியதை மறந்துவிட்டுப் போர்களத்தில் தம் வலிமையைக் கண்டு அச்சமுறும் மாலீக்கின் நிலையை அலி (றலி) அவர்கள் கிளியின் பழமொழி மூலமாக உணர்த்துவதாக உள்ளது. இவை தவிர்த்துப் பிற அணி நலன்களை வரிசை முகியித்தீன் புலவர் பெரிதும் பயன்படுத்த வில்லை. ஒரே ஒரு இடத்தில் அற்புத நவிற்சியணியினைப் பயன் படுத்தியுள்ளார். மாலை நேரத்தில் கதிரவன் மறைவது இயற்கை. இக் கதிரவன் சக்கூனும் அவனது படை வீரர்களும் வஞ்சனை செய்து அலி (றலி) அவர்களைப் பிடிப்பதற்காகப் பெரும் குழியில் விழச் செய்தவுடன் அவருக்கு ஏதும் தீங்கு வருமோவென அஞ்சி மறைந்ததாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

மொழிநடையைப் பொறுத்தவரையில் வரிசை முகியித்தீன் புலவர் அனைவருக்கும் விளங்கத்தக்க எளிய நடையையே கையாண்டுள்ளார் எனலாம். சக்கூன் படைப் போரின் எளிமைக் குரிய பிறிதொரு காரணம் ஆசிரியர் கண்ணிகளாகவும் நாடோடிப் பாடற் பாங்கிலும் கதைப் பகுதியை விவரித்துச் செல்லுதலாகும். இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றின் ஆரம்பக் கால நூல்களுள் ஓர் இடத்தைப் பெறும் சக்கூன் படைப் போர் இஸ்லாமியத் தமிழிலக்கிய வகைக்கு முதன்மையான நூலாக இடம் பெற்று சிறக்கிறது. சக்கூன் படைப்போர் போன்றே இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு படைப் போர் இலக்கியமும் விரிவான ஆய்வுக்கு உட்படுத்தத்தக்க கருத்துக் களைக் கொண்டுள்ளன. எனவே படைப்போர் இலக்கியங்கள் மேலும் விரிவாக ஆராயத்தக்கன.

துணை நூற்பட்டியல்

உச்சி படைப் போர், *க. அசனலிப் புலவர்*, சென்னை, 1887

இந்திராயன் படைப் போர், *க. அசனலிப் புலவர்*, சென்னை, 1881

இபுலீசு படைப் போர், *அ. லெ. அ. அமீது*, இலங்கை, 1883

இபுனியந்தன் படைப் போர், *க. அசனலிப் புலவர்*, சென்னை, 1883

இறவு சுல்கூல் படைப் போர், *குஞ்சு மூசுப் புலவர்*, 1869

இறவு சுல்கூல் படைப் போர் வசனகாவியம், *கண்ணகுமது மகுதூ முகம்மதுப் புலவர்*, சென்னை, 1878

இஸ்லாம் வளர்த்த தமிழ், *டாக்டர் ம. மு. உவைஸ்*, உலகத் *தமிழாராய்ச்சி நிறுவனம்*, சென்னை, 1984

இஸ்லாமியத் தமிழிலக்கிய நூல் விவரக் கோவை, *டாக்டர். ம. மு. உவைஸ் & டாக்டர். பீ. மு. அஜ்மல்கான்*, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, 1991

இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாறு தொகுதி-1, *டாக்டர். ம. மு. உவைஸ் & டாக்டர். பீ. மு. அஜ்மல்கான்*, மதுரைக் *காமராசர் பல்கலைக் கழகம்*, மதுரை, 1984

ஐந்து படைப் போர், *க. அசனலிப் புலவர்*, சென்னை, 1878

காசீம் படைப் போர், *அப்துல் காதிர் புலவர்*, சென்னை, 1874

சக்கூன் படைப் போர், *வரிசை முகியத்தீன் புலவர்*, சென்னை, 1908

சையதத்துப் படைப் போர், *குஞ்சு மூசுப் புலவர்*, 1917

தமிழகத்தில் முஸ்லிம்கள் போர்ச்சுகீசியர் வருகைக்கு முன்பும் பின்பும், *டாக்டர். பீ. மு. அஜ்மல் கான்*, சென்னை, 1986

தர்ஜீமதுல் குர் ஆன் - பி - அல்தபில் பயான், தமிழ் மொழி பெயர்ப்பு - *ஆ. கா. அப்துல் ஹமீது, பாகவி*, சென்னை, 1958

தாகி படைப் போர், *க. அசனலிப் புலவர்*, 1878

நபுஸா படைப் போர், *செய்யது முகம்மது புலவர்*, 1928

மலுக்கு முலுக்கின் படைப் போர், *வாலை அப்துல் காதிர் சாகிப்* 1976

வாடோச்சி படைப் போர், *க. அசனலிப் புலவர்*, 1878

ஹுசைன் படைப்போர் வசன காவியம், *காளை ஹஸனலிப் புலவர்*, 1903

சிறப்புச் சொல்லகராதி

(எண். பக்க எண்)

அகநானூறு 2
அசுகாபிமார்கள் 98
அப்துல் காதிர் புலவர் 78
அப்துல் காதிறு 57
அமீது அ. லெ. அ. 79
அருணாசலம், மு. 6
அல்லமா முஹம்மது இக்பால் 19
ஆயிர மசாலா 7
ஆயிர மஸ்அலாவென்று வழங்கும் அதிஜய புராணம் 28
ஆரிபு நாயகம் 8
இதுசுவத்து நாச்சியுடைய கிஸ்ஸா 11
இபுலீசு படைப் போர் 79
இபுனியன் படைப் போர் 41
இபுன் ஷரத் 32
இரகசியம் பேசுதல் 22
இரவுசுல்கூல் படைப் போர் 55
இராஜநாயகம் 8
இரவுசுல்கூல் படைப் போர் 66, 72
ஈமான் 116
உச்சிப் படைப் போர் 41
உமருல்வாக்கிதி 89
உமறுபுலவர் 8
ஐதுறூசு நயினார் புலவர் 8
ஐந்து படைப் போர் 35
ஐந்து முனாஜாத்து 23
கந்தப்பிள்ளை 40
கந்தூரி 18
கபன் கள்ளன் கிஸ்ஸா 15
கம்பராமாயணம் 83
கலிங்கத்துப்பரணி 84
கலிமா 116
களவழி நாற்பது 83
களவியல் காரிகை 4
கனகவிராஜர் 8
கனகாபிஷேக மாலை 7, 8
காசிம் படைப் போர் 78
காபூஸ் நாமே 18
கிதாபுல் பத்ஹுல் கபீர் 32
கிதாபுல் மகாசி 32, 89
கிஸ்ஸா 11
குஞ்சுமூசுப் புலவர் 55, 56, 58, 61. 65, 66, 69, 70, 72
குத்பு நாயகம் 8
குலாம்காதிறு நாவலர் 8
குபீர் 97
குப்ர் ஜஹீத் 97
கேசாதி நயினார் 8
சகாபி 98
சலவாத்து 114
சித்திரக்கவி முதலிய பல பாடற்றிரட்டு 23, 24
சின்ன சீறா 8
சீறாப்புராணம் 8
சூறாவளிப் படைப் போர் 88
செய்கப்துல் காதிரி நயினார் லெப்பை 23
சேகனாப் புலவர் 8
சேக்ஸ்பியர் 83
சையதத்துப் படைப் போர் 55
தசுபீகு 99
தகுலீல் 99
திருக்காரணப் புராணம் 8
திருநெறிநீதம் 7
திருப்புகழ் காசீம் புலவர் 56
திருமக்காப்பள்ளு 7
திருமணக் காட்சி 8
திருமணி மாலை 8
தீன்விளக்கம் 8
துவா 114
தொல்காப்பியம் 7
நபுஸு படைப் போர் 79, 88
நவமணி மாலை 8
நன்னூல் 7
நாகூர் புராணம் 8
நாமா 81
நேர்வழி நடந்த நால்வர் 17

படைப் போரும் பரணியும் 84
பதுறுத்தீன் புலவர் 8
பரணி இலக்கியம் 84, 87
பர்ளு 121
பல்சந்த மாலை 4, 5, 6, 7, 29
பவணந்தியார் 7
பன்னிருபாட்டியல் 84, 87
பனியகுமது மரைக்காயர் 8
புதுகுஷ்ஷாம் 8
புலவர் நாயகம் 23
பூவார் செய்யது முஹம்மது
புலவர் 79
போர்களின் நூல் 32
மசாலா 11
மலுக்கு முலுக்கின் படைப்
போர் 78
மஸ்அலா இலக்கியங்கள் 26
முகுராஜ் மாலை 7
முகமது இப்துல் உமருல்
வாக்கிதி 32
முதுமொழி மாலை 7
முனாஜாத்து 11
முஹியித்தீன் புராணம் 8
மூசிபுனு செய்யிது முகம்மது 55
யகோபுச் சித்தர் 7, 29
யூசுபுநபி காவியம் 40
வடோச்சிப் படைப் போர் 43
வண்ணக் களஞ்சியப் புலவர் 8
வண்ணப் பரிமளப் புலவர் 28
வரிசை முகிய்யித்தீன் புலவர்
33, 34
வாலை அப்துல் காதீர் சாகிபு 78
வையாபுரிப் பிள்ளை 4, 5
ஜாவீத் நாமே 19
ஷநாமே 19
ஷாகுல் ஹமீது 23
ஷெய் அப்துல்காதிறு
லெப்பை 29
ஸிபாஸத் நாமே 19
ஹஜனுல் பசாரி 57
ஹஸனலிப் புலவர் 35, 38, 40,
41, 45, 49, 79
ஹுஸைன் படைப் போர் 79
ஹோமர் 83

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF
TAMIL STUDIES

டி.டி.டி.ஐ. (அஞ்சல்) தரமணி,
சென்னை-600 113.

அறக்கட்டளைச் சொற்பொழிவு வெளியீடுகள்

இஸ்லாம் வளர்த்த தமிழ்	15	00
தமிழரின் தாயகம்	10	00
உ.வே.சா. சங்க இலக்கியப் பதிப்புகள்	10	00
இனிக்கும் இராசநாயகம்	50	00
பாவாணரும் தனித்தமிழும்	12	00
தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வுகள்	10	00
உ.வே.சா. காப்பியப் பதிப்புகள்	10	00
விவிலியம் திருக்குறள் சைவசித்தாந்தம்	20	00
அகலமும் ஆழமும்	12	00
செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார்	15	00
உ.வே.சா. இலக்கணப் பதிப்புகள்	12	00
மகாமதிப்பாவலர்	11	00
உலக முதன் மொழி தமிழ்	12	00
மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கை	15	00
தமிழ் தந்த வ உ.சி.	15	00
உ.வே.சா. ஒரு தமிழ் வாழ்வு	15	00
வண்ணக் களஞ்சியப் புலவரின் குத்பு நாயகம்	15	00
மு.வ. புதினங்களில் தமிழ்—தமிழினம்	20	00
பாவாணர் ஆய்வு நெறி	22	00
கிறித்தவமும் தமிழகமும்	15	00
நாமக்கல் கவிஞர் கவிதைகள்-தேசியம், காந்தீயம்	16	00
தமிழில் அறிவியல்—அன்றும் இன்றும்	25	00
இதழாளர் ஆகித்தனார்	26	00
காந்தீயப் பெருந்தலைவர் காமராசர்	20	00
மலையாளக் கவிதை	15	00
நாட்டுப்புறப் பாடல்களில் வரலாற்றுச் செய்திகள்	18	00
நாட்டுப்புறவியலில் உளவியல் பார்வை	14	00
தொல்காப்பியப் பதிப்புகள்	27	00
தமிழும் பிராகிருதமும்	12	00
இலக்கியச் சிந்தனையாளர் டி. என். சேஷாசலம்	12	00
அறிவியல் தமிழ் - இன்றைய நிலை	12	00
எட்டாந் திருமுறை	22	00
தொல்காப்பியச் சிந்தனைகள்	12 — 00	
தமிழும் குறியியலும்	—	